# புகழேந்தி நளன் கதை



# புகழேந்தி நளன் கதை

பேராசிரியர்

டாக்டர். ரா. சீனிவாசன்,

எம்.ஏ.,எம்.லிட்.,பி.எச்.டி.

அணியகம்

5, செல்லம்மாள் தெரு, செனாய் நகர்,

சென்னை - 600 030.

# நூல் விளக்கம்


| | |
|---|---|
| முதற் பதிப்பு | 1999 |
| நூல் பெயர் | புகழேந்தி நளன் கதை |
| ஆசிரியர் | ரா. சீனிவாசன் |
| பொருள் | இலக்கியம் |
| பதிப்பகம் | அணியகம்<br>5 செல்லம்மாள் தெரு,<br>செனாய் நகர்,<br>சென்னை - 600 030.<br>தொலைபேசி : 644 96 30 |
| தாள் | 11.6 kg. Map litho |
| அளவு | டபுள் கிரௌன் |
| எழுத்து | 10 புள்ளி |
| பக்கம் | 216 |
| விலை | ரூ.50.00 |
| ஒளியச்சு | லேசர் இம்ப்ரெஷன்,<br>சென்னை - 30. |
| அச்சீடு | நெல்சன் பிரிண்டர்ஸ்<br>சென்னை - 600 029. |

# முன்னுரை

செய்யுள் வடிவில் உள்ள இலக்கியம் அதன் உரை நடையாக்கம் : தனித்தனிக் கவிதைகள் படிப்பது அதன் நயத்தைக் காட்டும்; ஒட்டுமொத்தமாகப் படிக்க உரை நடையே உதவும்.

பனிக்கட்டி உருகினால் அது அருவியாகிறது. செய்யுளை உடைத்தால் அது உரைநடையாகிறது. பனிக்கட்டி பார்க்க அழகாக இருக்கும். பருக அருவி நீரே சுவை தருகிறது.

நளன் கதை மிகப் பழைய கதை. பாரதத்துக்கு முன் எழுந்த கதை; பார்த்திபருள் சூதாடி நாட்டைத் தோற்றவன் கதை இது. பாண்டவர்கள் போலவே காட்டிற்குச் செல்லும் கதி இவனுக்கும் ஏற்பட்டது.

காவியம் என்பது பொதுவாக விருத்தப் பாவில் செப்புவது தமிழ் மரபு; பழங்காலத்தில் இளங்கோவும் சாத்தனாரும் படைத்துத் தந்தவை ஆசிரியப்பா. வெண்பாவில் யாரும் ஒரு காவியத்தைப் படைத்தது இல்லை.

குறள் வெண்பாவை வள்ளுவர் படைத்தார்; இவை நேரிசை வெண்பாக்கள்; நான்கு அடிகள் கொண்டவை; செப்பல் ஓசை உடையது. கதை சொல்வதற்கு வேண்டிய ஓட்டம் இதில் உள்ளது.

ஏறக்குறைய நானூறு பாக்கள் கொண்டது இந்நூல். கம்பருக்குப் பின் எழுந்த நூல் இது. ஒட்டக் கூத்தரை ஒட்டி எழுந்தது இது. ஒட்டக் கூத்தரும் புகழேந்தியாரும் சம காலத்தவர் என்று கூறப்படுகின்றனர்.

குறுநில மன்னன் சந்திரன்சுவர்க்கி என்பவன் இவரை ஆதரித்தவன் என்பது தெரிகிறது. இவர் பாடல்களில்

அவன் நீதி வழுவாத தன்மையையும், நெறியையும், கொடைச் சிறப்பையும் பாடியுள்ளார்.

நளன் கதை காதற் கதை; அன்னம் தூது சென்று இருவரையும் ஒன்று சேர்த்தது. அன்னத்திடம் நளன் தன் காதலை உரைக்கிறான். அது தமயந்தியிடம் சென்று அவன் வீரத்தையும் அழகையும் நற்குணங்களையும் நவின்றது. இவை சுவைமிக்க செய்திகள் ஆகின்றன.

மன்னர்கள் கூடியிருந்த மணி மண்டபத்தில் நளனைத் தமயந்தி அறிந்து அவனுக்குப் பொன்மாலை சூட்டுகிறாள். தேவர்கள் தோல்வி அடைகின்றனர். கலி புருடன் அவர்களை வாட்டுகிறான். அதனால் அவர்கள் பிரிகின்றனர்.

பிரிந்தபின் தனிமையில் தவிக்கின்றனர். பாழ் மண்டபத்தில் நள்ளிரவில் அவளைத் தவிக்கவிட்டும் செல்கிறான்; இது பல பாடல்களில் பேசப்படுகிறது.

தமயந்தி தன் அறிவுத் திறத்தால் நளனைத் தன் தந்தை ஊருக்கு வரவழைக்கிறாள்; பிரிந்தவர் கூடு கின்றனர்; இழந்த நாட்டைப் பெறுகின்றனர்.

இந்தக் காதல் கதை புகழேந்தியாரால் கூறும்போது அது உள்ளத்தைக் கவர்கிறது. அவர்கள் சோகம் நம் நெஞ்சை உருக்குகிறது. கவிஞரின் கவிதையில் சொல் லாட்சிகள் நம்மைக் கவர்கின்றன. எதுகை மோனை நயங்கள் எழில் ஓசையைத் தருகின்றன. உருவகங்கள் கவிதைகளுக்கு அழகு ஊட்டுகின்றன. அணி நலம் மிக்க கவிதை நூல் இது.

இதனை எளிய இனிய உரை நடையில் தந்திருப்பது முதற்பகுதி; பின் அடுத்து அணி நலன்களைச் சுட்டிக் காட்டிக் கவிதைகளை விமரிசிக்கின்றது.

ஒவ்வொரு பாட்டும் அழகு உடையது; சுவை தருவது; சிறந்த சொல்லாட்சிகள் கொண்டது. அவற்றை

வாசகர் அறிந்து மகிழ மூல நூல் செய்யுட்கள் அனைத்தை யும் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

இது உரை நூல் அன்று; சுவை நூல்; கவிதைத் திறனாய்வு நூல்.

இந்நூல் கவிதைகள் சுவை உடையன; கதை உள்ளத்தைத் தொடுவது; பழைய கதை நாட்டுக் கதை; கருத்துமிக்கது; சிறந்த நீதியை வற்புறுத்துவது.

இதனை எழுதுவதில் ஒரு மகிழ்ச்சி காண முடிந்தது; அதனைப் பகிர்ந்து கொள்வதே இந் நூல் வெளியீடு.

கம்பராமாயணம், மாபாரதம், சீவக சிந்தாமணி, திருவிளையாடற் புராணம், சிலப்பதிகாரம், மணிமேகலை இவற்றின் உரைநடை நூல்கள் ஏற்கனவே வெளி யிட்டுள்ளோம். திருக்குறள் செய்திகள் என்ற நூலும் மூலநூலை அழகிய உரைநடையில் தந்துள்ளது.

இந்நூல் சுவைக்கத் தக்கது; கவிதை நயம் அறிய உதவுவது; வெளியிடுகிறோம்.

**ரா. சீனிவாசன்**

# அணியக வெளியீடுகள்

**டாக்டர் ரா. சீனிவாசன், எம்.ஏ.எம்.லிட்., பிஎச்.டி.,**
5, செல்லம்மாள் தெரு, செனாய்நகர்,
சென்னை - 600 030. போன்: 6449630

| | | |
|---|---|---|
| கம்பராமாயணம் | (உரைநடை) | ரூ.50 |
| மாபாரதம் | ,, | ரூ.50 |
| சீவக சிந்தாமணி | ,, | ரூ.50 |
| திருவிளையாடற் புராணம் | ,, | ரூ.40 |
| குப்பைமேடு | (சிறுகதைகள்) | ரூ.25 |
| படித்தவள் | ,, | ரூ.25 |
| பரிசு மழை | ,, | ரூ.25 |
| கிளிஞ்சல்கள் | ,, | ரூ.30 |
| வெறுந் தாள் | (நாவல்) | ரூ.25 |
| வழுக்கு நிலம் | ,, | ரூ.50 |
| நனவோட்டங்கள் | ,, | ரூ.50 |
| அரை மனிதன் | ,, | ரூ.30 |
| அணியும் மணியும் | (கட்டுரை) | ரூ.30 |
| திருக்குறள் செய்திகள் | (தொகுப்புரை) | ரூ.40 |
| திருக்குறள் மூலம் | | ரூ.20 |
| நாலடியார் செய்திகள் | (தொகுப்புரை) | ரூ.20 |
| மொழி ஒப்பியலும் வரலாறும் | (மொழியியல்) | ரூ.50 |
| மொழியியல் | (இலக்கண நூல்) | ரூ.50 |
| தொல்காப்பியமும் நன்னூலும் | ,, | ரூ.60 |
| சங்க இலக்கியத்தில் உவமைகள் | (ஆய்வு நூல்) | ரூ.50 |
| திருப்பாவை விளக்கவுரை | | ரூ.20 |
| திவ்விய பிரபந்த சாரம் | | ரூ.15 |
| சொல்லின் செல்வன் | (நாடகம்) | ரூ.25 |
| தெய்வத் திருமகன் | (புதுக் கவிதை) | ரூ.25 |
| திரௌபதி சூள் உரை | ,, | ரூ.30 |
| தமிழ் இலக்கிய வரலாறு | (இலக்கியம்) | ரூ.20 |
| சிலப்பதிகாரம் மூலமும் திறனாய்வும் | (ஆய்வு நூல்) | ரூ.100 |
| மணிமேகலை மூலமும் திறனாய்வும் | (ஆய்வு நூல்) | ரூ.50 |
| சிலம்பின் கதை | (உரைநடையாக்கம்) | ரூ.50 |
| மணிமேகலை கதை | ,, | ரூ.50 |

# புகழேந்தி நளன் கதை

## அறிமுகம்

நளன் கதையை யார் கூறியது? ஏன் கூறப் பட்டது? அதுவே ஒரு கதையாகிறது. பாரதம் அந்தக் கதையே தருமன் சூதாட்டத்தை மையமாகக் கொண்டு அமைந்த ஒன்று.

தருமன் நேர்மை தவறாதவன்; தவறு செய்யாதவன்; அத்தகையவன் சூது ஆடினான்; அதனால் விளைந்த விளைவு நாட்டை இழந்தான்; காட்டை அடைந்தான்; இழந்த நாட்டை மீண்டும் பெற்றான். இதுதான் பாரதக் கதை.

காட்டில் பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்தான்; விராட நகரில் ஓர் ஆண்டு மறைந்து உறைந்தான்; பின்பு வெளிப் பட்டான்.

பன்னிரண்டு ஆண்டுகள் காட்டிலும், ஓர் ஆண்டு மறைந்தும் வாழ்ந்து பின் நாடு கேட்டனர்; தருகிறோம் என்று கூறிய துரியன் வார்த்தை தவறிவிட்டான்.

அடுத்து என்ன செய்வது என்று செவி மடுத்துப் பலர் உரையையும் தருமன் கேட்டான். போர் தொடுப்பதே நேர்வழி என்று தம்பியர் உரைத்தனர். கண்ணன் உடனிருந்து அவர்கள் கருத்துரைகளைக் கேட்டான்; பாஞ்சாலியும் தான் விரித்த கூந்தலை முடிக்க வேண்டும் என்று துடி துடித்தாள்; போர் செய்வதே தக்க வழி என்று எடுத்து உரைத்தாள். வீமன் வீரம் பேசினான்; அர்ச்சுனன் காண்டீபம் எடுத்தான்; தருமன் அவர்களை அமைதிப் படுத்தினான்.

எதற்கும் கண்ணனைத் தூது அனுப்பி வைப்பது என்று முடிவு எடுத்தனர்; கண்ணனைத் தூது அனுப்பி வைத்தனர். நாடும் தரமுடியாது; இருக்க வீடும் கிடையாது என்று துரியன் வீர முழக்கம் செய்தான். போருக்கு அவன் துணிந்து நின்றான்.

அடுத்துப் போர் செய்வதுதான் வழி என்று அதற்கு வேண்டிய படைகளைத் திரட்டுவதில் பாண்டவர் முனைந்தனர்; அவர்களுக்கு வேண்டிய அரசர்கள் அவர்களுக்குத் துணையாகச் செயல்பட அங்கு வந்து கூடினர். முனிவர்கள் பலரும் அவர்களுக்குத் தக்க அறிவுரைகள் தர அங்கு வந்து சேர்ந்தனர்.

வேதம் வகுத்த வியாசனும் அவர்கள் ஏதம் அறிந்து ஆறுதல் கூற அடவியை அடைந்தான். அவன் வருகை கண்டு தன் இருக்கை விட்டு எழுந்து தருமன் வரவேற்றான்.

அவன் வருகையால் தன் பிறவிப் பெருந்துயர் எல்லாம் தீர்ந்தது என்று போற்றிப் புகழ்ந்தான். வியாசன் தருமன் மனத் தளர்ச்சியைக் கண்டு அவன் கவலையோடு இருப்பதை அறிந்தான். தோல்வி கண்டு மனம் தளராதவன் தருமன். உயர்விலும், தாழ்விலும் சமநிலை காட்டும் மனநிலை உடையவன். அத்தகையவன் சித்தம் கலங்கியது ஏன் என்று கேட்டான்.

தருமன் 'தன்நிலையை எடுத்து உரைத்தான். "போருக்கு உரிய செயற்பாடுகள் அனைத்தும் செம்மை யாக நடைபெறுகின்றன; அர்ச்சுனனும் கயிலை சென்று பரமசிவன்பால் அத்திரம் பெறச் சென்றுள்ளான். விரைவில் வருவான்" என்று தெரிவித்தான். "எங்களுக்கு ஆற்றல் உள்ளது; மேலும் திரு எங்களை வந்து சேரும்; அதற்காகக் கவலைப்படவில்லை" என்று கூறினான்.

"கவலையுற்ற நிலைக்குக் காரணம் யாது?" என்று வியாசன் கேட்டான்.

''யான் செய்த தவறு என்னை வாட்டுகிறது; மனம் உளைகிறது. யான் சூது ஆடியதால்தானே இந்தத் தீதுகள் வந்து சேர்ந்தன; அரசர்களில் என்னைப் போல் யாராவது இப்படிச் சூது ஆடிக் கேடுகளை விளைவித்துக் கொண்டவர்கள் இருக்கின்றார்களா?'' என்று கேட்டான்.

அவனுக்கு ஆறுதல் கூற வியாசன் ''மன்னர்கள் இருக்கிறார்கள்; சூதாடுவது கேடு தருவதுதான்; என்றாலும் அதனை மேற்கொண்டு அழிந்தவர்கள் உனக்கு முன்பும் இருந்திருக்கிறார்கள். நீ செய்தது புதிது அன்று; வருந்தாதே'' என்று கூறினான்.

மேலும் அவனுக்கு ஆறுதல் கூற நளன் கதையைக் கூறத் தொடங்கினான். கலியால் விளைந்த கதை இது; நளன் என்பவன் உன்னைப் போல் நாடு இழந்தான்; இந்தக் கேடுகள் நிகழ்வதற்குக் கலியன்தான் காரணம். விதி வலிமையுடையது; அதனால் ஏற்பட்ட பாதிப்பு இது'' என்று கூறினான்.

தருமன் நளன் கதையைக் கேட்பதில் ஆர்வம் காட்டினான். 'பாரதம்' நிகழ்வதற்கு முன் தோன்றிய கதை என்பது இவர்கள் பேச்சுரையால் வெளிப்பட்டது.

தன் வாழ்வைப் போலவே நளன் கதை அமைந்திருப்பது கண்டு மன ஆறுதல் பெற்றான். நளன் தமயந்தியை வைத்துச் சூதாடவில்லை; தருமன் அவ் வகையில் நெறி பிறழ்ந்து விட்டான் என்றுதான் கூற முடியும்.

மனைவி தன் உடைமை என்ற தவறான கருத்தே தருமனைத் தவறு செய்யத் தூண்டியது. நளன் தன் காதலியை மதித்தான்; அவள் தனக்கு உரியவள்; உடைமையள் அல்லள்; இந்த வேறுபாட்டை அறிந்து செயல்பட்டான்.

இனி நளன் கதையை வியாசன் கூறத் தொடங்கினான்.

# 1

# சுயம் வர காண்டம்

நிடதநாடு நளன் ஆண்ட நாடு; அதன் நீர்வளம் நிலவளம் அதனைச் செல்வம் மிக்க நாடாக ஆக்கின.

கண்ணைக் கவரும் பொய்கைகள் அவற்றில் வண்ண மலர்கள் அந்த நீர் நிலைக்கு அழகு ஊட்டின; வயல்களில் கயல்மீன்கள் பிறழ்ந்து கவின்மிக்க காட்சியைத் தந்தன; குவளை மலர்கள் பூத்துக் கிடந்தன; தாமரை மலர்களில் செந்தேன் சொட்டத் தளைகள் அவிழ்ந்தன. காட்சிக்கு இனியதாக அவ்வூர்ப் பொய்கைகள் எங்கும் நிறைந்து கிடந்தன.

கயல் பிறழ்ச்சியும், குவளை மலர்ச்சியும், தாமரை தளை நெகிழ்ச்சியும் திருமகளின் கண்களை நினைவூட்டின. நிலமடந்தையின் கண்போல் நிடத நாடு தோற்றம் அளித்தது; பல்வகைச் சிறப்புகளால் அது ஏற்றம் பெற்று இருந்தது.

இந்த நாட்டின் தலைநகர் மாவிந்தம் ஆகும். இந்நகர் செல்வம் மிக்க நகராக விளங்கியது. மகளிர் தம் கொங்கைக்கு அப்பிய கலவைச் சாந்து அது உலர்ந்து குப்பையாய்த் தெருவை நிரப்பியது. களிறுகள் அக்கலவைச் சாந்தில் கால் வழுக்கிவிழுந்தன. அது சேறாக விளங்கியது.

அவ்வூர் மகளிர் தம் கூந்தலுக்கு ஊட்டிய அகில்புகை வான்முகிலில் கலந்து அது பெய்யும் மழை நீருக்கு அம் மணத்தைச் சேர்ப்பித்தது. அந்த ஊரில் பெய்த மழை நீரும் அகில் மணம் வீசியது.

மக்கள் கல்வியும், ஞானமும் மிக்கவராய் வாழ்ந்தனர். கந்தனை அனையவர் கலை தெரி கழகங்களாக அவர்கள் பயிலும் கல்வி நிலையங்கள் காட்சி அளித்தன. புலவர்கள் நூல்களை ஆராய்ந்தனர். கவிஞர்கள் கவிதைகள் இயற்றினர். அரங்கேற்றங்கள் நடைபெற்றன.

ஆடல் மகளிர் மேடைகளில் காட்சி அளித்தனர். அவர்கள் 'இடை' கவர்ச்சி தந்தது. கண்புலனுக்குத் தெரியாத கவின் அது பெற்றிருந்தது. எங்கும் இசை முழங்கியது; முத்தமிழ் வளர்த்த வித்தகர்கள் கலையையும், ஞானத்தையும் வளர்த்தனர். அறிவுமிக்க சான்றோர்கள் வாழ்ந்ததால் மக்கள் கவலை இன்றி வாழ்ந்தனர்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான், அதனை உயிரினும் மேலானதாக மதித்தனர். நேர்மை தவறாது வாழ்ந்தனர். சோர்வும், சோம்பலும் அவர்களிடம் தலை காட்டவே இல்லை. ஆண்மை மிக்கவராகத் திகழ்ந்தனர். விற் பயிற்சியும், படைக்கலப் பயிற்சியும் அவர்களைச் சிறந்த வீரர்கள் ஆக்கின. ஓடாத படையை உடையவன் நளன் என்ற புகழுக்குக் காரணம் ஆயினான்.

வறுமை இல்லை; அதனால் மக்கள் பிறர் பொருளைக் கவர விரும்பவில்லை; இரத்தல் என்பது இழிவு என்று அறிந்தவராய் வாழ்ந்தனர்; உழைத்தனர்; உயர்வு அடைந்தனர். மக்கள் அழுது அரற்றியது இல்லை; கலக்கம் என்பதும் அவர்கள் கண்டதும் இல்லை; சோர்வு, கலக்கம், அரற்றுதல் என்பனவற்றைக் காணவேண்டும் என்றால் மகளிர் கூந்தலில் சோர்வு காண முடிந்தது; கலக்கம் என்பது நீர் குடைந்தாடும் குளங்களில் காண முடிந்தது. அரற்றுதல்

என்பது மகளிர் கால் சிலம்பில் கேட்க முடிந்தது. வளைவு என்பது வில்லிலே கண்டனர். மக்கள் சொல்லிலே அவர்கள் கண்டது இல்லை.

இத்தகைய வளம்மிக்க நகரில் எங்கும் சோலைகள் நிரம்பி இருந்தன. சேலை கட்டிய மகளிர் இச்சோலைகளில் பூப்பறித்து மகிழ்ந்தனர். புனல் விளையாடினர்; மகிழ்வுடன் விளங்கினர்.

இளவேனிற் பருவம் வந்தது. மன்மதன் தன் கரும்பாகிய வில்லில் மலர்களாகிய அம்புகளைத் தொடுத்தான். தென்றல் வீசியது; அது சோலையில் உள்ள பூக்களின் வாசத்தைத் தெருக்களில் கொண்டு சென்று வீசியது. இளைஞர்கள் கிளர்ச்சி பெற்றனர். சுகமான காற்று அவர்களைக் காம விருப்புக்குத் தூண்டியது; இன்ப வேட்கையை நாடினர்.

பூக்களில் தேன்நாடி வண்டுகள் சென்றன. நளன் சோலைகளில் பூ நாடிச் சென்றான். அவனோடு அந்தப் புரத்து அழகியர் சிலர் உடன் சென்றனர். அவர்கள் முகம் சந்திரன் போல் ஒளி வீசியது. கண்கள் கருங்குவளை என்று அழகு பெற்றிருந்தன. அம்மகளிர் நளனையே சுற்றி வட்டமிட்டனர். அவர்கள் விழிகள் அவனை வளைத்துப் பிடித்தன. அவர்கள் தன்னைச் சூழ்ந்து வர நளன் சோலையை அடைந்தான்.

அங்கே வடிவுமிக்க அன்னப்பறவை ஒன்று பறந்து வந்தது; பசுமையான சோலை அதுதன் பசுமை நிறம் மாறி வெண்மை நிறம் பெற்றது என்று கூறும்படி அதன் சிறகுகள் வெண்மையாகக் காட்சி தந்தன. அதன் தாள் நிறத்தால் பொய்கையின் தலம் சிவப்புப் பெற்றது. இந்தப் புதுமை கண்டு பதுமை நிகர் பெண்களோடு இருந்த நளன் அதனைப் பிடித்து வர அவர்களுள் சிலரை ஏவினான்.

மயில் கூட்டம் சென்று வளைப்பதுபோல் அவர்கள் அந்த அன்னத்தை வளைத்துப் பிடித்தனர். அதனை அவன் முன் கொண்டு வந்து நிறுத்தினர்.

“தன்னை இவர்கள் ஏன் பிடித்து வந்தார்கள்” என்பது அதற்கு விளங்கவில்லை; கூட்டத்தில் கூடி இருந்து ஆடி மகிழும் பறவை அது. தனித்து விடப்பட்டது. சுற்றும் முற்றும் பார்த்தது; தன் சுற்றம் ஆகிய அன்னப் பறவை ஏதாவது அங்குத் தென்படுமா என்று பார்த்தது. ஏக்கத்தால் அது தாக்கம் பெற்றது; நடுங்கியது; தனிமையால் வாடியது; தன் வான் கிளையைத் தேடியது.

அதன் நடுக்கத்தைக் கண்டு நளன் வடுநீங்கிய மாற்றம் உரைத்தான். “அன்னமே நீ அஞ்சாதே! உன்னை யான் பிடித்து வரச் செய்தது உன் அழகிய நடையைக் காணவே; கவிஞர்கள் மகளிர் நடைக்கு உன் நடையை ஒப்புமை கூறி வருகின்றனர். எனக்கு ஒரு ஐயம்; உன் அழகிய நடை சிறந்ததா? மகளிர் தம் மாட்சிமைப்பட்ட நடை சிறந்ததா ஒப்பிட்டுக் காணவே பிடித்து வரச் செய்தேன். இதில் தப்பு ஏதும் இல்லை என்று விளக்கினான்.

அங்கே அழகிய பெண் ஒருத்தி இந்த அன்னத்தைப் பிடித்து வந்திருந்தாள். தாமரையில் இருக்கும் திருமகள் போல் அந்தப் பெண் இருந்தாள். அழகி அருகில் நிற்க இந்த அன்னம் அந்தச் சூழ்நிலை கண்டு மகிழ்ந்தது. அவன் மகளிர் பால் நாட்டம் உடையவன் என்பதை அறிந்தது. காதல் செய்யும் காளை அவன் என்பதை அறிந்தது.

அவன் இரக்கம் உள்ளவன் என்பதை அறிந்தது; யாரையும் வருத்தாதவன் என்பதையும் அறிந்தது; ‘தண்ணளியான்’ என்று அவனைப் பற்றி முடிவு செய்தது. அச்சம் அதனை விட்டு அகன்றது.

அவன் பேரழகன் என்பதைக் கண்டு தெளிந்தது. அவனுக்கு ஏற்றவள் யார் என்று எண்ணிப் பார்த்தது.

தமயந்தியின் நினைவு வந்ததது. அவள் அழகிய நடை அவனைக் கவரும் என்று முடிவு செய்தது. மூங்கில் போன்ற தோள்களை உடையவள் அவள். அவள் தோள்களைத் தழுவுவதற்கு ஏற்றவன் அவன் என்று முடிவு செய்தது.

“புகழ்மிக்க அரசனே! உன் பருத்த தோள்களுக்கு ஏற்றவள் சிறுத்த நெற்றியை உடைய பேரழகி தமயந்தி என்பாள் இருக்கிறாள். அவள்தான் உனக்கு ஏற்றவள்” என்று பேசியது.

காதல் விருப்பு அவனுக்கு எழுந்தது. அன்னத்தின் சொற்கள் அவனுக்குக் களிப்பு ஊட்டின; வேட்கையைத் தூண்டின. அவளை அவன் தன் இதயத்தில் இருத்தினான். கன்னி அவன் மனக் கோயிலில் இடம் பெற்றாள். மன்மதன் அவன் ஆசையைத் தூண்டிவிட்டான். தன் மனத்தை அவனால் அடக்கிக் கொள்ள முடியாமல் போய்விட்டது.

மயிலே வந்து நடமாடுவது போன்று அவளை அவன் அதன் சொற்களில் கண்டான். தமயந்தியின் மென்மையான சாயல் அவனைக் கவர்ந்தது. “மயில் அனையாள்; அவள் யார் மகள்?”என்று ஒரு வினாவினைக் கேட்டு வைத்தான்.

அவள் அரச மகளா? தெய்வ மகளா? என்ற ஐயம் அவனுக்கு ஏற்பட்டது. அரச மகளாயின் அவள் தந்தை யார்? நாடு யாது? என்பனவற்றை அறிய ஆவல் கொண்டான். ஊர், பெயர் கூறினால் தெரிந்து கொள்ளலாம் என்ற ஆவல் கொண்டான்.

‘விதர்ப்பன் மகள்’ என்று அன்னம் பதில் உரைத்தது. பேரரசன் மகள் அவள் என்பதை அறிந்து கொண்டான். அவளை எப்படி அடைவது?

அந்த அன்னம் அவன் விருப்பத்தைத் தூண்டியது. அவள் நற்குணங்களையும், செயல்களையும் விளம்பத்

தொடங்கியது. மாட்சிமை மிக்கவள் அவள் என்பதை எடுத்துக் கூறியது. அவளிடத்தில் பெண்மை அரசு புரிகிறது என்று எடுத்துக் கூறியது. அவள் நற்குணங்களை அழகிய உருவகங்களில் எடுத்துப் பேசியது.

''அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு இவை அவள்பால் காணப்படும் நற்குணங்கள். இவை அவளுக்கு நாற் படைகள் ஆகும். காற்சிலம்பு அணி முரசு; கண்கள் அவளுக்கு வேலும், வாளும் ஆகும். அவள் அழகிய முகம் அது நிலவு போன்றது; அது வெண் கொற்றக்குடை. அதன் கீழ் பெண்மை அரசு ஆள்கிறது'' என்று கூறியது.

''அவள் வனப்பு மிக்கவள்'' என்று கூறியது. இடை மெல்லியது; வண்டு தன் சிறகு கொண்டு வீசும் சிறு காற்றுக்கும் அவள் ஆற்றாள்; மெல்லியலாள்'' எனப் பேசியது.

''அவள் செந்தேன் மொழியாள்'' என்றும் கூறியது. ''மன்மதனும் அவளிடம் வந்து தன் மலர் அம்புகளைத் தீட்டுவதற்கு அவள் பிறை போன்ற நெற்றியைத்தான் நாடு கிறான். அவள் அழகு மன்மதனையும் கவர்ந்து உள்ளது. அவன் தன் ஆட்சிக்கு அவளைத் துணையாக நாடுகிறான். இளைஞர்கள் அவள் பேரழகைக் கண்டு மனம் உடைவர்'' என்று பேசியது.

அவனுக்கு அவள்பால் விருப்பு பெருகியது. இந்தப் பறவை எப்படித் தன் காதலை எடுத்து உரைக்கும் என்று ஏங்கினான். இருவருக்கும் உள்ள பழக்கம் எத்தகையது என்பதை அறிய விரும்பினான்.

''அன்னமே! நீ உரைத்த அன்னம் அவளைப் பற்றி எண்ணவே என் ஆவி சோர்கிறது. உனக்கும் அவளுக்கும் உள்ள நெருக்கம் யாது? பழக்கம் யாது?'' என்று கேட்டான்.

“யாம் பூஞ்சோலையில் வாழுகின்ற பறவைக் கூட்டம். அவள் தன் மனையிடத்தில் மயிற்கூட்டம் போல் திரிந்து உள்ளோம்; காமன் அங்கு வந்து படை கற்க வருவான். அவள் பாத நடையைக் கற்க யாம் செல்வது வழக்கம்” என்று கூறியது.

அன்னத்திற்கும் தமயந்திற்கும் உள்ள உறவு, பழக்கம், நெருக்கம் அறிந்ததும் அவனுக்குக் காதலில் வேட்கை மிகுந்தது.

“இற்றது நெஞ்சம்; எழுந்தது இருங்காதல்; அற்றது மானம்; அழிந்தது நாண்” என்று தன்நிலை பற்றிக் கூறினான். “இனி என் உயிரே உன் கையில்தான் உள்ளது. நீ கொண்டு வந்து கூறும் சொற்களில்தான் என் வாழ்வு உள்ளது” என்று கூறினான்.

“அவளை உன் தோள்களில் கொண்டு வந்து சேர்ப்பேன்” என்று கூறி விடை பெற்றது.

“வீமன் திருமடந்தை மென்முலையை உன்னுடைய வாம நெடும் புயத்தே வைகுவிப்பேன்”என்று கூறி விடை பெற்றுச் சென்றது; உயரப் பறந்தது.

அவன் ஆர்வம் அளவு கடந்தது. அது விரைவில் செல்ல வேண்டும், சென்று பேச வேண்டும். காதலை எடுத்து இயம்ப வேண்டும். மறுஉரை பெற்றுத் திரும்ப வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டினான்.

அவள்பால் கொண்ட காதல் அவனைப் பெரிதும் கலக்கியது. அவள்பால் கொண்ட விருப்பு அதனால் காதல் காட்சி ஏதேனும் கண்டதும் அவன் மனம் அழிந்தான்; வேதனையால் வெந்து வருந்தினான்.

ஆண் குயில், பெண் குயிலுடன் விரும்பி மகிழ்வுடன் பேசும் சிறுகுரல் கேட்டான். அவ்வளவுதான் அதை

அவனால் தாங்கவே முடியவில்லை. "காதல்" அது வேதனையைத் தந்ததது.

"இந்தக் குயிலைப்போல் யான் அவளோடு பேசி மகிழமாட்டேனா" என்று ஏங்கினான்.

எந்த அழகிய காட்சியைக் கண்டாலும் அவன் மனம் இளகியது. அவன் முன் மயில் ஒன்று தோகை விரித்து ஆடியது. அதனைக் கண்டான். அவள் மென்மையான சாயல் அவன் கண்முன் நின்றது. அவளே வந்து முன் நிற்பது போல் தோன்றியது. அவன் உள்ளம் கலங்கினான்; "அவள் பேரழகைக் கண்டு மனம் மகிழ மாட்டோமா" என்று ஏங்கினான்.

குயிலைக் கண்டான். அதன் குரல் கேட்டு மனம் நைந்தான். மயிலைக் கண்டான். அதன் ஒயில் பார்த்து மனம் அழிந்தான். அங்கே பூங்கொடி ஒன்றைக் கண்டான். அவளே ஒசிந்து நிற்பதுபோல் அது காட்சி அளித்தது. அவளுக்கு உவமையாகக் கூடிய அக்கொடியைப் பார்த்து 'நீங்களாவது என்னுடன் உரையாட மாட்டீர்களா?' என்று ஆற்றாமையால் பேசினான்.

"நீங்கள் மிகவும் கொடியவர்கள்" என்று கூறினான். "கொடியீர்! என்று கூறிக் கரங் கூப்பித் தொழுதான். அச்சமும் ஆர்வமும் அவன் சொற்களில் கலந்து ஒலித்தன.

"என் காம வேட்கையை நான் தீர்த்துக் கொள்வேன்" என்று பேசி மன ஆறுதல் அடைந்தான். "கொங்கை இளநீரால் குளித்து மகிழ்வேன்" என்று பேசினான். "அவள் சொற் கரும்பைச் சுவைப்பேன்" என்றான். "அவள் பொங்கு சுழி என்னும் தடத்தில் முழுகித் திளைத்து மகிழ்வேன்" என்று கூறினான். "என் வெப்பமிகு காம நோயினை அவள் நறுங் கூந்தலின் நிழலில் ஆற்றிக் கொள்வேன்" என்றும் பேசினான்.

இவ்வாறு இவன் தனிமைத் துயரில் தளர்வு கொண்டிருந்தான். நளன் அனுப்பி வைத்த அன்னப் பறவை தமயந்தி இருக்கும் இடத்தை அடைந்தது. அந்த அழகிய அன்னத்தைக் கண்டதும் தமயந்தி அதன் அருகில் அணைந்தாள். அவள் தன்தோழியருடன் விளையாடுவது விட்டுவிட்டு அந்த அன்னத்தைத் தனி இடத்தில் சந்தித்தாள்.

அது ஏதோ ஒரு செய்தி கொண்டு வந்திருக்கிறது என்பதை அறிந்தவள்; ஆதலின், "நீ கூற வந்த செய்தி யாது?" என்று வினவினாள்.

கூர்த்த மதி படைத்த அந்தப் பறவை எப்படிக் கூறினால் அவள் ஏற்பாளோ அதை அறிந்து கூறியது. "செம்மனத்தான்" என்று கூறியது. தான் கண்டு வந்த ஆடவன் யார்? எத்தகையவன் என்பதைக் கூறத் தொடங்கியது. அவன் தன்பால் அன்பும் இரக்கமும் பாராட்டியதைக் கொண்டு அவனைத் "தண்ணளியான்" என்றும் கூறியது.

யாரோ ஒரு தீர்க்கதரிசியைப் பற்றிக் கூறுவதுபோல இருந்தது. புத்தனைப் பற்றிப் பேசுவது போல இருந்தது. யாரோ ஒரு மகானைக் கண்டு வந்தது போல் அதன் பேச்சின் தொடக்கம் அமைந்திருந்தது.

அரசன் அவன் என்பதை அடுத்துக் கூறியது. அதனால் அவளுக்கு என்ன நன்மை? 'காதல் இளைஞன்' என்பதை அடுத்துக் கூறியது. 'மங்கையர் தம் மனத்தை வாங்கும் தடந்தோளான்' என்று கூறியது. வாய்மை தவறாதவன் என்று அவன் தனிப் பண்பைக் கூறியது. இறுதியில் அவன் பெயரைக் கூறியது "நளன் என்பான் ஒருவன் உளன்" என்று முடித்தது.

சரி எத்தனையோ அரசர்கள் இருக்கிறார்கள். அவர்களுள் ஒருவன்தானே இவன் என்று எண்ணக் கூடும்

''ஒப்பாரும் இல்லை மிக்காரும் இல்லை'' என்று இறுதியில் முத்தாய்ப்பு வைத்ததுபோல் கூறியது.

அடுத்தது தெய்வம் கூட இவனுக்கு ஒப்பாக மாட்டாது என்று கூறிப் புகழ்ச்சியின் எல்லையைத் தொட்டுக் காட்டியது. ''இவன் அறத்தைத் தேடிச் செல்லவில்லை; மறத்தை நாடி இவன் முயலவில்லை''.

''அவை தாமே அவனிடம் வந்து தங்கிவிட்டன. அவன் பார்வை அருள் நோக்கம் கொண்டது'' என்றும் கூறியது. இதனை மிக அழகாகக் கூறியது.

அன்னத்தின் சொல்திறம், அவள் தனிமை, வாலிப வயது, மன்மதன் வில்லம்பு துளைத்தது; அதனால் அவள் என்ன ஆனாள்? 'இளைத்தாள்' என்று கூறுவது அவசரப்பட்டுக் கூறும் சொல்லாகிவிடும். 'வெளுத்தாள்' என்பதுதான் பொருந்தும். சிவந்து இருந்த அவள் முகம் வெளுத்துவிட்டது. காதல் ஏக்கம் அவளைத் தழுவியது; அவன் நினைவு அவளை வாட்டியது. 'மேனி விளர்த்தாள்' என்று கூறும் நிலையை அடைந்தாள்.

மன்னன் மனத்து எழுந்த காதல் மயக்கம் அத்துணையையும் அது விவரித்துக் கூறியது. அதனைக் கேட்டு அவள் உள்ளம் உருகினாள். அவனைத் தழுவிக் கொள்ள விழைந்தாள். ஆர்வம் மிக்கவள் ஆயினாள். அவள் தன் முலை முகத்தைப் பார்த்து மயங்கினாள். அவள் வேறு என்ன செய்ய முடியும்.

அவளும் மனம் பதைத்துப் பார்வேந்தனுக்குத் தன் செய்தி கூறுமாறு வேண்டினாள். ''வாவிகளில் உறையும் இள அன்னமே! நீ சென்று அவனிடம் பேசினால் என் உயிரைப் பாதுகாத்தவள் ஆகிறாய்; மறுபடியும் செல்க; அச்சோலையிடத்தே தேர்வேந்தனுக்கு என் நிலைமை நீ சென்று உரைப்பாய்; இது என் வேண்டுகோள்'' என்று உரைத்தாள்.

"அவன் தோள்களை நீ தழுவ உதவுவேன்; நீ கவலை கொள்ளாதிரு; அவன் தோள்கள் உன் வன முலைக்குக் கச்சு ஆகும்படி செய்வேன்" என்று கூறியது. மன்மதன் அம்புக்கு இலக்கு ஆகிக் கலக்கமுற்று இருந்த நளன்பால் சென்றது.

அன்னம் அவளை விட்டு நீங்கியது; பின்னர் அவள் நிலைமை என்ன ஆயிற்று? காதல் நெஞ்சத்தில் காரிகை கலக்க மடைந்தாள். தனிமையை நாடினாள். தோழிகளை விட்டு ஒதுங்கினாள்; உண்பது உறங்குவது ஒழிந்தாள். மேனி பசலை பாய்ந்தது; வாட்டமுற்றாள். தோழியர் காரணம் கேட்டுப் பார்த்தனர்.

அவள் தக்க மாற்றம் தந்திலள்; கிளவிகள் சிலவே அவள் வாயில் பிறந்தன. அவள் காதல் மயக்கத்தை அக் கன்னியர் அறிந்தனர். அவள் தாய்க்குச் சென்று உரைத்தனர். தாய் அவளைப் பெற்ற தந்தைக்குக் கூறினாள். விதர்ப்பன் சிந்தித்தான். "சிறுமி அல்லள் அவள்" என்பதை அறிந்தான். "பருவ விழைவு" இது என அறிந்து செயல்பட்டான்.

கன்னியர் தங்கும் மாடத்தில் அவள் தன்னந்தனியாக இருந்தாள். அரசன் உரிய சுற்றத்தோடும் படை வகுப்புகள் பின் தொடர அம்மாடத்தை அடைந்தான். முரசு கேட்டு அவள் அவனைப் பரச விரைவில் வந்தாள். அவன் காலடிகளில் விழுந்து தொழுதாள். அவள் கண்ணீர் அவன் பாதங்களை நனைத்தது; சொற்கள் பயன் அற்றுப் போய் விட்டன. உணர்வுதான் பேசியது. அரசன் அவளை விளக்கமாக விசாரிக்காமல் விசனம் அறிந்து திரும்பினான். பேரழகு சோர்கின்றது என்று கூறும்படி அவள் சிறு நெற்றியில் வியர்வை அரும்பியது. "மணம் செய்வது; அதுதான் தக்கது" என்று முடிவு செய்தான்.

"இன்றைய ஏழாம் நாள் மங்கைக்குச் சுயம்வரம்" என்று செய்தி செப்பினான். "எங்கும் முரசு அறைக" என்று ஏவினான். அரசர்களுக்குத் தனித்தனியாகத் தூது அனுப்பினான்.

எங்கும் உள்ள அரசர்கள் தங்கு தடை அற்று அங்கு வந்து மொய்த்தனர். சந்திரன் சுவர்க்கி என்னும் அரசன் அவன்மீது பாடப்பட்ட தமிழ்ப் பாக்கள் எண்ணற்றவை. அவற்றைப் போல் இம்மன்னர்கள் பலரும் அங்கு வந்து சேர்ந்தனர்.

வந்தவர்கள் அங்கங்கே இருந்த மாளிகைகள், சத்திரங்கள், மன்றங்கள் எல்லாம் நிறைத்துவிட்டனர். மேலும் தங்குவதற்கு இடமில்லாமல் பறவைகள் தங்கும் சோலைகளிலும், தாமரைத் தடாகக் கரைகளிலும், உள்ளும் புறமும் இனிது தங்கினர். அவரவர் தம் மனத்தில் தமயந்தியை வைத்துப் பூசித்தவர்கள் போல் அவள் நினைவில் கிடந்தனர்; அவள் நினைவாக வாழ்ந்தனர்; கனவுக் கன்னியாக அவள் அவர்கள் நெஞ்சில் இடம் பெற்றாள்.

நீண்ட ஆகாயத்தில் மேகங்களைக் கிழித்துக் கொண்டு அன்னம் வர நளன் அதனைக் கண்டான். அவன் அது வரும் வழியில் விழி வைத்தான். அதன் சொற்கேட்கக் காதுகளைக் கூர்மைப் படுத்திக் கொண்டான்; அவள் காதல் மயக்கத்தில் நெஞ்சினை ஓடவிட்டான்; வழிமேல் விழி வைத்து அவள் காதல் மொழிமேல் செவி வைத்து மோகச் சுழிமேல் நெஞ்சு ஓட வைத்தான்.

அன்னத்தின் சொற்களைக் கேட்க ஆவல் மிக்கவன் ஆயினான். செல்வரை அணுகும் வறியவர் மனநிலையை அவன் பெற்றான். அன்னத்தின் முகம் பார்த்து அதன் அருள்நோக்கி, உள்ளம் அறிய ஆவலாய் நின்றான். காதல் உரைகளைக் கேட்பதில் ஆர்வம் காட்டினான். தான்

பெருமன்னன் என்பதையும் அவன் நினைத்துப் பார்க்க வில்லை. இந்த வகையில் எளியனாய் நடந்து கொண்டான். செல்வரை அணுகும் வறிஞரைப் போல் அதன் முன் நடந்து கொண்டான்.

பகைவரைக் கண்டு அஞ்சாது வேல் எடுக்கும் வீரன் அவன். மிகவும் தாழ்ந்து விட்டான்; அடக்கமாகப் பேசினான். "அன்னக் குலத்தின் அரசே!" என்று அதனை விளித்துப் பேசினான். "அழிகின்ற என் உயிரை நீ தந்து அளித்தாய்; நீ கண்ட அவளுக்கு எந்தவித இடையூறும் இல்லையே! அவள் நலம்தானா?" என்று கேட்டான்.

பேரரசன் இவன் தன்பால் சொல்லிய செய்திகள் அனைத்தையும் அவன்பால் செம்மையாக உரைத்தது. அவளும் அவனுக்குத் தெரிவிக்கச் சொன்ன செய்தி களையும் கூறியது. இருவர் தம்மிடம் உள்ள காதல் பற்றிய உரைகளையும் மாறி மாறிச் செப்பியது. அவள் தன்பால் நேசம் கொண்டு இருக்கிறாள் என்ற பாசம் மிக்க சொற்களைக் கேட்டான். அவ்வளவுதான்; பித்துப் பிடித்தவன் போல் ஆயினான். அறிவு அழிந்தான். உள்ள அறிவும் கொள்ளை போய்விட்டது என்ற நிலைமை ஏற்பட்டது.

கேட்ட செவி வழியே அவன் உணர்வும் நீங்கியது. அவன் மனம் ஓட்டை மனம் ஆகியது; உளைச்சல் மிக்க மனம் ஆகிவிட்டது. உயிர் தள்ளாடியது. உணர்வும் உயிரும் அவனைவிட்டு நீங்கிய நிலையில் வெறும் சடமாகக் காணப்பட்டான். அவன் ஆழ் துயரினின்று அவனை மீட்க முடியாது என்றுபட்டது. குழியில் விழுந்து விட்ட யானை போல அவன் சாய்ந்தான். நெருப்புத் தழலில் பட்ட தளிர்போல் அவன் வேதனை அடைந்தான். அவன் துடிதுடித்து வேதனையுள் ஆழ்ந்தான். துன்பத்துள் முழுகினான்.

அந்நிலையில் அவன் வாயிலைத் தூதுவர் வந்து அடைந்தனர். 'கோதை சுயம்வரம்' அது குறித்து கொற்ற வனுக்கு வந்து கூற அவர்கள் காத்திருந்தனர்.

அச்செய்தியைக் காவல் காப்போர் சென்று உரைத் தனர். அவ்வளவுதான்; செய்தி கேட்டு அறியவும் முயல வில்லை. அவர்களோடு பேசிக் கொண்டு இருக்கும் போதே "தேரில் குதிரை பூட்டுக" என்று ஆணை இட்டான். "விதர்ப்பன் நகருக்குச் செலுத்துக" என்று செய்தி கூறினான்.

வீமன் திருமகளை அவன் தன் உயிராக மதித்தான். அந்நகரை அடைந்து அதனைக் கண்டு அதன் அழகில் ஆழ்ந்தான்.

யாழிசை பாடிச் சிவனின் சீற்றத்தைத் தவிர்த்தவன் என்ற பெரும் புகழுக்கு உரியவன்; நன்மை செய்வதில் நாட்டம் உடையவன் நாரதன்; அவன் இந்திர உலகம் சென்று இந்திரனைச் சந்தித்தான். அன்று இந்திர அவை கூடியிருந்தது.

அன்று அந்த அவையில் கூட்டம் குறைவாக இருந்தது. வழக்கமாக மண்ணுலகில் இருந்து வீரமும், ஆண்மையும் மிக்க அரசர்கள் வருவது உண்டு. அன்று அரசர்கள் என்பவர்கள் யாரும் வந்திலர்.

கூட்டம் குறைவாக இருப்பதைக் கண்ட இந்திரன், "இவர்கள் நாட்டம் எங்குச் சென்று உள்ளது? ஏன் இவர்களில் யாரும் இங்கு வந்திலர்" என்று நாலும் தெரிந்த அறிஞன் ஆகிய நாரதனைக் கேட்டான்.

தவத்திற் சிறந்த முனிவனாகிய நாரதன் "வீமன் மகள் அவள் மலர்த் தாமம் பெற வேண்டிச் சென்று உள்ளனர் அரசர்கள்; அவளுக்குச் சுயம்வரம் உறுதி செய்யப்பட்டு உள்ளது. அச்செய்தி கேட்டு அரசர்கள் அங்குச் சென்று விட்டனர்" என்று கூறினான்.

“அரச மகள் திருமணம் என்றால் அனைத்து அரசர்கள் செல்வது ஏன்? அவ்வாறு செல்லக் காரணம் என்ன? அவள் என்ன பேரழகியா? எழில் நலத்தால் சிறந்தவளா?” என்று கேட்டான்.

நாரதன் நயம்படக் கூறுவதில் வல்லவன் என்பதைக் காட்டிக் கொண்டான். “அவள் பேரழகி” என்றான். “அழகு சுமந்து இளைத்த மேனியாள்” என்று கூறினான். “வண்டு பழகு கருங்கூந்தல் பாவை” என்றும் கூறினான்.

இந்திரனுக்கு வியப்பு உண்டாயிற்று. “அவள் அழகி என்பதால் இவர்கள் அங்குச் சென்றுமொய்த்துள்ளனர். அவளைத் தானும் காண வேண்டும்” என்று விரும்பினான்.

“அவள் வீமனின் ஒரே மகள். அந்த அரச குலத்துக்கு அவள் ஓர் ஒளித் தீபம்” என்று கூறினான்.

“கவர்ச்சி மிக்கவள்; இளைஞர்கள் கருத்தைக் கவர்ந்தவள்; மன்மதன் அவளை நம்பித்தான் வாழ்கிறான்; அவன் படைக்கு அவள் ஒரு சேமநிதி; அவனுக்கு அவள் ஒரு காப்பு” என்றும் கூறினான்.

அவள் மேனி அழகும் வடிவும் பெரிதும் பேசப்பட்டன. அவள் வீமன் மகள் எனவும், மன்மதன் படைக்கு அவள் ஒரு காப்பு எனவும் எடுத்து உரைத்தான்.

பழகு தமிழ் அவனுக்கு இந் நா நயத்தைத் தந்தது. “அழகு சுமந்தாள். அதனால் இளைத்துவிட்டாள்” என்று கூறியது இந்திரனைச் சிந்திக்க வைத்தது. அவள் பேரழகி; மெல்லியள் என்பது அவனைத் தூண்டியது.

தேவர்கள் கருத்து மண்மகள்மீது சென்றது. வச்சிரப் படை தாங்கியவன் இந்திரன்; ஆட்சி பீடம் ஏறிய அவனுக்குப் புதிய விருப்புத் தோன்றியது; உடன் இருந்த தேவர்களுக்கும் இந்தப் புதிய விருப்பு எழுந்தது.

''ஏன் நாமும் செல்லக் கூடாது'' என்று இந்திரன் கேட்டான்.

அருகிருந்த அக்கினி, வருணன், இயமன் அவர்களும் தாமும் உடன் வருவதாக உரைத்தனர்.

அவள் மாலையிடுகிறாள் என்றால் அது தமக்கு ஏன் வாய்க்கக் கூடாது என்று நினைத்தனர். உடனே அவர்கள் விண்ணாடு விட்டு மண் உலகை நாடிச் சென்றனர்.

நளன் மிகவிரைவாகத் தேரில் வருவதைக் கண்டனர். இழந்துவிட்ட பொருளைத் தேடுபவன்போல் பறிகொடுத்த மனத்தை நாடுவது போல் வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்தான். தமயந்தியின் நினைவு தவிர வேறு எதுவும் அவன் உள்ளத்தில் இடம் பெறவில்லை.

அவன் எதிரே இந்தத் தேவர்கள் தலைவன் சென்றான்; தடுத்து நிறுத்தினான்.

எதிரே இருப்பவன் இந்திரன் என்பதை அறிந்தான். அவனைக் கண்டு வியப்பு அடைந்தான். தன்னை இவன் ஏன் சந்திக்க வேண்டும் என்று எண்ணிப் பார்த்தான்.

''இட்ட வேலையை இட்டமுடன் செய்வாயோ?'' என்று கேட்டான்.

திட்டமிட்டு அவனை அணுகினார்கள் என்பதை அவன் அறிந்து கொள்ளவில்லை.

வாய்மை வீரன்; கேட்டவர்க்கு இல்லை என்று சொல்லிப் பழக்கம் இல்லை.

''ஏவல் இட்டால் செய்வேன்'' என்று அந்தக் காவலன் உரைத்தான்.

நா காக்க வேண்டியவன் அதை மறந்து விட்டான். அவசரப்பட்டு வாக்களித்து விட்டான்.

அவர்கள் இன்னது கேட்கப் போகிறார்கள் என்பதை அவன் சிந்தித்துப் பார்க்கவில்லை. அதனால் இந்தத் தவறு செய்ய நேர்ந்தது.

"பணி இட்டால் செய்வேன்" என்றான்.

"சிறிதுதான்; செய்தி சொல்ல வேண்டும். நீ சொன்னால் அவள் கேட்பாள். எங்கள் நால்வருள் ஒருவர்க்கு அவள் ஏந்தி வரும் மாலையைச் சூட்டச் சொல்லுக; இதுபோதும்" என்று கூறினான்.

இடி விழுந்தது போல் இருந்தது. கட்டிய கனவுகள் சிதைந்தன. அவன் எழுப்பிய மனக் கோயில் அதில் வைத்திருந்த தெய்வத்தை அகற்றச் சொல்லினர். என் செய்வது?

வார்த்தை தந்து ஆகிவிட்டது. அதைக் காப்பது தன் கடமை என்று முடிவு செய்தான். காதலை அவன் உள்ளத்தில் இருந்து கிள்ளி எறிந்தான்; கடமை அதனை ஏற்றுக் கொண்டான்.

அவன் நெஞ்சு படாத பாடுபட்டது; தேவர்கள் இட்ட பணி ஒருபுறம்; கன்னி அவள்பால் கொண்ட காதல் மற்றொரு புறம். இரண்டு பக்கமும் அவன் நெஞ்சு தடுமாறியது. முன்னுக்குப் பின் சென்றது. பஞ்சுபடாதபாடு அவன் நெஞ்சு பட்டது. மாறி மாறிச் சென்றது. 'பாவு' நெய்பவர் அவர்கள் கைத்தறி அதில் உழலும் குழல் அதனைப் போல் நெஞ்சு மாறி மாறிச் சென்றது. வேதனை மிக்கவன் ஆயினான்.

கடமையை ஏற்றுக் கொண்டான்; இனி மடமையாக நடந்து கொள்ளக் கூடாது. அவளிடம் செல்வது என்று முடிவு செய்து கொண்டான்.

அவளை எப்படிக் காண்பது; அரசு அரண்மனை; கன்னிகள் உறையும் தனி மாடம் அது; அங்கே எப்படி

உள்ளே நுழைய இயலும்? காவலர் கடுமை அவனைத் தடுத்து நிறுத்தியது; மற்றும் கள்வர் போல் பிறர்மனையுள் புகுதல் கீழ்மையாகும். கண்ணியம் குறையும்; அவளை நண்ணுவது எப்படி?

ஏன் தேவர்களையே கேட்டு விடுவது என்று முடிவு செய்தான்.

"ஏவலை ஏற்கிறேன்; காவலைக் கடப்பது எவ்வாறு? அது தெரியாமல் திகைக்கின்றேன்" என்று தெரிவித்தான்.

நளனை ஏற இறங்கப் பார்த்தான். அவன் நேர்மை கண்டு மதித்தான்.

"நீ அவளைக் காணச் செல்க; யாரும் உன்னைக் காண மாட்டார்கள்" என்றான் இந்திரன்.

இந்திரன் தேவன்; அவன் உதவியால் மறைந்து செல்ல இயன்றது; அடுத்து நகரின் உள் வாயில் நுழைந்தான்

திசை முகந்த தெருக்களைக் கண்டு வியந்தான். இசை முகந்த வாயினைக் கண்டான். பாடகர்கள் பாடிக் கொண்டிருந்தனர். தமிழ் ஆராய்ந்த புலவர்களையும் கண்டான். கலைச் சிறப்பு மிக்க நகர் என்பதைக் கண்டு மகிழ்ந்தான்.

இந்த நாடு உண்மையில் தேவர் வாழும் பொன்னாடு என்று தனக்குள் கூறிக் கொண்டான். அதை மிகவும் பாராட்டினான். இந்த விதர்ப்பன் நாடு இந்திரன் பொன்னாடு போன்றது என்று மதிப்பிட்டான்.

கன்னியர்கள் மட்டும் தங்கியிருந்த அழகிய மாடத்தை அடைந்தான். அன்னம் உரைத்த அரண்மனை அது என் பதை அறிந்தான். அருகே அழகிய சோலை; பொய்கைகள் இருந்தன.

மன்மதன் படை கற்பதற்கு அங்கு வருவான் என்று கூறியது நினைவுக்கு வந்தது. அன்னங்கள் மயிற்கூட்டம் எனச் சென்று அங்கு நடை பயின்றன என்று கூறியிருந்தது. அவள் தங்கி இருந்த மாடத்தை அணுகினான்.

தங்கு தடையின்றி தமயந்தியை அவன் காண முடிந்தது. அவன் விழிகள் அவளை நோக்கின. அவளும் நோக்கினாள். அவளை அவன் பார்த்தது தாமரை மலர் குவளையில் சென்று பூத்தது போல் இருந்தது. அவள் அவனை நோக்கியது கருங்குவளை தாமரையில் பதிந்து பூத்ததைப் போல் இருந்தது. காதலர்க்கே உரிய பொது நோக்கு அவர்கள்பால் அமைந்திருந்தது.

அவள் தன் நெஞ்சைப் பறி கொடுத்தாள். அவன் அழகு அவளைக் கவர்ந்தது. அவனைத் தழுவிக் கொள்ள விழைந்தாள். கச்சணிந்த கன்னி அவள் அவன்பால் இச்சை மிக்கவள் ஆயினாள். அவன் தோளைத் தழுவி அணைக்க ஆவல் கொண்டாள். தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாமல் தவித்தாள்; என்றாலும் நாணம் அவளைத் தடுத்து நிறுத்தியது. யானையைக் கட்டுக்குள் அடக்கும் கட்டுத்தறிபோல் அவன்பால் வேட்கையைத் தடுத்து நிறுத்தியது.

உள்ளங் கலந்து பின் உரையாடினர். அவன் காவல் கடந்து வந்தது அவளுக்கு வியப்புத் தந்தது. ''காவல் கடந்து எங்கள் கன்னி மாடம் புகுந்தாய்; அது உன்னால் எவ்வாறு இயன்றது? விஞ்சையனும் அல்ல நீ; விண்ணில் வாழும் தேவனும் அல்ல. உன்னால் அது எவ்வாறு இயன்றது? உள்ள நிலை எனக்கு உரைப்பாய்'' என்று வினவினாள்.

''தான் மானுடன்தான்'' என்று நகைத்துக் கொண்டே பேசினான்.

“இங்கே வந்தது காதல் சந்திப்பு அன்று; கடமை ஒன்று ஏற்று வந்திருக்கிறேன்” என்றான்.

காதலனை அவள் கண் குளிரக் கண்டாள். பேதமுறப் பேசுவது அவளுக்கு வியப்புத் தந்தது.

“தேவர் கோமான் ஏவல் ஒன்று இட்டான். அவன் உதவியால் காவலைக் கடக்க இயன்றது” என்று விளக்கினான்.

“இந்திரன் ஏவலால் வந்தேன்” என்று கூறியது அவளுக்குப் புதுமையாக இருந்தது.

“நான் கூறுவதை இகழாமல் ஏற்றுக் கொள்க; உள்ளம் வேறுபாடு இல்லாமல்தான் உரைக்கின்றேன். என் காதல் அதனைப் புதைத்து வைத்து விட்டேன். நீ ஏந்தும் பொன்மாலை அதனைப் பொன்னுலகம் காக்கும் புரவலனுக்குச் சூட்டுக; இதுதான் என் வேண்டுகோள்; இந்திரன் இட்ட ஏவல்; அதுதான் என் ஆவலும் ஆகும்” என்று உரைத்தான்.

அவள் சிந்தித்துப் பார்த்தாள். அவன் சூழ்ச்சி வலையில் சிக்கித் தவிக்கிறான் என்பதை அறிந்து கொண்டாள். அதனால் அவள் அதிர்ச்சி அடையவில்லை.

அவன் தன் கடமையைச் செய்கிறான் என்பதை அறிந்தாள்; அவள் நேர்மையை மதித்தாள்.

“உண்டு இல்லை” என்று கற்கண்டு போன்ற சொல்லாள் ஏதும் கூறவில்லை.

தேவர்கள் விருப்புக் கொள்வது அவர்கள் உரிமை; இருந்தாலும் அவர்கள் அவனை அனுப்பி நேர்மை தவறி விட்டார்கள் என்பதை அறிந்தாள்.

அவள் என்ன விடை தரப்போகின்றாள் என்பதைக் கேட்க ஆவலுடையவனாக விளங்கினான்.

சுருக்கமாகத் தன் கருத்தைத் தெளிவாக உரைத்தாள். ''மன்னா! இந்தச் சுயம் வரமே உனக்காகத்தான் வகுக்கப் பட்டது. மற்றவர்களுக்காக அன்று; உன்னை வர வழைக்கவே இந்த ஏற்பாடுகள்''என்றாள்.

அவனுக்கு அது வியப்பு அளித்தது. அவள் அறிவினைக் கண்டு வியந்தான்.

தன்னை வரவழைப்பதற்காக ஒரு மாபெரும் கூட் டத்தையே வரவழைத்து விட்டாள். முறைப்படி தேர்ந்து எடுத்து மாலை சூட்ட அவள் திட்டமிட்டிருக்கிறாள் என்பதை அறிந்தாள்.

அன்னம் முன்னர் உரைத்த சொற்கள் நினைவுக்கு வந்தன. ''ஐம்புலனும் நல்லறிவாகும்; அவையே அவளுக்கு நல்லமைச்சு'' என்று கூறியது நினைவுக்கு வந்தது.

அரசிக்கு ஏற்ற அறிவு அவள்பால் இருப்பதை அறிந்தான்.

அவள் கூறியது புதுமையாக இருந்தது. தனக்குத்தான் அவள் மாலையிடுவாள் என்பதை அறிந்து கொண்டான். மேலும் விளக்கம் கேட்க விரும்பவில்லை. வற்புறுத்தி அவள் மனத்தை மாற்றிக் கொள்ளவும் அவன் வேண்ட வில்லை.

அவர்களுக்கு என்ன விடை கூறுவது? அவள் மாற்றம் யாது? என்று நிதானித்தான்.

அடுத்து வரும் சொற்களை ஆவலுடன் எதிர் பார்த்தான்.

''தேவர்கள் வரட்டும்; தடுக்க வேண்டாம்; அது அவர்கள் விருப்பம்'' என்றாள்.

புறப்படக் கால் அடி எடுத்து வைத்தான். "ஆனால் ஒன்று; நீ மட்டும் வராமல் நின்று விடாதே" என்று கூறி அனுப்பினாள்.

அவள் மனக் கருத்தை அவன் அறிந்து கொண்டான். தேவர்களைப் பொறுத்தவரை அவள் பேசியது வன் மொழியாக இருந்தது. தன்னைப் பற்றி அவள் பேசியது மென் மொழியாக இருந்தது. கடமையை முடித்து விட்டோம் என்பதில் மனநிறைவு கொண்டான். காதலி யுடன் பேசினோம் என்பதில் களி மகிழ்வு கொண்டான்.

தம்முடைய காதலை இனி யாரும் தடுக்க முடியாது. தேவர்களாலும் அசைக்க இயலாது; மூவர் வந்து முயற்சித் தாலும் முறியாது என்று அறிந்தான். மனத் திண்மையோடு திரும்பினான்.

நெஞ்சில் நேர்மைத் திறம் இன்றி வஞ்சனை செய்தார்கள் தேவர்கள்; அவர்களைக் கண்டு இனி அஞ்சத் தேவையில்லை என்று தெளிவு பெற்றான். தேர்வில் தனக்குத்தான் வெற்றி என்பது அறிந்தான்.

தேவர் தலைவர்கள் நால்வரும் இவன் கொண்டு வரும் செய்திக்காகக் காத்து இருந்தனர்.

தான் அவளிடம் பேசிய பேச்சுரையையும், மெலிதாக எடுத்துச் சொல்லி ஏற்குமாறு தான் கூறியதையும் அகரம் முதல் னகர இறுவாய் ஒன்றுவிடாமல் கூறினான்.

அவள் ஒளிவு மறைவு இன்றி மறுத்துவிட்ட செய்தியை எடுத்துக் கூறினான். தன்னையும் சுயம்வர மண்டபத்துக்கு வருமாறு அவள் கூறிய செய்தியையும் ஒளிவு மறைவு இன்றி எடுத்துக் கூறினான்.

வாய்மை தவறாத வேந்தன் அவன் என்பதைக் கண்டு அறிந்தனர். அவனை மதித்தனர்; பாராட்டினர்; நன்றி தெரிவித்தனர்.

கடமையை ஆற்றிய கண்ணியத்தையும் பாராட்டி அவனுக்கு உதவக் கூடிய வரங்களைத் தந்தனர். ''வேண்டும்போது உனக்கு உணவு, நீர், நெருப்பு, அணிகள், மலர்கள் எவை வேண்டுமானாலும் வந்து சேரும்'' என்று நால்வரும் சேர்ந்து நல்வரம் தந்தனர்.

வரம் பெற்றவனாக உரம் கொண்ட நெஞ்சோடு தான் தங்கியிருந்த மாளிகையைச் சேர்ந்தான். மற்றைய மன்னர்களுள் ஒருவனாக அவன் தங்கினான். மறுநாள் எப்போது விடியும் என்று காத்திருந்தான்.

காதலர் இருவரும் கண்ணிணை கொண்டு உணர்வு ஒன்றினர். அதனால் அவர்கள் இதயம் மாறினர். அவன் நெஞ்சில் அவள் இடம் பெற்றாள். அவள் இதயத்தை அவனிடம் தந்து விட்டாள்.

தூது வந்த காதலனிடம் செய்திகள் சொல்லி அனுப்பி விட்டாள். அவன் பின் அவள் நெஞ்சு சென்று விட்டது. அவள் தன் வயம் இழந்தாள். என்ன ஆகுமோ என்று அயிர்த்தாள்; உயிர்த்தாள்; அழகிய முகம் வியர்த்தாள்; உரை மறுத்தாள்; காதலில் வீழ்ந்து துயர் உழந்தாள்.

உள்ளம் போய், நாண்போய், உரைபோய், கண் களில் நீர் வெள்ளம் பெருகி, வேகின்ற மென் தளிர்போல் அவள் உயிர் சோர்ந்தாள். மன்மதன் அம்புகள் அவளைத் துளைத்தன.

மன்மதன் அம்புகள் துளைக்கப்பட்டு அதன் காரணமாகவே உயிர் நீங்கிவிடும் என்று அஞ்சினாள். ''என் உயிர் என்னை விட்டு நீங்கினாலும் என் ஆசை ஒழியாது; நீங்காது'' என்று கூறி மனம் அழிந்தாள். யாழ் போன்ற சொல்லினாள்; அவள் இனைந்து வருந்தினாள்.

மாலைக் கதிரவன் மேற்கு எல்லையில் சாய்ந்தான். வையகம் பகல் இழந்தது; வானம் ஒளி இழந்தது;

பறவைகள் சோலைகளிலும் பொய்கைகளிலும் பேச்சு அடங்கின. செவ்வாய் அன்றில் தன் துணை இழந்து வருந்தியது. கூவி அழைத்தது.

அந்திப் பொழுது வந்து சேர்ந்தது. அது அழகிய நங்கை ஒருத்தி அசைந்து நடந்து வருவது போல இருந்தது. மல்லிகை மலர்ந்து கிடந்தது. வண்டுகள் அவற்றை மொய்த்தன. மன்மதன் மலர்க் கணைகளைக் கொண்டு தன் ஆட்சியை நடத்தினான். அந்த மாலையாகிய நங்கையின் மெய்க் காவலாளாகச் செயல்பட்டான். முல்லைப் பூமாலை தோளில் அசைய நடந்து வரும் நங்கையென அம் மாலைப்பொழுது மெல்ல வந்து சேர்ந்தது. எங்கும் மல்லிகையும் முல்லையும் பூத்து அழகு செய்தன.

அந்திப் பொழுது முறுவல் காட்டி முகிழ் நகை தோற்றுவிப்பதைப் போல் பிறைமதி வானில் தோன்றியது. அதனால் தமயந்திக்கு வேதனை மிகுந்தது. நெருப்பை அள்ளிச் சொரிவது போல அதன் கதிர்கள் விளங்கின. கூட்டு மை போல் இருள் மிக்கு இருந்தது. அந்த இருளில் நிலவு வீசி அவளைச் சுட்டு எரித்தது.

தனக்குத் துணையாக இருந்த அன்னங்கள் அவற்றை அவள் காணவில்லை. ஒளிக்கதிர்கள் தந்த கதிரவனும் மறைந்து விட்டான். அந்த மிக்க இருளில் வாடைக் காற்று வீசி அவளை வருத்தியது. வாடைக்கும் கொடிய இருளுக்கும் பிழைப்பது அரிது என்று கூறினாள்.

அவள் தோழிகளை விளித்து உரையாடினாள். வான் மதியத்தைக் காட்டினாள்; நட்சத்திரக் கூட்டத்தையும் காட்டினாள்.

அவர்கள் அது திங்கள் என்றனர். மற்றவற்றை வானத்து மீன் என்று உரைத்தனர். அதை மறுத்து அவள் கூறினாள். "இவை திங்களின் சூடு தாங்காது வானத்தில்

தோன்றிய கொப்புளங்கள்; இவற்றை நீங்கள் நட்சத் திரங்கள் என்று தவறாகக் கூறுகின்றீர்கள்'' என்று உள்ளம் வெந்து உரையாடினாள்.

''என் உயிர் கொள்ளை போகின்றது'' என்று கூறினாள். ''இந்த முற்றிய நிலா பாம்பின் கூரிய பல்போல் வாட்டுகிறது; நஞ்சு கக்குகிறது; என்னை வருத்துகிறது'' என்று பேசினாள். ''இந்த இரவுப் பொழுதுக்கு உள்ளம் மிகவும் கொடிது'' என்று கூறினாள்.

''ஏன் இந்த இரவுப் பொழுது எரியாக எரிகிறது'' என்று கேட்டாள். ''வெங்கதிரோனை விழுங்கி விட்டதாலா தன் கொங்கைகளில் எழுந்த நெருப்பின் வெப்பத்தாலா திங்கள் வெளிப்படுத்தும் வெம்மைமிக்க கதிர்களாலா'' என்று கேட்டாள்.

யுகங்கள் பல சேர்ந்து தொகைப்பட்டு ஓர் இரவு என்னும் உரு எடுத்துக் கொண்டதோ?'' என்று வருந்தினாள். ஓர் இரவு அவளுக்குப் பல யுகங்களாகத் தோற்றம் அளித்தது.

''ஏன் கோழி இன்னும் கூவவில்லை? அதன் குரல் அடைத்துக் கொண்டதோ?'' என்று கேட்கத் தொடங் கினாள்.

''இந்தக் கடலுக்கு ஓய்வு ஒழிச்சல் என்பதே கிடையாதோ? எப்பொழுதும் இரைச்சல் இட்டுக் கொண்டு இருக்கிறதே! இது தூங்கவே தூங்காதா''என்று கூறினாள்.

சுடர் மதியம் வெளிப்படுத்திய வெயில் அவளைச் சுட்டு எரித்தது.

மோகம் என்ற சுழியில் அகப்பட்டுச் சுழன்றாள். அவள் மெல்லியலாள்; இந்த வல்லியலை அவளால் தாங்க முடியாமல் போயிற்று. ஆடி வரி வண்டு அருகில் பறந்து

வந்தால் அதற்காக வாடி வருந்துபவள் அவள். அதன் மென் காற்று அசைவுக்கும் அவள் தாங்காதவள். வனமுலை அவளுக்குச் சுமை என்று கருதிச் சுமப்பவள்; அவள் இப்பொழுது இந்தக் கடுமையான காதல் வெள்ளத்தில் அவளால் எப்படி நீந்த முடியும்?

மோகச் சுழியில் முழுகி அவள் வெளிவர முடியாமல் மனம் சுழன்றாள். அவளால் துயர் தாங்க முடியவில்லை.

"குளிர்ச்சி மிக்க இள நிலாவே! இவ்வாறு உன் ஒளிக்கதிர்களை என் சோர்ந்த கூந்தலில் சொரிவது ஏன்?" என்று கேட்டாள். மன்மதன் உன்னை ஏவி விட்டு என்னை வருத்துகிறானோ! அவன் உனக்கு மாலை சூட்டிப் பாராட்டுகிறான். எதற்காக என்னை வாட்டுகிறாய்" என்று நிலவினை நோக்கித் தன் நிலைமையினை எடுத்து உரைத்தாள். "மதியே! உன்னைத் தூண்டி விட்டான் மன்மதன். இந்த விடியாத இரவையும் அவன் உனக்குத் துணையாக அனுப்பி வைத்திருக்கிறான்" என்று கடிந்து கூறினாள்.

நிலவின் ஒளி அழல்போல் அவளை எரித்தது. சூடி இருந்த பூவும் வெப்பம் பெற்றது. நாடி வந்த வண்டுகளும் வெப்பத்தால் சுருண்டு போயின.

அவள் கண்களில் நீர் அருவிபோல் கொட்டியது. வளையல்கள் நெகிழ்ந்தன. கையில் தலை வைத்து உறக்கமின்றி அந்த இரவினைக் கழித்தாள். இரவு எல்லாம் தனிமையில் தவித்தாள். கடுந்தவம் இயற்றுபவள் போல் நின்றாள். அவனை அடைவது குறித்து நினைத்து வேதனை உற்றாள்.

இரவுப் பொழுது அவளை மிகவும் வாட்டியது. "பொது மகளிர் தம் இதயம் போல் அந்த இரவு இருளைப் பெற்றுக் கிடக்கிறது" என்று கூறினாள். தீ கொண்டும் மாய்க்க முடியாத இருளாக அது அவளுக்கு விளங்கியது.

அந்த இரவில் ஊர் மக்கள் துயின்றனர். நகரமே உறக்கத்தில் ஆழ்ந்தது. விழித்து ஒலி எழுப்பியவர் யாருமே இல்லை; ஊர்க்காவலர் மட்டும் அவ்வப்போது கைகளில் வேல் தாங்கி வீதிகளில் நடந்தனர். அவ்வப்பொழுது அவர்கள் துடி ஒலித்து எழுப்பியது; அது மட்டும் அவள் கேட்டுக் கொண்டே இருந்தாள். எப்பொழுது யாமங்கள் கழியும் என்று காத்துக் கிடந்தாள்.காவலர் வருகை கொண்டு நாழிகையைக் கணக்கிட்டுக் கொண்டாள்.

அந்த நகர் ஆழ்ந்த துயிலில் கிடந்தது. களிறுகளும் ஒலியடங்கிக் கட்டுத் தறியில் புகுந்து அடங்கின. இரவு நேரத்தில் யாழிசைப்போரும் இசை எழுப்பி அவர்களும் அடங்கினர். மன்மதனும் அடங்கி விட்டான். அவனும் ஓய்ந்து அடங்கினான். இந்த உலகமே துயிலில் புகுந்து அடங்கியது.

பேய் இரவில் தூங்காது என்று கூறுவர். பிணம் தின்று வயிறு வளர்க்கும் பேயும் உறங்கியது. அதன் நட மாட்டமும் அடங்கியது. அன்றில் பறவை தன் துணையை விளித்து உறங்காமல் கிடந்தது; அந்தக் குரல் அவளுக்குக் காதலைத் தூண்டியது.

அமைதி என்பது அவளை விட்டு நீங்கியது. அவனைக் கட்டித் தழுவ விழைந்தாள். துயிலின்றி எழுந்தாள். அருகிருந்த தூண் ஒன்றினை அணைத்துத் தழுவினாள். அது அவள் காதலன் என்ற நினைப்பில் இறுகத் தழுவினாள். அது கல்; வெறும் கல்; ஒரு சிலர் மனம் போன்று விளங்கியது.

கனவு கலைகிறது; நனவு அவளை அழைக்கிறது. கட்டிக் கொண்டது வெறும் தூண். அவன் அல்ல; அதற்காக நாணினாள்; இதை யாரிடம் எடுத்துக் கூறுவது? வெளியில் சொன்னால் எள்ளி நகையாடுவர். அந்த அனுபவம்

அவளுக்கே உரிமையாகியது; பகிர்ந்து கொள்ளவில்லை; யாருடனும் பகரவும் இல்லை.

அவள் மன மயக்கம்; அதன் விளக்கம் அதை எப்படிக் கூறுவது? மயங்கினாள்; நெளிந்தாள்; மனம் நடுங்கினாள்; வெம்மையுற்று வருந்தினாள். அங்கும் இங்கும் வறிதே உலாவினாள். பின் செய்வது அறியாது சோர்வு கொண்டாள். துயில முயன்றாள். துயில் பெறாது கண்கள் நீர் கடை சோர நின்றது.

அந்த இரவு அவளுக்குக் கடுமையாக இருந்தது. பொழுது விடிந்தால் அவள் அழுது விடிவது நிற்கும் என்ற நிலை ஏற்பட்டது.

யார் தடுத்தாலும் பொழுது தோன்றுவதை நிறுத்த முடியாது. அது வரத்தான் செய்யும். மேற்கே சாய்ந்தவன் கிழக்கே தலை காட்டினான். இது ஒரு அற்புதக் காட்சிதான். மறைவது ஓர்இடம்; தோன்றுவது மற்றும் ஓர் இடம்.

கதிரவன் ஒளி அது காலைப் பொழுது என்பதை அறிவித்தது. அந்தணர்கள் விழித்து எழுந்தனர். அவர்கள் காலை வணக்கம் கதிரவனில் தொடங்கியது. அது அவர்கள் தேசிய வழிபாடு. அவர்கள் காலை வழிபாடு. அவர்கள் கரம் குவிந்தன. குமுத மலர்கள் வாய் திறந்து கிடந்தவை. இப்பொழுது வாயடங்கின. பேச முடியாமல் சிலர் வாய் மூடிக் கொள்வது போல் அவையும் மவுனம் சாதித்தன. கதிரவன் ஒளி அதற்குக் குவிவு உண்டு பண்ணியது. அதனை அடக்கி வைத்தது; கரங்குவித்தவர் அவர்கள் மறையவர் எனப் பேசப் பட்டனர். குமுதங்கள் குவிவு பெற்றன.

மலர்ச்சி பெற்றன என்று கூறக் கூடியவை தாமரை; மற்றும் இந்த உலக மாந்தர் கண் விழித்தனர்; உலகம் அவர்களுக்காகக் காத்துக் கிடந்தது. இரவு எல்லாம் அரவு

வாய்ப்பட்டது போல் துயிலின்றிக் கழித்தவள் முன் பொழுது புலர்ந்தது; அவள் துயரும் புலர்ந்தது. சுறுசுறுப்பு அவளை இசைக்க வைத்தது. உயிரோட்டம் அவள் செயலோட்டத்தில் காணப்பட்டது.

கிழக்கு மலையில் கதிரவன் தோன்றினான். அங்கேயும் மலைதான் இருந்தது. மேற்கு மலையில் படிந்தான்; கிழக்கு மலையில் எழுந்தான். இரவு எல்லாம் ஆட்டம் போட்ட மன்மதன் தன் வில்லினை முடக்கி வைத்தான். காய்ந்த நிலா ஓய்ந்து அடங்கியது. நிலவைக் கண்டு இனி அவள் அஞ்சத் தேவையில்லாமல் போயிற்று. மூடிய இருள் ஓடிய இடம் தெரியாமல் மறைந்து விட்டது. அரசர்கள் பொழுது வரும்; விடியும் என்று காத்திருந்தனர். அவர்கள் உள்ளம் எழுச்சி பெற்றது. எண்ணங்களில் மலர்ச்சி அரும்பியது. தமயந்தி பெயரை அவர்கள் நா உச்சரித்தது.

காலை முரசும் கனை துயில் எழுப்பியது. மண்ண ரசர்கள் எல்லாரும் மணி மண்டபம் நோக்கிச் சென்றனர். அவரவர்க்கு வகுத்த ஆதனங்களைத் தேடி அழகுடன் அமர்ந்தனர். இன்னாருக்கு இன்ன இடம் என வகுத்து அளிக்கப்பட்டிருந்தது. எழுதி வைத்தபடி எல்லாம் நடை பெற்றது.

நளன் இரவு எல்லாம் தமயந்தியைப் போலவே காத்திருந்தான். நம்பிக்கை அவன் மனத்தை தளரவிடாமல் தடுத்தது. மறுபடியும் தான் கண்ட அந்தப் பாவையைச் காணத் தவம் செய்தவனாய் இருந்தான். அவள் கடைக் கண் பார்வைக்காக அவன் காத்திருந்தான். அவனுக்காகவே பொழுது விரைவில் விடிந்தது என்பது போல இருந்தது. அவனுக்கு அகமகிழ்வு அளித்தது.

தமயந்தியின் வருகைக்காக இந்த மன்னர்கள் காத் திருந்தனர். அவர்கள் அவள் அணிந்திருந்த நித்திலத் தோடு

கண்டனர். அவள் விழிகள் செவி மருங்கு ஓடின. காதில் அணிந்திருந்த நித்திலப் பொன் தோட்டினை அவை நீல நிறமாக மாற்றிவிட்டன. அவள் விழிகள் அவர்களை மயக்கின. அவர்களை நாடி அவள் வந்தாள் என்று கூற முடியாது; அவர்கள் சித்தம் இழந்தவராய் அவளை நோக்கினர். அவர்கள் மனம் அவர்களிடம் நில்லாமல் அவளிடம் ஓடிச் சென்றது. பந்தற்கீழ் வந்து அவள் நின்றாள். அவளை அவர்கள் முழு வடிவில் காண முடிந்தது.

அவர்களைப் பார்க்க அவாவினர்; இந்தத் தோழிகள் அவளைச் சூழ்ந்து நின்றனர்; இவர்கள் வேலிபோல் அவளை வளைத்துக் கொண்டிருந்தனர். எங்கும் சேலை; இடைவெளி இன்றி அவர்களே அவளை நெருங்கிச் சூழ்ந் தனர். இடுக்கில் அவர்கள் பார்வை சென்று மிடுக்குடைய நங்கையை இடை இட்டுக் கண்டனர். தெய்வ தரிசனம் பக்தர்களுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை; அர்ச்சகர் களே தடுத்து விட்டனர்.

அவளைப் பார்த்ததிலே மனம் நிறைவு பெற்றவர் பலர்; பேரழகி என்று பேசக் கேட்டவர்கள் அவளை நேரில் கண்டது பெறற்கரும் பேறு எனக் கொண்டனர்.

அவர்கள் விழித்துக் கண் மூடினார்களா தெரிய வில்லை. தாமரை பூத்த மண்டபமாக அது விளங்கியது. அது ஒரு பொய்கையா மண்டபமா என வேறுபாடு காணவே முடியவில்லை. இவள் அன்னமென நடந்தாள். தாமரை பூத்த பொய்கையில் அன்னம் நடப்பது போல் தோன்றியது.

தமயந்தி அவள் உடுத்திய சீரை அவளை அன்னம் எனப் பேச வைத்தது. தாளுக்குப் பூசிய செம்பஞ்சுக் குழம்பு அன்னத்தின் சிவந்த தாளை நினைப்பூட்டியது. ஓர் அழகிய ஓவியம்; அங்கே நீலநிறக் கண்கள்; நித்திலத் தோடு அணிந்த நங்கை; அன்ன நடை பொன் ஒளிர் மேனியாள்;

தாமரை பூத்த பொய்கையில் அன்னம் ஒன்று மெல்ல நடந்து வருவது போன்று அவள் காட்சி அளித்தாள்.

விழித்த கண்மூடாமல் அவளையே நோக்கினர்; அவள் அவர்கள் பார்வையில் அகப்பட்டவள் ஆயினாள். வலையில் இருந்து தப்ப முடியாத மயிலோ என்று அவள் விளங்கினாள்.

அரசர்கள் ஒவ்வொருவரும் அவள் தன் அருகில் வருவாள் என்று காத்து இருந்தனர்.

அவளுடன் வந்த ஒருத்தி இந்த அரசர்களைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து வைத்திருந்தாள். இவர்கள் நாடு யாது; குலம் யாது; வெற்றிச் சிறப்பு யாது; வரலாறு யாது என்பனவற்றை எல்லாம் அறிந்து வைத்திருந்தாள்.

பட்ட விழாவில் மாணவர்களை ஆளுநர்முன் அறிமுகம் செய்வதுபோல் இவர்களை அவள் அறிமுகம் செய்தாள்.

சோழ நாட்டு அரசனுக்கு முதன்மை இடம் தரப் பட்டது. தமிழுக்கு அவர்கள் மதிப்புத் தந்தார்கள். காவிரி பாயும் நாடு அவன் நாடு என்று அறிமுகம் செய்து வைத்தாள். ''பொன்னி அமுதம் புதுக்கொழுந்து பூங்கமுகின் சென்னி தடவும் திருநாடன்'' என்று அறிமுகம் செய்து வைத்தாள். தமிழ்க் கவிதை மொழி அவள் அறிமுகத்தில் சுவையோடு வெளிப்பட்டது.

சோறு தந்த சோழ நாடு அதன் பெருமை பேசப்பட்டது. பாண்டியன் தன்னைப் பற்றிச் சேடி என்ன கூறப்போகிறாள் என்பதை எதிர்பார்த்தான். தமிழ் வளர்த்த சங்கம் குறித்து அவள் முழங்குவாள் என்று எதிர்பார்த்தாள்.

அவள் புராணம் படித்தவள்; கோயில் கூட்டங்களில் அவள் சென்று கேட்டிருக்கிறாள். செண்டு கொண்டு

மேருமலையைத் தாக்கி வழி மாற்றினார் என்ற கதையைக் கேட்டிருக்கிறாள். அதை எடுத்துக் கூறி அவனை உயர்த்திப் பேசினாள். பண்டைப் பெருமை கேட்டுப் பாண்டியன் மனம் குளிர்ந்தான்.

அடுத்து அவள் சேரனைக் காட்டினாள். அவன் வில் அம்பு அவள் நினைவுக்கு வந்தது. அதுவே அவன் கொடிப் பெருமை என்று கூறினாள். சேரன் தான் வீரன் என்பதைக் கேட்டு அவன் உள்ளம் மகிழ்ந்தான். தமயந்தியின் முன் தன்பெருமை பேசப்பட்டதே தனிப்பேறு என்று கொண் டான். குன்றுகளில் அருவி பாயும் நாடன் சேரன் என்றாள். தனிக்கொடியின் மீது சிலை உயர்த்த வேந்து என்று பேசினாள்.

யதுகுல வேந்தன் அடுத்து அமர்ந்திருந்தான். கடற் கரையில் நின்றபோது அவன் காலில் அலைகள் வந்து மோதின என்றும், இசை மன்றத்திற்குத் தலைமை தாங்கி னான் என்றும், பாண்டவர்க்காகத் தூது நடந்தான் என்றும், பாரதப் போரை முடித்தவன் என்றும் அவன் பெருமை களைப் பேசினாள்.

குருநாட்டுக் கோமான் இவன் என்று அடுத்து இருந்தவனைச் சுட்டிக் காட்டினாள். செங்கழுநீர் மொட்டு அதனைப் பாம்பின் தலை என்று கருதிக் குருகுக் குஞ்சு அஞ்சி அலறியது; அதனை அமைதிப்படுத்தத் தாய்க் குருகு இரவு எல்லாம் தாலாட்டியது. அத்தகைய சிறப்பு உடையது குருநாடு என்று கூறினாள்.

சங்கு ஈன்ற முத்தினைத் தாமரை இலை தாங்கியது; அத்தகைய சிறப்பு உடையது மந்திரநாடு என்று அவ் வரசனைச் சிறப்பித்தாள்.

கருப்பஞ்சாறு பாய்ந்து நெற்பயிரை விளைவித்தது; அதன் தாளினை எருமைகள் கறித்துத் தின்றன. அதன்

கடைவாயில் தாளின் பால் ஒழுகியது; இது மச்ச நாட்டின் பெருமை என்று கூறினாள்.

குவளைப் பூவைப் பறித்துத் தின்ன எருமைக் கடா விரும்பியது. அந்தப் பூவில் படிந்திருந்த வண்டுகள் பாடிய பண்ணிசை கேட்டு அது உண்ணாமல் நின்று விட்டது. அத்தகைய பெருமை உடையவன் அவந்தி நாட்டின் அரசன் என்றாள்.

மீன் பிடிக்கும் தூண்டில் அதனை மேலே நிமிர்த்த அதன் கொக்கி கமுக மரத்தின் பாளையைத் தைக்க அதிலிருந்து விழுந்த தேன் செந்நெற்பயிர்களுக்குப் பாய்ந்தது. அத்தகைய சிறப்பு உடையவன் பாஞ்சால நாட்டு அரசன் என்றாள்.

செந்நெல் அரிவார் தம் கொடுவாளைச் சினையோடு கூடிய ஆமையின் முதுகில் தீட்டுவர். அத்தகைய வளம்மிக்க நாடு கோசல நாடு என்று குறிப்பிட்டாள். அதனை ஆளும் அரசன் என்று அவனைக் காட்டினாள்.

தாமரை மலர்கள் மிக்கு விளங்கும் பொய்கைகளை உடைய நாடு மகத நாடு என்றாள். நெருப்புப் போல் அப்பூக்கள் காட்சிஅளித்தன. அதன்மேல் படியும் வண்டு கள் புகைபோல் காட்சி அளிக்கின்றன என்றாள்.

சங்கு ஈனும் முத்துகள் பவளக் கொடியில் சிக்கிக் கொள்கின்றன. அவற்றைக் கடல் தன் அலைக்கரத்தால் எடுத்துச் சென்று காக்கிறது. அத்தகைய நாட்டை உடையவன் அங்கநாடன் என்றாள்.

எருமைகள் நீரில் படிய வாளை மீன்கள் துள்ளி எழுந்து தாமரைப் பூக்களைக் கலக்குகின்றன. அதனால் அப்பொய்கையில் உள்ள வண்டுகள் சிதறிப் பறக்கின்றன. அத்தகைய சிறப்பு உடையது கலிங்க நாடு என்றாள்.

கடற்கரையில் கொண்டு சேர்த்த மகர மீனை ஆற்று மீனாகிய கெண்டை மீன் தொட்டு விடுகிறது; அதன் தீட்டு மறைய அது கங்கை ஆற்றில் முழுகி எழுகிறது. அத்தகைய சிறப்பு உடையது கேகய நாடு என்றாள்.

நெடிய குளத்தில் வாளைக் கொடி மீது தனியாக ஒரு அன்னம் நடந்து செல்கிறது. அது தனிக் கயிற்றில் நடக்கும் கழைக் கூத்து ஆடும் பெண் ஒருத்தியைப் போல விளங்குகிறது. அத்தகைய சிறப்பு உடையவன் காந்தார நாட்டு அரசன் என்றாள்.

சங்குகள் புடைபெயர அதனால் தாமரை மலர்கள் கலங்குகின்றன. அதனால் செந்தேனைப் பூ சிந்துகிறது. அது செங்குவளைக் கதிர்களைப் பொன்போல விளைவிக்க உதவுகிறது. அத்தகைய சிறப்புடைய நாடு சிந்து நாடு என்று கூறினாள்.

பார்த்திபர்கள் பலரை அவள் காட்ட நேர்த்திமிக்க நளனைக் காண அவள் விருப்பம் கொண்டாள். நளன் இருந்த இடத்துக்கு அவள் வந்து சேர்ந்தாள். ஒரு நளன் அல்ல; நான்கு நளன்களைக் கண்டாள். தேவைக்கு மேல் கிடைக்கும் செல்வம்தான் அது; அது தன் மன மயக்கம் என நினைத்தாள்.

நளன் உருவில் தேவர்கள் நால்வர் உடன் அமர்ந்திருந்தனர். இந்திரன், அக்கினி, வருணன், இயமன் இந்நால்வர் நளன் உருவில் அமர்ந்திருந்தனர். போலிகள் யார்? நளன் யார்? எப்படி அறிவது? தேவர்களின் சூழ்ச்சி இது என்பதைத் தமயந்தி அறிந்தாள்.

கையில் மாலை நளன் கழுத்தில் போட எடுத்தாள்; ஐவரும் எதிர்பார்த்தனர். நளன் ஏதாவது ஒரு குறிப்பைத் தந்திருக்கலாம். தான்தான் உண்மை நளன் என்று கூறி

இருக்கலாம். அவன் நேர்மை தவற விரும்பவில்லை; மாலையிடுவது அவள் பொறுப்பு; அதில் அவன் தலையிட விரும்பவில்லை; தேவர்கள் கண்ணிமைக்காமல் காத்து இருந்தனர்.

அவள் தன் காதலில் நம்பிக்கை வைத்தாள். தன் கற்பில் உறுதி வைத்தாள். நிச்சயம் தவறு செய்ய நேராது என்று நம்பிக்கை வைத்தாள். வீமன் ஒரே மகள், குல விளக்கு என்று பேசப்பட்டவள்; தன் குடிப்பிறப்பில் அவளுக்கு நம்பிக்கை இருந்தது. தேர்வில் வெற்றி பெறத் தன் கற்பில் நம்பிக்கை வைத்தாள்; தவறு செய்ய மாட்டோம் என்ற நம்பிக்கை பிறந்தது.

மறுபடியும் அவர்களைப் பார்த்தாள். நளன் எந்தக் குறிப்பும் காட்டவில்லை; அவன் இயல்பாக நடந்து கொண்டான். தேவர்கள் அவர்கள் அதனால் கண் இமைக் காமல் இருந்தனர். அவர்கள் காலடிகள் தரையில் படிய வில்லை. வாடாத மலர்களை அவர்கள் மாலையாக அணிந் திருந்தனர். இவர்கள் தேவர்கள் என்பதைக் கண்டு கொண்டாள். நளன் வேறுபட்டு விளங்கினான். மானு டனுக்கு உரிய இயல்புகளைக் கண்டாள். அவன்தான் நளன் என்பதை அறிந்து கொண்டாள்.

எடுத்தாள் மாலையை; அந்தப் பொன் மாலையை நளன் கழுத்தில் இட்டாள்; உண்மை வென்றது; நன்மை நிலைத்தது; சாயம் வெளுத்தது; தேவர்கள் வெட்கினர்; தலைகுனிந்தனர்; மனம் தவித்தனர். மானுடம் வென்றது என்று பேசினர்.

மண்ணரசர்கள் அவர்களும் மனம் வெதும்பினர்; பெருமைகள் எல்லாம் மறந்தனர். தனக்குத்தான் அவள் மாலை இடுவாள் என்று தறுக்கி இருந்தவர்கள் எல்லாம் தணிந்து போயினர். முகம் வெளுத்தது; செந்தாமரை எனப்

பேசப்பட்டவர்கள் வெண்தாமரை என மாற்றப்பட்டனர். உலகம் அவ் இளைஞனை வாழ்த்தியது; பொருத்தம் என்று பேசினர். பிழை நடக்கவில்லை, பெருமை பெற்றாள் என்று பேசினர்.

மாலை தாங்கிய மன்னன் நளன் தன் காதலியுடன் செம்மாந்து நடந்தான்; வாழ்த்தொலிகள் அங்கு அம் மண்டபத்தில் எதிர் ஒலித்தன. அவர்கள் ஊர்வலமாக நடந்து சென்றனர். நகர்வலம் வந்தனர். மடநாகுடன் செல்லும் மழவிடைபோல் தமயந்தி அவனுடன் நடந்தாள். காளை எருதுடன் இளம்பசு உடன் செல்வதுபோல் இருந்தது. பொன் மாலை பெற்ற தோளோடும் அவன் புறப்பட்டான்.

சுயம் வரம் முடிந்தது; விழா இனிது நடைபெற்றது; நாட்டில் எங்கும் மகிழ்ச்சி நிலவியது. காதல் இருவர் ஒன்று சேர்ந்தனர். களி மகிழ்வு கண்டனர்.

சுந்தரியை மணக்க அந்தரத்தில் இருந்து வந்த இந்திரன் தன் பொன்னாடு திரும்பினான். அவன் சென்ற வேகத்தைக் கண்ட மற்றைய தேவர்கள் அவன் மணமாலை தாங்கி வருவான் என்று எதிர்பார்த்தனர். பொன்னாடு எங்கும் விழா எடுத்துக் கொண்டாட நினைத்தனர். வரவேற்புகள் அவனுக்காகக் காத்து இருந்தன.

குட்டி தேவதைகளுள் ஒருவன் சனியன்; அவனை ஈசுவரன் என்று கூறி அஞ்சினர். அவன் யாரையாவது பிடித்துக் கொண்டால் இலேசில் விட்டுச் செல்ல மாட்டான் என்ற புகழைப் பெற்றவன்; குறைந்தது ஏழரை ஆண்டுகள் அவன் ஆட்டி வைப்பான் என்று நம்பினர்.

தீமைகள் தொடர்ந்தால் அதற்குக் கர்த்தாவே அவன்தான் என்று பேசும் பெருமையைப் பெற்றிருந்தான். அவனைச் சுற்றிச் சுற்றி வருகிறார்கள். தன்னைப் பற்றாமல் இருக்க அவனை வழிபட்டனர்.

அறிவாளிகளும் மடமை காரணமாக அவனைக் கண்டு அஞ்சினர். இந்திரனை வந்து சந்தித்தான். தலைவர் களுக்கு மாலையிடக் கைத்துண்டைப்போடும் தொண் டனைப் போல் அவன் மாலை ஒன்று ஏந்தி அவன் வரும் வழியில் நின்றான்.

தமயந்தி இந்திரனுக்கு மாலையிடவில்லை. இவன் மாலை இடக் காத்திருந்தான். கழுத்தை நீட்டுவான் என்று கழுகு நிகர் கலிமகன் காத்திருந்தான்.

பத்திரிகை நிருபர்களைச் சந்தித்து அரசியல் நடத்தும் வரிசையில் இந்திரன் இருப்பான் என்று எதிர்ப்பாத்தான். புதிய செய்தி தருவான் என்று பேனாவில் மூடியைக் கழற்றினான்.

''நீ ஏன் வந்தாய்? உன்னை யான் எதிர்பார்க்க வில்லையே'' என்று இந்திரன் கலியனைக் கேட்டான்.

''வெற்றிக் களிப்போடு வீடு திரும்புவாய்'' என்று எதிர்பார்த்தேன். பரமசிவன் போல் பாதி உருவம் மற்றவள் ஒருத்திக்குத் தந்து பாகத்தனாக வருவாய் என்று எதிர் பார்த்தேன்'' என்றான்.

கங்கை ஒருத்தி சடையில்; மங்கை ஒருத்தி இடையில்; இரண்டு பெண்களை அவன் சுமக்கிறான். அந்தத் திருக் காட்சியில் இந்திரனைக் காண விரும்பினான். மின்னும் நட்சத்திரம் வானத்திலிருந்து கையில் பிடித்துக் கொண்டு வருவான் என்று எதிர்பார்த்தான்.

தமயந்தி அவனுடன் வரவில்லை; உடன் சென்ற தருமத் தலைவர்கள் சோர்வோடு வந்ததைப் பார்த்தான்.

''மாலையிட்டு வரவேற்க வந்தேன்'' என்றான்.

"அவள் மாலையிட்டு விட்டாள்; எனக்கு அல்ல; அவள் தேர்ந்து எடுத்த காதலனுக்கு; நளன் வந்தான்; அவளைத் தட்டிச் சென்றான்" என்று கூறி விளக்கினான்.

கலியனால் இச்செய்தியைத் தாங்கிக்கொள்ள இயல வில்லை. 'இனப் போராட்டம்' அது அவனையும் பற்றியது. 'தேவர் இனம் மதிக்கப்படவில்லை' என்று ஒரு புதிய போராட்டத்தை இந்த மண்ணுலக மாந்தர் போல் அவனும் துவக்கி வைத்தான்.

"இது தனி ஒரு தேவனுக்கு இழைக்கப்பட்ட அவமானம் அல்ல; நம் திருக்கூட்டத்துக்கே நேர்ந்த அவமதிப்பு"என்று தெரு கூட்டிப் பேசினான்.

"இதை எதிர்த்தே தீருவேன்" என்றான்.

குறளகத்தின் முன்பு உண்ணாவிரதம் இருப்பான் என்று இந்திரன் எதிர்பார்த்தான்.

திருக்குறளில் அவன் நம்பிக்கை வைக்கவில்லை. அழிப்பதே தன் தொழில் என்று கொண்டவன் ஒரு சில அரசியல் சூழ்ச்சிக்காரர்களைப் போல்.

"அவர்கள் காதலை முறிப்பேன்; வாழ்க்கையைப் பறிப்பேன்; கூட்டு வாழ்க்கையை உடைப்பேன்" என்று சபதம் செய்தான். "அது தன்னால் முடியும்" என்று குரல் கொடுத்துப் பேசினான்.

இந்திரன் தடுத்தான்; "உன் செபம் அங்குப் பலிக்காது; மக்கள் அவர்களை மதிக்கிறார்கள். அசைக்க முடியாது" என்று சொல்லிப் பார்த்தான்.

"அவன் நெறி தவறாதவன்; வாய்மை அவன் வழு வாதவன். நல்லவர்களுக்கு என்றும் கேடு வராது; அதைவிட அவன் பத்தினி அவள் பதிவிரதை; மழை பெய்யச்

சொன்னால் அது பெய்யும். அவள் ஒரு நெருப்பு; அவளிடம் நீ அணுக முடியாது'' என்றும் கூறினான்.

பாம்பு பாலைத்தான் பருகுகிறது எனினும் அது தன் தீமையை விடுவது இல்லை; நஞ்சைத்தான் கக்குகிறது. அது அதன் பிறவிக் குணம்.

நன்மைகள் அவனிடம் எடுத்துக் கூறப்பட்டன. எனினும் புன்மை அவனை விட்டு அகலவில்லை. இந்திரனும் இடைநின்று தடுக்கவில்லை; தீயவர்களைத் தடுத்தால் அவர்கள் மாறமாட்டார்கள் என்பது அறிந்தவனாக அடங்கிவிட்டான். இந்த உலகம் சனநாயகத்தைக் கண்டது. கெடுப்பதற்கு அனைவர்க்கும் உரிமை உள்ளது. அதனால் அவன் தடுக்கவில்லை.

சுயம்வரம் வேறு; மண விழா வேறு. இன்னாருக்கு இன்னார் என்று முடிவு செய்வது சுயம்வரம்; உறுதி செய்வது என்பது அந்த முதல் நிகழ்ச்சி. மணவாழ்வு என்பது இருவரையும் இணைத்து ஒன்றாக்குவது; தேர்வு முதற்படி; பட்டமளிப்பு அடுத்தபடி; அது எப்படி நடைபெற்றது? மணவிழா தொடர்ந்து நடைபெற்றது.

விதர்ப்பன் திருமடந்தையின் மணவிழாவினைக் காண வருபவன் போல் வெங்கதிரோன் ஆகிய சூரியன் வெளிப்பட்டான். ஒவ்வொரு நாளும் ஒரு புதுமை படைக்கப்படுகிறது. சரித்திரம் உருவாகிறது. ஒவ்வொரு நாளும் ஒரு புதுமை நிகழ்கிறது. "இன்று நிகழ்ச்சி நிரல் யாது'' என்று சூரியன் காண்கிறான்.

தமயந்தியின் மணநாள்; அதைக்காண வருபவன் போல் சூரியன் தோன்றினான். குமுதம் குவிந்தது; அதன் வாய் அடங்கியது. நளனுக்கும் தமயந்திக்கும் உள்ளத்தில் கொழுந்து விட்ட வேட்கை என்னும் தீ அடங்கியது. மணநாள்; அது அவர்களுக்கு இணையும் நாள் ஆகியது.

அவள் புன்முறுவல் கண்டு மனம் புண்பட்ட மன்னர் பலர்; அவள் பேரழகு அவர்களுக்குப் பெருத்த வருத்தத்தைத் தந்தது. 'பொன் அழகு' அது வெளியில் வைத்தால் அது பிறர் கண்படும்; அவர் நெஞ்சு புண்படும். அதைப் புதைத்து வைப்பதே செய்யத் தக்கது என்பது போல் புனைவுகள் கொண்டு அவள் மேனியைப் பூட்டி வைத்தனர். அணிகள் பல அணிவித்தனர். அவ்வாறே மலர் கொண்டு அவள் கூந்தலை மறைத்தனர். 'மிக்க அழகு' அதைப் பாதுகாக்க இந்த அரண்கள் தேவைப்பட்டன.

ஆசிகள் பெற மணவிழா நடைபெற்றது. இனி அவர்கள் அன்றில் பறவைகள்; அவர்களை யாரும் பிரிக்கவே முடியாது. வீமன் மகள் நேற்றுவரை; இன்று காமன் கைப்பிள்ளை; நளனின் வாழ்க்கைத் துணைவி; இணைப்பு அவர்கள் பிணைப்பு.

சேடியர்கள் அவர்களைத் தனியறையில் விட்டனர். குற்றேவல் பல செய்து அந்த அறையை அழகு செய்தனர். மஞ்சத்தில் மலர்கள் பரப்பி அவர்கள் கொஞ்சி மகிழ வழி செய்தனர்; வகுத்துத் தந்தனர்.

காமன் தன் மலரம்பு தொடுத்தான்; அவள் தோள் களைத் துளைத்தான்; அவள் கொங்கைகளில் எய்தான்; இருவரும் கிளர்ச்சி பெற்றனர். முன்பின் பழகாதவர்; பார்த்து அறியாதவர்; பேசி மகிழ்ந்தனர். கூசி ஒதுங்கி யவர்கள் உள்ளத்தால் ஒன்றுபட்டனர்; உடலால் ஒன்றுபட மாரன் மலர் அம்புகளைத் தொடுத்தான்; இருவரையும் இணைத்தான்.

அரவுகள் பிணைவது போல் அவர்கள் இணைவு கண்டனர். இருவர் என்று உள் நுழைந்தவர். அவர்கள் மாறி ஒருவர் ஆயினர் என்று கூறும்படி ஒருவரை ஒருவர் தழுவினர்; அணைந்தனர். பின் இணைந்தனர்; இன்பத்தில் ஆழ்ந்தனர்.

நீரில் நீர் கலந்தால் அங்கே இரண்டு என்று கூற முடியாது. நீர் மறுபடியும் ஒன்றாகத்தான் அமையும். புனலோடு புனல் கலந்தது போல் அவர்கள் கலவியில் கலந்து ஒன்று ஆயினர்.

வீரம் மிக்க நளன் போர்க்களத்தில் யானையுடன் முட்டி மோதி வெற்றி கண்டவன் அது மறக்களம்; களப் போர் அது; இங்கே அவள் முலை முகட்டில் மோதி அவள் கரங்களைக் கரத்தால் பற்றி அணைந்தனன்; இளகினர். அணைந்தனர், தாபத்தால் பிணைந்து இன்பம் அடைந்தனர். இது அவன் ஏற்ற கலவிப் போர்; புது இன்பம் கண்டு வாழ்வில் மலர்ச்சியைக் கண்டான்.

அவர்கள் இன்ப வாழ்வு தொடர்ந்தது. ஆண்டுகள் சில கழிந்தன. விதர்ப்புன் நாட்டில் அவர்கள் தொடர்ந்து தங்கினர். மருமகன் அதனால் அவன் அங்கே மருவி வாழ்ந்தான். இன்ப வாழ்வில் அவன் நாட்கள் சென்றன. சொந்த நாடு திரும்ப எண்ணினான்.

# 2

# கலிதொடர் காண்டம்

திசை முகந்த தெருவும், இசைமுகந்த வாயும், இயல் தமிழ் தெரிந்த நாவும் கண்ட அவன் அந்நாட்டுச் சோலைகள், செய்குன்றுகள், பொய்கைகள், அருவிகள், ஆறுகள் அங்கெல்லாம் அவளுடன் சென்று ஆடி மகிழ்ந்தான். இன்பத்தில் திளைத்த அவன் கடமை பற்றிச் சிந்திக்கத் தொடங்கினான்.

கட்டியவளை அழைத்துச் சென்று ஒட்டி உறவாடும் புதிய வாழ்க்கையை விரும்பினான். தம் இல் இருந்து தமது

வருவாயில் வாழ்ந்து தம்மவரோடு கலந்து உறவாடும் இன்பம் தனித்தன்மையது. சொந்த நாடு திரும்ப விரும்பி னான். அவளைத் தன் வீட்டில் வைத்து இன்புறுத்தி மகிழவைக்க விரும்பினான். நாடு திரும்பும் நற்கருத்தை அவளிடம் நவின்றான்.

தேரைப் பூட்டினான். அருகில் அவள் அமர்ந்தாள். நகருக்கு வந்தபோது தனியனாக வந்தான். இப்பொழுது இனியனாகத் திரும்பினான். பக்கத்தில் பத்தினி ஒருத்தி அமர்ந்திருந்தாள். காணிநிலம் கேட்டுக் கேணி அருகே ஒரு குடிசையில் வாழும் கவிதை போன்ற வாழ்க்கையை அவன் கண்டான்.

"தேன் போன்ற மொழியாளே அங்கே ஒரு காட்சியைப் பார்" என்று கூறிக் காட்டினான்.

புல்லும் வரிவண்டைக் கண்டு அது பேதுறாமல் இருக்கப் பெண் ஒருத்தி அதனை விட்டு அகல்கிறாள். காற்சிலம்பு ஒலி அதற்கு அதிர்வு தரக் கூடாது என்பதற்காக அதன் ஒலியை அவிக்கிறாள். மெல்ல நடக்கிறாள். பூவைப் பறிக்காமல் தளிரை மட்டும் கொய்து திரும்புகிறாள். மயில் போன்ற அழகி அவள் என்பதைச் சுட்டிக் காட்டினான். காதல் நெஞ்சு அது மென்மையது என்பதைக் குறிப்பாக உணர்த்தினான்.

காதலன் ஒருவன் பூவினைப் பறிக்கிறான். காதலி தன் கூந்தலில் வைக்க நினைக்கிறான். அருகில் செல்கிறான். அவள் சுமை தாங்காள்; இடை மெல்லியள் என்பதால் அப்பூமலரை அவள் பாதத்தில் வைத்துச் சூட்டி மகிழ்வு காண்கிறான். பாதத் தாமரைக்கு அவன் வணக்கம் செய்வது போல் இருக்கிறது என்று சுட்டிக் காட்டினான்.

மணல் மேடுகளில் பூக்களும் முத்துகளும் சிதறிக் கிடக்கின்றன. புலவிக் காலத்தில் பிணக்குக் கொள்ளும்

மாதராள் சீற்றத்தில் சிதறச் செய்யும் அணிகலன்கள் மலர் மாலைகள் போல அவை உள்ளன என்று எடுத்துக் கூறினான். படுக்கை அறையை அவளுக்கு நினைவுப் படுத்தினான். இவன் அவளோடு புலவி கண்ட நிலவுகளை நினைவுப்படுத்தினான்.

மகளிர் பூக்கொய்து அகற்றும் அக்கொம்புகள் தளர்ந்து சிதைந்து சாய்ந்து கிடந்தன. அதனைக் காட்டிக் களிப்பில் மகிழ்வு கண்ட மாதர் பின் தளர்வுற்றுச் சாய்ந்து கிடக்கும் நிலையை நினைவுப்படுத்தினான். பழைய நினைவுகளை அவள் கண்முன் கொண்டு வந்து வைத்தான். கிளர்ச்சியுறப் பேசினான்.

மங்கை ஒருத்தி அங்கைபட்டு வாய் நெகிழ்ந்த ஆம்பற் பூ, அவள் அதனை தன்முகத்தில் சேர்க்க அது சந்திரன் என்று கருதி அது மலர்கிறது. மூடிக் கிடந்த இதழ்கள் விரிந்து பூத்தன என்று கூறினான்.

கொய்த குவளை மலரினை ஒருத்தி தன் குறு நெற்றியில் வைத்து அழகு பார்க்கிறாள்; அவள் நெற்றிக் கண் படைத்த சிவன் போல் காட்சி அளிக்கின்றாள் என்று சுட்டிக் காட்டினான். அப்பெண்ணின் கண்கள் கருங்குவளை என்று பாராட்டிப் பேசினான்.

மற்றொருத்தி தன் கணவன் வாரி இறைக்கும் நீரைத் தடுக்க வண்ண மலரை ஏந்தினாள். அது தாமரைப் பூ முகத்தோடு அப்பூவினைச் சேர்த்து வைக்கிறாள். பூ மகளுக்குத் தன் காதலன் இழைக்கும் குற்றங்களைச் சொல்வது போல் அது காட்சி அளிக்கிறது என்றான்.

பொய்கையில் இருந்த தாமரை மலர்கள் இரண்டனைப் பறிக்கிறாள். அவற்றைத் தன் செவிகள் இரண்டில் தனித்தனியே செறித்து வைக்கின்றாள். இட பொழுது அவளுக்கு மூன்று முகம் ஆகிவிட்டது என்று

சுட்டிக் காட்டினான். இவளும் தெய்வப் பெண் ஆகி விட்டாள் என்று கூறினான்.

காதலி ஒருத்தியோடு குளத்தில் முழுகுகிறான். தாமரைத் தடாகம் அது. உள்ளே முழுகி எழுந்த தன் காதலியை அவன் கண்டு கொள்ள முடியவில்லை; அங்குள்ள பூ மலர்களில் ஒன்று என்று தவறாகக் கருதி அவளைக் காணாது துடிக்கிறான். ஏங்குகிறான். கலங்கு கிறான். அவள் சிரிக்கிறாள். பின்பு இவன் கண்டு களிக்கிறான். அவள் மலர் அல்ல மங்கை என்பதை அறி கிறான். தாமரைப் பூ போல் உள்ளது மங்கையர் முகம் என்பதை இவளுக்கு அறிவித்தான். சில சமயம் இரண்டுக்கும் வேறுபாடே காண முடிவதில்லை என்று புகழ்ந்து பேசினான்.

சிறுக்கின்ற ஒளிமுகம்; செங்காந்தள் போன்ற கைகள்; முறுக்கு உடைய நெடுங் கூந்தல் இவற்றைக் காட்டி இவை கரும் பாம்பு பற்றிக் கொள்ளும் திங்கள் என்று காட்டினான். அவள் முகம் சந்திரன்; முறுக்குடைய கூந்தல் பாம்பு என்று உவமைப் படுத்திக் கூறினான்.

பெண்ணொருத்தி நீரில் முழுகி எழுகிறாள். முகத்தில் படிந்த கூந்தலை நீவி வாரித் தள்ளுகிறாள். அவள் முகம் மதிபோல் காட்சி அளிக்கிறது. மேகத்தைக் கிழித்துக் கொண்டு வெளிப்படும் மதி அவள் முகம் என்று பாராட்டிக் கூறினான். அழகை ரசிப்பதில் அவன் கொண்ட ஆர்வத்தைப் புலப்படுத்தினான்.

மகளிர் அழகைப் பாராட்டிப் பேசுவது அவளுக்கும் மகிழ்வையே தந்தது; 'அவள் இளம் உள்ளம் அவனை மகிழ்வித்தது.

அங்கே ஒரு பெண் செங்குவளை பறிக்கச் செல் கிறாள். இவள் நீலவிழிகள் அவற்றைப் பார்க்க அதன் கோல அழகும் மாறிவிடுகிறது; செங்குவளை கருங்குவளை

யாகிறது. தன் கண்ணைப் போலவே அவை விளங்கியதால் பறிக்க மனம் இல்லாமல் நின்று விடுகிறாள். இப்படியும் ஒரு பெண் இருக்கிறாள் என இவன் செப்புவது கேட்டு அவளும் மகிழ்வு அடைந்தாள். பேதைப் பெண் அவள் என்று இரக்கம் காட்டினாள். நீல விழிகள் பெண்களுக்குக் கோல அழகு தருகிறது என்பதைச் சுட்டிக் காட்டிப் பேசினான்.

மகளிர் முகம் மதி; தாமரை என்று பேசினான். கண்கள் குவளை என்றான். கைவிரல்கள் காந்தள் முகை என்றான். கண்கள் கருங்குவளை என்றான். காதல் நெஞ்சம் இத் தகையது என்று அக்காட்சிகளைக் காட்டி உணர்த்தினான்.

அவர்கள் வழி நெடுகச் சோலைகளையும் பொய்கைகளையும் கண்டு மகிழ்ந்தனர். அங்குக் காதல் புரிந்த இளைஞர்களைக்கண்டு அவர்கள் செய்கைகளில் புதுச்சுவை கண்டனர்.

மற்றும் அங்கே தங்கி இளைப்பாறினர். களைப்பு நீங்கக் குளத்திலும் ஆற்றிலும் நீராடி மகிழ்ந்தனர். கங்கை நதி அவர்களைக் கவர்ந்தது. அதில் நீராடி மகிழ்வது சிந்தைக்கு இனிமை தந்தது. புனிதம் மிக்கது என்பது மட்டும் அல்ல; வெள்ளம் மிக்கது; குளிர்ச்சி தந்தது. அலைகள் அவர்களை அழைத்தன. அதில் நீராடிக்கரை ஏறினர்.

அங்கே ஒரு பூ மரச் சோலை; அதனை இளமரச் சோலை என்றனர். அதைக் கண்டு தமயந்தி வியந்தாள். பூவும் தளிரும் எழில் மிக்கவையாகக் காட்சி அளித்தன. மகளிர் தம் காதலருடன் களித்து மகிழ்ந்தனர். இளம் மங்கையர் அங்கும் இங்கும் திரிந்து அழகு சேர்த்தனர்.

இவன் வாய் வைத்துக் கொண்டு சும்மா இருந் திருக்கலாம். அந்தச் சோலையை அவன் பாராட்டினான்.

இதுபோல் தன் நாட்டிலும் சோலைகள் உள்ளன. அங்குத் தான் தான் ஆடி மகிழ்வது உண்டு என்று கூறினான்.

"இந்தப் பொழில் எங்கள் எழில் நகரில் உள்ள சோலையைப் போல் உள்ளது" என்று அவளிடம் பேசுவதற்கு இதனை ஓர் வாய்ப்பாகக் கொண்டான். அவள் புன்முறுவல் பூப்பாள் என்று எதிர்பார்த்தான்.

அவள் கற்பனை எங்கோ சென்றுவிடுகிறது. இந்த இளைஞர்கள் தம் காதலியரைச் சந்தித்துக் கலந்து உரையாடும் கலகலப்பு அவளுக்குச் சிலிர் சிலிப்பை உண்டு பண்ணியது.

நளனை அழகிய மகளிருடன் வைத்துப் பார்த்தாள். அவளால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. "கோட்டுப்பூச் சூடினும் காயும்" நிலையை அடைந்தாள். "நீர் யாரை ஒப்பிட்டுப் புனைகின்றீர்" என்று கேட்பது போன்ற நினைவு எழுந்தது.

"அப்படி என்றால் நீயும் இளமகளிருடன் வளமுடன் உரையாடி மகிழ்ந்தீரா?" என்று கேட்டாள்.. தொடர்ந்து பிணக்குக் கொண்டாள். அவள் முறுக்கு மாற்ற வேண்டியது; அவள் சிணுக்கு அது; தான் சறுக்கவில்லை என்று சொல்லிப் பார்த்தான்.

அப்பு அழுக்கு இல்லாத வாழ்க்கை என்று செப்பிப் பார்த்தான். அவள் ஒப்புக் கொள்வதாக இல்லை.

அணைக்கச் சென்றான் அவன்; அவள் இணக்கம் காட்டவில்லை; சினந்தாள்; கண் சிவந்தாள்.

"வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல" என்பதை அறிந்தான். ஊடல் தீர்வதற்கு ஒரே மருந்து அவள் காலில் விழுந்து மன்றாடுவது. கொஞ்சுவதற்கு வழி அவளைக் கெஞ்சுவதுதான். அப்பொழுதுதான் அவள் மிஞ்சுவதைத் தவிர்க்க முடியும் என்று கொண்டான்.

அவள் காற்சிலம்பு அதனைத் தன் முடி மீது வைத்தான்; சீறடியைத் தொட்டு அதனைத் தன் மணிமுடி மீது வைத்தான். பேரிடி மாறியது; சிவப்பு நீலம் ஆகியது. அவள் சிவந்த கண்களின் சினக்குறிப்பு மாறியது. அவள் கண்கள் நீலநிறம் பெற்றன. பழைய கருங்குவளையை வளையல் அணிந்த அந்த இளைஞியிடம் கண்டான்; உறவு கொண்டான்.

ஊடல் தீர்ந்தது; கூடி மகிழ்ந்தான்; அவள் அவன் விருப்புக்கு உடன்பட்டாள். அவன் மார்பு அவள் உழும் நிலம் ஆயிற்று; கொங்கை ஏர் பூட்டிக் குறுவியர் நீர் அங்கு அடைத்துக் காதல் என்னும் வரப்பினை அமைத்து அவள் காமப் பயிர் விளைவித்தாள். அவள் அணைப்பு அவனுக்குப் பிணைப்பு ஆகியது; காமம் தணிப்பு பெற்றது.

வாவியும் ஆறும் குடைந்தாடிச் சோலைகளில் தங்கி இன்புற்றுப் பயணம் முடித்தான். நிடத நாட்டின் கங்கைக் கரையை அவர்கள் அடைந்தனர்.

நகர்புறச் சோலை ஒன்றில் நளன் தேரில் இருந்து இறங்கி அங்குத் தங்கினான். அங்கிருந்து எழில் மிக்க நகரின் மதில்களையும், விண்ணுயர்ந்த மாடங்களையும் மதிலிற் பறந்த கொடிகளையும் காட்டினான்.

"அதோ தெரிகிறதே அதுதான் நம் நகர்" என்று உணர்வு படக் கூறினான்.

தான் செல்லும் நகர் நோக்கி அவள் எல்லையற்ற மகிழ்வு கொண்டாள். மிகப் பெரிய நகர்; அவன் மாமன்னன்; அவள் பட்டத்து அரசி தமயந்தி.

அவள் உள்ளம் மகிழ்வு பெற்றது. கணவன் வீட்டை அடையும் புதுமணப் பெண் அடையும் மகிழ்ச்சி. மன எழுச்சி அவள் பால் தோன்றின. அங்குச் செல்வதை அவள் எதிர்நோக்கி இருந்தாள்.

நகரத்தை அடைந்தனர்; அரண்மனை வாழ்வு அவளுக்கு அரண் தந்தது.

தன் சொந்த நாட்டை அடைந்ததில் அவனுக்குப் பெரு மகிழ்வு; இளமை மிக்க அவன் வளமை மிக்க வாழ்வு நடத்தினான்.

மகிழ்வு என்பது மாளிகையில் இல்லை. கதவு அடைப்புச் செய்து கொண்டிருப்பதால் மட்டும் மகிழ்வு காண்பது இல்லை; சுற்றித் திரிந்து ஆடி மகிழ்வதில் அவர்கள் இன்பம் அடைந்தனர். அவன் தன் நாட்டில் இருந்த சோலைகளுக்கு அவளை அழைத்துச் சென்றான் பொய்கைகளில் அவளோடு நீராடி மகிழ்ந்தான். செய்குன்றுகளில் திரிந்து சுற்றி மகிழ்ந்தான். இன்ப வாழ்வு இடையீடு இல்லாமல் தொடர்ந்தது.

ஆண்டுகள் பன்னிரண்டு அவர்கள் இன்ப வாழ்வு தொடர்ந்தது. எந்த இடையூறும் அவர்கள் இன்பத்துக்குத் தடை செய்யவில்லை. மனைமாட்சி சிறப்புற மக்கட் பேறுதேவை; அது இல்வாழ்வின் நற்பேறு; அதனையும் அவர்கள் பெற்றனர். இந்தப் பன்னிரண்டு ஆண்டுகளில் மக்கள் இருவரைப் பெற்றனர். மூத்தவன் மகன், இளையவள் மகள்.

மக்களைப் பெற்ற மகராசியாகத் தமயந்தி விளங்கினாள். அந்தக் குடும்பம் ஒரு பூங்காவாகத் திகழ்ந்தது. பூத்துக் காய்த்த மரமாக அவர்கள் விளங்கினர். கனிகள் காய்த்துக் கவின் தந்தது.

இல்லற வாழ்வு இனிது தொடர்ந்தது. இந்த ஆண்டுகள் பன்னிரண்டும் வழுக்கி விழாமல் வாழ்வு நடத்தினான்.

ஏதாவது சறுக்கு ஏற்பட்டால் அவனை இறக்கித் தள்ளக் கலியன் காத்திருந்தான், ஏதாவது சிறு தவறு செய்தால் போதும் அவனை வளைத்துப் பிடிக்கலாம்

என்று காத்திருந்தான். தெய்வக் குற்றம் ஏதாவது செய்வான் என்று காத்திருந்தான். நீதி வழுவுவான் என்று எதிர் பார்த்தான்.

செங்கோன்மை தவறவில்லை; நேர்மை குறைய வில்லை; இமயம் போல் உயர்ந்து விளங்கியது அவன் வாழ்வு. காத்திருந்தான் கடன்காரன் அவன் உடைமையைக் கவர.

நாளும் தெய்வச் சடங்கு இயற்றுபவன் நளன். அந்திப் பொழுது வந்ததும் இறைவணக்கம் செய்து வந்தான். கால் கழுவிப் பின் இறைவணக்கம் செய்வது வழக்கம்.

அவசரப்பட்டான்; சிறு தவறு; காலில் சிறுமறு; மாசு அகலவில்லை; தூசு ஒட்டிக் கொண்டிருந்தது. சடங்கில் அவன் இடர் உற்றான்; நியமத்தில் நிந்தை ஏற்பட்டு விட்டது. இனி அது வாய்க்கால் வழி ஆகக் கலியனுக்கு அமைந்தது. பற்றுவதற்கு அது பற்றுக் கோடு ஆகியது.

அவனைக் கெடுப்பதற்கு அது ஆரம்ப நிகழ்வாக அமைந்தது. விழா எடுக்க அது தோற்றுவாயாக அமைந்தது. கால்கோள் விழாவாக அதனைக் கலியன் கொண்டான்.

கெடுப்பது என்று மனம் கொண்டு அடுத்துக் கெடுக்க முனைந்தான். திண்ணிய அவன் மனத்தை நெகிழச் செய்தான். எதிலும் எந்தத் தவறும் செய்யாதவன் தொடர்ந்து தவறுகள் செய்யத் தூண்டினான். தளர்ச்சி அவன் செயற்பாட்டில் உண்டாக்கினான். விழிப்பு உணர்வை அவன் வழி அடைத்தான். அயர்ந்தான் என்று கூறவேண்டி உள்ளது.

கலி அவனைத் தொடர்ந்தான். இறைவன் வழிபடாதவரைத் துயர்கள் வந்து அடைவதைப் போலக் கலி அவனை அடைந்தான்.

அவனைக் கெடுப்பதற்கு வழி யாது? அவன் தமையன் உறவினன்; அவனை அணுகினான் அவனுடன் பேசினான்.

''உனக்குப் பரிசுச் சீட்டுக் காத்திருக்கிறது'' என்றான்.

அவன் அதை நம்பவில்லை; ''ஒன்றுவைத்தால் நூறு பெறலாம்'' என்றான்.

அது அவனுக்கு வியப்புத் தந்தது.

ஏதோ புதுப்படம் எடுத்துக் கோடி கணக்கில் பணம் ஈட்டலாம் என்று தூண்டி விடுவதுபோல் அது இருந்தது. அதில் சறுக்கி விழுபவர் பலர். அந்த மாதிரி ஏதோ வழிகாட்டுகின்றான் என்று நினைத்தான்.

''குறுக்கு வழிகள் பல இருக்கின்றன பொருள் ஈட்ட'' என்றான்.

''அரசியலுக்கு அறிமுகம் செய்கிறான்'' என்று நினைத்தான் புட்கரன். அவன் அந்நாட்டு மன்னன்.

''காய் உருட்டு; அதன் வழி பொருள் திரட்டு'' என்று கூறினான் கலி.

''சூது ஆடுவது தீது'' என்று சுட்டிக் காட்டினான் புட்கரன்.

''உழைப்பது என்பது உத்தமர் செயல்; நம்மைப் போன்றவர் உழைக்க முடியாது. யுத்தம் செய்வது வீரர் செயல்; அது நமக்குப் பழக்கம் இல்லை.''

''கத்தியின்றி ரத்தமின்றிச் செய்யப்படும் யுத்தம் ஒன்று உள்ளது. அதுதான் சூதாட்டம்'' என்றான்.

ஏதோ நாமக்கல்லார் கவிதையைக் கூறுகிறான் என்று எதிர்பார்த்தான். நாமம் சார்த்தும் செய்தியாக அது இருந்தது.

''புத்திசாலித்தனம் அதற்குத் தேவைப்படும்'' என்று சுட்டிக் காட்டினான் புட்கரன்.

''அதற்குப் பஞ்சமில்லை; இந்த நாட்டில் புத்தி சாலிகள் எல்லாம் புவியில் உயர்வாக இல்லை; செல்வர்கள் எல்லாம் புத்திசாலிகள் இல்லை'' என்று கூறினான். திரைப்பாடலின் எதிர்ஒலியாக அது இருந்தது.

''ஆடத் தெரியாது'' என்று கூறினான்.

''நடிக்கத் தெரிந்தால் போதுமானது. பின் குரல் கொடுத்துப் பேச வைத்தால் அது நடிப்புக்கு உதவியாகும்; இன்று இரவல் குரல், இரவல் பாட்டு; எல்லாம் இரவல்தான்'' என்று எடுத்துக் கூறினான்.

''நான் இருக்க பயமேன்?'' என்று அபயம் தந்தான். ''நீ காயை உருட்டு; அதுபோதும். அந்தச் சூது கருவி அதாவது 'கவறு' அது விழுவது என் கையில் உள்ளது. நான் அதன் வடிவில் புரள்வேன்; இது புரட்சி'' என்றான்.

''தெய்வம் தமக்குத் துணை இருக்கிறது'' என்பதால் அவன் அக் கூற்றுக்கு இசைந்தான்.

தேர்கொண்டு வந்து நிறுத்தினான். குதிரை ஒன்று கொண்டு வந்து பூட்டினான்.

''எதற்காக?''

''நிடத நாடு செல்ல'' என்றான்.

''போருக்குச் செல்வது என்றால் தேரில் செல்ல வேண்டும். அந்த ஆண்மை அது நமக்கு இல்லை; அது நீ செய்த நன்மை; நீ எருதின்மேல் ஏறிச் செல்க'' என்றான்.

அவ்வாறு கூறுவதே விளையாட்டாக இருந்தது. எருமை மீது சிறுவயதில் ஏறி ஊர்ந்து இருக்கிறான். அந்த நினைவு வந்தது.

ஒவ்வொருவருக்கும் ஒரு வாகனம் உண்டு. அதே போல் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஓர் ஊர்தி உண்டு என்பது அறிந்தான்.

மயில் முருகனுக்கு; கருடன் திருமாலுக்கு; எருது சிவனுக்கு; பெருச்சாளி பிள்ளையார்க்கு; இப்படித் தெய் வங்கள் தனித்தனி ஊர்திகள் பெற்றுள்ளமையை நினைத்துப் பார்த்தான்.

கலி தன்னைத் தூண்டப் புட்கரன் நிடத நாட்டுப் புறச்சோலையை அடைந்தான். அங்கிருந்து கொண்டு செய்தி சொல்லி அனுப்பினான்.

எருமைமேல் வந்திருந்தால் அவனை எமன் என்று நினைத்திருப்பான்; எருதின் மேல் வந்ததால் "சிவன்" என்று கருதினான்.

யானை மீது வந்திருந்தால் அவன் அரசனாக மதிக்கப்பட்டு இருப்பான். எருது ஏறி எவரும் வந்தது இல்லை. புதுமையாக இருந்தது.

கொடி தாங்கி இருந்தான்; அதில் என்ன எழுதி இருந்தது பார்த்து வரச் சென்றான். எழுத்து ஒன்றும் இல்லை; எழில் உடைய சித்திரமும் இல்லை; வெள்ளைத் துகில் அது. அதனால் அமைதிக் கொடி என்பதை அறிந் தான். மற்றும் கூர்ந்து பார்த்தான். உன்னிப்பாகப் பார்த் தான். அதில் சூதாடும் பலகை வரையப்பட்டு இருந்தது.

நளன் அவனைச் சென்று சந்தித்தான். தன்னிலும் அவன் மூத்தவன் என்பதால் யாத்த நட்புக் காட்டினான்.

"எங்கே இவ்வளவு தூரம்? செய்தி யாது?" என்றான்.

"பொழுது போகவில்லை. உன்னோடு அளவளாவ வந்தேன்" என்றான்.

இது வியப்பாக இருந்தது. பேசுவதற்காகவா வர வேண்டும். இது தன்னை ஏசுவது போல இருந்தது.

''சூது ஆடுவோம் வா'' என்றான்.

வம்புக்கு அழைக்கிறான் என்பது தெரிந்தது. ''வம்பை விலைக்கு வாங்க் கூடாது. வந்த வம்பைவிடக் கூடாது'' என்ற பழமொழி நினைவுக்கு வந்தது.

''மறுத்தால் அது இழிவாகும்'' என்று நினைத்தான்.

வெற்றி தோல்வி அதைப் பற்றி அவன் கவலைப் படவில்லை. இவன் மானத்தை அவன் தூண்டி விட்டது போல் தோன்றியது.

''சூது ஆடுவது தீது'' என்று மனத்தில் பட்டது.

அவன் கெட்ட காலம்; அதைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கவில்லை.

''வாழ்க்கையில் தவறுகள் செய்தால்தான் அது சுவை யுடையதாக அமையும்'' என்று சிந்திக்கத் தொடங்கினான்.

ஆடினால் என்ன? பொருள் இழப்பு ஏற்படலாம்; அதற்காக அவன் அஞ்சவில்லை.

அறிவுரை சொல்லவே ஒருசிலரை அமைச்சர் என்று வைத்திருந்தான். அவர்கள் நல்லது கூறியதால் நல்லமைச் சர்கள் என்று நவிலப்பட்டனர்.

அறிவுரை கூறவே அகராதிகளை அவர்கள் கற்றிருந் தனர். ''சூது அதனால் வரும் தீது'' என்ற தலைப்பில் நூல்களைப் புரட்டினர். அடுக்கடுக்காகச் சான்றுகள் கிடைத் தன. அவற்றின் தீமைகளை அவனிடம் ஒப்புவித்தனர்.

சூதோடு ஏனைய மயக்கங்களையும் உடன் சேர்த்துக் கூறினர். ''காதல் அது தீது'' என்று கூறினார்கள். தன் மனைவியை அல்ல; பிற மாதரை விரும்புவது தீது என்று

விளக்கம் தந்தனர். கள் உண்பது; பொய் பேசுதல்; ஈவதைத் தடுப்பது இவை எல்லாம் செம்மை நீங்கிய நெறிகள்'' என்று கூறினார்.

''இதனை அறிவாளிகள் நெருங்கவே மாட்டார்கள். இவை செய்யும் தீமைகள் இவை'' என்று எடுத்துக் கூறினார்.

''அறத்தை அழிக்கும்; நரகிற் சேர்க்கும்; அருள் உள்ளத்தை மாய்க்கும். பகைமையை உண்டாக்கும். அதனால் பொய்ச் சூதினை அறிவாளிகள் நாட மாட் டார்கள்'' என்றும் கூறினர்.

''அது மட்டும் அன்று; உருவை அழிக்கும். உயர்வினைச் சிதைக்கும். செல்வத்தை ஒழிக்கும். மானம் சிதைக்கும். நட்பினைத் தகர்க்கும். அன்பினை அழிக்கும். இன்னும் எவ்வளவோ தீமைகளைக் கூற முடியும்'' என்றனர்.

''அது மட்டும் அன்று; சூதும் மாதும் வேதனை செய்யும்'' என்று அறிவித்தனர். பொது மாதர், சூது இவற்றில் தொடர்பு கொண்டால் விடவே முடியாது; பற்றிக் கொள்ளும்'' என்று கற்ற அந்த அமைச்சர்கள் கூறினர்.

அமைச்சர்கள் அவர்கள் தம் தொழிலைச் செய்து முடித்தனர். அரசன் இவன்; அவர்கள் அறிவுரை கேட்பது அவன் தொழில்; கடமை. அரசர்களுக்கு அறிவுரை கூறுவது அவர்கள் தொழில்; கடமை. அதற்குரிய மதிப்பைத் தந்தான்.

அவர்கள் கூறுவது தக்கதுதான்; ஏற்கத்தக்கவை; என்றாலும் அவன் வார்த்தை தந்து விட்டான். அவசரப் பட்டு ஆடுவதாக அறிவித்தான். பின்பு அதை மாற்றுவது என்றால் அது மன்னனுக்கு இழுக்கு என்பதை உணர்ந் தான். அவர்களுக்கு அதை உணர்த்தினான்.

அவனை மீட்க முடியாது என்பதால் அவர்கள் அடங்கி நின்றனர்.

“நல்லது நடக்கட்டும்; தீயது தொடரட்டும்; வெற்றியோ தோல்வியோ எதைப் பற்றியும் கவலை யில்லை. வார்த்தை தந்துவிட்டேன். மீள மாட்டேன்” என்று தன் மன உறுதியை வெளிப்படுத்தினான்.

“என்னைத் தடுக்க வேண்டாம்” என்று அறிவுறுத் தினான்.

அமைச்சர்கள் தம் கடமையைச் செய்தனர். “ஆகுவது ஆகுங் காலத்து ஆகும்; அழிவது அதை யாரும் தடுத்த நிறுத்த முடியாது. போகுவது அவன் புத்தி செல்லும் வழி” என்று கூறிக் கொண்டு ஆறி அடங்கினர்.

மேடை ஒன்று அமைக்கப்பட்டது. மெத்தைகள் விரிக்கப்பட்டன. எதிர் எதிர் அமர்ந்தனர். சூது பலகை விரிக்கப்பட்டது. புரட்டும் கவறு முன்கொண்டு வந்து வைக்கப்பட்டது. ‘கவறு’ என்று அதனைக் கழறினர். கையில் அதனைப் புட்கரன் எடுத்தான். உருட்டுவதற்கு முன்னால் தொடக்கவுரை நிகழ்த்தினான்.

“ஒட்டுப் பந்தயம் யாது?” என்று கேட்டான்.

“காசு வைத்து ஆடாவிட்டால் இந்த ஆட்டம் மாசுபடும்” என்று கூறினான்.

“காசு வைத்து ஆடினால்தான் ‘காரமே’ பிறக்கும்; சூடு பறக்கும்; ஆடுவதற்கும் பிடிக்கும்” என்று கூறினான்.

நளன் செல்வம் மிக்கவன்; கழுத்தில் அணிந்திருந்த மாலையைக் கழற்றினான்; பூண்டிருந்த பொன் மாலையை முன் வைத்தான்; “இதற்கு நிகர் நீ என்ன வைக்கிறாய்” என்று கேட்டான்.

புட்கரன் வெறுங்கையைக் கொண்டு முழம் போட்டான். வைப்பதற்கு அவனிடம் எந்தப் பொருளும் இல்லை; பொன்னும் இல்லை; ஆரமும் இல்லை. அவன் கொண்டு வந்தது யாதும் இல்லை. ஏறி வந்த எருது அதைக் காட்டினான்.

''எருது என் பணயம்''என்றான்.

அவனிடம் உள்ளது அதுதான் என்பதால் நளன் மறுப்புக் கூறவில்லை; ஆடுவதில் காட்டிய வேகம் அவன் அறிவை மயக்கியது.

கவறை உருட்டினான்; அது இவனுக்கு எதிராகப் புரண்டது. மணியாரம் அவன் கைக்குச் சென்றது.

கலி கவறாகப் புரண்டான்; இவனுக்கு முரணாக அது விழுந்தது.

''வைத்த மணியாரம் வென்று விட்டேன்; மறு பணயம் இதற்கு நிகரானது கூறுக''என்று அழைத்தான். தொடர்ந்து அவன் வைத்திருந்த நிதி அத்துணையும் வைத்தான்; இழந்தான்.

பதுமை நிகர் பாவையர் இருந்தனர். அவர்களையும் வைத்து ஆடினான். அவர்கள் எதிர்கட்சியில் சேர்ந்தனர்.

படைகளை வைத்தான்; அவை எதிரிக்குக் கை மாறினர்; தேர் வைத்தான்; யானை வைத்தான்; ஏறுவதற்கு என்று ஒன்றும் இவன் வைத்துக் கொள்ளவில்லை.

ஆட்சியை வைத்தான். தன் மாட்சிமையை இழந் தான். வீழ்ச்சியினை அடைந்தான். படிப்படியாகச் சரிந்தான். பாதாளத்தில் விழுந்தான். பரமபதம் ஆட்டம் அதில் பாம்பின் வாயில் விழுந்தான். அது கீழே கொண்டு போய் விட்டது. எல்லாம் இழந்து எளியன் ஆயினான்.

"வைப்பதற்கு இனி யாதும் இல்லை" என்பதால் செயல் இழந்தான்.

"வைப்பு என்பது யாதும் இல்லை" என்று கை விரித்தான்.

"மனையாள் அவள் ஒருத்தி அவளையும் வைத்து ஆடலாமே" என்றான்.

சுருக்கு என்று தைத்தது; எதிரியின் துணிவு அவனை அதிர வைத்தது.

காதல் மனைவி அவள் உயிரோடு ஒன்றியவள்; அவளையும் வைக்க என்றது அவன் உள்ளத்தில் சென்று தைத்தது.

"இனி இந்த இடம் நமக்குத் தகாது; பொன்மகளே; எழுக" என்றான். அருகில் இருந்த தன் மனையாளை நோக்கி "மிகவும் கொடியவன் அவன்" என்பதை அறிவித்தான்.

உடைமைகள் அனைத்தையும் இழந்தான். அதற்காக அவன் கலங்கவில்லை; மீட்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. மாசு இல்லாத மனைவியை அவன் தூசுப்படுத்த நினைத்தது அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

எழுந்தான்; உடன் எழுந்தாள்; நடந்தான். அந்த அரங்கை விட்டு அகன்றான். மனையைவிட்டு நீங்கினான்.

நேற்றுவரை அவன் அரசன்; இன்று அவன் ஒரு குடிமகன்; அந்தக் குடிமையையும் புதியவன் மறுத்தான். நாட்டை விட்டு நீங்குவது தவிர வேறு வழியே இல்லாமல் போய்விட்டது.

தாமரை மலரில் தங்கும் அன்னம் அது அமரும் இடத்தில் ஒரு காக்கை அதைக் கவர்ந்து விட்டது; அங்கு அமர்ந்து விட்டது.

அரசன் ஆட்சியை இழந்தான்; நாட்டை மற்றொருவன் கவர்ந்தான்; இனி எப்படி வாழ்வது? இந்த அவலம் நாட்டவரை நலிவித்தது.

அழுகை என்பது அனைவரையும் ஆட்கொண்டது. பால் அருந்தும் குழந்தையும் பால் குடிக்க மறுத்தது. ஆவும் அழுத; பூவும் அழுத; புனல் அழுத; புள் அழுத என்று கூறும்படியாயிற்று. கருப்புக் கொடி எங்கும் மாட்டப் பட்டது. கொடி இறக்கப்பட்டது. துக்க நாள் என்று மக்கள் அறிவித்தனர்.

அவனை மக்கள் சூழ்ந்தனர். துயரத்தில் ஆழ்ந்தனர்; "ஆருயிரின் தாயே! அறத்தின் பெருந்தவமே! அருளின் திருஉருவே! பெருமகனே! நீ சென்று விட்டால் யார் இந்தப் பாரினைக் காப்பர்?" என்று கேட்டனர். கண்களில் நீர் ஒழுகியது; அவன் கால்களை நனைத்தது.

செங்கோல் மன்னன் அறம் திறம்பி விட்டால் அதைவிட அழிவு வேறு இல்லை என்று அறிவித்தனர்; அவலமுற்றனர்.

"கடல் கரையைக் கடக்காது; வேதம் நெறி பிறழாது; உலகம் நடுநிலைமை பிறழாது; அரசர்கள் செம்மை கெடக்கூடாது; இனி இந்த நாட்டின் நிலைமை என்ன ஆகுமோ?" என்று அஞ்சினார்கள். "யார் இனி நல்லாட்சி தரப்போகிறார்கள்" என்று பேசி வருந்தினார்கள்.

சுகவாசம் புரிந்த அவன் வனவாசம் மேற்கொண்டான். நாட்டில் வாழ இடம் இல்லாதவர்கள் காட்டுக்குச் செல்வது பழங்காலத்து மரபு; சந்நியாசிகள் மனைவாசத்துக்கு அஞ்சி இங்கே தங்கினார்கள். அது அவர்களுக்கு மலை வாசமாக விளங்கியது. இப்படித்தான் பழங்கதைகள் பேசுகின்றன. முதியோர் இல்லங்களாக அங்கு வதித்தலை அவர்கள் மேற்கொண்டனர்.

'காடு' இன்னார்க்கு உரியது என்று பட்டயம் இல்லாத நாள் அது; வேறு வழியில்லை; தலை தப்புவது என்றால் வேற்று நாட்டை அடைவதுதான் வழி; அதற் காகவாவது காடு கடக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

மனைவி மக்கள் அவன் உடன் தொடர்ந்தனர். இராமன் பின் சீதை நடந்தாள். இலக்குவன் பின் தொடர்ந் தான். இது இராமாயணக் கதை. இவன் மனைவி மக்களோடு புறப்பட முன் நின்றாள்.

ஆட்சியை எதிர்த்து மக்கள் புரட்சி செய்யும் நிலையில் அன்று இல்லை. இன்று உண்ணாவிரதம் இருக்கச் சுதந்திரம் உள்ளது. குறளகம் முன் கொடி பிடிக்க அனுமதி வழங்கப்படுகிறது. அன்று குரல் கொடுத்து அழ முடிந்ததே அன்றி எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலையில் இல்லை.

அவனை வேண்டிக் கொண்டனர். "இன்று ஒருநாள் தங்கிச் செல்க; இது எம் வேண்டுகோள்" என்று அவன்முன் வைத்தனர். பிரிவு உபசாரம் வழங்க அல்ல; பிரிய மனம் இல்லாத நிலை.

அவர்கள் வேண்டுகோளைக் கேட்டான். அவர்கள் கண்ணீரைக் கண்டான். மற்றும் தன் மனையாளைப் பார்த் தான். அவளுக்கு அது இதம் தரும் என்று எண்ணினான். மாற்றத்துக்கு இடைவெளி அமையுமே என்று அதற்கு இசைந்தான்.

நளன் நாட்டு மக்களோடு தங்குகிறான் என்பதைப் புட்கரன் கேட்டான். ஆட்சி அவன் கையில்; மக்கள் பழையவனை மதிப்பதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"போகட்டுமே இருந்து" என்று எண்ணவில்லை. "ஒருநாள் தானே" என்று விட்டிருக்கலாம். இரக்கம்

என்பது அரக்கனிடம் இருப்பது இல்லை. இரக்கம் என்பதுஅவன் செயலில் இடம் பெறவில்லை.

''இந்த மக்கள் நன்றி கெட்டவர்கள்; ஆள்பவன் யான்; அநாதை அவன்; அவன் பக்கம் இவர்கள் சாய் கின்றனர்''என்று கூறினான். அவனால் பொறுக்க இயல வில்லை.

''முரசு அறைக''என்றான். விழுந்துபட்ட அரசனுக்கு விருந்து தர யாராவது முன் வந்தால் அவர்கள் தலை அவர்கள் இழக்க வேண்டியதுதான். சிரசு நீக்கம் செய்யப் படும்'' என்று அறிவித்தான்.

நாட்டுப்பற்று உடைய மக்கள் உயிர்ப் பற்று உடையவர்கள் ஆயினர்; முதலில் தம்மைக் காத்துக் கொள்வது முதற்கடமை என்று முடிவு செய்தனர்.

அழுவதை நிறுத்தினர்; அரசன் இருந்த இடம் நோக்கியும் அவர்கள் கால் நீட்டிப் படுக்கவில்லை. அவன் அந்நியன் ஆயினான்.

''மக்களைக் கூறிப் பயன் இல்லை; தவறு என்னுடையது தான். அவசரப்பட்டு அறிவு இழந்தேன். பாதை தவறினேன்; என்னால் என் குடி மக்களுக்கு இக்கட்டு வந்தது; இனி இங்கு இருப்பதால் அவர்களுக்குக் கேடு வரும். கேடு வருவதற்கு முன் புதிய இடம் தேடுவதே தக்கது'' என்று அரசு எல்லையைக் கடந்தான். வாயிலை விட்டு வெளியேறினான்.

''கொற்றவன் பால் செல்வோர் இருந்தால் அவர் களைக் கொல்லுக'' என்று பறை அறிவித்தான். அதுகேட்டு ஊரே இழவுபட்டதுபோல் அவலத்துள் ஆழ்ந்தனர்.

வீடுகளில் குழந்தைகள் பால் உண்ண மறுத்தனர்; ஏதோ சாவு விழுந்தது போல் அவ்வீடுகள் விளங்கின.

அழுவதற்கு அவர்களுக்கு உரிமை இருந்தது. அதை நன்கு பயன்படுத்தினர். பத்திரிகைகள் தலையங்கம் தீட்டுவது போல் உள்ளக் குமுறலை அழுகையில் வெளிப்படுத்தினர்.

மாநகரே தன்னை விட்டுச் சென்றதுபோல் தோன்றியது; திரும்பிப் பார்த்தான்; வெகுதூரம் வந்துவிட்டதை அறிந்தான்.

வழியில் முள்ளும் கல்லும் அவர்களுக்குப் புதிய முயற்சியைத் தந்தது. காலில் தோல் அணிந்து நடந்தவர்கள்; தேர் தவிர அவர்கள் கால்கள் தெரு மண்ணை மிதித்தது இல்லை. கல்லும் முள்ளும் அவர்கள் கால்களை வருத்தின.

“யார் இவற்றைக் கொண்டு வந்து போட்டார்கள்?” என்று அந்தச் சிறுவர்கள் கேட்டனர்.

“ஏன் நம் நகரில் இவை தெருக்களில் இல்லை” என்றும் கேட்டனர்.

அவர்களுக்குக் கூறுவதற்கு விடை தெரியவில்லை.

“காடு என்றால் இப்படித்தான் இருக்கும்” என்றான் நளன்.

“நாம் செல்லும் வழியெல்லாம் கடந்து விட்டோமா” என்று கேட்டனர்.

அவர்களுக்கு என்ன விடை தருவது? உலகம் உருண்டை என்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்? தட்டை என்றுதான் நம்பிக் கொண்டிருந்தார்கள். துன்பம் என்பது வாழ்வின் மறுபக்கம் என்பது யாரும் அவர்களுக்கு அறிவித்தது இல்லை. பசி அவர்களை வாட்டியது. கனிகள் அவர்கள் பசியை அடக்கவில்லை.

வேளைக்குச் சோறு கண்டவர்கள் காயும் கனியும் தின்னும் புதுமை அவர்களுக்கு வியப்பு அளித்தது.

இந்தப் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு எப்படிச் செல்வது? எங்கே செல்வது. அரும்புகள் அவை வாடக் கூடாது என்று சிந்தித்தான்.

விதியை எண்ணி நொந்தான். நினைவு அலைகள் அவனை வாட்டின. வாய் திறந்து பேச அவனுக்குக் கருத்துக்கள் துணை செய்யவில்லை. சித்திரம் போல் அசை வற்று நின்றான். வாழ்க்கையின் விசித்திரங்கள் அவனை வதை செய்தன.

கடந்த காலத்தை எண்ணிப் பார்த்தான். 'விதி' என்று முடிவு செய்தான். எதிர்காலம் அவன் முன் நின்று கேள்விகள் எழுப்பியது.

இந்தக் காட்டில் இவர்களை எங்கே இழுத்துச் செல்வது? தான் செய்த தவறுக்குத் தன் துணைவி ஏன் துயர் உற வேண்டும்.

அவர்களை அல்லல் நீங்க வாழச் செய்வது என்று முடிவு செய்தான். தாரம் அவள்; உண்மைதான்; என்றாலும் அவள் வீமன் மகள்; அரசமகள்; அவள் தன் சொந்த நகர்க்குச் செல்வதுதான் உகந்தது என்று நினைத்தான்.

மாலையிட்ட மங்கை அவளைப் பிரிய எண்ணினான். அவர்களை அவள் தந்தை நகருக்கு அனுப்புவது தக்கது என்று கருதினான்.

அன்பு மக்களை வலியச் சுரம் வழி அழைத்துச் செல்வது தரம் அன்று; அவர்களுக்கு அது தீமை பயக்கும். என்ன உண்டாகும் என்று கூறமுடியாது. காதம் நடக்க அவர்கள் கால்கள் இடம் தராது. ஏதம் உடைத்து இப் பெருவழி என்று கூறினான்.

"மக்களை அழைத்துக் கொண்டு நீ மாநகர் செல்க; விதர்ப்பன் நகர் அடைக; பாட்டன் வீட்டில் இவர்கள்

வளரட்டும்; பிறகு அழைத்துக் கொள்ளலாம்'' என்று கூறினான்.

மக்களை அனுப்புவதற்கு அவள் மறுப்புத் தெரிவிக்க வில்லை. விட்டுப் பிரியாத கணவனைத் தனித்துவிட அவள் விரும்பவில்லை.

சுகத்தில் பங்கு கொண்ட அவள் துயரத்தில் பங்கு கொள்ள விரும்பினாள்.

அன்று சீதை எண்ணினாள். இராமன் தனிமைக்கு வருந்தினாள்.

''அருந்தும் மெல் அடகு யார் இட அருந்தும்'' என்று நினைத்துப் பார்த்தாள்.

''விருந்து கண்டபோது அவன் எப்படி வருந்துவான்'' என்றும் எண்ணிப் பார்த்தாள்.

உற்ற துணைவி அவள்; அவனைத் தனியேவிட விரும்பவில்லை.

''மனைவிக்குக் கணவன்தான் முதன்மை; பிள்ளை களை யார் வேண்டுமானாலும் கவனித்துக் கொள்வார்கள். மனைவி ஒருத்திதான் கணவனுக்கு இதம் அளிக்க இயலும். அவள் ஒருத்திதான் துணையாக இருக்க முடியும். நிலவு இல்லாத வானம் ஒளி பெறாது. நீ இல்லாமல் யான் வாழ முடியாது'' என்று கூறினாள்.

இந்தக் கருத்தைச் சிறிது மிகைப்படுத்திக் கூறினாள்.

''மக்களை வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ள முடியும். காதலனை இழந்தால் மனைவி அவனைப் பெற முடியாது''என்று கூறினாள்.

அதற்கு அவனால் மறுப்புக் கூறமுடியவில்லை. என் றாலும் மக்கள் செல்வம் மதிப்பு உடையது. அவர்களுக்கு

எந்தத் துன்பமும் வராமல் காப்பது நம் கடமை; பொறுப்பு என்று கூறினான்.

"மக்கள் பேறு உயரிய செல்வம்; அதற்கு நிகரானது வேறு எதுவும் இருக்க முடியாது" என்று கூறினான்.

"பொன்னைப் பெற முடியும்; புகழை ஈட்ட முடியும். பெருநிதிச் செல்வராயினும் சரி; புகழ்மிக்க சான்றோரா யினும் சரி; அவர்களுக்குக் குழந்தை இல்லை என்றால் அவர்கள் வாழ்வு பயனற்றது. எந்த உடைமையும் இதற்கு ஈடாகாது" என்றும் கூறினான். கலைகள் தரும் இன்பத்தை விட இந்த இளஞ்சிறுவர்கள் மழலைச் சொல் கேட்க இனிது என்றும் கூறினான்.

அதனால் இந்தச் சிறுவரையாவது பெருமைக்கு உரிய திருநகரில் சேர்ப்பது நம் கடமை; அதைச் செய்வோம் என்று கூறினான்.

சிந்தித்தாள்; சீர்மிகு கருத்தினை உரைத்தாள். "விதி நம்மைச் சதி செய்து விட்டது. சூதினால் பொருள் இழக்க நேர்ந்தது. இதை நாம் எதிர்பார்க்கவில்லை. இழப்பு அதனை ஈடு செய்து கொள்ளலாம். அரச வாழ்வு நம்மை விட்டு அகலவில்லை; என் தந்தை இருக்கிறார்; பிறந்த மண் உள்ளது. திறந்த கதவு அங்கு உள்ளது. பிள்ளைகளோடு நாம் அனைவரும் அங்குச் செல்வோம். மறுக்காது ஏற்க" என்று கேட்டாள். மெல்ல எடுத்துக் கூறினாள்.

பாரதப் போர் வராமல் காக்க வழி சொன்னான் சகாதேவன். திரௌபதிக்கு மொட்டை அடித்துவிட்டால் பாரதப் போரை வராமல் தடுத்து விடலாம் என்று கூறினான்.

பாரதப் போர் தவிர்க்க வழியைச் சகாதேவன் கூறினான். துன்பத்தினின்று விடுபடத் தமயந்தி இவ்வாறு கூறினாள். "நாம் ஏன் இப்படிக் கஷ்டப்பட வேண்டும்?

இஷ்டமுள்ளவர்கள் நமக்கு இருக்கும்போது நிஷ்டை செய்வது ஏன்?'' என்று கேட்டாள்.

இந்த எளிய வழி நளன் அறிந்தது. மாமனார் அவர் மதிக்கத் தக்கவர் என்றாலும்கூட உறவு ஊனம் பெறக் கூடாது என்றான்.

இல்லாமை அதன் காரணமாகச் செல்வது என்பது ஒன்று. மற்றொன்று அவர் பேரரசர்; அவர் கீழ் இருந்து வாழ்வது மற்றொன்று. இந்த இரண்டும் தனக்கு ஒவ்வாது என்று கூறினான்.

''இல்லை என்று சொல்லி இரந்து கேட்பது இழிவானது. மானம் கெட்டு வாழ்வது இனியது அன்று'' என்று கூறினான்.

மற்றும் மன்னன் ஒருவன் மற்றொரு அரசன் நிழலில் வாழ்வது என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. அது பித்தர் செயல் ஆகும்; அல்லது பேடியர் செயலாக இருக்க வேண்டும். அந்த நிலைக்கு யான் செல்லவில்லை. என்னால் செல்ல இயலாது; அது கூடாது'' என்று பெருமை குறையாமல் பேசினான்.

ஆண்டுகள் பல பழகியவள்; அவனை நன்கு அறிந்தவள்; அறங்கிடந்த நெஞ்சும், மறங்கிடந்த தோளும், திண்தோள் வலியும் அறிந்தவள். செம்மனத்தான்; செங்கோலான்; அவன் தன் நிலை சாயான் என்பதை அறிந்தவள். அதனால் அதற்குமேல் அவள் சொல் ஆடவில்லை.

இருவரும் தம் மக்களை மட்டும் அனுப்பி வைப்பது என்ற முடிவுக்கு வந்தனர். தம்மோடு வந்த கூட்டத்தில் மறை கற்றவன் அந்தண வகுப்பினன்; நம்பிக்கைக்கு உரியவன்; அவனிடம் மக்களை ஒப்புவித்தனர்.

பெற்றவர்கள் பேசும் உரைகேட்டு மற்று அச் சிறுவர்கள் மனம் கலங்கினர். பிரிதற்கு வருந்தினர்.

"எம்மை விட்டு நீங்கள் பிரிகின்றீரோ" என்று கேட்டனர். தந்தையின் முகத்தைப் பார்த்தனர். தாயின் குளிர் முகத்தைப் பார்த்தனர். அவர்கள் விழிகளில் கண்ணீர் ஆறாகப் பெருகியது; அழுதனர்.

பிள்ளைகளை அவன் கொண்டு செல்லவில்லை. இவர்கள் உயிர்கள் இரண்டனையும் பறித்துக் கொண்டு செல்வது போல் அவர்களுக்கு இருந்தது. பாசக் கயிறு கொண்டு வந்து எமன் அவர்கள் பாசக் கயிற்றை அறுத்துச் செல்வது போல் இருந்தது. அந்த அந்தணனை அவர்கள் வெறுப்போடு பார்த்தனர். அவன் விருப்போடு அவர்களை அழைத்துச் சென்று வீமன் திருநகரை அடைந்தான். ஒப்புவித்த கடமையைத் தப்பு ஏதும் இல்லாமல் செய்து முடித்தான். பெட்டகத்தில் வைக்கும் நிதிபோல் அவர்கள் பாதுகாப்பான இடத்தை அடைந்தனர்.

சுமை பாதி நீங்கியது. இனி அவர்கள் ஒருவருக்கு ஒருவர் துணையாயினர். நாட்டு மக்களும் அவரவர் தம் வீட்டை அடைந்தனர். வழி விட்வும் அஞ்சினர். பற்றற்ற துறவிகளாக அந்தப் பாசமுள்ள குடிமக்கள் அவனை விட்டு நீங்கினர்; ஞானியர் ஆயினர்.

வழிப் பாதையை அவர்கள் விழிகள் நோக்கின. எங்கும் கள்ளிச் செடிகள்; நெகிழ்ந்து செல்லும் அரவுகளும் இருந்தன. அவை தெறித்த மாணிக்கங்கள் சிவப்புக் கற்கள் என ஒளி வீசின. சருகுகள் எரிந்து சாம்பல் எங்கும் தெரிந்தது.

அந்தப் பொட்டல் காட்டில் பொன் நிறத்துப் பறவை ஒன்று தெரிந்தது; பறந்து வந்து அவர்கள் முன் இருந்தது. கலியன்தான் அந்தப் பறவையாக வந்தான் என்பதை அவர்கள் அறியவில்லை. மாயையால் தோற்றுவித்த தோற்றம் அவர்களை மயக்கியது.

மான்பிடிக்கச் சொல்லி மாலை வற்புறுத்தினாள் மங்கை ஒருத்தி; இது இராம காதை. அதேபோல் இங்கே இவள் பொன் பறவையைப் பிடித்துத்தா என்று மழலை மொழி பேசி அவனைக் குழைய வைத்தாள்.

காட்டில் இதுவாவது செய்யக் கூடாதா என்று எண்ணினான். அன்னத்தைப் பிடித்து வரச் சொன்னாள். அதனால் அவனுக்கு நன்மையே கிட்டியது. இந்தப் பொன் நிறத்துப் பறவையைப் பற்றித்தர விரும்பினான்.

அதுமிகவும் எளிதில் சிக்கிவிடும் என்று நினைத்தான். அது அவனிடம் ஆட்டம் காட்டியது; ஓட்டம் பிடித்தது; இவன் விடாது நாட்டம் செலுத்தினான். கைக்குள் படுவது போல் அவனுக்குச் சாடை காட்டியது. சுழன்று ஓடியது. இளைத்துக் களைத்ததுபோல் இருந்த அதனை வளைத்துப் பிடிக்க அருகில் சென்றான்.

அதனை வளைத்துப் பிடிக்க வலை ஒன்று தேவைப்பட்டது. பறவை வேட்டுவன் ஆக விரும்பினான். வலை வீச அவன் வடிவுமிக்க துகில் தேவை என்பதை அறிந்தான். அவளைப் பார்த்தான்.

''பங்கிட்டுக் கொள்வோம்'' என்றான்.

உமை ஒரு பாகத்தாள்; சிவன் பாதி ஒருத்திக்குத் தந்தான். பாதியில் இவன் நின்றான். அந்த உருவம் அவன் கண்முன் நின்றது.

ஒற்றைத் துகில் போதும். மற்றையதைக் கொண்டு உற்ற அந்தப் பறவையைப் பிடித்து விடலாம் என்று கூறினான்.

தான் கட்டி இருந்த வேட்டியைக் கையில் கொண்டான். தன்னை மறைக்க அவள் முந்தானையைக் கேட்டான். ஒரே புடவை; இருவருக்கும் உடுத்தும் துகில்

ஆகியது. இருவர் ஒன்று ஆயினர் என்று கூறினால் அதற்கு இது ஒரு புதுவழியாயிற்று; கூறை ஒன்றை உடுத்திக் கொண்டு அந்தப் பறவையை வலை வீசிப் பிடிப்பதுபோல் மற்றைத் துகில் கொண்டு வளைத்தான். அதனைக் கூரிய அலகால் கவ்வியது; காற்றாடி எனப் பறந்தது. பறவை அதனோடு அவன் உடுத்தியிருந்த உடையும் உடன் கட்டை ஏறியது.

அழுவதா சிரிப்பதா என்பது தெரியவில்லை. ஏய்த்து விட்டது அந்தப் பறவை என்பதைக் கண்டனர். உயரத்தில் பறந்தது; "மகனே! யான் கலியன்; உன்னைப் பிடித்து ஆட்டும் சனியன். பார் தோற்றுவிக்கச் செய்தவனும் நான் தான். உன் உடையைப் பறித்துக் கொண்டு உன்னைப் பதற வைப்பதும் நான்தான்" என்று கூறியது.

இது கலியன் சூழ்ச்சி; அதனால் தனக்கு ஏற்பட்டது வீழ்ச்சி என்பதை அறிந்தான். என் செய்வது? அவன் தெய்வ சாதியினன். வேலியே பயிரை மேய்ந்தால் வேலிக்கு ஒரு வேலியா போட முடியும்!

வயிறு எரிந்து வாய்க்கு வந்தபடி அவனை வைது தீர்த்தாள். "நீ நரகத்துக்குத்தான் போவாய்" என்று கூறினாள். அதுவும் இந்த இந்தத் தீமை செய்பவர் நரகத்துக்குச் செல்வார்கள் என்று குறிப்பிட்டு அந்த வகையை அவன் சார்ந்தவன் என்று குறிப்பிட்டாள்.

"அறம் பிழைத்தவர்கள், பொய் கூறியவர்கள், அருளைச் சிதைத்தவர்கள், மானம் கெட்டவர்கள், தெய்வம் இகழ்ந்தவர்கள், பிறர்மனை நயந்தவர்கள் இவர்கள் புகும் நரகத்தை நீ அடைவாய்" என்று சாபம் தந்தாள்.

பிழைகள் இவை என்று எடுத்துக் கூறினாள்; கொடுமை மிக்கவை இவை என்று குறிப்பிட்டாள். இது வஞ்சகம் செய்தது; ஏய்த்தது என்று கூறினாள்.

''நாட்டை இழக்கச் செய்தாய்; காட்டிலும் நிம்மதியாக வாழவிடவில்லை. இது மிகவும் கொடிது'' என்று கூறினாள்.

''முதலில் இந்த இடத்தை விட்டு அகல்வோம்''என்று அவனிடம் முறையிட்டாள்.

''தெய்வமே தீமை இழைத்தால் நாம் என்ன செய்ய முடியும்'' என்று கூறி வருந்தினாள். அடுத்து என்ன நடக்கும் என்று அஞ்சினாள்.

எங்காவது தங்க வேண்டும். என்ன செய்வது என்று கவலை கொண்டனர். அதற்குள் பொழுதும் சாய்ந்தது. பேய்க்கும் வழி தோன்றாத இரவு வந்து சேர்ந்தது.

இரவு தங்குவதற்கு ஒரு கூரை தேவைப்பட்டது. வன விலங்குகள் அவை அரசு புரியும் இடம். அரவுகள் ஊர்ந்து செல்லும் இடுக்குகள், முள்புதர்கள்; எங்கே உறங்குவது?

மண்டபங்கள் எழுப்பி மாநிலத்தை ஆண்ட அரசன் யாரோ ஒருவன்; அங்கு ஒரு பாழ் மண்டபம் அவர் களுக்காகவே விட்டு வைத்தான். இடிந்து விழுந்து சில தூண்கள் துணையாகத் தாக்குப் பிடித்துக் கொண்டு விழாமல் இருந்தது. இடி பாடுகள் கொண்ட கற்களால் எழுப்பிய கட்டிடம்; 'கூரை' இருந்தது மழை வந்தால் தடுப்பதைத் தன் கடமை என்று கருதுவதை மறந்து விட்டது. வெடிப்புகள் காலத்தின் வடுக்கள்; மானம் மறைக்கக் கந்தல் ஆடையும் சில சமயம் உதவுகிறது; வானத்தை மறைக்க இந்தப் பாழ் மண்டபம் நிலைத்து நின்றது.

''இந்த மண்டபங்கள் ஏன் பாழ்பட்டுக்கிடக் கின்றன?'' என்று கேட்டாள்.

''படிப்பாரற்று நூல்கள் சில செல்லுக்கு இரை யாகின்றன; அதுபோலத்தான் இவையும்'' என்றான்.

''மனித சஞ்சாரம் இல்லாவிட்டால் அனைத்தும் பாழ்தான். மானுடம் மதித்தால்தான் எதுவும் நிலைத்து நிற்கும்'' என்றான்.

''இந்த மண்டபங்கள் அரசர்கள் வாழ்ந்த பழைய சின்னங்கள்; இங்கே இருந்துதான் அவர்கள் பீடத்தில் இருந்து ஆட்சி செய்திருப்பார்கள்'' என்றான்.

''வரலாறு இது அதன் தனிச் சிறப்பு'' என்று அதன் பெருமையைப் பேசினான்.

அவர்கள் கண்முன் இந்த அரசர்கள் கண்ட போர்க் களங்கள் நின்றன. இவர்கள் மானம் வீரம் இவற்றைப் பேசிப் பகைமை கொண்டனர். தம்மைத் தாம் மாய்த்துக் கொண்ட நினைவுகள் நிழலாடின.

''மனிதன் அவன் தன்னை நேசிக்க மறந்து விட்டதால் அதன் விளைவால் நேர்ந்த நாசம் இது'' என்று கூறினான்.

இதைப் பற்றி எல்லாம் கேட்டுக் கொள்ள அவளுக்குப் பொழுது இல்லை; எங்கே தங்குவது? இரவு எப்படிக் கழிப்பது என்ற சிந்தனையில் ஆழ்ந்தாள்.

அந்த மண்டபம் அந்த இரவுக்கு அவர்களுக்கு நட்சத்திர விடுதியாக அமைந்தது. வானத்தில் நட்சத்திரங்கள் மின்னுவதை அங்கிருந்து காண முடிந்தது. அதனால் அதனை 'நட்சத்திர விடுதி' என்று கூறினாள். அங்கு அவளோடு சேர்ந்து நகைத்தான்.

தெய்வ கீதம் கேட்ட செவிகள்; 'மகர யாழ்' ஒலி கேட்டவள் அவள்.

''இசை பாடுவோர் இல்லையே'' என்று கேட்டாள்.

பழக்கம்; இது புதிய சூழல்; உறக்கம் அவள் காண முடியவில்லை.

ஏதோ புதிய நாதம் கேட்டது. இது என்ன புதிய 'பண்' என்றாள்.

''கொசு அது ரீங்காரம் செய்கிறது'' என்றாள்.

சில இசைப் பாடகர்கள் பாட்டை மறந்து விட்டுப் பண்ணில் லயம் காட்டுவது அவள் நினைவுக்கு வந்தது.

தேர்ந்த இசை கேட்ட செவிகள் இப்பொழுது இந்தக் கொடுமைக்கு ஆளாக நேர்ந்ததே என்று வருந்தினாள்.

அவள் தொலைக்காட்சி சங்கீதங்கள்; கூத்துகள் கண்டது இல்லை; கண்டிருந்தால் வருத்தப்பட்டிருக்க மாட்டாள். பழகிப் போய் இருக்கும்.

பல இசைகளைக் கேட்டுப் பழகி விட்டால் எல்லாம். இசை மயம் என்பதை அறிந்து கொள்ள முடியும். அவளுக்கு இது புது அனுபவம்.

மகர யாழ் கேட்ட தெய்வக் காதுகள் இந்தக் கொசுவின் சிள்ளொலி கேட்க நேர்ந்ததே என்று வருந்தினாள்.

அவனுக்கு என்ன கூறுவது என்பது தெரியவில்லை. ஆறுதல் கூற அவனுக்குக் கிடைத்தது இதுதான் ''பழைய வினை''என்றான்.

''விதி விதிப்பதை யாரும் கடக்க இயலாது'' என்று ஆறுதல் கூறினான்.

பாழ் மண்டபம் அதைப் பார்க்கும்தோறும் அவள் ஆழ் துயரில் அழுந்தினாள். நேற்று அவன் நிலை யாது? இன்று அவன் நிலை யாது? மாளிகையில் அவன் ஆளுமை அதை நினைத்துப் பார்த்தாள். மலர்ப் படுக்கை உடைய பள்ளி அறை அங்கே; இங்கே இடிப்பட்ட கற்கள் விரிக்கப் பட்ட அறை; கற்கள்மிக்க அறை. பள்ளியறையில்

வெளியே எத்தனை காவல்! இங்கே இது கல்லால் அமைந்த கல்லறை.

அல்லையாண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்சக் காவல் காத்து நின்றனன் இராமனின் தம்பி இலக்குவன்.

அந்தக் காட்டில் பன்னக சாலையின் வெளியே காவல் காத்திருந்தான் காகுத்தனின் இளவல் இலக்குவன்.

தரையில் படுத்துத் தலையணையின்றித் தனித்துத் தமயந்தி உறங்கும் காட்சியைக் கண்டான். அதைப் பார்க்கும் தோறும் அவன் உள்ளம் குமுறினான்; இந்த நிலைக்குத் தான்தானே காரணம் என்று புழுங்கினான். அவன் இவள் நிலை கண்டு கலங்கினான்.

அவள் அவனைப் பார்த்தாள். இருந்த புடவையும் பாதியாயிற்று. அது அவனுக்கு ஆடை ஆயிற்று. விரித்துப் படுக்கத் தன் முந்தானையாவது பிரித்துத் தரலாம் என்றால் அது ஏற்கெனவே பறிபோய் விட்டது. அவனுக்குக் கீழ் விரிக்க எந்தத் துப்பட்டியும் இல்லை. அணையில்லை; தான்தான் உண்டு; அவள் கை, அவள் கால்கள் அவனுக்குச் சாய்வு அணைகள் ஆயின. அதை நினைத்து அவள் கண்ணீர் சோர்ந்தாள்.

வீமன் ஒரே மகள்; குலத்துக்கு அவள் தீபமாக விளங்கியவள்; தாமம் தனக்குச் சூட்டியவள்.

விண்ணவரும் பெற வந்த மாலையை இவனுக்கு அளித்தாள். அவள் தரையே படுக்கையாக அவள் துயில நேர்ந்ததே என்று வருந்தினான்.

இந்த நினைவுகள் அவனை அலைக்கழித்தன. இந்த நிலை தொடரத்தான் வேண்டுமா? மண்டபங்கள் எத்தனை கிடைக்கும்? வழியில் இனி எங்கே தங்குவது? சோற்றுக்கு

வழியாது? அடுத்த வேளைக்கு என்ன செய்வது? ஆட்சி செய்யத் தெரியுமே அன்றி உழைத்துப் பழகியது இல்லை. அடிமையாகக் கிடந்தால்தான் மிடிமை தீரும். மடியில் பூனையை வைத்துக்கொண்டு எங்கே போவது; அவள் அவனுக்குச் சுமையாகப் பட்டாள். சுவையாக இருந்தவள் அவள் அவனுக்குச் சுமையாக மாறினாள்.

"இவள் எங்கே கேட்கிறாள். நிம்மதியாகத் தாய் வீடு செல்க என்றால் தத்துவம் பேசுகிறாள். கொள்கைகளை அடுக்குகிறாள். விளக்கங்கள் தருகிறாள். மனைவியின் மாட்சிகள் இவை என்று ஒப்புவிக்கிறாள். எனக்கு அவள் தேவைதான்; முதலில் அவளுக்கு அவள் தேவை; அதை நிறைவேற்றட்டும்".

"வெளிச்சம் வந்தால் அவள் எங்கே சொல்லிக் கேட்கப் போகிறாள்? போகாதே போகாதே என் கணவா என்று பாடப் போகிறாள். முதலில் அவளை விட்டுச் செல்வதுதான் தக்கது" என்று நினைக்கத் தொடங்கினான்.

நிழல் போல் இவனைத் தொடர்ந்து வந்த கலியன் புழுவாக அவன் மூளையைக் குழப்பினான். அவன் அவளோடு வாழக் கூடாது என்பது அவன் கோட்பாடு. அவர்கள் ஒன்றிய வாழ்வு கண்டு வயிறு எரிந்து வந்தான். பிரிப்பது அவன் வேளை. 'கூட்டு' என்பதற்கு வேட்டு வைப்பதே அவன் நாட்டம். அவனும் இவன் மனத் திரிபுக்குக் காரணமாக இருந்தான்.

நளன் கண்ணுக்கு ஒரு புதையல் கிடைத்தது; அது பொன் அல்ல; ஒளிவிட்ட கத்தி; அந்தக் கத்தியாக மாறியவன் கலியன். அதை எடுத்தான்; தன்னையும் அவளையும் பிணித்துக் கொண்டிருந்த உடை அதனைக் கிழித்தான். அறுத்தான்; இரு கூறாக ஆக்கினான். அவள்வேறு தான்வேறு என்று ஆயினான். 'விடுதலை'

அவளுக்கு விடுதலை என்று எண்ணினான். 'விடுதலை விடுதலை' என்று அவன் வாய் முணுமுணுத்தது.

இது கொடுமை; கணவனுக்காக அவன் மனைவி துயர்படுவது என்பது கொடுமை என்பதை உணர்ந்தான். அவள் சுகப்படட்டும் என்று முடிவுக்கு வந்தான்.

புத்தன் தன் மனைவியை விட்டுப் பிரிந்தான். அவன் பட்ட வேதனை அதற்கு ஈடே கூறமுடியாது. வெளியே செல்வான்; மறுபடியும் வண்ண நிலவை அவள் முகத்தில் காண்பான். கவலையற்ற அந்த முகம் சலனமற்ற வாழ்க்கை; துணிந்து பிரிந்தான். அவன் தேவன் ஆயினான்; உலகுக்கு ஒளி கூட்டினான்.

நளன் தமயந்தியைப் பிரிந்தான். அவன் பட்ட வேதனை எழுத்தில் எழுத முடியாது. மொழி உதவும் நிலையில் இல்லை. ஒருகால் ஏகுவான். மறுமுறை வந்து மீள்வான்; அலை மோதினான்.

அவள் விழித்து எழுவதன் முன் கழித்து விடுவது என்று துணிந்தான். போயினான்; நடந்தான்; நடந்து கொண்டே இருந்தான். அந்தப் பாழ் மண்டபத்தில் நடு இரவில் கொடிய கானகத்தில் அவளைத் தனியே விட்டுச் சென்றான். உண்மையில் இதைவிடக் கொடுமை வேறு இருக்க முடியாது. ஏன் இவன் புத்தி தடுமாறியது? ஏன் இந்த முடிவுக்கு வந்தான். அவனுக்கே கிடைக்காத விடை அது.

தெய்வங்களிடம் முறையிட்டான். "வீமன் தன் மகளை நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று செயலற்றுப் பேசினான்.

அரசியலில் முடிவு எடுப்பதற்குக்கூட தெய்வங்களை நம்புகின்றனர் ஒரு சிலர்; காரணம்? அவர்களுக்குத் தனிப்பட்டவர்கள் மீது உள்ள பற்றுகள்; நெறியில்

நம்பிக்கை இல்லாதவர்கள் தெய்வத்திடம் முறையிடுவது வழக்கம்.

தன்னம்பிக்கை அவன் இழந்துவிட்டான். தான் இருந்து அவளுக்கு உதவ முடியாது என்பதை அறிந்தான். தான் இல்லாமல் இருப்பதுதான் அவளுக்கு நல்லது என்று நினைத்தான். அவளை வீமன் மகள் என்று முத்திரை இட்டு அவளை நித்திரையில் பிரிந்தான். ''காதல் அன்பு உடையவளைக் காரிருளில் கைவிட்டு இன்று யாரோபோல் நீங்குகின்றேன் யான்'' என்று கூறினான்.

முதியவள் அல்லள் அவள். பதி அடைந்து செல்வதற்கு. இளநங்கை அவளை விட்டுச் சென்றால் அவளுக்குப் பாதுகாப்பு இல்லை; தண்ணளியான் என்று பேசப்பட்டவன் இன்று அருள் நீங்கிச் செல்கின்றான். உயிர் போன்றவள்; அவளை எப்படித்தான் விட்டுச் செல்ல மனம் வந்தது! கசப்பு ஏற்பட்டு வசவு பேசி அவளை விட்டு அவன் நீங்கவில்லை; ஈர்ப்பு அவள் வார்ப்பு; அந்த நிலையில் அவளை விட்டுச் சென்றான். இடையிருளில் கானகத்தே அவளை விட்டுச் சென்றான். இது வியப்புக்கு உரியதுதான்.

இவன் மட்டும் எந்த ஊறும் இல்லாமல் ஏகினான் என்று கூற இயலாது. கூர் இருளில் நகம் சிதைய நடந்தான்; பரல் கற்கள் அவன் நகத்தைச் சிதைத்தன. அரச மகள் பட்டத்து அரசி அவளை விட்டுவிட்டு வெங்கானகத்தில் மனம் வெந்து சென்றான். இது அவன் நிலை.

விழித்து எழுந்தாள், கைகளால் தடவினாள்; அடுத்து இருந்தவன் அங்குப் படுத்துக் கிடந்தவன். உடுத்த துகிலோடு வெளி ஏறினான்.

அங்குத் தேடினாள்; அவன் அவள் கையகப் பட வில்லை; ''எங்கே சென்றாய்?'' என்று வாய்விட்டுக்

கேட்டாள். பதில் கிடைக்கவில்லை. நீலமலர் போன்ற அவள் கண்கள் முத்துகளை உதிர்த்தன; கண்ணீர் விட்டாள். கொடியிடையாளாகிய அவள் துவண்டாள்; மனம் மருண்டாள்.

''மன்னவனே!'' என அழைத்தாள். மாற்றம் அவள் கண்டிலள்; ''இஃது என்னே என்னே'' என்று அங்கலாய்த் தாள்.

தரைதான் அவர்கள் படுத்த படுக்கை; அதைத் தடவிப் பார்த்தாள்; எவ்விடத்திலும் அவனைக் கண்டிலள்; 'ஐயகோ' என்று கதறி அழுதாள்; விழுந்தாள்; வீமன் மகள் கொடிபோல் துவண்டு விழுந்தாள்; வேடன் விடும் அம்புக்கு அலறும் மயில்போல் நாற்புறமும் ஓடினாள். அவள் கண்ணீர்த் துளிகள் அவள் காதில் அணிந்திருந்த குழைகளை நனைத்தன.

வான் மேகமும் மின்னலும் வெறும் நிலத்தில் விழுந்ததுபோல் கூந்தல் சரிய விழுந்தாள். மேகம் போன்றது கூந்தல், மின்னல்போல் விளங்கினாள் தமயந்தி.

ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும் என்று அன்றே நளன் கூறிச் சென்றான். செயலற்றுப் போகும் நிலையில் கடவுளுக்கு அழைப்பு விட்டான்; ஒரு சிலர் இந்த நாட்டைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று செயலற்றுப் பேசுவது போலத் தமயந்தியைத் தெய்வங்கள் காக்க வேண்டும் என்று முறையிட்டான்.

இந்த நாடு சுதந்திரம் பெற்றுவிட்டது என்றால் ஒரு பெண் நடு இரவில் தனியாகப் போக வேண்டும். அவளுக்கு எந்த வலிப்பும் யாராலும் வரக் கூடாது என்று கூறினார் தேசப்பிதா.

எந்தக் காலத்திலும் இந்தத் திருநாட்டில் பெண் தனித்துச் சென்றது இல்லை.

தமயந்திக்கு முதல் வேதனை; அதிலிருந்து தப்பியது அவள் மாபெரும் சாதனை.

சாலையைப் பார்த்து நடக்கவில்லை; என்றாலும் மெதுவாக இடித்துவிட்டுப் போகிற பேருந்துகள் உண்டு; இடித்தது யார் என்று கூடத் தெரியாது; விபத்துகள் என்று பேசும் காலம் இது.

இவள் குகைக் கோயிலைக் கண்டாள்; அது வெளிநாட்டினர் சுற்றி வரவும், கண்டு களிக்கவும்; அங்கே இருந்தது ஒரு மலைப்பாம்பு.

அது ஒரு யானையை விழுங்கிவிட்டு அளவுக்கு மீறி லஞ்சம் வாங்கி அகப்பட்டுத் திண்டாடுபவரைப்போல அதனை விழுங்க முடியாமல் வேதனைப்பட்டுக் கொண் டிருந்தது. பசித்து உண்ட உணவுதான் என்றாலும் பாறாங் கல்லை விழுங்கிவிட்டு அதனை உள்ளே தள்ள முடியாத நிலை.

இவளாக வந்து விழுவாள் என்று அது எதிர்பார்க்க வில்லை. பாதி உடம்பு உள் சென்றது; கொங்கைக்கு மேல் அம்மங்கை வெளியே தோன்ற அது விழுங்கியது; அது பெண் என்பதை அறிய முடிந்தது.

யாரிடம் முறையிடுவது? அவளுக்குப் பழக்க மானவன் நளன்தான். ஆதிமூலமே என்று அழைத்தது அன்று முதலை வாய்ப்பட்ட களிறு. திருமால் கையில் சக்கரம் கொண்டுவந்து காத்தான். முதலை மடிந்தது; யானை பிழைத்தது.

நளன் திருமால் அல்ல; இவள் குரல் அவனுக்குச் சென்று அடைய வாய்ப்பு இல்லை. அதைப் பற்றி அவள் சிந்திக்கவில்லை.

"அரவுக்கு இலக்காகி நிற்கின்றேன்; உன் தோள் வலியால் விலக்காயோ" என்று முறையிட்டாள். அவன்

கண்டால் அதைக் கண்டதுண்டமாக வெட்டிப் பிளந்து இருப்பான்.

நளன் வந்தபாடு இல்லை; பயணத்துக்காக வந்து வழி அனுப்பக் கூடாதா என்று ஏங்கினாள். வெளியில் கைநீட்டி வண்டிபோகும் வரை 'டாட்டா' சொல்ல அவள் முயற்சித் தாள். அவனுக்கு எப்படித் தெரியும் இப்படி அவள் ஒரு பாம்பின் வாயினுள் அகப்படுவாள் என்று.

தான் அவனைக் காணவில்லை. மக்களை நினைத்துக் கொண்டாள்; "நீங்களாவது அவரைக் காண்பீரோ!" என்று இறுதிச் சொற்கள் பேசினாள். பிள்ளைகளாவது தந்தைக்கு ஆறுதலாக இருக்க வேண்டும் என்பது அவள் இறுதி விருப்பாக இருந்தது.

கை கூப்பி அவள் உள் செல்லப் புறப்பட்டாள். வண்டி நகரப் போகிறது; கதவுகளைத் தாளிடப் போகிறாள். யானை இருந்து தடுத்தது. அவள் சாகவில்லை; உயிருக்கு ஊறு நிகழவில்லை. "நாயகனே! வந்து என்னைக் காப்பாற்று" என்று உரக்கக் கூவினாள்.

பெண்ணின் குரல் அதற்கு ஒரு தனித் தன்மை இருந்தது. அழுகுரல் அது என்பதை வேடுவன் ஒருவன் அங்கு வந்தவன் அறிந்தான். காட்டில் ஒரு குழலோசையாக அது அவன் செவிமாட்டில் விழுந்தது.

குரல் வந்த திக்கு நோக்கி அவ்வேடுவன் விரைந்தான். கூப்பிய கரங்களோடு மங்கை ஒருத்தி அங்கை எடுத்து அழைப்பதைக் கண்டான்.

இதுவரை எந்த அழகியும் அவனைக் கரங்குவித்து அழைத்தது இல்லை.

பாம்பு அவளை விழுங்குவதை அவனால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. கையில் வைத்திருந்த வில்

அதில் அம்பினைத் தொடுத்தான். அந்தப் பாம்பின் மீது விடுத்தான்; அதைப் படுத்தான்; அவளை எடுத்தான்.

தப்பித்தவள் அவனுடன் பேசாமல் சென்று இருக்கலாம். அது அவன் கடமை; அவளைக் காத்தான். இவள் வாய் வைத்துக் கொண்டு சும்மா இருக்கவில்லை.

''அபயம் என்று அழைத்த என் உயிரை நீ காத்தாய்; உனக்கு யான் என்ன கைம்மாறு செய்வது? இதற்கு எது தந்தாலும் ஈடு ஆகாது'' என்று கூறினாள். உயிரைக் காத்தவனுக்கு உயர் மொழி கூறினாள். அவன் மனம் குளிரும் என்று எதிர்பார்த்தாள். அது அவனுக்குச் சூட்டை எழுப்பியது; கிளர்ச்சியை ஊட்டியது.

''அவள் எது கேட்டாலும் தருவாள்'' என்ற எண்ணம் அவனுக்கு உண்டாகியது. அநியாயமாக அந்த அரவு தின்று விழுங்கி இருக்கும். அவளை முழு வடிவில் அவன் காத்தான்.

ஏன் அவள் தன்னை அவனுக்கு அளிக்கக் கூடாது? அவன் அவளை விழுங்கப் போவது இல்லை. கூடி இன்புற விழைந்தான். அவள் அவனுக்குப் பழைய மொந்தைக் கள்போல் காணப்பட்டாள்.

''ஏடி என்னுடன் வாடி'' என்று அழைத்தான். ''மோடி கிறுக்குதடி பழைய மொந்தைக் கள்போல்'' என்றான்.

''கண்ணாலம் செய்து கொண்ட பெண்ணை அண்ணா நீ கருதலாமோ'' என்று அலறி அழுதாள்.

அவன் வேடுவன்; இரக்கம் என்பது அறியாதவன். வேட்கை மீதூர்ந்த நிலையில் எதுவும் கேட்கும் நிலையில் இல்லை. புறா தப்பித்துச் செல்கிறது என்பதால் அதனைத் தொடர்ந்தான்.

மயில்போல் இருந்த அவள் ஓடினாள்; ஓடினாள்; வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள். உயிர் தப்ப வழிநாடினாள். தூறுகளில் சிக்கினாள். இனி ஓடுவதற்கு இடமே இல்லாமல் போய்விட்டது. கண்ணீர் விட்டுக் கதறினாள். அழுகை அவனை அமைதிப்படுத்தவில்லை.

புலி தொடரச் செல்லும் சிறுமான் போல் ஓடியவள் வேங்கையாக மாறினாள். பாயும் புலியாக அவனைச் சினந்து நோக்கினாள். வீரம் அவள் விழிகள் பேசியது; கனல் தெறித்தது; அவனை எரித்தது. சிவன் எரித்த திரிபுரம் ஆயினான்; மன்மதன் சாம்பல் ஆயினான். வில்லும் அம்பும் தவிர வேறு நினைவுச் சின்னங்களை அவன் விட்டுச் செல்லவில்லை. மாயமாய் மறைந்து சாம்பல்தான் மிஞ்சியது.

உயிரைக் காத்தவன்தான்; என்ன செய்வது? அவள் மானத்தைத் தொட்டான். 'தற்காப்பு' அவளுக்கு உண்டு என்பது அறியாதவன், கற்புக்குப் காப்பு அவளிடம் இருந்தது; 'காப்பீடு' என்று பேசும் ஆதரவு நிலையில் அவள் இல்லை. கேட்பாரற்று இருக்கும் இடம் அது. கொள்ளை அடித்தவரை நன்மை, அவன்தான் தவமுனிவன் அல்ல என்பதைக் காட்டிக் கொண்டான்.

அவனிடமிருந்து தப்பி மீண்டு வெளியே வந்தாள். ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் இடையே காடு ஒன்று இருந்தது. அதை விட்டு வெளியே வந்தால் எந்த நாட்டையாவது அவள் அடைய முடியும். குழப்பம் தேர்தல் முடிவு வரைதான்; பின்பு கரை சேர முடியும்; நிலையான ஆட்சியைக் காண முடியும்.

வழிப் போக்கர்கள் யாராவது வருவார்களா என்று எதிர்பார்த்தாள். வணிகம் செய்யும் வாணிபன் ஒருவன் அங்கு வந்தான். இந்த வடிவழகியைச் சந்தித்தான்.

அவளிடம் பேசாமல் எப்படிச் செல்வது? பேசுவதற்கு அவனுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

தனித்து ஒரு பெண் இருக்கிறாள் என்றால் அவள் பின்னால் ஒரு கதை இருக்கத்தான் செய்யும். அதைக் கேட்டு அறிவதில் அவனுக்கு ஒரு சிறு விருப்பு; மற்றும் தன்னால் ஏதாவது உதவி செய்ய முடியுமா என்ற நல்ல எண்ணமும்; அதனால் அவளிடம் பேச முற்பட்டான்.

அவளும் அவனை நாடிவந்தாள். கட்டுச் சோறு இருக்கும். அதைக் கேட்டுப் பெறலாம் என்பதற்காக அல்ல; வழித்துணைக்கு அவ்வணிகன் உதவுவான் என்பதால் அவனிடம் நெருங்கினாள்.

புதரில் சிக்கிக் கிழிபட்ட புடவை; சிதறிக் கிடந்த மயிர்முடி; உடம்பு எல்லாம் புழுதி. அழுது அழுது வற்றிப் போன அவள் கண்கள்; அழுக்குப் படிந்த தோற்றம்; ஏதோ ஒரு இடரிலிருந்து தப்பித்து வந்தவள் போல் காணப் பட்டாள்.

அவன் புரிந்து கொண்டான்; வாலிப மங்கை; எவனோ வம்புக்கு இழுத்து இருக்கிறான்; தப்பி வந்து இருக்கிறாள் என்பதை அறிந்தான்.

அவளிடம் என்ன பேசுவது? பேசுவதற்கா கேள்விகள் இல்லை.

"நீ யார்? எந்த ஊர்? சாதி, குலம் அவள் சரித்திரம் இவற்றைப் பற்றிக் கேட்டான். "எக்குலத்தாய்? யார் மடந்தை? யாது உன் ஊர்? யாது உன் பேர்? நெக்கு உருகி நீ இங்கு வந்து சேர்வதற்குக் காரணம் யாது? இவற்றை எடுத்துக் கூறுக" என்ற வினாக்கள் தொடுத்தான்.

தேவையான விடையை அவள் அவனுக்குத் தந்தாள்; "விதி அதன் விளைவு என்று தொடங்கினாள். அதில் பல செய்திகள் அடங்கின. "மன்னவன் என்னைத் தன்னந்

தனியாக விட்டுச் சென்றான் அன்னவனைத் தேடி அலைகின்றேன்'' என்றாள்.

இவன் கேட்ட வினாக்கள் அத்துணைக்கும் விடை இது ஆகும். பெருவழியில் அவர்கள் சேதி நன்னாட்டை அடைந்தனர்.

அதற்குமேல் அவன் துணை அவளுக்குத் தேவைப்படவில்லை; சுமையை இறக்கி வைத்துவிட்டு அவன்தான் ஏந்தி வந்த வணிகச் சுமையோடு சென்றான். வழித்துணைக்கு விழியழகி அவனுக்கு; அவளுக்கு அந்த வணிகப் பெருமகன். அவன் பலமூட்டைகளை வழியில் அவிழ்த்துவிட்டான். வணிக அனுபவங்கள் அவள் கேட்க விருப்பம் இல்லை; என்றாலும் அவனால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அவன் தன் குலப் பெருமையைப் பேசி அவளுக்கு அவன் தன் சாதனைகளைக் கூறி வந்தான். இதைப்போல் பலருக்கு அவன் உதவி செய்ததையும் எடுத்துக் கூறினான். ஒரு நாளும் தனி வழியே போக வேண்டா; யாராவது கூட்டுச் சேர்த்துக் கொண்டால்தான் வெற்றி என்று பேசினான். ''போகும்போது நாம் என்ன எடுத்துக் கொண்டு போகப் போகிறோம்'' என்று தத்துவம் பேசிவிட்டு அவளிடமிருந்து விடைபெற்றான். அனுபவம் அதை அவள் போகும்போது எடுத்துச் சென்றாள்.

நாற் சந்தியில் அவள் விடப்பட்டாள். இவள் ஒரு விசித்திரமான பெண்ணாக விளங்கினாள். புடவை அறு பட்ட நிலை; முற்றுப்புள்ளி வைக்காமல் நீண்ட தொடர் வாக்கியமாக விளங்கிய கண்ணீர்; அது எப்பொழுது நிற்கும் என்று தெரியாத நிலை; துயர் அவளைக் கவ்வி இருந்தது. பார்த்தாலே பரிதாபத்துக்குரியவள் என்ற முத்திரை குத்தப் பட்டவளாய் இருந்தாள்.

பார்த்தவர் கேட்டவர் கிசுகிசுத்துப் பேசியவர் இப்படி அங்கங்கே கூடிப் பேசினார்கள் விசாரித்தவர் சிலர்.

விசனத்தை விவரமாக அறிந்தவர் சிலர். அநாதை இல்லத்தில் சேர்க்கப்படத் தக்கவள் என்று முடிவு செய்தவர் பலர். இந்த மாதிரி சரித்திரம் படைக்கும் தரித்திரர்களுக்கு என்றே கட்டப்பட்ட இல்லங்கள் அவை.

சேதி நாட்டு அரசிக்குச் சேதி எட்டியது. ''பாவம் ஒரு பெண்; பார்த்தால் பசி தீரும்; எந்தப் பசி? அதற்கு விளக்கம் இல்லை. அரசமகள்போல் இருக்கிறாள். அநியாயமான அழகு அவளிடத்தில் இருக்கிறது. கட்டிக் கொண்டவள் போல் இருக்கிறாள். கன்னி என்று அவளைக் கூற முடியாது; அது கழித்தவள்; கூட்டலாகக் குழந்தைகளும் இருக்கலாம். பறி கொடுத்தவள்போல் தறி கெட்டு நிற்கிறாள்'' என்று சென்று கூறினர்.

''அவள் எங்காவது போய்விடப் போகிறாள்; அவளை அழைத்துவா'' என்று தன் சேடி ஒருத்தியைச் சேதி அரசி அனுப்பி வைத்தாள்.

அரசி முன் அவள் அழைத்துச் செல்லப்பட்டாள்; சென்றதும் அரசியின் அடிகள் இரண்டில் விழுந்து புரண்டு அழுதாள்.

அவளை எடுத்து நிறுத்தினாள். ''கண்ணீர் துடைத்துக் கொள்'' என்றாள். ''உன் துயரக் கதையைக் கூறுக'' என்றாள்.

விரித்துக் கூறச் சொற்கள் தேவைப்பட்டன. அவளுக்குச் சொற்கள் போதவில்லை.

கதையைச் சொன்னால் அவர்கள் படமா எடுக்கப் போகிறார்கள். செய்தி மட்டும் சொன்னால் போதும் என்று முடிவு செய்தாள்.

''என்னைத் தனியே வனத்தில் இட்டுச் சென்று விட்டான் எம் தலைவன். அவனைத் தேடிக் காணாது அலமருகின்றேன்'' என்று கூறினாள்.

''இந் நகர்க்கு வந்தேன்; இது என் வருகை'' என்று கூறினாள்.

அவள் அடைந்த துயரை முற்றும் அறிந்த அரசி ''உன்னவனைத் தேடித் தருகிறோம்; அவன் வரும் வரையும் என்னவளாக இங்கேயே இரு'' என்று பாசத் தோடு பேசினாள்.

மகள் தாய் உறவு அங்குத் தோன்றி மலர்ந்தது. தாய் வீடு சேர்ந்த நிறைவு அவளுக்குக் கிடைத்தது. இழந்த பொருளை உழந்து தேடுவது; அங்கிருந்தால்தான் அவனைக் காண முடியும் எனக் கருதினாள். அங்கு வீசும் காற்று அவனைப் பற்றிய செய்தி கொண்டு வரும் என்று அதைச் சுவாசிக்கக் காத்திருந்தாள்.

தன்னைப் போலவே அவனும் அதே சேதி நாட்டுக்கு வரக் கூடும் என்ற சிறிய நயப்பும் அவள்பால் அமைந்து இருந்தது. பாதுகாப்பான பெட்டகம்; அங்குத் தங்குவது தான் தக்கது என்று முடிவு செய்தாள். அடுத்தது என்ன? அவளுக்கே விளங்காமல் இருந்தது.

பெற்றவர்களுக்குச் செய்தி எட்டியது. மக்கள் இரு வரையும் அழைத்துச் சென்ற மறையவன் மன்னன் மகள் காட்டு வழியே தன் மணாளனுடன் சென்றாள் என்பதைத் தெரிவித்தான்.

அந்த வேதியனை விதர்ப்பன் அழைத்தான். ''நீ என் மகளைத் தேடித் தருக'' என்று கூறிப் பணித்தான்.

அந்தணன் வழிச் செலவுக்கு வாங்கிக் கொண்டு கட்டுச் சோறுடன் புறப்பட்டான். சூரியன் அவன் ஒளிக் கதிர்கள்படும் இடம் எல்லாம் சென்று பார்த்து அலுத்தான்; அவன் சென்று தேடாத இடமே இல்லை. அவன் இறுதியில் சேதி நாட்டை அடைந்தான். அங்கு அவளைப் பற்றிய செய்தி கிடைக்குமா என்று தேடினான்.

ஊரவரை விசாரித்தான்; யாராவது புதியவர் அங்கு வந்து வதிகின்றாரா என்று விசாரித்தான்.

“நேரே அரசியின் அந்தப்புரம் செல்க! அங்கு நீ சொல்லும் ஒரு புதுப்பெண் தங்கி இருக்கிறாள். கட்டியவன் நடுக்காட்டில் விட்டுச் சென்றான் என்ற கட்டுரை கூறியவள் அவள்; அங்குச் செல்க” என்று சொல்லி அனுப்பினர்.

மாளிகை சென்றான். மாவிந்த நகர் தலைவன் நளன் அவனை மணந்தவள்; தணந்தவள்; அங்கு இருந்ததைக் கண்டான். வீமன் மகள்; கொடிபோல் இருந்த கோமகள் அவளைக் கண்டான் “மகளே!; என்று கதறினான். அவன் அவலத்தை அவன்விட்ட கண்ணீரில் காட்டினான். அவள் ஓடோடி வந்தாள். நாடி அவன் காலடிகளில் விழுந்து வணங்கினாள். அவன் கால்களைத் தன் கண்ணீர்த் துளி களால் கழுவினாள். குமுறிக் குமுறி அழுதாள்; அவனைத் தொழுது வணங்கினாள்.

அவர்கள் மேலும் பேசி அறிவதற்கு முன் பேரரசி அங்கு வந்து சேர்ந்தாள். இந்தப் புதுமையைக் கண்டாள்.

அந்தணன் அறிவித்தான்; “இவள் உன் மகள்” என்றான்.

அது அவளை வியப்பில் ஆழ்த்தியது. அவள் தன் தங்கை மகள் என்பதை அறிந்தாள். உருக்குலைந்த நிலையில் அவளால் அறிந்து கொள்ளமுடியாத நிலையில் இருந்தாள்.

மணத்தில் அவளைச் சந்தித்தது. அன்று அவள் மின்னல் கொடியாக இருந்தாள். இன்று பின்னக் கணக்காக மாறிவிட்டாள். தாய்மை அடைந்தவள்; காயாக இருந்தவள் இப்பொழுது கனியாக மாறினாள். அதனால் அடையாளம் காணமுடியாமல் போய்விட்டது.

அழுதுஅழுது அந்த இடத்தை அவர்கள் அவலப் படுத்தினர். தமயந்தி அழ அந்தணனைத் தொழ சேதி யரசியும் ஆறுதல் கூறமுடியாத நிலையை அடைந்தாள்.

கணவனைக் கண்டு எடுத்து அவனை அவளோடு சேர்ப்பது என்று கொண்டிருந்தாள். இனி அவள்தன் மக்களைப் பார்த்தாவது மனம் தேறட்டும் என்று நினைத்தாள். சேதி அரசனும் அதுவே தக்கது என்று அறிவித்தான்.

விதி பிடர் பிடித்து உந்த அவர்கள் வாழ்க்கை சிதைந்தது. இனி அவள் தந்தைபதிக்குச் செல்வதே தக்கது என்று அவ் அந்தணனோடு அவளைச் சேர்த்து அனுப்பி வைத்தனர்.

ஊரவர் திரண்டனர். படம் எடுக்க வந்த கூட்டம் அதை முடித்துக் கொண்டு திரும்புவது போல் அவள் செயற்பாடு இருந்தது. அவளை வழி அனுப்ப ஊர்த் தொண்டு கிழவர்களைத் தவிர குண்டு மனிதர்கள் வந்து கூடினர். ஆடவரும் மகளிரும் திரளாக நின்று வழி அனுப்பினர். அவள் சோகக் கதை அதைத் தொடர்ந்து பேசினர்.

அவள் அனுபவங்கள் அவள் உள்ளத்தை நிரப்பின. அன்பும் பாசமும் பரிவும் கொண்ட ஊர் மக்களை அவள் நினைத்துப் பார்த்தாள். அவர்கள் காட்டிய பாசத்தை அவளால் மறக்க முடியவில்லை. விதி காட்டும் வழி என்று வீதி வழியே நடந்து சென்றாள். நகரத்தவர் அவளை வழி அனுப்பி வைத்தனர். அவளை வழி அனுப்ப நிறைந்த கூட்டம் நிலை கொள்ளவில்லை. கோயில், அந்தப்புரம் வாயில் எங்கும் மக்கள் நிறைந்தனர்; ''அவள் மக்களையும் கைவிட்டுக் கணவனுடன் காட்டுக்குச் சென்ற உத்தமி'' என்று அவளைப் பற்றிப் பேசினர் ''மக்களைவிட கணவனை மதித்தவள்'' என்று பேசினர்.

விதர்ப்பன் நகர் ஆகிய குண்டினபுரத்தைத் தமயந்தி சென்று அடைந்தாள். ஊரவர் திரண்டனர். வழியில் நின்று சந்தித்தவர், அவளை நினைத்து அழுது தெருவைக் கண்ணீர் வெள்ளத்தில் நனைத்தனர். "மகளே உனக்கா இந்த கதி வரவேண்டும்" என்று தேவையற்ற கேள்வியைக் கேட்டனர்.

தந்தை மகளைத் தழுவிக் கொண்டான். உணர்ச்சிப் பெருக்கால் அவர்கள் உரை தவிர்த்தனர். விட்டுவிட்டு அவள் கண்ணீர் சொட்டு சொட்டாக விட்டாள்.

தாய் அவளைப் பார்த்தாள்; மகள் தன்னுடன் இருப்பதை மறந்தாள். அவள் பாழ் மண்டபத்தில் தனியாளாக விடப்பட்ட நிலையில் அவள் பட்ட வேதனையை எண்ணிப் பார்த்தாள். அந்த நினைவு அவளால் தாங்க முடியவில்லை; "ஓ" என்று கதறி அழுதாள்.

"பனி இருளில் பாழ் மண்டபத்தில் உன்னைப் பற்றி நினைக்காமல் உன்னைவிட்டு அகன்றபோது தனியே நின்று நீ என்ன நினைத்தாய்? என்ன செய்தாய்?" என்று தனிமைப்பட்டுப் புலம்பினாள். அந்த அவலக் காட்சி அவளை அலைத்தது.

## 3

# கலி நீங்கு காண்டம்

வீமன் திருநகரில் மக்களோடு தமயந்தியும் போய்ச் சேர்ந்தாள். மனைவி மக்களைப் பிரிந்த மன்னன் நளன் நாடோடியாகத் திரிந்தான்.

அவன் முதல் சந்திப்பு அவனைப் பரோபகாரியாக ஆக்கியது.

தீயவர்க்கும் நன்மை செய்யும் சந்திப்பு ஏற்பட்டது.

காட்டுத் தீயில் அரசு அரவு ஒன்று அகப்பட்டுக் கொண்டது. நளனைக் கண்டதும் அவ் அரவு ''மன்னா உனக்கு அபயம்'' என்று அரற்றியது. வாய்விட்டுக் கத்தியது. கூவி அழைத்தது.

'அபயம்' என்ற குரல் கேட்டு ஓசை வந்த திசை நோக்கிச் சென்றான்.

நெருப்பில் அந்தப் பாம்பு சிக்கி அவதிப்பட்டது; யார் எது என்பதைப் பற்றி அவன் சிந்திக்க வில்லை. நல்லவனா கெட்டவனா என்ற பேதம் பார்த்துக் கொண்டிருக்க வில்லை. நஞ்சு உடைய நாகம் என்று தெரிந்தும் அதனைக் காக்கத் துணிந்தான். நெருப்பினின்று அதனை எடுக்க விரைந்தான்.

பெரு நெருப்பு; அலைகடல் போல் பரவிய வண்ணம் இருந்தது. ''செந்தீ'' அது சுடாமல் இருந்தால் பார்க்கத் தக்கதுதான். அது சுட்டு எரிப்பதால் அதனைக் கட்டுக்குள் கொண்டு வரவேண்டிய தேவை ஏற்பட்டது.

நெருப்புக் கடவுள் இவன் விருப்புக்கு உதவ வரம் தந்திருந்தான். வேண்டும்போது உதவுவேன் என்று கூறி இருந்தான். தாண்டும் வழி அவனுக்குத் தேவைப்பட்டது. ''சற்றே அடங்கி இரு பிள்ளாய்! அந்த அரவினை யான் காத்தல் வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான். கடல் அலைகள் அடங்குவதுபோல் நெருப்பு அடங்கியது; விலகியது.

அரவு அவனுடன் உரையாடியது; ''ஐயா என்னை இங்கு இருந்து எடுத்துவிடு. வேதமுனிவன் இட்ட சாபத்தால் இந்த ஏதம் எனக்கு நிகழ்ந்தது; இந்தக் கொடிய

காட்டில் நெடிய நெருப்பில் சிக்கித் தவிக்கின்றேன். என்னை எடுத்துவிடு'' என்று இரந்து கேட்டது.

சோகக் குரல் கேட்டு வேகமாகச் சென்று அதனைக் காக்கத் துணிந்தான். அதனை அவன் நெருப்பினின்று எடுத்தான். சற்றுத் தள்ளி அதனைவிட நினைத்தான்.

''நீ பத்து அடி நடக்க; பின் என்னை விடுக்க'' என்று கேட்டுக் கொண்டது.

நெருப்பை விட்டுப் பத்து அடி நடந்தான். காலால் பத்து அடிகள் எடுத்து வைத்துப் பின் அதனைத் தரையில் விட்டான்.

நன்றி கூறுவதற்கு மாறாக அது கொடுமை செய்தது; அவனைக் கடித்தது; நஞ்சு உடம்புக்கு ஏறியது. அவன் சாகவில்லை; தெய்வ வரம் அவனுக்குத் துணை செய்தது. மற்றும் அவன் சாக அது கடிக்கவில்லை. வேகமாகச் செய்த செயல் விளைவு; அவன் தப்ப நினைக்கும் முன் இந்தத் தவறு அது செய்து முடிந்தது.

நெடியவன் குறுகியவன் ஆயினான். திருமால் வாமனன் ஆயினான். நீண்ட தோள்களை உடைய அரசன் குறுகிய தோளினன் ஆயினான். ஆள் உருமாறினான்; கருநிறத்தினன் ஆயினான்; பேரரசன் சாமானியன் ஆயினான். பாட்டாளியின் இனத்தவன் ஆயினான்.

ஏன் தன்னை இது இவ்வாறு மாற்றியது. இந்த வடிவில் சென்றால் காதலிகூட தன்னைக் கருத்தில் கொள்ள மாட்டாள். எப்படி தமயந்தியின் முகத்தில் விழிப்பது. பிள்ளைகள் தன்னை அடையாளம் காண முடியாத நிலையை எண்ணிப் பார்த்தான்.

''இதுதான் நன்றிக் கடனா?'' என்று கேட்டான்.

"நான் ஒன்று கூறுகிறேன் கேள். கார்க்கோடகன் என்பது என் பெயர். நான் கடித்ததால் நீ கருநிறம் பெற்றாய்; இது என் பல்லுக்கு ஏற்பட்ட வலிமை; உனக்கு நன்மை செய்யவே உன்னை மாற்றினேன். நீ உருமாறுவது உனக்கு நன்மை தருவது ஆகும். 'நளன்' என்று யாரும் உன்னைக் காணமாட்டார்கள். நீ மறைந்து வாழ முடியும். உனக்கு இது நன்மை" என்றது.

"இப்படியே இருந்தால் என் எதிர்காலம்?"

"காலம் மாறும்; கலி நீங்கும்; அப்பொழுது உன் துயர் அகலும்; வேண்டும்போது நீ பழைய உருவை அடைவாய்" என்று கூறியது.

அழகிய ஆடை ஒன்று தந்தது. "இந்த ஆடையை நீ எப்பொழுது உடுத்துக் கொள்கிறாயோ அப்பொழுது நீ பழைய உருவைப் பெறுவாய்" என்று கூறியது.

"நீ தோள் குறைந்துள்ளமையால் உன்னை 'வாகுவன்' என்று கூறுவர். அதுவே நீ ஏற்கக் கூடிய பெயரும் ஆகும். 'வாகு' என்றால் தோள் என்பது பொருள் ஆகும். தோள் சிறுமை கருதி உன்னை வாகுவன் என்றே அழைப்பார்கள், இது உனக்கு உதவும் பெயராகும்" என்றது.

நளன் புதிய மனிதனாக மாறினான். தோள்வலி குறைந்தவனாக அவன் மாறினான். எந்தப் பெண்ணும் அவனைக் காதலிக்கமாட்டாள். அந்த வகையில் அது அவனுக்குத் தற்காப்பாக அமைந்தது; எளியன் என்பதால் எவரும் அவனை ஏவல் தொழிலுக்கு ஏற்க இசைவர் காவலன் ஏவலனாக மாற இது அவனுக்கு உதவியது.

"அடுத்து நீ அயோத்தி செல்க, அங்கு அரசனிடம் தேர் ஓட்டியாகப் பணி ஏற்க" என்று அது அறிவித்தது. குட்டைக் கையனாக மாறியவன் நெட்டை வழி நோக்கி நடந்தான்.

பார்த் தொழில் செய்தவனைத் தேர்த் தொழில் ஏற்க என்று கூறியது. நீ அயோத்தி அடைந்து தேர்த் தொழிலுக்கு மிக்கவனாக நீ ஆகுக'' என்று அறிவுறுத்தியது.

நாகம் தனக்கு உதவி செய்ததாகவே கொண்டான். பாண்டவர்கள் ஓர் ஆண்டுக் காலம் மறைந்து வாழ்ந்தனர். இவனும் சில காலம் மறைந்து இருந்து வாழ இது இவனுக்கு உதவியது. புதிய பிறப்பு, புதிய பதவி, புதிய சூழல்கள் எல்லாம் புதுமைதான். அரசனாக இருந்து அறிய முடியாத வற்றை எளிய குடி மகனாக இருந்து அறியும் வாய்ப்புக் கிடைத்தது.

காரிருளில் கானகத்தே காரிகையைக் கைவிட்டுத் தனியனாய் நடந்தான். அயோத்தி அடைய அலைகளை உடைய கடற்கரை வழியே செல்ல நேர்ந்தது.

நினைப்பு அவனை அலைக்கழித்தது. காதலியின் நினைவு அவன் நெஞ்சில் சுடுநெருப்பைத் தந்தது; காதல் நினைவுகள் அவனை வேதனைக்கு உள்ளாக்கின.

காதல் நெஞ்சைத் தூண்டி எழுப்பக் கூடிய காட்சிகள் அவனுக்கு வேதனையைத் தந்தன. தமயந்தி தன் முன் நின்றாள். அவள் எட்டாத தூரத்தில் இருந்தாள். நினைவில் இருப்பவளை நேராக வடிவில் காண முடியாமல் தவித் தான்.

அங்கே ஒரு பெண் குருகு உறங்கிக் கொண்டிருந்தது; அருகிருந்த ஆண் குருகு அதற்குக் காவல் தந்தது. அந்தக் காட்சி அவனைச் சாடுவதுபோல இருந்தது. உறக்கத்தே அவளை விட்டுவிட்டு வந்தது எவ்வளவு பெரிய தவறு என்பதை உணர்ந்தான். குருகுக்கு உள்ள பொறுப்பு; பெடையின் மீதுள்ள விருப்பு தன்பால் இல்லாமல் போய் விட்டதே என நினைத்து வருந்தினான்.

''மரக் கிளையில் உறங்காது விழித்திருக்கும் குருகே! உறக்கத்தே அவளை விட்டு விட்டுவந்தேன். அதனால் நீ என்னுடன் பேச மறுக்கிறாயா? உன்னைப் போல் காதல் நெஞ்சம் எனக்கும் உள்ளது. ஏதோ போதாத காலம்; தவறு செய்துவிட்டேன். எனக்கு ஆறுதல் கூறி என் மனப் புண்ணை நீ ஆற்றக் கூடாதா'' என்று கேட்டான்.

அடுத்துப் புன்னை மரத்தில் ஒரு புதுக் காட்சியைக் கண்டான். மது அருந்த வண்டுகள் அப் புன்னைப் பூவில் அமர்கின்றன. அதன் மகரத்தங்களைக் கோதுகின்றன. அடுத்து அதில் உள்ள தேனைப் பருகாமல் தன் பெடை வண்டு உண்ணத் தான் காத்திருந்தது. அதன் அருள் உள்ளம் அவன் நெஞ்சில் மருளை உண்டாக்கியது. அதன் முன் தான் சிறுமையுற்றது போல் சிந்தனை பெற்றான். காதலியின் நினைவால் அவன் நெஞ்சு பஞ்சு எனச் சிதறுண்டது. ஆவி அழிந்தான். பெருமூச்சுவிட்டான். நெஞ்சில் பல நினைவுகள் ஓடின. அவளை அடைய நாடினான்; மனம் உழன்றான்.

கடல் அலைகள் ஒலித்துக் கொண்டே இருந்தன. அவை பேரிசைச்சல் செய்தன; அது அவனுக்கு ஒரு நாதமாக இசைத்தது. அந்தக் கடற்கரையில் இவனைக் கண்டு நண்டுகள் சில மருண்டு தன் வளைக்குள் புகுந்து அடங்கின. அவை தன்னைப் பார்க்கக் கூடாது என்பதால் தான் ஒளிந்து கொண்டன என்று நினைத்தான். தான் செய்தது பாதகச் செயல் என்பதை வெளியிட்டான். கொடுமை மிக்கது என்று மனம் கொதித்துப் பேசினான்.

நேசித்தவள்; உயிரென மதிக்கப்பட்டவள்; 'காதலி' அழகான சொல் அதற்கு உரிமை பெற்ற அவளைக் கரிய இருட்டில் விட்டு நீங்கினான்; புத்தனைப் போல் மாளிகையில் அல்ல; பித்தனாக இருந்து காட்டில் விட்டு விட்டு வந்தான். இத்தகைய பாதகச் செயல் தான் அவன்

புரிந்தது என்பதை உணர்ந்தான். இதை எடுத்துக் கூறினான். ''காதலியைக் கார் இருளில் கானகத்தே கைவிட்ட பாதகனைப் பார்க்கப்படாது என்றா நண்டே நீ ஓடி ஒளிக்கின்றாய்; அல்லது வேறு எந்தக் காரணத்தால் மறைகிறாய்? எனக்கு நீ உரைப்பாய்'' என்று கேட்டான். மற்றும் அக்கழிக் கானலில் இருந்த பூவையும், செடியை யும், பறவை இனங்களையும் பார்த்தான். விளித்தான். 'என் காதலி தூங்கி எழுந்தால் விழித்து எழும்போது அவள் என்ன நினைத்திருப்பாள். அவள் நினைவுகள் எத்தகையன? எவ்வாறு துடித்திருப்பாள்? படித்து அறியாத மூடன் அல்ல; விடிவதற்கு முன் அவளை விட்டு வந்தேன். அவள் நிலைமை எப்படி இருக்கும்? இப்பொழுது அவள் எங்கே இருப்பாள்? என்ன செய்து கொண்டிருப்பாள்? தேடித் தேடி அலைந்து அவள் வாடி இருப்பாள். ஓடி இருப்பாள். அவள் ஓலமிட அந்தப் பேரொலி உங்கள் செவிகளில் பட்டிருக்கும். கொடுமை விளைவித்துவிட்டேன். எனக்கு விடிவே இருக்காது'' என்று பேசினான். பேசாத நண்டோடும், அசையாத செடி கொடிகளோடும், கடல் அலையோடும், இணைப் பறவைகளோடும் பேசினான்.

''நீலமலர்களே! சோலையில் வந்து உலாவும் சோலைத் தென்றலே! கடற்கரையில் உள்ள கழிகளில் உலவும் குருகுகளே! என் காதலி அந்த இருட்பொழுதில் விழித்துப் பார்ப்பாள்; அவள் என்னை நினைப்பாள்; காழ்ப்பாள்; துன்பத்தில் ஆழ்வாள். வேகும் அவள் நெஞ்சு என்ன பாடுபட்டு இருக்கும்? இவற்றை எல்லாம் எண்ணி யான் வருந்துகின்றேன்'' என்று பேசினான்.

அலை கடலைக் கண்டான்; அதுவும் தன்னைப் போல் நிலைகுலைந்து உள்ளது என்று நினைத்தான்.

''கடல் அலையே! நீயும் போகிறாய்; வருகிறாய்; புரண்டு விழுந்து இரங்கி நாக்குழற நடுங்குகிறாய்; நீயும்

என்னைப்போல் இரவில் உன் காதலியைத் தவிக்கவிட்டு வந்து விட்டாயா?''

''யான் அரவினைத் தீயிடத்து இருந்து அகற்றினேன். ஆனால் என் காதலியைத் தீமையில் விட்டு விட்டு வந்திருக் கிறேன். பாம்புக்குப் பால் வார்த்தேன். பாவை அவளுக்குக் கொடுமை செய்தேன். பரோபகாரம் செய்த யான் உற்றவளுக்கு உதவிகள் செய்வதை மறந்துவிட்டேன். கட்டிய மனைவி அவளைக் கதறவிட்டேன். காட்டில் அரவுக்கு இரக்கம் காட்டினேன். முரண்பாடு கொண்ட வாழ்க்கை இது''.

''நீயும் அலையுறுகின்றாய்! நீயும் இப்படி ஏதாவது தவறு செய்துவிட்டாயா? அப்படிச் செய்திருந்தால் ஏன் அவ்வாறு செய்தாய்? நீ பிறர் மெச்ச வாழ்பவன் அல்ல; உலகம் உயர நீ உதவுகிறாய். நான் ஊர் மெச்ச உபகாரி யாயினேன். உண்மை என்னிடம் இல்லாமல் போயிற்று. நீ அழும் அழுகுரல் என்னை ஆழ்துயரில் அழுத்துகிறது; சிந்திக்க வைக்கிறது.''

''பெண்களால் கலங்கிப் பேதுறும் நிலை உனக்கும் வாய்த்துவிட்டது. அதே போல எனக்கும் ஏற்பட்டு விட்டது. நமக்கு யார் ஆறுதல் கூறுவார்கள்?'' என்ற பேசினான்.

வழியில் முத்துப் போன்ற அழகுடைய பல்லினை உடைய அழகியர் சிலர் இவனைக் கண்டனர். அவர்கள் சிரிப்பு ஒலி தன் காதலியை அவனுக்கு நினைவுறுத்தியது. அவள் பேரழகு அவனுக்குத் தன் காதலியை நினை வூட்டியது.

மகளிரைப் பார்க்கவும் அவன் அஞ்சினான்; பின் வாங்கினான். இளமை நினைவுகள் அவனை விட்டு அகன்று சென்றன. அவர்கள் அவனுக்குச் சிலிர்ப்பைத்

தரவில்லை;; கிளர்ச்சியும் ஊட்டவில்லை. மேலும் இவனைக் கண்டு அவர்கள் ஒதுங்குவது போல் தெரிந்தது.

அவர்கள் முறுவல் அவனுக்குப் புதுமையைத் தந்தது. புது வாழ்வு மலரும் என்ற நம்பிக்கை தந்தது. கங்கை பாயும் நாடு ஆகிய அயோத்தியைச் சென்று அடைந்தான். நிடத நாட்டு அரசனாகிய நளன் அயோத்தியை அடைந் தான்.

பார்வேந்தனாக இருந்த நளன் அயோத்தி மன்னனின் வாயில் காவலர்க்குத் தன்னைப் பற்றித் தேர் ஓட்டவும், தேர்ந்த சமையல் செய்யவும் வல்லவன் என்பதைத் தெரிவித்தான். மன்னனுக்குச் சோறு சமைக்கும் ஆளாகப் பணி செய்ய வந்ததாகத் தெரிவித்தான். அரசனிடம் அறிவிக்குமாறு அறிவித்தான்; தன் பெயர் 'வாகுவன்' என்றும் தெரிவித்தான்.

அவன் கூறிய செய்தியைக் காவலர்கள் அரசனுக்குச் சென்று உரைத்தனர்.

ஏவல் செய்ய ஒருவன் வந்திருக்கிறான் என்று கூறினார்கள்.

"வருக! அவனைக் கொண்டு தருக" என்று அனுப்பினான். நளனும் அரசன் முன் வந்து நின்றான்.

"நீ எந்தத் தொழில் வல்லவன்?" என்று நளனை நோக்கி அயோத்தி மன்னன் வினாவினான்.

கொடைத் தொழில் வல்லவனாகிய நளன் தான் மடைத் தொழிலிலும் படைத் தொழிலிலும் வல்லவன் என்று கூறிக் கொண்டான்.

தோள் குறைந்தவன் அவன் எப்படிப் படைத் தொழில் செய்ய முடியும்? அதற்குத் தகுதி அற்றவன் என்பதை அறிந்தான். "படைத் தொழிலுக்கு உடைமை

வீரம்; வன்மைமிக்க தோள்கள்; அவை இல்லையே உன்னிடம்'' என்றான்.

''அதனால் தேர்த் தொழில் மட்டும் செய்கிறேன்'' என்றான். வீட்டில் மடைத் தொழில் வெளியே தேர் ஓட்டி என்று தெரிவித்தான்.

ஒரே ஆள் இரண்டு தொழில்களில் தேர்ந்தவன் என்று கேட்டதும் மன்னன் மனம் குளிர்ந்தான்.

ஒன்றில் இரண்டு அடங்கி இருப்பது கண்டு மகிழ்ந்தான். சமைக்கவும் வல்லவன்; வண்டி ஓட்டவும் வல்லமை பெற்றவன். சரியான ஆள்தான் என்று முடிவு செய்தான். பணியில் அவனை அமர்த்திக் கொண்டான்.

நளன் அரசன் என்பதால் அறிவு மிக்கவனாக இருந்தான். அயோத்தி மன்னன் மனம் விரும்பும்படி கலந்து பழகினான்; உரையாடினான். அறிவிற் சிறந்தவன் என்ற நன்மதிப்பையும் பெற்றான்.

அந்தணன் நளன் மக்களைக் கொண்டு போய்ச் சேர்த்தான். அவனே தமயந்தியையும் கண்டுபிடித்து அவள் தந்தையிடம் சேர்த்து வைத்தான். அவர்கள் குடும்ப வாழ்க்கையில் அந்தணன் மதிக்கத்தக்க இடத்தையும் பெற்றான்.

தமயந்தி யோசித்துப் பார்த்தாள். அங்கே தன் தந்தை வீட்டில் சுகமாக இருக்க அவள் விரும்பவில்லை. உண்பதும் உறங்குவதும்தான் வாழ்க்கை அல்ல என்பதை அறிந்தாள். தன் கணவனைக் கண்டு அவனை அழைத்து வருவது என்று சிந்தித்தாள்.

தன்னையும் தம் மக்களையும் தன் தந்தை வீட்டில் கொண்டு வந்து சேர்ப்பித்த அந்தணன் அவன் நினைவு அவளுக்கு வந்தது.

"நீ ஒரு பணி செய்ய வேண்டும்" என்று கூப்பிட்டு அழைத்தாள்.

ஏதோ ஊர்ப் பயணம் காத்திருக்கிறது என்பதை அறிந்து கொண்டான்.

"நீ அறிவாளி, உன்னால்தான் முடியும்" என்று கூறினாள்.

நம்பிக்கை ஊட்டும் சொல்லாக இருந்தது.

"இயன்றது செய்கிறேன்" என்றான்.

"என் மன்னவனைத் தேடிக் கண்டு இங்குக் கொண்டு வந்து சேர்க்க" என்றாள்.

"இது என்னால் இயல்வது அன்று; காவல் வீரர்கள் செய்யத்தக்க ஏவல் இது" என்று தெரிவித்தான்.

"உன்னைப் போல் அறிவுக் கூர்மை உடையவரால் தான் இது இயலும். புத்திசாலிகள்தான் இதைச் செய்ய முடியும்" என்று கூறினாள்.

"நீ நான்கு திசையும் செல்க. வழியில் எங்காவது நளன் அகப்படுவான். செய்தி கொண்டு வந்து தருக" என்றாள்.

"அவன் உருமாறி இருந்தால் என்ன செய்வது?" என்று கேட்டான்.

"கருமாரி அம்மனை வேண்டிக் கொள்; கருத்தில் இதை நிறுத்திக் கொள்" என்றாள்.

"காதலியைக் காரிருளில் தவிக்க விட்டுச் சென்றான் ஒரு காவலன்" என்று அவனிடம் பேச்சைத் தொடங்குக. "அதனைச் செவிமடுத்துக் கேட்டால் அதற்குத் தக்க விடை தர முற்பட்டால் அவனை விடாதே. தொடர்ந்து பேசு;

அவன் அதனை அறிந்தவன்போல் பேசினால் அதுதான் அவனைக் கண்டுபிடிக்க அடையாளம்'' என்றாள்.

தனக்கு நல்ல காலம் வரக் காத்திருக்கிறது. தன்னால் அவனைக் கண்டு வரமுடியும் என்று திடம் கொண்டு புறப்பட்டான்; விடைபெற்றான்; நடந்தான் திசைகள் தேடி.

மாபெரும் நகர்களில் எங்காவது மறைந்திருப்பான் என்று யூகித்தான்.

அயோத்தி நகர் புகழ்மிக்க நகர்; பெருநகர்; அங்கு அவன் இருக்கக் கூடும் என்று யோசித்தான்.

குட்டையான கைகளுடன் கட்டையான ஒரு ஆள் அங்கு இவன் எதிரே வந்தான்.

அயோத்திக்குப் புதியவன் என்பதை அறிந்து கொண்டான்.

''காதலியைக் காரிருளில் கானகத்தே கைவிட்டான் ஒரு மன்னன்; அவனைப் பற்றி என்ன நினைக்கிறாய்?'' என்று கேட்டான்.

''அவன் மிகவும் பாதகன் அல்லவா'' என்று மேலும் கேட்டான் அந்த அந்தணன்.

''எல்லாம் விதி; அது வலிது; அது சிலர் மதியை மயக்கி விடுகிறது'' என்றான்.

''நீ அவனைப் பற்றி என்ன நினைக்கிறாய்'' என்று கேட்டான்.

''அவன் தெரிந்து செய்யவில்லை. அவள் நன்மைக் காகவேவிட்டு விலகினான்'' என்றான்.

இவ்வளவு விவரமாகச் செய்திகளை அறிந்து கூறு கிறான். இவன் நளனாக இருக்கக் கூடும் என்று ஐயுற்றான்.

"பார்த்தால் இவன் அரசனாகத் தெரியவில்லையே" என்ற மருட்சி ஏற்பட்டது.

உருவு கண்டு எதையும் முடிவு செய்ய இயலாது. உருவு கண்டு எள்ளாமை வேண்டும் என்று எங்கோ படித்தது நினைவுக்கு வந்தது.

"நடுகாட்டில் நள்ளிரவில் எந்த இடர்ப்பாட்டில் தனியள் அவள் அகப்பட்டு வேதனைப் படுகிறாளோ" என்று இரக்கம் தோன்றப் பேசினான்.

நளன் கண்களில் நீர் வெளிப்பட்டது. அவன் சோகம் அவனைக் காட்டிக் கொடுத்தது.

இவன் ஏன் கண்ணீர் விடுகிறான் என்று எண்ணிப் பார்த்தான். அவன்தான் நளன் என்பதை அறிந்து கொண்டாள்.

மேலும் கேட்டால் அவன் எங்காவது சென்று விட்டால் என்ன செய்வது? பார்த்து வா என்று சொன்னார் களே தவிர அழைத்துவா என்று யாரும் சொல்லவில்லை. அவன்தான் நளன் என்பதை அறிந்தான்.

"அவன் அவளை வெறுத்து ஒதுக்கி இருக்க மாட்டான். அவன் அவளை உயிரினும் மேலாக நேசித்தான் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவன் அவளைவிட்டு நீங்கினான் என்றால் அது பழைய வினை; விதியின் செயல்" என்று நளன் கூறினான்; "அவளை வெறுத்து நீங்கினால் அவள் அலைய நேரிடும்; அவன் விரும்பிச் செய்ய வில்லை" என்று மேலும் விளக்கம் தந்தான்.

அதற்குமேல் அவனுக்கு விளக்கம் தேவைப்பட வில்லை; அங்குத் தங்குவதைத் தவிர்த்து உடனே திரும்பினான்; தமயந்தியை அணுகினான். அவளைச் சந்தித் தான்; பேசினான். "கண்டனன் கற்பினுக்கு அணியைத்

தெண்திரைக் கடல் அக்கரைக்கு அப்பால்'' என்றான் அனுமன். அதுபோல் அந்தணனும் செங்கோல் வேந்தனைத் தன் கண்களால் கண்டதாக உரைத்தான். இதைக் கேட்டதும் அளவில்லா மகிழ்வு கொண்டாள். அவனைத் தூக்க முடிந்தால் தலைமீது வைத்துச் சுற்றிக் கீழே போட்டிருப்பாள். அவன் மண்டை சிறிது ஓட்டை விழுந்திருக்கும். அளந்து பார்த்து அடிபலமாக இல்லை என்று மருத்துவர் கூறிச் சான்று தந்திருப்பார்; அந்த எல்லைக்கு அவள் செல்லவில்லை.

அவனைத் தலையில் வைத்துக் கொண்டாடினாள்; அவனைப் போற்றிப் புகழ்ந்தாள். "எப்படிப் போனாய்? எங்குத் தங்கினாய்? எங்கு உணவு கொண்டாய்? எங்கு உறங்கினாய்? எப்படி எப்படிக் காலம் கழித்தாய்?'' என்று அடுக்கி விசாரித்தாள்.

எப்பொழுதுமே கண்டிராத உபசாரத்தை அவன் காண நேர்ந்தது. அவன் சஞ்சீவி மலையைக் கொண்டு வந்தான். அதை இறக்க அவளுக்குக் காட்டக் காத்திருந்தான். அவள் அவசரப்பட்டாள்.

அவன் வாய்ச் சொல் உதிர்க்கும் முத்துகளைக் கோக்கக் காத்திருந்தாள். அவன் சொன்னான் "பேச்சினால் அவன் உன் மணாளன்தான்; ஐயமே இல்லை; ஆனால் உருவ மாற்றத்தால், வடிவால் அவன் அல்லன். வடிவைக் கொண்டு பார்த்தால் அவன் அடி ஐந்து உடையவன்; குறுமையன்; நளன் அல்லன்; இவனை நீ தேர்ந்து எடுக்க வாய்ப்பே இல்லை; மாலையிடுவதற்கு வேண்டிய மயக்கம் அவனிடம் சிறிதும் இல்லை. கோயில் நூறு சென்று சத்தியம் செய்வேன் அவன் நளன் அல்லன்'' என்றான்.

"உணர்வு, உயிர், எண்ணம், நினைவுகள் எல்லாம் எடுத்துக் கொண்டால் அவன் நீ நாடும் அரசன்தான்;

வார்த்தை கொண்டு பார்த்தால் அவன் அவன்தான்; வடிவு கொண்டு பார்த்தால் அவன் அவன் அல்லன்'' என்று கூறினான்.

அறிவு நிரம்பியவள்; சுயசிந்தனை மிக்கவள்; அவள் ஐம்புலனும் நல்லமைச்சு என்று பேசப்பட்டவள். அவன் கூறியது ஒரு விடுகதையாக இருந்தது. கருப்புச் சட்டைக் காரன் காவலுக்குக் கெட்டிக்காரன் அது என்ன என்று கேட்பதுபோல் இருந்தது. வார்த்தையில் நளன், வார்ப்பில் அவன் அல்லன் என்று கூறினான்.

அவள் வடிவைக் கொண்டு மயங்கவில்லை. அவன் உணர்வில் ஒன்றுபட்டவள்; உயிரோடு ஒன்றியவள். அதனால் அவன்தான் நளன் என்பதைத் தெளிவுபடுத்திக் கொண்டாள்.

கள்வனைப் பிடிப்பது கடிய செயல் அன்று. அவனைக் கட்டி இழுத்துவரத் திட்டம் ஒன்று வகுத்தாள். 'அதிரடி' அறிவிப்பாக அது அமைந்தது. ''தமயந்திக்கு மற்றும் ஒரு சுயம்வரம் என்று சற்றும் தயங்காது நீ சென்று உரை; அதைக் கேட்பான் அயோத்தி மன்னன்; உடனே அவன் என்னை வேட்க விரைந்து வருவான்''.

''தேர் பூட்டத் தேர்ந்த ஆள் அவர்தான். அவர் தேரை ஓட்டிக் கொண்டு இந்த ஊர் வந்து சேர்வார். அதற்குப்பின் அவரை அறிய அறிவிக்க அவரை வெளிப்படுத்த எங் களால் முடியும். நீ சென்று வருக; அயோத்தி மன்னனிடம் சுயம்வரம் என்று விளம்பரம் செய். அதுபோதும். இது ராஜதந்திரம். அவனை அழைத்து வர யான் மேற்கொண்ட மந்திரம்'' என்றாள்.

அந்தணனுக்கு மறுபயணம் வாய்த்தது.

''அந்தச் சுயம்வரம் நாளையே நடைபெறும் என்றும் கூறுக; நாள் குறித்தாகிவிட்டது என்று அறிவிக்க; ஒரே நாள்

இடைவெளி; அந்த அரசனால் அவ்வளவு விரைவில் தேரில் வர இயலாது; நளனை அழைப்பான்; அவனும் மறுக்கான்; மறைந்து வாழ்வது மாற்ற இயலும்'' என்று தெளிவுறுத்தி னாள்.

அந்தணன் அயோத்தி அடைந்தான்; அரசனைச் சந்தித்தான்; செய்தி அறிவித்தான். அவன் அது கேட்டு வியந்தான். இன்பம் தன்னைத் தேடி வருவதாகக் கொண் டான். தமயந்தி அவன்கண் முன் நின்றாள். அவள் பொன்மாலை ஏந்தி நளன் கழுத்தில் போட்ட காட்சியை நினைத்தான். பொறாமை உள்ளே இருந்து கொண்டு கொழுந்துவிட்டு எரிந்தது. "அவன் தொலைந்தான், இனி தனக்கு நலம்தான்'' என்று கொண்டான். அடுத்த வாய்ப்பு தனக்குத்தான் என்று மனப்பால் குடித்தான். அந்தக் கற்பனையில் ஆழ்ந்தான்.

"எம் அரசன் தன் மகளுக்கு இரண்டாம் சுயம்வரம் என்று முரசு அறைவித்து அரசர்க்கு உரைத்திருக்கிறான். அதுவும் நாளையே நடைபெற உள்ளது'' என்று செய்தியைக் கூறினான்.

எண்ணிப் பார்த்தான்; இடைவெளி ஒரே ஒரு நாள். தேர் ஏறிச் சென்றாலும் நாட்கள் பல பிடிக்கும். என் செய்வது; தன் உடன் இருந்த வாகுவனை அழைத்தான் "இலகுவில் எப்படி அங்குச் சேர்வது?'' என்று கேட்டான். இதை நம்ப முடியவில்லையே'' என்றும் கூறினான்.

"நீர் ஐயப்படுவது உண்மைதான். அவள் குறையாத கற்பினாள். கொண்டானுக்கு அல்லால் அவள் மனம் இசையாள்; வசை இது; வழக்கும் அன்று; அது நடக்காது; நடவாது; அதற்கு அவள் இசையாள்'' என்று கூறினான்.

"நீ நினைப்பது ஓரளவு உண்மைதான்; அவளைப் பற்றிப் பொதுவாக அறிந்தவர் இவ்வாறு பேசுவர்; இது

உலகப் போக்கு. பெண்ணின் நெஞ்சு அது பஞ்சினும் மென்மையானது. இளகிய மனம் உடையவள்; என் மீது அவளுக்கு ஒரு கண் இருந்தது. அவள் என் பெருமை அறிந்தவள். அவள் எடுத்த மாலை எனக்குத்தான். அடுத்து இருந்தவன் நளன். கை தவறி அவன் கழுத்தில் விழுந்து விட்டது. இதுதான் நடந்தது'' என்று ஒரு விளக்கம் தந்தான்.

அவன் கூறுவது கேட்க ''அவன் மனத்தில் அது ஒரு வடிவு பெற்றுள்ளது; ஆழமான நம்பிக்கை; அதை மாற்ற முடியாது'' என்பதை நளன் அறிந்தான்.

அதை மாற்றவோ மறுக்கவோ அவன் விரும்ப வில்லை.

''முதல் சுயம்வரமே அவள் தனக்காகத்தான் வைத் தாள். உள்நோக்கம் இதற்கும் இருக்கத்தான் வேண்டும். அரசிஇயல் இது; எதிலும் ஓர் உள்ளடக்கம் இருக்கும்; அதற்கு வாய்ப்புள்ளது''.

''தன்னை அங்கு அழைக்கவே இந்தத் திட்டம்'' என்பதைக் கண்டு கொண்டான். ''ஒரு வேளை தீய வினைகள் அடுக்கிக் கொண்டு வருகின்றனவோ! இது கலியின் திருவிளையாடலோ; அவள் மனத்தை மாற்றி மயக்கி விட்டார்களோ! ஏதோ ஒரு மாற்றம்'' என்று பலவாறு எண்ணினான்.

அரசன் தன்னுடன் வருமாறு நளனை அழைத்தான். தேர் ஓட்ட அவன் தேவை என்பதைத் தெரிவித்தான். கடமை; அதற்குக் கட்டுப்பட்டான்.

''அழைப்பு அயோத்தி மன்னனுக்குத்தான் என் றாலும் அவன் தேர் ஓட்டி அங்குச் செல்லத் தடை இருக்காது; என்னதான் நடக்கும்? அதையும் பார்த்து விடலாம்'' என்று உடன் புறப்பட்டான். அவன் இட்ட

பணி இது; அதனை முடிப்பது தன் கடமை என்று தேரைக் கொணர்ந்தான்; பூட்டினான்; அரசன் ஏறினான், தேர் சென்றது.

தேரைக் கொண்டு வந்து நிறுத்தினான். ''இதற்குச் சக்கரங்கள் இரண்டு இல்லை'' என்றான் நளன்.

''ஏன் என்ன ஆயிற்று?''

''சூரியன் தேருக்கு ஒரே சக்கரம்; இதற்கும் ஏன் ஒரே சக்கரம் இருக்கக் கூடாது என்று மாற்றி விட்டேன்'' என்றான்.

''சூரியன் பாதையில் செல்லவில்லை. அந்தரத்தில் செல்லும் தேர் அது; அதனால் ஒரு சக்கரம் போதும். இது தரையில் ஓடும் தேர்; இரண்டு சக்கரம் அவசியம்'' என்றான் அரசன்.

நளன் வேறு வழி இல்லாமல் இரண்டு சக்கரம் உடைய தேரைக் கொண்டு வந்து நிறுத்தினான்.

''இதைக் கொண்டு சூரியனின் தேர் வேகத்தை யான் அமைத்துத் தருகிறேன்'' என்றான்.

''சூரியன் இந்தப் பூமியைக் கடக்க ஒரு பகல் எடுத்துக் கொள்கிறான். யானும் ஒரே பகலில் அங்குப் போய்ச் சேர்ப்பேன்'' என்றான்.

''இந்தத் தேர் சூரியன் தேருக்கு நிகரானது; ஏறுக'' என்றான். அவனும் ஏறி அமர்ந்தான்.

அயோத்தி மன்னன் மன வேகத்தைவிட இதன் வேகம் மிக்கு இருந்தது என்பதை அரசனே ஒப்புக் கொண்டான்.

இது அவர்கள் பேசிய பேச்சின் சுருக்கம். அயோத்தி அரசனின் மேலாடை காற்றில் அசைந்து கீழே விழுந்தது.

'அதை எடுக்க' என்று நளனிடம் கூறினான். தேரை நிறுத்தினான். அதற்குள் அது காதம் இருபத்து நான்கைக் கடந்துவிட்டது. இவன் ஆற்றலைக் கண்டு அயோத்தி அரசன் வியந்தான்.

அவனைப் பாராட்ட முன் வரவில்லை. தான் எந்த வகையிலும் அவனைவிட ஆற்றல் குறைந்தவன் அல்ல என்பதைக் காட்ட விரும்பினான். கம்ப்யூட்டர் தோன்றாத காலம்; விசையை அழுத்தினால் உடனே கூட்டுத் தொகை இது காட்டுகிறது. இது விஞ்ஞான வளர்ச்சி.

அவன் கூறினான் ''இந்தப் பள்ளத்தாக்கில் உள்ள தான்றில் காய்கள் எண்ணினால் பத்தாயிரம் கோடி'' என்று கூறினான்.

உடனே நளன் தேரை நிறுத்திவிட்டு அவற்றை நிதானமாக எண்ணிப் பார்த்தான். அவன் சொன்னது சரியாக இருந்தது. அவன் மன ஆற்றலை வியந்தான்.

தான் தேர் ஓட்டுவதில் வல்லவன்; இவன் கூட்டல் கழித்தலில் வல்லவன் என்பதை அறிந்து பாராட்டிப் பேசினான்.

''ஒன்று செய்வோம்; என் தொழிலை நீ ஏற்க; உன்தொழிலை எனக்குத் தருக'' என்று அயோத்தி அரசன் கூறினான். இருவரும் ஒருவர் தொழிலை மற்றவருக்குக் கற்றுத் தந்தனர். பரிமாற்றம் நடந்தது.

நளன் புதிய ஆற்றல் பெற்றான். மன ஆற்றல் மிக்கவன் ஆயினான். எதையும் கூர்ந்து அறிந்து செயல் படும் திறன் அமைந்தது. இது அவனுக்கு மனவலிமையைச் சேர்த்தது. கலிமகன் இதனை அறிந்தான். அவனுடன் இனி வம்புக்குப் போக முடியாது என்பதை உணர்ந்து கொண் டான். அறிவு ஆற்றல் மிக்கவர்களைத் தொட முடியாது என்பதை அறிந்தான்.

பிறர் மனத்தை அறியும் ஆற்றல் அவனுக்கு வந்துவிட்டது. கலியின் திட்டங்களை அறிந்து விலக்கும் ஆற்றலைப் பெற்றுவிட்டான். அறிவும் ஆற்றலும் மட்டும் இருந்தால் போதும்; எதிரியை அளக்கும் கூர்த்த அறிவு தேவை. அப்பொழுதுதான் வாழ்க்கையில் வெற்றிபெற முடியும் என்பதை அறிந்தான். வெற்றி என்பது முழு ஈடுபாட்டை ஒட்டியது ஆகும். எதிரியின் எண்ண ஓட்டம், சூழ்ச்சித் திறன் இவற்றை அறிந்து செயல்படுவது தேவை; பிறர் எண்ண ஓட்டத்தை அறியும் ஆற்றல் அவன்பால் அமைந்தது.

இனி தன் செயல்திறன் எடுபடாது என்று கலியன் கண்டு கொண்டான். கொடை வள்ளல்களை அண்டி அணுகும் புலவர்களின் பசி நீங்குவதுபோலக் கலி அவனை விட்டு அகன்றான். இனி அவனை யாரும் அசைக்க முடியாது என்ற சூழ்நிலை உருவாகியது.

ஆமை முதுகில் நண்டு துயில் கொள்ளும் நாடு அயோத்தி மன்னன் நாடு; அதனை நீங்கி வீமன் திருநகரை நளன் அடைந்தான்.

வீமன் மாளிகையை அடைந்தான். தன் வருகையை அங்கிருந்த காவலர்க்கு எடுத்து உரைத்தபின் விருந்தினர் விடுதியை அடைந்தான். நளன் வேறு அயோத்தி மன்னன் வேறு எனப் பிரிந்தனர். அட்டில் சாலையை அவன் தன் கொட்டில் இடமாகக் கொண்டான்.

அயோத்தி அரசன் வருகையை அறிந்த வீமன் தன் இருகையும் எடுத்து வணங்கி வரவேற்றான். தன்னை நாடி வரக் காரணம் யாது? அவனுக்கு விளங்கவில்லை. தனக்கு இருந்தது ஒரே மகள். அவளுக்கு வேண்டிய விளம்பரம் தந்து விழா எடுத்து மணமும் முடித்துத் தீர்த்துவிட்டான்.

அவனுக்குத் தெரிந்து அவன் வேறு எந்த மகளுக்கும் தந்தையானது இல்லை; அப்படி எந்தப் பெண்ணும்

வளர்ப்பு மகளாகவும் வளர்ந்து வரவில்லை. தன் மனைவி யைக் கேட்டு விசாரிக்க முடிவு செய்தான்.

என்றாலும் வந்தவரை வரவேற்று முகமன் கூறும் கடப்பாடு இருந்தது. சிரித்தனர்; அதற்காகவே அவர்கள் பழகி வைத்திருந்தார்கள்.

''தங்கள் வரவு நல்வரவு ஆகுக. சொல்லி இருந்தால் ஊர் எல்லைக்கே ஆள் அனுப்பி இருப்பேன்; மன்னிக்க வும்'' என்று கூறினான்.

'சுயம்வரம்' என்பது யாரோ கட்டி அனுப்பிய கட்டுச் சோறு என்று அறிந்தான். இந்த மாதிரி 'புரளி' ஏன் எழுந்தது? அந்த நாட்டில் பத்திரிகைகளும் எதுவும் இல்லை புரளியை மையமாக வைத்துப் பிழைப்பு நடத்த.

இதில் ஏதோ மர்ம தேசக் கதை உள்ளது என்று யூகித்தான். பொறுத்திருந்து பார்க்கலாம் என்று சூழ்நிலை அறிந்து செயல்பட்டான்.

''ஒன்றும் இல்லை; தங்களைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்'' என்று கூறினான்.

அரசியல் தலைவர்கள் சந்திப்பது மரியாதை நிமித்த மாக நடப்பது என்பது அன்றும் இருந்தது. வெளியில் வாய்விட்டுக் கூற முடியாத நிலையில் மரியாதை நிமித்தம் உதவுகிறது. அவனுக்கு அது தான் கை கொடுத்தது.

''மிக்க நன்றி! விருந்து உண்டு போகலாம்'' என்று இனிது கூறி வீமன் விடைபெற்றான்.

வந்த களைப்பு; தேரில் வந்த அலுப்பு; ஏமாற்றம்; குழப்பம்; ஒதுங்கி இருக்க விரும்பினான். சோறு வடிக்க வேறு ஒரு ஆள் தன்னுடன் வந்திருப்பதால் அவனை அனுப்பிவிட்டுக் காற்று வாங்கத் தன் அறைக்குச் சென் றான். சாளரங்கள் திறந்தான்; காற்று அவனைத் தேடி வந்து

வீசியது; அவன் களைப்பை ஆற்றியது. தமயந்தி அவள் அவன் முன் இல்லை; அவளைத் தன் மனத்தில் இருந்து அகற்றினான். பிறன் மனைவி அவள் என்ற மதிப்பு அவனுக்கு உதித்தது; உத்தமன் ஆயினான்.

நளன் அவனுக்கு என்று வகுத்த பள்ளி; இவன் சென்றதால் அது மடப்பள்ளியாயிற்று. சோறு சமைக்க வேறு வகைப்பட்ட பாத்திரங்கள் கழுவி வைக்கப் பட்டிருந்தன. அடுப்பு எரித்து அரசி களைந்து உலை ஏற்றி உருப்படியாகச் சமையல் செய்ய வேண்டும்.

பணம் தேவைப்பட்டால் அதை எண்ணிக் கொண் டிருக்கத் தேவையில்லை. ‘செக்’ எழுதினால் அதை நீட்டினால் பணம் கைக்கு வந்து சேர்கிறது.

இவன் வங்கியில் வைத்திருக்கும் வைப்புப்போல் வரங்களைப் பெற்றிருந்தான். “அங்கி, அமுதம், பருகும் நீர், அணி, ஆடை எது வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் நீ பெற்றுக் கொள்ளலாம்” என்று தேவர்கள் வரம் தந்திருந்தனர். அதனை இப்பொழுது காசு ஆக்கிக் கொண்டான்.

புகையில்லாமலேயே வகைவகையாக உணவுகளை வரவழைக்க முடிந்தது. சமையல் பிரமாதம், காய்கறிகள் கனி வகைகள் இனிப்புகள் எல்லாம் அங்கு வந்து சேர்ந்து விட்டன. சரவணன் அருளால் சகலமும் கிடைப்பதுபோல் அவ்னுக்கு அனைத்தும் வந்து சேர்ந்தது.

நளன் தனிமைப் படுத்தப்பட்டான். இனி தீவிர விசாரணை நடத்துவது என்று காவிரிப் பெண்ணாள் கருத்தினைக் கொண்டாள்; கண்ணீர் பெருக்குவதில் அவள் காவிரியை ஒத்து இருந்தாள்.

சேடி ஒருத்தியை அழைத்தாள் “நீ செய்தி அறிந்துவா! ஒன்று அறிக; உற்று அடைந்து அவனைப் பற்றிய செய்திகள் திரட்டுக” என்றாள்.

"அவனை எப்படி இழுப்பது? எவ்வாறு அழைப் பது? எதைப் பேசுவது?" என்று வினாவினாள்.

"வழி உள்ளது; மக்கள் இருவரையும் உன்னுடன் அனுப்பி வைக்கிறேன். அவர்கள் அவன் முன் ஆட விடுக; அவன் நாட வருவான்; அப்பொழுது அவனை அறிக; சொற்களைக் கண்டு சொந்தம் பந்தம் அறிய முடியும்" என்று கூறினாள்.

"கன்றினைக் கண்டால் பசு ஓடிவரும்; எளிதில் அவனை அறிந்து கொள்ள முடியும்" என்று கூறி அனுப்பினாள்.

நாடகம் தொடங்கியது; மக்கள் இருவரும் அவன் முன் விடப்பட்டனர். நளன் தன் மகள் மகனைக் கண்டான். சற்று வளர்ந்திருந்தனர். அரசன் இல்லில் வளர்ந்தவர்கள்; மலர்ச்சி பெற்று இருந்தனர். இடைவெளி அவர்களை மாற்றி இருந்தது. அவர்கள் வளர்ச்சி கண்டு இவன் உள்ளம் விம்மிதம் எய்தியது. இவனும் எடை கூடினான்.

அவனால் தன்னை [illegible]க்கிக் கொள்ள முடிய வில்லை. இருவரையும் வாரி எடுத்தான்; அணைத்தான்; உச்சி முகர்ந்தான்; மெச்சிப் புகழ்ந்தான்; நச்சி அணைந்தான்.

தேர் ஓட்டி! இவன் ஏன் அணுகுகிற ஆசை வார்த்தைகள் பேசுகிறான். எங்கோ கேட்[illegible] குரலாக இருந்தது. தம்மை அறியாமல் அவர்களும் அவனை அணுகினர்.

மற்றும் அவன் அன்பு குழையப் பேசினான்.

"என்னய்யா யார் நீ! ஏன் எங்களை எடுக்கின்றீர்" என்று கேட்டனர்.

"எனக்கும் உங்களைப்போல் பிள்ளைகள் உள்ள னர். அவர்களைப் போலவே நீங்கள் இருக்கிறீர்கள்;

வித்தியாசமே இல்லை; அதனால்தான் உங்கள்பால் எனக்கு இந்த ஈர்ப்பு'' என்றான்.

''நாங்களாகவே இருந்தால்'' என்றனர். அவர்கள் சிரித்துப் பேசினர்.

''அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

''அது எப்படி முடியும்? நீ தேர் ஓட்டி; என் தந்தை பார் ஆளும் மன்னன்'' என்றனர்.

''எப்படி இங்கே வந்தீர்'' என்று வினாவினான் நளன்.

''என் தந்தை எங்களை விட்டுப் பிரிந்தார். காட்டில் என் தாயைத் தவிக்கவிட்டுத் தனியாக நடந்து சென்று விட்டார். அதனால் நாங்கள் இந்த நகரை வந்து அடைந்திருக் கிறோம். எங்கள் நாட்டை மற்றொருவன் ஆள்கின்றான்'' என்றனர்.

''உங்களுக்கு வெட்கமாக இல்லையா? மாற்றான் ஒருவன் உங்கள் நாட்டை ஆள்கின்றான். நீங்கள் பிறர் கையேந்தி வாழ்கின்றீர்; மானம், வீரம் இவற்றை எல்லாம் அடகு வைத்துவிட்டு இங்குப் புகலிடம் தேடிக் கொண்டீர். மன்னன் மக்கள் என்று கூறுகிறீர்; அந்த வீரம், விவேகம், செயல்பாடு இவை எல்லாம் எங்கே போயிற்று!''

''உங்கள் பெருமை எல்லாம் என்ன ஆயிற்று. சுகம் தேடி இங்கு வந்து ஓடி ஒளிந்து கொண்டிருக்கிறீர்'' என்றான்.

''மடையன் நீ; எதைப் பேசுவது? யாரிடம் பேசு கிறாய் என்பதும் அறியாமல் பேசுகிறாய். என் தந்தை இருந்தால், நீ சொல்வது கேட்டால், பேசுவது அறிந்தால், அவர் இந்நேரம் கொதித்து எழுந்து உன்னை மிதித்து இருப்பார்; தப்பித்தாய்'' என்றனர்.

"என் தந்தை வாய்மையை மதித்தவர். அதனால் வாய்மூடிக் கொண்டார். நாட்டை வலிமையால் வவ்வ முடியும். வீரம் இல்லாமல் இல்லை; எனினும் கட்டுப் பட்டவர்; இழந்ததைத் திரும்பிப் பெற முயல்வது பிச்சை எடுப்பதற்கு நிகராகும். அதை அவர் செய்யவில்லை; நிச்சயம் ஒரு நாள் நாட்டைத் திரும்பப் பெறுவோம்" என்று உறுதி கூறினார்.

"மன்னர் பெருமை மடையர்கள் அறிய மாட்டார்கள்; என்னை மன்னித்துவிடுக" என்று தாழ்ந்து பேசினான் நளன்.

மக்களும் தந்தையும் சூடு பிறக்கப் பேசியது அருகிருந்து கேட்டாள் சேடி; அவர்களை அழைத்துக் கொண்டு மாளிகை வந்து அடைந்தாள்.

இச் செய்திகளைப் பதிவு செய்து கொண்டாள்; தட்டில் அல்ல; மனத்தட்டில்; அப்படியே தமயந்தி இடம் ஒப்புவித்தாள்.

நளன் மக்கள்பால் காட்டிய பாசத்தையும், வீர உரையையும், அதற்கு இவர்கள் சொன்ன சொற்களையும் விடாமல் பேசினாள். புலியின் புதல்வர்கள் பூனைகள் ஆவது இல்லை என்பதை அறிந்து மெய்ம் மயிர் சிலிர்த் தாள். வீரம் உடையவர் தம் மக்கள் என்பதை அறிந்தாள்.

நளன் அவன் உளன் என்பதை அறிந்தாள். மற்றும் அவன் இருந்த கோலத்தைக் கேட்டாள் "கைகள் கரிந் துள்ளன" என்று அந்த மங்கை உரைத்தாள். அது புகையால் கரிந்துவிட்டது என்று கருதினாள்.

"அந்தக் கைகள் அடுப்புப் புகையால் கருகியவோ?" என்று கருதி அழுதாள்; "கொங்கை அளைந்து தன் கூந்தலைத் திருத்தி வருடிய அவன் அங்கை இரண்டும் இவ்வாறு கருகிவிட்டனவே" என்று கூறி வருந்தினாள்.

கிளர்ச்சி ஊட்டிய கைகள் தளர்ச்சி உற்றனவே என்று கூறி வருந்தினாள். தடவிக் கொடுத்த கைகள் இன்று தட்டு முட்டுகள் கழுவ நேர்ந்ததே என்று வருந்தினாள்.

அன்று வாழ்ந்த வாழ்க்கை அவள் கண்முன் வந்து நின்றது; அவனோடு மகிழ்ந்த நாட்கள் அவற்றை எண்ணிப் பார்த்தாள். அடுக்களை அறியாத அவன் கைகள் இன்று புகை வடுக்களைப் பெற்று விட்டனவே என்று எண்ணி வருந்தினாள்.

தன் கொங்கைகளைத் தொட்டு வருடிப் பின் கூந்தலை நீவிய அந்த அழகிய கைகள் இன்று கறுத்து விட்டன என்று எண்ணிப் பார்க்கும்போது அவள் நெஞ்சு வெடித்தது; கரும்புகை அவள் பெருமூச்சில் வெளிப் பட்டது. வேதனையுள் ஆழ்ந்தாள். முதலில் அவனைப் பார்க்க வேண்டும். அந்தக் கையைத் தொட்டுப் பார்க்க வேண்டும் என்று துடித்தாள். அதனைத் தடவித் தர விழைந்தாள். அவன் வருகையை எதிர்நோக்கி நின்றாள்.

நேரே தந்தையிடம் சென்றாள். புதிருக்கு விடை கண்டதுபோல் அவன் எதிருக்கு நின்று பேசினாள். ''சந்தேகமே இல்லை; அவர்தான் அவர்'' என்றாள்.

அவர் என்றால் எப்படி விளங்கும்? ''யாரைக் குறிப்பிடுகிறாய்''? என்று கேட்டான் வீமன்.

''உம் மருமகன்'' என்றாள்.

சென்ற உயிர் தானே இடம் தேடி வந்தது போல் ஆயிற்று அவனுக்கு.

''யாரைக் கூறுகிறாய் விளக்கமாகக் கூறு'' என்றான்.

பெயரைக் குறிப்பிடவில்லை. அந்த அளவு பெண்கள் அன்று உரிமை எடுத்துக் கொள்ளவில்லை. சம உரிமை என்ற சரித்திரத்தை அவர்கள் படைக்க அன்று

அவர்களுக்குத் தேவைப்படவில்லை; அது தேடிப் பெற வில்லை. பெண்களை மதித்த காலம் அது. அதனால் இந்தக் கூச்சலுக்கு அன்று தேவையே ஏற்படவில்லை.

அவள் உள்ளத்தில் வைத்துப் போற்றிய தெய்வம்; அதனால் பெயரை அவள் கூற அவள் நா பழகவில்லை.

"மன்னனுக்குத் தேர் ஓட்டி வந்துள்ளாரே அவர்தான் அவர்" என்றாள்.

நளன்தான் அயோத்தி மன்னனுக்குத் தேர் ஓட்டி வந்தான் என்பதை அவள் தந்தை அறிந்து கொண்டான்.

அவ்வளவுதான்; நளன் தன் மருமகன்தான்; என் றாலும் மாமன்னன்; அதற்கு உரிய சிறப்புத் தந்து ஆக வேண்டும்; 'வீடியோ காமிராக்களை' அழைப்பதுபோல் முரசு தப்பட்டை நாதஸ்வரம் இன்னும் இத்தியாதி கூச்சல் குழப்பங்களையும் உடன் வரச் செய்து பூக்களை எடுத்துத் தொடுத்து மாலையாக்கி நளனைச் சந்தித்தான்.

"மருமகனே வருக" என்று மதிப்புடன் அழைத்தான். அவன் மறுமொழி கூறாமல் மழுப்பத் தொடங்கினான்.

"யான் வாகுவன்" என்றான்.

அரசியல் பேசினான்; "மன்னர்கள் எனப்படுபவர் மக்களின் தொண்டர்களா தலைவர்களா" என்று கேட்டான் வீமன்.

"தொண்டு செய்வதற்காகத் தலைமை ஏற்றவர்கள்" என்று கூறினான்.

அவன் நுட்ப அறிவை வியந்தான். இவன் நளன்தான் என்பதை அறிந்தான்.

அரசனுக்குத்தான் இந்த நுட்ப அறிவு இருக்க முடியும் என்று தெரிந்தான்; தெளிந்தான்; அறிந்தான்.

உருமாறி இருந்தான்; அது எப்படி இவ்வாறு மாற முடிந்தது? சிந்தித்துப் பார்த்தான்.

அலைச்சல் அவன் மாற்றத்துக்கு காரணம் என்று முடிவு செய்தான்.

கடன் பட்டவர்கள் முக்காடு இட்டுக் கொண்டு முகம் மறைத்துக் கொள்வது இயல்பு; சிலர் தாடி, மீசை வைத்துத் தரித்திரர்கள் போல் காட்சி அளிப்பதும் உண்டு; மொட்டை அடித்துக் கொண்டு முடி இழந்தமையை வெளிப்படுத்து வதும் உண்டு. இப்படிக் குட்டையானவர்களை அவன் இதுவரை பார்த்ததே இல்லை.

''மருட்சி மிக்கது உன் நாடு; கமுக மரத்தின் பாளையை ஐந்தலை நாகம் என்று மந்தி தெளியாது இருக்கும் நாடு உம்முடைய நாடு; நீயும் சுய வடிவு காட்டாமல் அயல்வடிவில் நிற்கிறாய். அதனை மாற்றிக் கொள். வேறு சட்டை போட்டுக் கொள். உடுத்திக் கொள். உருவை மாற்றிக் கொள்'' என்று வேண்டினான்.

வாழ்க்கை நாடகம் அல்ல; ஒளி மறைவுகள் சில காலம் அமையலாம். நீடிக்க முடியாது. நாடகப் பாங்கு இனித் தேவையில்லை.

கார்க்கோடகன் அளித்த அழகிய ஆடை அதனை எடுத்தான். மந்திரக் கோல்போல் அது விளங்கியது; உடுத்திக் கொண்டான். ஆள் மாறினான். நளன் அவர்கள் முன் வந்து நின்றான்.

அரவரசன் அவனுக்குத் தந்த அழகிய ஆடைகளில் ஒன்றினை எடுத்து உடுத்தான்; மற்றொரு துகிலைப் போர் வையாய் மடுத்தான். அவன்தன் பழைய உருவினைப் பெற்றான்.

மகன் ஓடோடி வந்தான். தந்தையைக் கண்டதும் தன் சிந்தையைப் பறி கொடுத்தான். தாமரை ஒத்த அவன்

கண்களில் நீர் துளித்தன. தந்தையின் காலடிகளில் விழுந்து வணங்கினான். தங்கையும் புத்தாடை உடுத்தி இருந்தாள்; பொன் நகைகள் மின்னி அவளுக்கு அழகு தந்தன. அவளும் தந்தையின் திருவடிகளில் விழுந்து வணங்கினாள். புதல்வர்களை எடுத்து அணைத்துக் கொண்டு அளவற்ற மகிழ்வு கொண்டான்.

தமயந்தி மாலையிட்ட நாளில் அவள் கையில் பொன்மாலை தாங்கி இருந்தாள். அந்தக் கோலத்தில் அவள் அவனிடம் வருவாள் என்று எதிர்பார்த்தான். மன்னர் விழித் தாமரை பூத்த மண்டபத்தே பொய்கையிடத்து அன்னம் நடப்பதுபோல நடந்து வந்தாள். வெள்ளைச் சிறகு அன்னம்போல் வந்தவள்; செம்பஞ்சுக் குழம்பு பூசிய சிவந்ததாள் அவை மின்னல்போல் பளிச்சிட்டன. அந்தக் காட்சி அவன்முன் நின்றது.

அவன் எதிர்பார்க்கவில்லை. அவளை அவன் பாழ் மண்டபத்தில்விட்ட காட்சியோடு வந்து நிற்பாள் என்று. அவன் விட்டுச் சென்ற கோலத்தில் அவன் முன் வந்து நிற்பாள் என்று எதிர்பார்க்கவில்லை.

பாதித் துகிலோடும் பாய்ந்து இழியும் கண்ணீரோடும் அவன் முன் வந்து நின்றாள். அவள் குங்குமம் அப்பிய தனம் இப்பொழுது மாசு படிந்த நிலையில் அவளைக் காண நேர்ந்தது. அந்த அலங்காரங்கள் அவளை விட்டு அகன்றன என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

மாசு படிந்த சித்திரம்; அது புதுமையாக நின்றது. அவன் காலடிகளில் விழுந்தது. அவனைக் கண்ட அவள் கண்கள் அவனைக் கண்ணீரால் குளிப்பாட்டின. அவன் விட்ட துளிகள் அவள் திருமுடிமேல் பட்டு அவளை நனைத்தன; அவை அவன் இரக்க உணர்வைத் தீட்டிக் காட்டின; பரிவும் பாசமும் நீ முந்தி நான் முந்தி என்று அணியிட்டுக் கொண்டு வந்தன என்பதை அறிந்தான்.

பிரிந்தவர் கூடினர். ஆனால் பேச இயலாமல் போய் விட்டது. காண வேண்டும் என்று விழைந்தாள், காண முடியாமல் போய்விட்டது. காரணம் அவள் விழிகளை அவள் கண்ணீர் மறைத்தது.

விழிகள் துயில் கொண்டு இருந்த நேரத்தில் அவன் விழிகள் அவளைப் பார்க்காமல் நீங்கின. அவளைவிட்டுப் பிரிந்தான்; அவன் பிரிந்தான் என்பதை அவளால் மறக்க முடியாமல் போய்விட்டது. அதை வினாவாக வைத்து அவனைக் கேட்க விரும்பினாள். பார்வையே பேச விரும்பியது. ஆனால் கண்ணீர் போர்வையாக இருந்து மறைத்துவிட்டது. அதனால் கருத்து பரிமாற்றம் ஏதும் நிகழாமல் போயிற்று.

வாழ்த்துக் கூறுவதற்கு என்றே வானவர்கள் பூக்களைச் சேர்த்து வைத்து மழைபோல் பொழிந்தனர். குளிர்ச்சியைத் தந்தது; நறுமணமும் தந்தது. வண்ணத்தால் அழகும் சேர்ந்தது. பூமாரி பொழிந்தனர் தேவர்கள் என்று எங்கும் பேசினர்.

உத்தமன் இவனைப்போல் எத்திசையும் இல்லை என்று இந்த இமையவர்கள் வாழ்த்துரை வாசித்து அளித் தனர். அது மண்ணுலகத்தில் எதிர் ஒலித்தது. தேவர்களின் பாராட்டினைப் பெற்றான்; அதனால் பெருமை உற்றான்.

கலிதோற்றான்; இவன் வெற்றியை ஏற்றான். தொடர்ந்து இவனை அச்சுவேறு ஆணி வேறாகப் பிரித்து அலசிப் பார்த்தவன் கலியன்; அவன் தேவியின் கற்பும், பொற்பும், அவள் விளைவித்த அற்புதங்களும் கண்டு திகைத்தவன்: அவன் ஒரு நற்சான்று இதழை அழகாக வரைந்து தந்தான். "தேவியின் கற்புக்கும் செங்கோல் முறைமைக்கும் பூஉலகில் ஒப்பார் யாரும் இல்லை" என்று பாராட்டினான்.

''மற்று உனக்கு என்ன வரம் வேண்டும், கேட்டுப் பெற்றுக் கொள்'' என்று பார் அளிக்கும் பார்த்திபனிடம் கூறினான். உலகைக் காக்கும் உயர் வள்ளல் அவனிடம் மடிதட்டிக் கொண்டு திருமகள் இடம் கேட்டது; உதவு வதற்கு விரைந்தது.

''வரம் கேள்'' என்று கேட்டான் கலி.

''தரம் உள்ளதாக இருக்க வேண்டும்'' என்று சிந்தித்துப் பார்த்தான்.

''நீ நல்லது செய்யாவிட்டாலும் கெட்டது செய் யாதே! அதுபோதும்'' என்றான்.

''என் பிறவிக் குணம் அது என் ஜீவனம்; பிழைப்பு; தீயவை செய்வதற்கு என்றே படைக்கப்பட்டவன். அதனால் உன் வரத்தில் சிறிது திருத்தம் செய்து கொள்'' என்று கூறினான்.

''என் கதையை இந்த உலகம் பேசும்; 'நளன் கதை' என்று தலைப்புத் தருவர். இதைக் கேட்கும் நல்லோர் நானிலத்தில் இருப்பர். அவர்களுக்கு எந்தத் தீமையும் செய்யாதே அதுபோதும்'' என்று கேட்டுக் கொண்டான்.

''உன் கதை உலகுக்கு ஒரு படிப்பினை. 'செய்வன திருந்தச் செய்' என்பது நீ கற்றுத் தந்த படிப்பினை உன் கதையைக் கேட்பவர் இனி விழிப்புடன் செயல்படுவர். அவர்கள் வழுக்கி விழமாட்டார்கள். யானும் அவர்களுக்கு இழுக்குத் தரமாட்டேன்'' என்று உறுதி தந்தான்.

''நாட்டில் சட்டங்கள் சரிவரச் செயல்பட்டால் நீதிகள் கெடுவது இல்லை; நெறிகள் பிறழ்வது இல்லை. நீதியும் சட்டமும் நிலை நின்றால் உலகுக்குக் கேடு இல்லை'' என்று கலி கூறி விடைபெற்றான்.

"எந்தக் காலத்தும் உன் சரிதம் கேட்போரை நான் அடையேன்" என்று வாக்குறுதி தந்தான். அது அவனுக்குத் தந்த வரமாக அமைந்தது.

வீமன் விருந்து வைத்தான். அருந்துமாறு அனைவரையும் வேண்டினான்; கூடி இருந்து குளிர்ந்து உண்பது அவர்களுக்கு மகிழ்வு தந்தது. பல்வகைக் கறிகளும் சுவை மிக்க உணவுகளும் பரிமாறப்பட்டன. அயோத்தி மன்னன் அழைக்கப்பட்ட புதிய உறவினனாக ஏற்கப் பட்டான். நாடு மகிழ்வு அடைந்தது.

அயோத்தி மன்னன் நாடு திரும்பப் புறப்பட்டான். மாபெரும் மன்னனை மடைப்பள்ளியில் வைத்து அவனை வருத்தியமைக்கு வருந்தினான். தேர் ஏறிச் செல்பவனைத் தேர் ஓட்டியாக நடத்தியதற்காக வருத்தம் தெரிவித்தான். அவன் காதலியை இவன் மனத்தால் கருதினான். அதைப் பற்றிப் பேசுவது இழுக்கு என்பதால் அதைப் பற்றி எல்லாம் குறிப்பிடவில்லை "தவறு செய்திருந்தால் பொருட் படுத்த வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டான்.

நளன் சிரித்தான்; அவன் செய்தது பேருதவி என்று நன்றி கூறினான். அதனால்தான் தன் துணைவியைச் சந்திக்க முடிந்தது என்று கூறித் தன் நல்ல நினைவுகளை அவனுக்குத் தெரிவித்தான். இருவரும் ஒருவரை ஒருவர் பாராட்டிப் பின் விடை பெற்றுப் பிரிந்தனர். அயோத்தி மன்னன் வெறுமையோடு தன் நகரை அடைந்தான். தன் தவறுக்கு வருந்தினான்.

"அப்பா! எப்பொழுது நம் வீட்டுக்குப் போவது" என்று இளவரசன் கேட்டான்.

"அம்மா! என் பொம்மைகளை நம் வீட்டில் வைத்திருக்கிறேன். போகலாம்" என்றாள் அவன் தங்கை.

''இருந்தது போதும் இனி இருப்பது நம் நிடத நாடு'' என்று சொல்லிப் புறப்பட்டனர்.

கொடிகள் அசைந்தன; முரசுகள் முழங்கின; வளைகள் ஒலித்தன; மக்கள் ஆரவாரத்தோடு வழி அனுப்பினர்.

தேர் ஏறித் தெருவில் சென்றனர். வழியில் சோலைகள் ஆறுகள், பொய்கைகள், குன்றுகள் முன்பு இருந்தது போலவே இருந்தன. அவற்றை அவன் அவளுக்குக் காட்டிச் செல்லவில்லை. பிள்ளைகளும் ஊர் போய்ச் சேர்வதில் உவகை காட்டினர்.

''இனி நம் ஊர் எவ்வளவு தூரத்தில் உள்ளது'' என்று சிறுவர்கள் கேட்டனர்.

''இந்த மலை கடந்து ஏழுமலைகளுக்கு அப்பால் விந்தம் என்னும் நம் நகர் உள்ளது'' என்று நளன் கூறினான்.

விடியற் பொழுதில் அவர்கள் தம் நகரை அடைந்தனர். சூரியனும் கிழக்கே உதித்தான்.

இழந்த நாட்டைத் திரும்பப் பெறாமல் நகருள் நுழைய அவன் விரும்பவில்லை.

சூதாடித் தோற்ற நாட்டை மறுபடியும் சூதாடிப் பெறுவதே முறை என்று காத்திருந்தான்.

''ஒட்டுவதற்கு உன்னிடம் உள்ள பொருள் யாது'' என்று முன்பு கேட்டான் புட்கரன்.

முன்பு அவனைச் சந்திக்க முடியாமல் போய்விட்டது. அங்கிருந்தால் கேடு வரும் என்று நாட்டை விட்டு நீங்கினான்.

ஒட்டுவதற்கு உறுபொருள் தன்னிடம் இப்பொழுது மிகுதியாக உள்ளது. அதனால் சூதாடி மீட்பது என்று முடிவு செய்தான்.

நகரத்தின் புறத்தில் ஒரு சோலையில் தங்கினான். தூதுவர் சிலரை அனுப்பிச் சூது ஆட அவனை வருமாறு அழைத்தான்.

அழைத்தால் வராமல் இருப்பது எப்படி? கட்டுக் குலையாமல் நளன் தன் துணைவியோடு இருப்பதைக் கண்டான். பட்டுப் புடவையில் அவள் பளிச்சிட்டது அவன் கண்ணைப் பறித்தது. அவர்கள் அழிந்து போய் இருப்பார்கள் என்று கணக்கிட்டு இருந்தான்.

குத்து விளக்காக அவன் குடும்பம் ஒளி பெற்றுத் திகழ்வதைக் கண்டான். அரசிக்கு உரிய அந்தஸ்துடன் அவன் துணைவி அமர்ந்திருப்பதைக் கண்டான். வயிறு எரிந்தான்.

இனி என்ன செய்வது? உறவினன் போல் பழக முனைந்தான். நல்லவன் போல் நடித்தான். பழகியவன் போல் பல் இளித்தான். அவனை விசாரித்தான். "மக்களும் மனைவியும் சுகம்தானா!" என்று வினவினான். நலம் விசாரித்து நட்புக் காட்டினான்.

அவன் மதி மயங்கியது; தன் நிலை தடுமாறினான். பழைய வெற்றி கலியன் தந்தது என்பதை மறந்து விட்டான். "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்ற உண்மையை எண்ணிப் பார்க்கவில்லை.

தன் ஆற்றலை அவன் நம்பிக் களத்தில் இறங்கினான். பின்னணியில்லாமல் சுயேச்சையாக நிற்கும் தனி மகனாகச் செயல்பட்டான்.

"ஆடுவதற்கு என்ன உள்ளது?" என்று கேட்டான்.

நளன் தன் கைமோதிரத்தைக் காட்டி அதை முதலாக வைத்து இழந்த பொருள்கள் ஒவ்வொன்றாகத் திரும்பப்

பெற்றான். அயோத்தி மன்னன் கற்பித்த நினைவு ஆற்றல் அவனுக்குக் கைகொடுத்தது. கலியன் புட்கரனுக்குத் துணை நிற்கவில்லை. தனித்து நின்று போட்டி இட்டான். மண்ணை வாரிக் கவ்விக் கொண்டான். அவன் ஆட்சி கவிழ்ந்தது. இப்படித்தானே வருணிக்கிறார்கள். ஆட்சி கைமாறியது; நளன் வேந்தன் ஆயினான்.

நளன் இழந்த நாட்டை மீண்டும் பெற்றான். அந்நியர் ஆட்சி அகன்றது என்பதால் மக்கள் ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே என்று பாடி மகிழ்ந்தனர்.

''நளன் வாழ்க! காதல் வெல்க'' என்று முழக்கம் எழுப்பினர்.

காதலுக்குக் கிடைத்த வெற்றி என்று நகரத்து இளைஞர் அவர்கள் தம் காதலியருடன் உரையாடினர். இதை ஒரு சான்றாக வைத்துப் பேசினர்.

''வாழ்ந்தால் நளன் தமயந்தி போல் வாழ்வோம்'' என்று இளைஞர்கள் உறுதி எடுத்துக் கொண்டனர்.

'அன்னத்தின் ஓவியம்' அந்த நாட்டுச் சின்னத்தின் அடையாளமாக மாறியது. கன்னியர்கள் அன்னப் பறவை யிடம் அளவற்ற பிரியம் காட்டினர்.

அன்னத்தின் மீது நம்பிக்கை வைத்தனர். இலக்கி யத்தில் அது அழியா இடம் பெற்றது. நல்லது கெட்டது அறிந்து செயல்படும் பறவை என்ற புகழ் நிலைத்தது.

அந்த நாட்டு மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவு கூற முடியாமல் போய்விட்டது. புலவர்கள் சில அளவைகள் வைத்திருந்தனர். மகிழ்ச்சி என்பதற்குச் சில அளவு கோல்கள் கருவிகள் அவர்கள் அகராதியில் வைத் திருந்தனர்.

மழை மேகத்தைக் காணும் மயில், விழி பெற்ற குருடன், நீர் பெற்ற நிறை வயல் இவற்றை அளவாக வைத்திருந்தனர். பார் பெற்று மாதோடு மன்னன் வரக்கண்ட மாநருக்கு இவை மூன்றனையும் உவமை கூறினர்.

"நளன் சிறப்புற ஆட்சி செய்தான். நீதி வழுவ வில்லை; நேர்மை குறையவில்லை அவன் புகழ் நிலைத்த ஒன்று" என்று மக்கள் பாராட்டினார்.

இந்தக் கதையை வியாசர் தருமனுக்கு உரைத்தார். அவனுக்கு நம்பிக்கை ஊட்டினார்.

# கவிதை நலன்கள்

கதை பாரதம் தந்தது; அதனைப் பாவில் வடித்துத் தந்தவர் புகழேந்தி. அவர் கவிதைச் சிறப்புகள் நம் நெஞ்சை அள்ளுவனவாக உள்ளன. அவர் கவிதைகளை மூன்று தலைப்பில் காணலாம். (1) அணி நலன் (2) சொல்லாட்சிகள் (3) செய்திகள். மூன்றும் அவர் கவிதை நலனுக்கு அடிப்படை என்று கூறலாம்.

## 1. திருமகளின் நாட்டம்

உவமையணிகள் அவற்றில் அவரது கவித்துவம் தனித்தன்மையோடு விளங்குகின்றது.

நிடத நாடு திருமகளின் கண்கள் என்று கூறுவது மிகச் சிறப்பாக உள்ளது. வயல்களில் கயல்கள் புரள்கின்றன; கருங்குவளை முகை நெகிழ்கின்றது; தாமரையின் தளை அவிழ்கின்றது என்று கூறுகின்றார். கண்களின் பிறழ்ச்சியைக் கயல்களிலும், நிறத்தைக் கருங்குவளையிலும், அழகினைத் தாமரையிலும் காட்டுகின்றார். இதனால் இவை பூமடந்தையின் கண்கள்போல் உள்ளன என்று கூறுவது மிகவும் சிறப்பாக உள்ளது.

நாட்டு வருணனையில் மூன்று செய்திகளைக் கூறி அதனால் அது திருமகளின் கண்கள் போல் உள்ளது என்று கூறுவது நயம் மிக்கதாக உள்ளது. பூ மடந்தை என்பது திருமகள் என்று கொள்வது தக்கது ஆகும். நிடத நாடு இக்காரணத்தால் திருமகளின் கண்போல் உள்ளது என்று நூலினைத் தொடங்குவது காவியத்துக்கு அழகு செய்கிறது.

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப் - பூமடந்தை
தன்னாட்டம் போலும் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டும் நாடு

## 2. மற்றொன்று கிளத்தல்

நாட்டு மக்கள் நேர்மை தவறாதவர்கள். அழுகை கலக்கம் இவற்றைக் காணாதவர்கள்; சொற் சோர்வு இல்லாதவர்கள், நெறி பிறழாதவர்கள் என்பது கவிஞர் சொல்ல வந்த கருத்து.

அதை நேரே கூறாமல் உடன்பாட்டு வாய்பாட்டில் வேறு வகையில் கூறுவது அவர் சொல்லாட்சித் திறனைக் காட்டுகிறது.

வெஞ்சிலையே கோடுவன; மென்குழலே சோருவன
அஞ்சிலம்பே வாய்விட் டரற்றுவன - கஞ்சம்
கலங்குவன; மாளிகைமேல் காரிகையார் கண்ணே
விலங்குவன மெய்ந்நெறியை விட்டு

''வில்வளைவது; கூந்தல் சோர்வது; சிலம்பு அரற்றுவது; நீர்த்தடாகங்கள் கலங்குவன; மகளிர் கண்கள் பிறழ்வன'' என்று கூறுவது சிறப்பாக உள்ளது.

## 3. முரண்தொடை நயம்

'தெரிவன' 'தெரியாதன' என்று முரண்தொடை நயம் அமையச் சொற்களை ஆள்வது நயம் தருகிறது. அதே போல 'இரவு' 'கரவு' இயைபுத் தொடை அமைத்துக் கவிதைக்குத் தொடை நயம் தோற்றுவிக்கக் காண்கிறோம்.

'இல்லாதன கல்லாதன' என்பவற்றில் சொல்லாட்சி நயம் தோற்றுவிக்கின்றார். வறுமை இல்லை; அதனால் இரத்தலும் இல்லை; களவு செய்தலும் இல்லை என்று கூறுவது நயம் மிக்கதாக உள்ளது.

தெரிவனநூல் என்றும் தெரியா தனவும் .
வரிவளையார் தங்கண் மருங்கே - ஒரு பொழுதும்
இல்லா தனவும் இரவே இகழ்ந்துஎவரும்
கல்லா தனவும் கரவ

## 4. கருத்து அழகு

ஒரு துறையில் மானும் புலியும் நீர் குடிக்கிறது என்பார் கவிஞர்; மக்கள் பகை இன்றி வாழ்ந்தனர் என்ற கருத்து அறிவிக்கின்றார்.

மாறுபட்ட கோட்பாடு உடையவர்கள் ஒருவரை ஒருவர் மதித்து வாழ்வது உயர்ந்த பண்பாடு என்பதை அறிவுறுத்த அவர் கூறும் செய்தி கருத்து அழகு கொண்டதாக விளங்குகிறது.

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை அறம்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான் - மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற்பருந்தும்
ஒரு கூட்டில் வாழ உலகு

மாதர் அருகிருந்து ஊட்டும் பசுங்கிளியும் கொல்லும் தொழிலை உடைய பருந்தும் ஒரே கூட்டில் வாழ்கிறது. அப்படி வாழ அவன் உலகினைத் தன் குளிர்ந்த வெண்கொற்றக் குடையின் கீழ் செம்மை அறம் விளங்க மக்களைக் காத்து அரசு செய்தான் என்று கூறுகிறார்.

## 5. மருட்கை அணி

அன்னப் பறவை பொய்கையில் வந்து தோன்றியது என்கிறார் கவிஞர். அப்பொழுது அதன் சிறகு வெண் நிறத்தால் சோலை தன் பசுமை நிறத்தை இழக்கிறது என்றும், பொய்கைத் தலம் அதன் தாள் நிறத்தால் சிவந்தது என்றும் கூறுவது மருட்கை உணர்வினைத் தருகிறது. அதனால் இதனை மருட்கை அணி என்று கூறலாம்.

நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தாற் பொய்கைத் தலம்சிவப்ப மாணிறத்தான்
முன்னப்புள் தோன்றும் முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு.

அவன் மட்டும் நிறம் மாறவில்லை. கொள்கை மாறாதவன் என்ற கருத்தினை 'மாண் நிறத்தான்' என்ற சொல்லாட்சியில் உணர்த்தக் காண்கிறோம்.

'அப்புள்' என்ற சொல்லில் இருவேறு பொருள் உண்டாக்கித் தருவது 'யமகம்' என்று கூறுவர். சிலேடை என்பது ஒரே தொடருக்கு இரண்டு பொருள்கள் தோன்ற அமைத்தல் என்பர். இது இருவேறு இடத்தில் இருவேறு பொருள் தோன்ற அமைக்கப்படுவது தனிச்சிறப்பு ஆகும்.

"அப்புள் தோன்றும் முளரியில் வைகும் அன்னம்" என்கிறார். அப்புள் என்றால் தண்ணீர் என்பது பொருள். 'நீரில் தோன்றும் தாமரை' என்பது அதன் பொருள் ஆகிறது. அடுத்த வரியில் 'அன்னப்புள்' - அன்னப் பறவை என்று கூறுகிறார்.

'முன்னப்புள் அன்னப்புள்' என்று கூறுவது சொல் லாட்சிச் சிறப்புத் தருகிறது.

## 6. அணி நடை மணி நடை

"அன்னமே நீ அஞ்சாதே! உன் அழகிய நடையும் மகளிர் மாட்சிமிக்க நடையும் ஒப்பிட்டுக் காணவே உன்னைப் பிடித்துவரச் செய்தேன்" என்கிறான் நளன்.

அன்னத்தின் நடை அழகு மட்டும் கொண்டது. மகளிர் நடை மதிக்கத் தக்கது என்ற பொருள் வேறுபாடு தோன்ற மணிநடை என்று கூறுவது தனிச்சிறப்பு மிக்கதாக அமைந்துள்ளது.

அஞ்சல் மடவனமே உன்றன் அணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும் - விஞ்சியது
காணப் பிடித்ததுகாண் என்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன்

## 7. பெண்மை அரசு

பெண்களின் நற்குணங்களை அழகிய உருவகங்களில் தருவது தனித்தன்மை கொண்டு விளங்குகிறது. பெண்மை இயலுக்குத் தந்த சித்திரம் இது.

நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா - வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு

நாற்குணம்-அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்பன நான்கு வகைப் படைகள்; ஐம்புலன் அமைச்சர்கள் என்கிறார். கண்கள் வேல், வாள்; முகம் வெண் கொற்றக் குடை; இதன் கீழ் பெண்மை அரசு ஆள்கிறது என்கிறார். பெண்ணுக்கு உரிய தற்காப்புகள் இவை என்கிறார் கவிஞர். 'தற்காத்து' என்பார் வள்ளுவர். அதற்கு விளக்கமாக அமைந்துள்ளமையைக் காண முடிகிறது.

## 8. சொல்லாட்சிகள்

உனக்கும் தமயந்திக்கும் உள்ள உறவு எத்தகையது என்று கேட்கிறான் நளன். அதற்கு விடை தருகிறது அன்னப் பறவை.

"நாங்கள் பூஞ்சோலையில் வாழும் பறவைகள்; அவள் அரண்மனைக்குச் செல்வது வழக்கம். நடையைக் கற்பதற்கு நாங்கள் செல்கிறோம்; மன்மதன் படைகற்க அங்கு வருவான் என்று கூறுவது நயம் மிக்கதாக உள்ளது. நடை கற்க யாம் செல்வோம் படைகற்க அவன் வருவான்" என்பது சுவை தரும் செய்தியாக அமைகிறது.

பூமனைவாய் வாழ்கின்ற புட்குலங்கள் யாம்; அவள் தன்
மாமனைவாய் வாழும் மயிற்குலங்கள் - காமன்
படைகற்பான் வந்தடைந்தான்; பைந்தொடியாள் பாத
நடைகற்பான் வந்தடைந்தோம் யாம்

## 9. சொல்திறன்

அன்னம் நளனைப் பற்றித் தமயந்திக்கு அறிமுகம் செய்கிறது. அதில் அதன் சொல் திறம் வெளிப்படுகிறது. அவள் மனங்கொள்ளத் தக்க வகையில் எப்படிக் கூற வேண்டுமோ அப்படிக் கூறுவது சொல் திறனைக் காட்டு கிறது.

செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான்
மங்கையர்கள்
தம்மனத்தை வாங்கும் தடந்தோளான்-மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பான் வேந்தன் உனக்கு

''அவன் மனம் செம்மையது; இரக்க உணர்வினன்; செங்கோன்மைச் சிறப்பு உடையவன். மகளிர் மயங்கும் அழகன்; நளன் என்பது அவன் பெயர். அவனுக்கு இரு நிலத்தும் நிகர் யாருமே கூற முடியாது'' என்று கூறுகிறது. சொல்திறன் எப்படி அமையவேண்டும் என்பதற்கு இது எடுத்துக் காட்டாக உள்ளது.

## 10. சொல்லாட்சிச் சிறப்பு

அன்னத்தின் வருகையை நளன் ஆவலாக எதிர் பார்க்கிறான். நெடுவானில் மேகம் பின்னுக்கு ஓட அன்னம் வருகிறது. என்கிறார். அதனை நளன் கண்டான் என்கிறார். அவன் ஆர்வத்தைச் சொல்லடுக்கில் வைத்துக் கூறுவதும் உருவகச் சொற்களில் கூறுவதும் அழகு தருகின்றன. அழியாத சொல் வழக்குகளாகவும் இவற்றுள் ஒன்று இடம் பெற்றுவிட்டது.

'வழிமேல் விழிவைத்து' என்ற சொல்லாட்சி புகழேந்தியார் படைத்தது; 'வழிமேல் விழியை வைத்து' என்பது உருவகத் தொடர். இலக்கியத்தில் இது அழியாத

இடம் பெற்றுவிட்டது. இதனைத் தொடர்ந்து ''மொழிமேல் செவி வைத்து மோகச் சுழிமேல் நெஞ்சோட வைத்து'' என்று கூறுவது மேலும் அழகு தருகிறது.

> வழிமேல் விழிவைத்து வாள்நுதலாள் நாம
> மொழிமேல் செவிவைத்து மோகச் - சுழிமேல்தான்
> நெஞ்சோட வைத்தயர்வான் கண்டான் நெடுவானில்
> மஞ்சோட அன்னம் வர

'வைத்து' 'வைத்து' என்று திரும்பத்திரும்பக் கூறுவது சொற் பொருள் பின்வரு நிலை அணி என்பர். மஞ்சு - மேகம் - மேகம் ஓட அன்னம் வரக் கண்டான் என்று முடிக்கின்றார்.

## 11. அரிய உவமை

வறியவர் செல்வர் மனையில் நின்று கேட்டுப் பெறும் நிலையை அழகாகச் சித்திரிக்கிறார். அந்த நிலையில் நளன் இருந்தான் என்று கூறுவது நெஞ்சைத் தொடுகிறது.

> முகம்பார்த் தருள்நோக்கி முன்னிரந்து செல்வர்
> அகம்பார்க்கும் அற்றோரைப் போல - மிகுங்காதல்
> கேளா விருந்திட்டான். அன்னத்தைக் கேளாரை
> வாளால் விருந்திட்ட மன்.

வறியவர் செல்வர்தம் முகம் பார்த்து, அவர்கள் மனநிலை அறிந்து, அருள் உள்ளம் அறிந்து இரக்கின்றனர். பிறகு அவர் உள்ளப் பாங்கு அதனையும் பார்த்தே அவர்களிடம் இரக்கின்றனர். அதைப் போன்று அவன் அவள் கூறும் காதற் செய்திக்காக அதனை எதிர் நோக்கித் தாழ்ந்து நின்றான். பகைவரை (கேளாரை) வாளால் விருந்து செய்தவன். அவள் சொற்களை இரந்து கேட்டான் என்கிறார். இரவலர்தம் உள்ளப் பாங்கைச் சித்திரித்து அதனை உவமையாகத் தருவது சிறப்பாக உள்ளது.

## 12. அழகு சுமந்து இளைத்த ஆகத்தாள்

நாரதன் தமயந்தி சுயம்வரம் குறித்து இந்திரனிடம் செய்தி செப்புகின்றான். அவள் பேரழகி என்று கூறுகிறான். அதனை அவன் கூறுவது அழகிய சொல்லாட்சியைப் பெற்று உள்ளது.

அவள் அழகி; மெல்லியல் படைத்தவள்; அழகு சுமந்து அதனால் மெத்தவும் இளைத்துவிட்டாள் என்று கூறுவது நயம் மிக்கதாக உள்ளது. அதேபோல் 'பழகு கருங் கூந்தற் பாவை' என்று அவள் வடிவினைக் கூறுவது அழகு தமிழாக அமைந்துள்ளது என்று கூறலாம்.

"அவள் வீமன் குடிக்கு ஓர் நிலை பெற்ற விளக்கு; அவள் காமனுக்கு ஒரு பாதுகாப்பு" என்றும் கூறுகிறார்; பாவை போன்றவள், அவள் அழகினள், வீமன் மகள், கவர்ச்சி மிக்கவள் என்ற செய்திகள் இக்கவிதையில் தருகிறார்.

அழகு சுமந்திளைத்த ஆகத்தாள்; வண்டு
பழகு கருங்கூந்தற் பாவை - மழகளிற்று
வீமன் குலத்துக்கோர் மெய்த்தீபம்; மற்றவளே
காமன் திருவுக்கோர் காப்பு

## 13. உவமை அழகு

இந்திரன் இட்ட ஏவல் ஒரு பக்கம்; தமயந்திபால் கொண்ட ஆவல் மற்றொரு புறம்; இரண்டுக்கும் இடையே அவன் அலைமோதும் உள்ள நிலை; நெசவுத் தொழிலாளி அவன் அசைத்து இயக்கும் பாவு (மூங்கில் குழல்) போன்றது என்று கூறுவது சிறப்பாக உள்ளது." இரு புறமும் அது மாறி மாறிச் சென்று இடிக்கிறது; அதேபோல் அவன் உணர்வுகள் உதைக்கின்றன; அவனை வதைக் கின்றன" என்கிறார்.

தேவர் பணிதலைமேற் செல்லும்; திரிந்தொருகால்
மேவுமிளங் கன்னிபால்; மீண்டேகும் - பாவிற்
குழல்போல நின்றுழலும் கொள்கைத்தே பூவின்
நிழல்போலும் தண்குடையான் நெஞ்சு

## 14. குவளையும் தாமரையும்

அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் என்ற செய்தியைப் பூக்களில் வைத்துக் கூறுவது பாவிற்குத் தனிச்சிறப்புத் தருகிறது. உருவகங்களில் அமையும் சொல் லாட்சிகளாக விளங்குகின்றன. அவள் விழிகள் குவளை; அவன் கண்கள் தாமரை என்பதை வைத்து இக் கவிதையைப் புனைந்துள்ளார்.

அவர்கள் காதல் நோக்கு அதனை வள்ளுவர் போலவே பொது நோக்கு என்று கூறுகிறார். அந்தக் காதல் நோக்கு அவர்கள் பார்த்த பார்வைகளைக் "குவளையில் தாமரை சென்று பூத்தது"; "குவளை தாமரையைக் கண்டு பூத்தது" என்று கூறும் அழகு சிறப்பாக உள்ளது.

அவள் அவனை நோக்கினாள் என்று கூறாமல் அவன் நோக்கு கண்டு அவள் கண்கள் மலர்ச்சி பெற்றன என்று கூறுவது நுட்பமான செய்தியாகிறது. "பூங்குவளை தாமரைக்கே பூத்தது" என்று கூறுவது காணத் தக்கது.

இவன் அவள் கண்களைக் கண்டு மகிழ்ந்தான் என்கிறார். 'தேங்குவளை தன்னிலே செந்தாமரை மலர' என்கிறார்.

குவளையில் தாமரை மலர்ந்தது என்பது அவனுக்கும் தாமரைக்கே குவளை பூத்தது என்று அவளுக்கும் கூறுவது சிறப்புமிக்க செய்திகள். அவள் அவனை நிமிர்ந்து நோக்கி னாள் என்றால் தவறாக முடியும்.

'யான் நோக்கும் காலை நிலன் நோக்கும்' என்றார் வள்ளுவர்.

அவளும் நோக்கினாள் என்றால் அது அவள் பெண்மைக்குச் சிறிது இழுக்காகிவிடும். கம்பரைப் போல் இவர் கூற்று அமையாமல் அவன் நோக்கில் அவள் மலர்ச்சி பெற்றாள் என்பது புகழேந்தியின் சொல்லாட்சிச் சிறப்பு; தனித் தன்மையும் ஆகிறது.

தேங்குவளை தன்னிலே செந்தா மரைமலரப்
பூங்குவளை தாமரைக்கே பூத்ததே - ஆங்கு
மதுநோக்கும் தாரானும் வாள்நுதலும் தம்மில்
பொதுநோக்கு எதிர்நோக்கும் போது

## 15. அந்திப் பொழுது

அந்திப் பொழுதை வருணிக்கிறார் கவிஞர். மல்லிகை முகைகள் விரிகின்றன; பூக்கின்றன. மற்றும் பல்வகை மலர்கள் பூத்து அழகு செய்கின்றன. முல்லை எனும் பூவும் பூத்து அழகு செய்கிறது. மாலையாகிய அந்திப்பொழுது மெல்ல வந்து சேர்கிறது என்கிறார் கவிஞர். இதனை உருவகத்தில் கூறுவது தனிச்சிறப்புப் பெறுகிறது.

சங்குகளில் வண்டுகள் வாய் வைத்து ஊதுகிறது. மன்மதன் மெய்க் காவலனாக வருகிறான். மெல்ல நடந்து வருகிறது மாலைப் பொழுது தோளில் முல்லை மாலை ஏற்று என்கிறார். அழகிய உருவகமாக இக்கவிதை அமைகிறது.

மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப-
முல்லையென்னும்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை அந்திப் பொழுது

## 16. உவமை உருவகம் கலத்தல்

ஒரே கவிதையில் உவமை இடம் பெறுகிறது. மற்றும் ஓர் உருவகம் உவமையோடு பின்னிப் பிணைத்து அழகிய ஓவியத்தைப் படைக்கிறார்.

மன்னர்கள் தமயந்தியை விழித்த கண் வாங்காமல் பார்க்கின்றனர். அவர்கள் இடையே இவள் புகுகின்றாள். அவர்கள் விழிகளைத் தாமரை என்கிறார். அதனால் அம் மண்டபத்தை 'விழித்தாமரை பூத்த மண்டபம்' என்று கூறு கிறார். மண்டபத்தில் எப்படித் தாமரை பூக்கும்? தாமரை பூத்த மண்டபம் அது என்கிறார். 'விழித்தாமரை' என்பதால் அது பொருந்துகிறது.

அதனை வளப்படுத்தும் வகையில் அடுத்துள்ள செய்தி அமைகிறது. அம்மண்டபத்தில் தமயந்தி புகுந்தாள். பொய்கையிடத்து அன்னம் போவதே போன்று அவள் புகுந்தாள் என்கிறார்.

அந்த மண்டபம் பொய்கையாகிவிடுகிறது. விழித் தாமரை பூத்த பொய்கையில் பாவை புகுந்தாள் என்று கூறி இருக்க வேண்டும். அதனை நிறைவு செய்யும் வகையில் பின்பு அவர் அமைக்கும் உவமை நிறைவு செய்கிறது.

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்-
மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய் போவதே போன்று

## 17. தமிழமுது சொல்லாட்சி

அரசர்களைச் சேடி ஒருத்தி அறிமுகம் செய்கிறாள். சோழனுக்கு முதலிடம் தருவது அவர் தமிழ்ப் பற்றையும்,

நாட்டுப் பற்றையும் காட்டுகிறது. தமிழ் மன்னனுக்கு முதலிடம் தருகிறார்.

காவிரியைப் 'பொன்னி' என்று உருவகப்படுத்திக் கூறுவது சிறப்பாக உள்ளது. மழை நீரை அமுதம் என்றார் வள்ளுவர். அதை உள்ளடக்கிப் 'பொன்னி அமுதம் புதுக் கொழுந்து' என்கிறார். புகழேந்தி; நீரைப் புதுக் கொழுந்து என்பது அடுத்த உருவகம். அது கமுகின் சென்னி தடவுகிறது என்கிறார். உருவகச் சொல்லாட்சிகள் இத் தொடரை அழகு படுத்துகின்றன. ஒவ்வொரு சொல்லும் இனிமையைத் தருகிறது. 'பொன்னி அமுதப் புதுக் கொழுந்து' என்பது காவிரிப் புது வெள்ளத்தில் நீர்த் துளிகளைக் குறிக்கின்றது. நீரை அமுதம் என்று சொல்வது வள்ளுவர் கருத்தை உள்ளடக்கியதாக உள்ளது.

> பொன்னி யமுதப் புதுக்கொழுந்து பூங்கமுகின்
> சென்னி தடவும் திருநாடன் - பொன்னிற்
> சுணங்கவிழ்ந்த பூண்முலையாய் சூழமரிற் றுன்னார்
> கணங்கவிழ்ந்த வேலனிவன் காண்.

## 17. மக்கள் செல்வம்

மக்கள் செல்வத்தின் மாட்சிமையைக் கவிஞர் மிக அழகாகக் கூறுகிறார். வள்ளுவர் கருத்துகளை உள்ளடக்கி அவற்றைத் தொகுத்து ஒரே கவிதையில் தருவது செறிவும் அழகும் கொண்டு விளங்குகின்றன

> பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
> றென்னுடைய ரேனும் உடையரோ - இன்னடிசில்
> புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
> மக்களையிங் கில்லா தவர்?

"இன்னடிசில் புக்குஅளையும் தாமரைக் கை பூ நாறும் செய்ய வாய் மக்கள்" என்ற சொல்லாட்சி அழகும் இனிமையும் தருகிறது.

## 18. தற்குறிப்பேற்ற அணிகள்

கடற்கரை வழியாக நளன் அயோத்தி செல்கிறான். வழியில் தன் துயரை வாய்விட்டுப் பேசாத நண்டோடும், எதிர் உரைதராத கடலோடும் கூறிப் பகிர்ந்து கொள்கிறான்.

அவன் செய்த கொடுமையை அடுக்கிக் கூறுவது அழகு தருகிறது. சோகத்தை மிகுவித்துக் காட்டுகிறது. மற்றும் மோனைகள் ஓசை இனிமை தந்து உணர்வைக் கூட்டுகிறது.

காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ - நாதம்
அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கலவ ஓடி
ஒளிக்கின்ற தென்னோ உரை?

காதலியைக் கைவிட்ட பாதகன் என்பதாலும் பார்க்கத் தகாதவன் என்பதாலும் ஓடி ஒளிக்கின்றாயோ என்று வினவுகின்றான். அலவன் என்பது நண்டைக் குறிக்கும் சொல்.

மோனைத் தொடை அழகும் எதுகை நயமும் இக் கவிதைக்கு உணர்வு சேர்க்கின்றன.

நண்டு செய்வது அது யார் வந்தாலும் தன்குழிக்குள் சென்று மறைந்துவிடும். இவனைக் கண்டு இவன் தகாதவன் என்பதற்காகச் செல்லவில்லை. தன் குறிப்பை அதன்மீது ஏற்றிக் கூறுவதால் இது தற்குறிப்பேற்ற அணி யாகிறது.

## 19. சிலேடைநயம்

மற்றும் அடுத்துள்ள கடல் நீரைப் பார்க்கிறான். அலைகள் கரையில் வருகின்றன. பின்நோக்கிச் செல் கின்றன. புரண்டு விழுகின்றன. இரைச்சல் இடுகிறது. அதனை நாவாய் குழற நடுங்குவதாகக் கூறுகிறான்.

“தீவாய் அரவு அகற்றினேன்; அத்தகைய இரக்க உணர்வு உடையவன் யான்; காதலியை இரவு அகற்றி வந்தேன். இது மிகவும் கொடுமை”.

“இதைப் போல நீயும் உன் காதலியைக் கைவிட்டு விட்டு வந்தாயோ! இரவில் சொல்லாமல் கொள்ளாமல் பிரிந்து வந்தாயா! என்னைப் போலவே நீ அலைகிறாய் மனம் குலைகிறாய் நிலை தளர்கிறாய் எனக்கு விளங்க வில்லையே” என்கிறான். இதுவும் தற்குறிப்பேற்ற அணியாகிறது.

“நாவாய் குழற நடுங்குறுவாய்” என்பதில் சிலேடை நயமும் அமைந்துள்ளது. நாவும் வாயும் குழற என்பது ஒரு பொருள். நாவாய் மரக்கலம் என்ற பொருள் உடையது; கடலில் மரக்கலம் அசைந்து செல்கிறது. அதை வைத்து நாவாய் குழற என்றும் கூறுவதாக அமைகிறது.

போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய் - தீவாய்
அரவகற்றும் என்போல் ஆர்கடலே மாதை
இரவகற்றி வந்தாய்கொல் இன்று

## 20. இருவேறு நிலைகள்

கண்ணகி மதுரையில் கணவனோடு புகுந்தாள். வெளியே போகும் போது தனியே சென்றாள். இதை நினைத்துப் பார்க்கிறாள். இருவேறு காட்சிகளை ஒரே இடத்தில் வைத்துச் சோகத்தைப் பேசுகிறாள். “கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன். மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கு” என்கிறாள். இருவேறு நிலைகளை ஒருங்கு உரைத்து முரண்பாடு காட்டும் காட்சி இது.

இதே போன்று பாரி மகளிர் தந்தை இழந்த நிலையில் கையறு நிலையாகப் பாடுகின்றனர். “அற்றைத் திங்கள்

அவ்வெண்ணிலவில் எந்தையை உடையேம்; இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில் எம் தந்தையும் இல்லை; எம் நாட்டையும் பிறர் கொண்டுவிட்டனர்'' என்று கூறு கின்றனர். இந்த வேறுபட்ட முரண்பட்ட காட்சிகள் நெஞ்சை உருக்குகின்றன.

அதே போன்று தமயந்தியின் கூற்றும் இதில் இடம் பெறுகிறது. மாற்று உருவில் கண்டு வந்து தோழியர் அவனைப் பற்றி விவரிக்கின்றனர். புகையுண்ட கையனாக அவன் விளங்குவதை எண்ணிப் பார்க்கின்றாள். அன்று தன்னைத் திருத்தி அழகு செய்த கைகள் இன்று வருத்திக் கடுமை உற்றனவோ என்று கூறுகிறாள்.

அந்தக் காட்சி இக்கவிதையில் இடம் பெறுவது கவிதையில் சோகத்தின் உச்சியைத் தொடுகிறது.

> கொங்கை யளைந்து சூழல் திருத்திக் கோலஞ்செய்
> அங்கை யிரண்டும் அடுபுகையால் - இங்ஙன்
> கருகியவோ என்றழுதாள் காதலனை முன்னாள்
> பருகியவேற் கண்ணாள் பதைத்து

## 21. பல் பொருள் உவமை

நாட்டை மீண்டும் பெறுகிறான் நளன். ஆட்சியில் அமர்கிறான் அவன். இந்த நிலையில் மன்னனின் வருகை கண்டு மக்கள் உவகை கொள்கின்றனர். அதற்கு உவமை கள் பல அடுக்கிக் கூறுகிறார் கவிஞர். எந்த உவமையை இதற்கு யான் எடுத்துக் கூறுவது என்று மருட்கை தோன்றக் கூறுகிறார். பல பொருள்களை உவமை கூறுவது பாவிற்கு அழகு தருகிறது.

> கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
> நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ - பார்பெற்று
> மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்கு
> ஏதோ உரைப்பன் எதிர்?

## 22. சொற்பொருள் பின் வருநிலை அணி

வந்த சொல்லை மீண்டும் வைத்துச் சொல் நயம் தோற்றுவித்தல் இவர் பாடல்களில் காணப்படும் தனிச் சிறப்பு என்பது அறிய வருகிறது.

'இழந்து' என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து கவிதைக்குச் சொல் நயம் தருகிறது.

கண்ணிழந்து மாயக் கவறாடிக் காவலர்தாம்
மண்ணிழந்து போந்து வனம்நண்ணி - விண்ணிழந்த
மின்போலும் நூல்மார்ப மேதினியில் வேறுண்டோ
என்போல் உழந்தார் இடர்?

'கிடந்த' என்ற சொல் மீண்டும் மீண்டும் இடம் பெற்று அழகு தருகிறது.

அறங்கிடந்த நெஞ்சும் அருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்தோள் வலியும் - நிலங்கிடந்த
செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு

'வைத்து' என்பது மீண்டும் மீண்டும் வந்து புதுமை தருகிறது.

வழிமேல் விழிவைத்து வாள்நுதலாள் நாம
மொழிமேல் செவிவைத்து மோகச் - சுழிமேல்தன்
நெஞ்சோட வைத்தயர்வான் கண்டான் நெடுவானில்
மஞ்சோட அன்னம் வர

'முகந்த' என்ற சொல் புதுப் புதுப் பொருளில் ஆளப் படுகிறது.

இசைமுகந்த வாயும் இயல்தெரிந்த நாவும்
திசைமுகந்தால் அன்ன தெருவும் - வசையிறந்த
பொன்னாடு போந்திருந்தாற் போன்றதே
போர்விதர்ப்ப
நன்னாடற் கோமான் தன் நாடு

'இழப்ப' என்பது மீண்டும் மீண்டும் வந்து ஓசை இன்பம் தருகிறது.

''வையம் பகலிழப்ப வானம் ஒளியிழப்ப
பொய்கையும் நீள் கழியும் புள்ளிழப்பப் பையவே
செவ்வாய் அன்றில் துணையிழப்பச்
சென்றடைந்தான்
வெவ்வாய் விரிகதிரோன் வெற்பு'' (நளவெண்பா)

''பவள வாள் நுதல் திலகம் இழப்பத்
தவள வாள் நகை கோவலன் இழப்ப''

என்று இளங்கோவும் இச்சொல்லை மீண்டும் மீண்டும் ஆளுதல் காண முடிகிறது.

## 23. அகப் பொருள் இலக்கிய மரபு

தமிழில் அகப் பொருளில் தலைவன் தலைவியைக் காண்கிறான். இது காட்சி என்னும் துறையை ஒட்டியது. பின்பு இவள் அரமகளோ நரமகளோ என்ற ஐயம் அவன்பால் தோன்றுகிறது. இவள் தெய்வமகள் அல்லள் அகல் இடத்துப் பெண் என்று முடிவு செய்கிறான்.

அதற்காக அவன் காணும் குறிப்புகள், கண் இமைப்பது, கால்கள் தரையில் படுவது, மலர் வாடுவது

இம்மூன்றையும் வைத்து இவள் மானிடப் பெண் என்று முடிவு செய்கிறான். இது தமிழ்க் கவிதை மரபு.

இதனைக் கவிஞர் தேவனா? மானுடனா? இவர்களுள் யார் நளன்? யார் தேவர்கள்? என்பதை அறியப் பயன் படுத்துவது அவர் தமிழ்க் கவிதை உத்தியை ஆளும் சிறப்பைக் காட்டுகிறது. இவன் நளன் என்று அறிவித்தவாறு இது என்று கூறுகிறார்.

> கண்ணிமைத்தலால் அடிகள் காசியினில் தோய்தலால்
> வண்ணமலர்மாலை வாடுதலால் - எண்ணி
> நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
> அறிந்தாள் நளன்தனனை ஆங்கு - என்பார்.

☆ ☆ ☆

# பாயிரம்

## இறை வணக்கம்

### விநாயகர்

நேசர் இதங்கூர நிலவலயம் தாங்குநளன்
மாசரி தங்கூற வருந்துணையாம் - ஈசன்
கரியா னனத்தான் கருது புகழ்பூண்ட
கரியா னனத்தான் கழல் 1

### நம்மாழ்வார்

வளன்கூர் வயல்சூழு மாநிடத மன்னன்
நளன்சீர் நவிலுநல நல்கும் - உளஞ்சேர்
மாமகிழ்மா றன்புகழாம் வண்தமிழ்வே தம்விரித்த
மாமகிழ்மா றன்தாள் மலர் 2

### திருமால்

ஆதித் தனிக்கோலம் ஆனான் அடியவற்காச்
சோதித் திருத்தூணில் தோன்றினான் - வேதத்தின்
முன்னின்றான் வேழம் முதலேஎன அழைப்ப
என்னென்றான் எங்கட் கிறை 3

### சிவபெருமான்

கலாப மயிலிருந்த பாகத்தார் கங்கை
உலாவு சடைமேல் உறையும் - நிலாவை
வழியவார்த் தாலன்ன மாநீற்றார் நாகம்
கழியவார்த் தார்நமக்கோர் காப்பு. 4

### திருமுருகன்

நீல நெடுங்கொண்மூ நெற்றி நிழல்நாறிக்
காலை இருள்சீக்கும் காய்கதிர்போல் - சோலை
மணித்தோகை மேல்தோன்றி மாக்கடல் சூர்வென்றோன்
அணிச்சே வடியென் அரண் 5

### அவையடக்கம்

வெந்தறுகண் வேழத்தை வேரிக் கமலத்தின்
தந்துவினால் கட்டச் சமைவதொக்கும் பைந்தொடையில்
தேன்பாடுந் தார்நளன்றன் தெய்வத் திருக்கதையை
யான்பாடல் உற்ற இது 6

### நூலாசிரியர்

பாரார் நிடத பதிநளன்சீர் வெண்பாவால்
பேரார் புகழேந்தி பேசினான் - தாரார்
செழியனையும் சென்னியையும் சேரத் திறைகொள்
மொழியின் சுவையே முதிர்ந்து 7

# 1. சுயம்வர காண்டம்

### வியாசர் கதை கூறல்

பாண்டவரின் முன்தோன்றல் பார்முழுதும் தோற்றொருநாள்
ஆண்டகையே தூதுவனாய்ச் சென்றவனி - வேண்ட
மறுத்தான் இருந்தானை மண்ணொடும் போய்மாளப்
பொறுத்தான் இருந்தான் புலர்ந்து 8

நாட்டின்கண் வாழ்வைத் துறந்துபோய் நான்மறையோர்
ஈட்டங்கள் சூழ இருந்தானைக்-காட்டில்
பெருந்தகையைக் கண்டார்கள் பேரெழில்தோள் வேந்தர்
வருந்தகையார் எல்லோரும் வந்து 9

கொற்றவேல் தானைக் குருநாடன் பாலணைந்தான்
எற்றுநீர் ஞாலத் திருள்நீங்க-முற்றும்
வழிமுறையே வந்த மறையெல்லாம் தந்தான்
மொழிமுறையே கோத்த முனி 10

மறைமுதல்வ ரீங்கே வந்தருளப் பெற்றேன்
பிறவிப் பெருந்துயரம் எல்லாம்-அறவே
பிழைத்தேன்யான் என்றானப் பேராழி யானை
அழைத்தேவல் கொண்ட அரசு 11

மெய்த்திருவந் துற்றாலும் வெந்துயர்வந் துற்றாலும்
ஒத்திருக்கும் உள்ளத் துரவோனே-சித்தம்
வருந்தியவா என்னென்றான் மாமறையால் உள்ளம்
திருந்தியவா மெய்த்தவத்தோன் தேர்ந்து 12

அம்பொற் கயிலைக்கே ஆகத் தரவணிவார்
தம்பொற் படைக்குத் தமியனா-எம்பியைமுன்
போக்கினேன் என்றுரைத்தான் பூதலத்தும் மீதலத்தும்
வாக்கினோர் இல்லாத மன் 13

காண்டா வனந்தீக் கடவுளுணக் கைக்கணையால்
நீண்ட முகில்தடுத்து நின்றாற்கு-மீண்டமரர்
தாளிரண்டும் நோவத் தனித்தனியே ஓடியநாள்
தோளிரண்டும் அன்றோ துணை 14

பேரரசும் எங்கள் பெருந்திருவும் கைவிட்டுச்
சேர்வரிய வெங்கானம் சேர்தற்குக்-காரணம்தான்
யாதோவப் பாவென்றான் என்றுந்தன் வெண்குடைக்கீழ்த்
தீதோவப் பார்காத்த சேய். 15

கேடில் விழுச்செல்வம் கேடெய்து சூதாடல்
ஏடவிழ்தார் மன்னர்க்கு இயல்பேகாண்-வாடிக்
கலங்கலைநீ என்றுரைத்தான் காமருவு நாடற்கு
இலங்கலைநூல் மார்பன் எடுத்து 16

கண்ணிழந்து மாயக் கவறாடிக் காவலர்தாம்
மண்ணிழந்து போந்து வனம்நண்ணி-விண்ணிழந்த
மின்போலும் நூல்மார்ப மேதினியில் வேறுண்டோ
என்போல் உழந்தார் இடர்? 17

சேமவேல் மன்னனுக்குச் செப்புவான் செந்தனிக்கோன்
நாமவேல் காளை நளனென்பான்-யாமத்
தொலியாழி வையம் ஒருங்கிழப்பப் பண்டு
கலியான் விளைந்த கதை 18

# 2. நளன் கதை

## நாட்டு வளம்

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்-பூமடந்தை
தன்னாட்டம் போலும் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டும் நாடு 19

## நகர் வளம்

கோதை மடவார்தம் கொங்கை மிசைத்திமிர்ந்த
சீதக் களபச் செழுஞ்சேற்றால்-வீதிவாய்
மானக் கரிவழுக்கும் மாவிந்தம் என்பதோர்
ஞானக் கலைவாழ் நகர் 20

நின்று புயல்வானம் பொழிந்த நெடுந்தாரை
என்றும் அகில்கமழும் என்பரால்-தென்றல்
அலர்த்தும் கொடிமாடத் தாயிழையார் ஐம்பால்
புலர்த்தும் புகைவான் புகுந்து 21

வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன
அஞ்சிலம்பே வாய்விட் டரற்றுவன-கஞ்சம்
கலங்குவன மாளிகைமேல் காரிகையார் கண்ணே
விலங்குவன மெய்ந்நெறியை விட்டு 22

தெரிவனநூல் என்றும் தெரியா தனவும்
வரிவளையார் தங்கள் மருங்கே-ஒருபொழுதும்
இல்லா தனவும் இரவே இகழ்ந்தெவரும்
கல்லா தனவும் கரவு 23

மாமனுநூல் வாழ வருசந் திரன்சுவர்க்கி
தாமரையாள் வைகும் தடந்தோளான்-காமருபூந்
தாரான் முரணைநகர் தானென்று சாற்றலாம்
பாராளும் வேந்தன் பதி 24

ஓடாத தானை நளனென் றுளன்ஒருவன்
பீடாரும் செல்வப் பெடைவண்டோ-டூடா
முருகுடைய மாதர் முலைநனைக்கும் தண்தார்
அருகுடையான் வெண்குடையான் ஆங்கு 25

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை அறம்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான்-மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற்பருந்தும்
ஒரு கூட்டில் வாழ உலகு 26

### *நளன் சோலை புகுதல்*

வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான் - தேங்குவளைத்
தேனாடி வண்டு சிறகுலர்த்தும் நீர்நாடன்
பூனாடிச் சோலை புக 27

வென்றி மதவேடன் வில்லெடுப்ப வீதியெலாம்
தென்றல் மதுநீர் தெளித்துவர-நின்ற
தளவேனல் மீதலரும் தாழ்வரைசூழ் நாடற்கு
இளவேனில் வந்தது எதிர் 28

தேரின் துகளைத் திருந்திழையார் பூங்குழலின்
வேரின் புனல்நனைப்ப வேயடைந்தான்-கார்வண்டு
தொக்கிருந்தா லித்துழலும் தூங்கிருள்வெய் யோற்கொதுங்கிப்
புக்கிருந்தால் அன்ன பொழில் 29

நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தாற் பொய்கைத் தலம்சிவப்ப மாணிறத்தான்
முன்னப்புள் தோன்றும் முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு 30

பேதை மடவன்னந் தன்னைப் பிழையாமல்
மேதிக் குலமேறி மென்கரும்பைக்-கோதிக்
கடித்துத்தான் முத்துமிழும் கங்கைநீர் நாடன்
பிடித்துத்தா என்றான் பெயர்ந்து 31

நாடிமட வன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே-நீடியநற்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து 32

அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டுபோய்
மன்னன் திருமுன்னர் வைத்தலுமே-அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு 33

## *உரையாடல்கள்*

அஞ்சல் மடவனமே உன்றன் அணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும் - விஞ்சியது
காணப் பிடித்ததுகாண் என்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன் 34

செய்ய கமலத் திருவை நிகரான
தையல் பிடித்த தனியன்னம்-வெய்ய
அடுமாற்றம் இல்லா அரசன்சொல் கேட்டுத்
தடுமாற்றம் தீர்ந்ததே தான் 35

திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே! உன்றன்
இசைமுகந்த தோளுக்கு இசைவாள்-வசையில்
தமையந்தி என்றோதும் தையலாள் மென்றோள்
அமையந்தி என்றோர் அணங்கு 36

அன்னம் மொழிந்த மொழிபுகா முன்புக்குக்
கன்னி மனக்கோயில் கைக்கொள்ளச்-சொன்னமயில்
ஆர்மடந்தை என்றான் அனங்கன் சிலைவளைப்பப்
பார்மடந்தை கோமான் பதைத்து 37

## *தமயந்தி பற்றிக் கூறுதல்*

எழுவடுதோள் மன்னா இலங்கிழையோர் தூண்டக்
கொழுநுதியிற் சாய்ந்த குவளை-உழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயும் மாடொலிநீர் நாடன்
கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு 38

நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா-வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு 39

மோட்டிளங் கொங்கை முடியச் சுமந்தேற
மாட்டா திடையென்று வாய்விட்டு-நாட்டேன்
அலம்புவார் கோதை அடியிணையில் வீழ்ந்து
புலம்புமாம் நூபுரங்கள் பூண்டு 40

என்றும் நுடங்கும் இடையென்ப ஏழுலகும்
நின்ற கவிகை நிழல்வேந்தே-ஒன்றி
அறுகால் சிறுபறவை அஞ்சிறகால் வீசும்
சிறுகாற்றுக் காற்றாது தேய்ந்து 41

செந்தேன் மொழியாள் செறியளக பந்தியின்கீழ்
இந்து முறியென் றியம்புவார்-வந்தென்றும்
பூவாளி வேந்தன் பொருவெஞ் சிலைசார்த்தி
ஏவாளி தீட்டும் இடம் 42

அன்னமே நீயுரைத்த அன்னத்தை என்னாவி
உன்னவே சோரும் உனக்கவளோ-டென்ன
அடைவென்றான் மற்றந்த அன்னமதை முன்னே
நடைவென்றாள் தன்பால் நயந்து 43

### அன்னம் தந்த விளக்கம்

பூமனைவாய் வாழ்கின்ற புட்குலங்கள் யாமவள் தன்
மாமனைவாய் வாழும் மயிற்குலங்கள்-காமன்
படைகற்பான் வந்தடைந்தான் பைந்தொடியாள் பாத
நடைகற்பான் வந்தடைந்தோம் யாம் 44

### நளன் மனநிலை

இற்றது நெஞ்சம் எழுந்த திருங்காதல்
அற்றது மானம் அழிந்ததுநாண்-மற்றினியுன்
வாயுடைய தென்னுடைய வாழ்வென்றான் வெங்காமத்
தீயுடைய நெஞ்சுடையான் தேர்ந்து 45

வீமன் திருமடந்தை மென்முலையை உன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்-சேம
நெடுங்குடையாய் என்றுரைத்து நீங்கியதே அன்னம்
ஒடுங்கிடையாள் தன்பால் உயர்ந்து 46

இவ்வளவிற் செல்லுங்கொல் இவ்வளவிற் காணுங்கொல்
இவ்வளவிற் காதல் இயம்புங்கொல்-இவ்வளவில்
மீளுங்கொல் என்றுரையா விம்மினான் மும்மதம்நின்
றாளுங்கொல் யானை அரசு 47

சேவற் குயிற்பெடைக்குப் பேசும் சிறுகுரல் கேட்டு
ஆவி உருகி அழிந்திட்டான்-பூவின்
இடையன்னச் செங்கால் இளவன்னம் சொன்ன
நடையன்னம் தன்பால் நயந்து 48

அன்னம் உரைத்த குயிலுக் கலசுவான்
மென்மயில்தான் தோகை விரித்தாட-முன்னதனைக்
கண்டாற்றா துள்ளம் கலங்கினான் காமநோய்
கொண்டார்க்கிஃ தன்றோ குணம் 49

வாரணியும் கொங்கை மடவார் நுடங்கிடைக்குப்
பேருவமை யாகப் பிறந்துடையீர்-வாரீர்
கொடியார் எனச்செங்கை கூப்பினான் நெஞ்சம்
துடியா நெடிதுயிராச் சோர்ந்து 50

கொங்கை இளநீரால் குளிர்ந்தஇளஞ் சொற்கரும்பால்
பொங்குசுழி என்னும் பூந்தடத்தில்-மங்கைநறும்
கொய்தாம வாசக் குழல்நிழற்கீழ் ஆறேனோ
வெய்தாமக் காம விடாய் 51

## *தமயந்தியைக் காணல்*

மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி அருகணைய-நன்னுதலும்
தன்னாடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
என்னாடல் சொல்லென்றாள் ஈங்கு 52

செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்கும் தடந்தோளான்-மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பான் வேந்தன் உனக்கு 53

அறங்கிடந்த நெஞ்சும் அருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்தோள் வலியும்-நிலங்கிடந்த
செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு 54

## *தமயந்தியின் நிலை*

புள்ளின் மொழியினொடு பூவாளி தன்னுடைய
உள்ளம் கவர ஒளியிழந்த-வெள்ளை
மதியிருந்த தாமென்ன வாய்த்திருந்தாள் வண்டின்
பொதியிருந்த மெல்லோதிப் பொன் 55

மன்னன் மனத்தெழுந்த மையல்நோய் அத்தனையும்
அன்னம் உரைக்க அகமுருகி-முன்னம்
முயங்கினாள் போல்தன் முலைமுகத்தைப் பாரா
மயங்கினாள் என்செய்வாள் மற்று? 56

வாவி யுறையும் மடவனமே என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால்-காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து 57

மன்னன் புயம்நின் வனமுலைக்குக் கச்சாகும்
என்ன முயங்குவிப்பேன் என்றன்னம்-பின்னும்
பொருந்தவன்பால் ஓதிமலர்ப் பூங்கணைகள் பாய
இருந்தவன்பால் போன தெழுந்து 58

கொற்றவன்தன் தேவிக்குக் கோமகன் தன் தோழியர்கள்
உற்ற தறியா உளநடுங்கிப்-பொற்றொடிக்கு
வேறுபா டுண்டென்றார் வேந்தனுக்கு மற்றதனைக்
கூறினாள் பெற்ற கொடி 59

கருங்குழலார் செங்கையினால் வெண்கவரிப் பைங்கால்
மருங்குலவ வார்முரசம் ஆர்ப்ப-நெருங்கு
பரிவளை நின்றேங்கப் போய்ப்புக்கான் பெற்ற
வரிவளைக்கை நல்லாள் மனை 60

கோதை சுமந்த கொடிபோல் இடைநுடங்கத்
தாதை திருவடிமேல் தான்வீழ்ந்தாள்-மீதெல்லாம்
காந்தாரம் பாடிக் களிவண்டு நின்றரற்றும்
பூந்தாரம் மெல்லோதிப் பொன் 61

பேரழகு சோர்கின்ற தென்னப் பிறைநுதன்மேல்
நீரரும்பத் தன்பேதை நின்றாளைப்-பாராக்
குலவேந்தன் சிந்தித்தான் கோவேந்தர் தம்மை
மலர்வேய்ந்து கொள்ளும் மணம் 62

### மங்கை சுயம்வரம்

மங்கை சுயம்வரநாள் ஏழென்று வார்முரசம்
எங்கும் அறைகென் றியம்பினான்-பைங்கமுகின்
கூந்தல்மேற் கங்கைக் கொழுந்தொடும் நன்னாடன்
வேந்தர்மேல் தூதோட விட்டு 63

மாமுத்த வெண்குடையான் மால்களிற்றான் வண்டிசைக்கும்
தாமத் தரிச்சந் திரன்சுவர்க்கி-நாமத்தால்
பாவேய்ந்த செந்தமிழாம் என்னப் பரந்ததே
கோவேந்தர் செல்வக் குழாம் 64

செந்தடையும் வண்டுறைதார்ச் செய்யாள் வளர்மார்பன்
கந்தடையும் வேழக் கடைத் தலைவாய்-வந்தடைந்த
பூவேந்தர் தங்கள்கிளை பொன்னகரில் ஈண்டிற்றே
கோவேந்தன் மாதைக் குறித்து 65

புள்ளுறையும் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
உள்ளும் புறமும் இனிதுறைந்தார்-தெள்ளரிக்கண்
பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பன்றன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு 66

### வழிபார்த்து இருத்தல்

வழிமேல் விழிவைத்து வாள்நுதலாள் நாம
மொழிமேல் செவிவைத்து மோகச்-சுழிமேல்தான்
நெஞ்சோட வைத்தயர்வான் கண்டான் நெடுவானில்
மஞ்சோட அன்னம் வர 67

முகம்பார்த் தருள்நோக்கி முன்னிரந்து செல்வர்
அகம்பார்க்கும் அற்றோரைப் போல - மிகுங்காதல்
கேளா விருந்திட்டான் அன்னத்தைக் கேளாரை
வாளால் விருந்திட்ட மன் 68

அன்னக் குலத்தின் அரசே! அழிகின்ற
என்னுயிரை மீள எனக்களித்தாய் - முன்னுரைத்த

தேமொழிக்குத் தீதிலவே என்றான் திருந்தாரை
ஏமொழிக்கும் வேலான் எடுத்து 69

கொற்றவன்றன் ஏவலினால் போயக் குலக்கொடிபால்
உற்றதும் ஆங்கவள்தான் உற்றதுவும்-முற்றும்
மொழிந்ததே அன்னம் மொழிகேட் டரசற்கு
அழிந்ததே உள்ள அறிவு 70

கேட்ட செவிவழியே கேளா துணர்வோட
ஒட்டை மனத்தோ டுயிர்தாங்கி-மீண்டும்
குழியில் படுகரிபோல் கோமான் கிடந்தான்
தழலில் படுதளிர்போல் சாய்ந்து 71

கோதை சுயம்வரநாள் கொற்றவனுக் குற்றுரைப்ப
ஏதமிலாக் காட்சியர்வந் தெய்தினார்-போதில்
பெடையோடு வண்டுறங்கும் பேரொலிநீர் நாடன்
அடையாத வாயில் அகம் 72

## தேர்பூட்டு என்றல்

காவலன்றன் தூதர் கடைக்கா வலர்க்கறிவித்
தேவலிற்போய் ஈதென் றியம்புதலும்-மாவில்
பொலிந்ததேர் பூட்டென்றான் பூவாளி பாய்
மெலிந்ததோள் வேந்தன் விரைந்து 73

கெட்ட சிறுமருங்குல் கீழ்மகளிர் நீள்வரம்பில்
இட்ட பசுங்குவளை ஏரடித்த கட்டி
கரையத்தேன் ஊறும் கடல்நாடன் ஊர்க்கு
விரையத்தேர் ஊரென்றான் வேந்து 74

சடைச்செந்நெல் பொன்விளைக்கும் தந்நாடு பின்னாகக்
கடல்தானை முன்னாகக் கண்டான் - அடற்கமைந்த
வல்லியரும் பொன்தாம வீமன் திருமகளாம்
நல்லுயிரும் வாழும் நகர் 75

## இந்திரனோடு நாரதன்

நெற்றித் தனிக்கண் நெருப்பைக் குளிர்விக்கும்
கொற்றத்தனியாழ்க் குலமுனிவன்-உற்றடைந்தான்
தேனாடும் தெய்வத் தருவும் திருமணியும்
வானாடும் காத்தான் மருங்கு 76

வீரர் விறல்வேந்தர் விண்ணாடு சேர்கின்றார்
ஆரும் இலரால் என்றையுற்று-நாரதனார்
நன்முகமே நோக்கினான் நாகம் சிறகரிந்த
மின்முகவேற் கையான் விரைந்து 77

வீமன் மடந்தை மணத்தின் விரைதொடுத்த
தாமம் புனைவான் சுயம்வரத்து-மாமன்னர்
போயினார் என்றான் புரந்தரற்குப் பொய்யாத
வாயினான் மாதவத்தோர் மன் 78

அழகு சுமந்திளைத்த ஆகத்தாள் வண்டு
பழகு கருங்கூந்தற் பாவை-மழகளிற்று
வீமன் குலத்துக்கோர் மெய்த்தீபம் மற்றவளே
காமன் திருவுக்கோர் காப்பு 79

மால்வரையை வச்சிரத்தால் ஈர்ந்தானும் வானவரும்
கோல்வளைதன் மாலைக் குறித்தெழுந்தார் சால்புடைய
விண்ணாடு நீங்கி விதர்ப்பன் திருநகர்க்கு
மண்ணாடு நோக்கி மகிழ்ந்து 80

## நளனை இந்திரன் சந்தித்தல்

பைந்தெரியல் வேல்வேந்தன் பாவைபாற் போயினதன்
சிந்தை கெடுத்த தனைத் தேடுவான்-முந்தி
வருவான்போல் தேர்மேல் வருவானைக் கண்டார்
பெருவானின் தேவர் பெரிது 81

காவற் குடைவேந்தைக் கண்ணுற்ற விண்ணவர்கோன்
ஏவல் தொழிலுக் கிசையென்றான்-ஏவற்கு

மன்னவனும் நேர்ந்தான் மனத்தினால் மற்றதனை
இன்னதென் றோரா திசைந்து 82

செங்கண் மதயானைத் தேர்வேந்தே தேமாலை
எங்களிலே சூட்ட இயல்வீமன்-மங்கைபால்
தூதாக என்றானத் தோகையைத்தன் ஆகத்தால்
கோதாக வென்றானக் கோ 83

தேவர் பணிதலைமேற் செல்லும் திரிந்தொருகால்
மேவுமிளங் கன்னிபால் மீண்டேகும்-பாவிற்
குழல்போல நின்றுழலும் கொள்கைத்தே பூவின்
நிழல்போலும் தண்குடையான் நெஞ்சு 84

ஆவ துரைத்தாய் அதுவே தலைநின்றேன்
தேவர்கோ னேயத் திருநகரில்-காவல்
கடக்குமா றென்னென்றான் காமநீர் ஆழி
அடக்குமா றுள்ளத் தவன் 85

வார்வெஞ் சிலையொழி வச்சிரத்தால் மால்வரையைப்
போர்வெஞ் சிறகறிந்த பொற்றோளான்-யாருமுனைக்
காணார்போய் மற்றவளைக் காணென்றான் கார்வண்டின்
பாணாறும் தாரானைப் பார்த்து 86

இசைமுகந்த வாயும் இயல்தெரிந்த நாவும்
திசைமுகந்தால் அன்ன தெருவும்-வசையிறந்த
பொன்னாடு போந்திருந்தாற் போன்றதே போர்விதர்ப்ப
நன்னாடற் கோமான்தன் நாடு 87

## *நளன் தமயந்தி சந்திப்பு*

தேங்குவளை தன்னிலே செந்தா மரைமலரப்
பூங்குவளை தாமரைக்கே பூத்ததே-ஆங்கு
மதுநோக்கும் தாரானும் வாள்நுதலும் தம்மில்
பொதுநோக்கு எதிர்நோக்கும் போது 88

நீண்ட கமலத்தை நீலக் கடைசென்று
தீண்டும் அளவில் திறந்ததே - பூண்டதோர்
அற்பின்தாழ் கூந்தலாள் வேட்கை அகத்தடக்கிக்
கற்பின்தாழ் வீழ்த்த கதவு 89

உய்ஞ்சு கரையேற ஒட்டுங்கொல் ஒண்டொடியாள்
நெஞ்சு தடவும் நெடுங்கண்கள் - விஞ்சவே
நீண்டதோ அங்ஙனே இங்ஙனே நீள்மலராள்
ஆண்டதோள் மன்னன் அழகு 90

மன்னாகத் துள்ளழுந்தி வாரணிந்த மென்முலையும்
பொன்னாணும் புக்கொளிப்பப் புல்லுவனென் - றுன்னா
எடுத்தபே ரன்பை இடையே புகுந்து
தடுத்ததே நாணாம் தறி 91

காவல் கடந்தெங்கள் கன்னிமா டம்புகுந்தாய்
யாவானோ விஞ்சைக் கிறைவனோ - தேவனோ
உள்ளவா சொல்லென்றாள் ஊசற்குழைமீது
வெள்ளாவாள் நீர்சோர விட்டு 92

தீராத காமத் தழலைத்தன் செம்மையெனும்
நீரால் அவித்துக் கொடுநின்று - வாராத
பொன்னாடர் ஏவலுடன் போந்தவா சொல்லித்தன்
நன்னாடுஞ் சொன்னான் நளன் 93

என்னுரையை யாதென்றிகழா திமையவர்வாழ்
பொன்னுலகம் காக்கும் புரவலனை - மென்மாலை
சூட்டுவா யென்றான் தொடையில்தேன் தும்பிக்கே
ஊட்டுவான் எல்லாம் உரைத்து 94

இயமரம்நின் றார்ப்ப இனவளைநின் றேங்க
வயமருதோள் மன்னா வகுத்த - சுயம்வரந்தான்
நின்பொருட்டால் என்று நினைகென்றாள் நீள்குடையான்
தன்பொருட்டால் நைவாள் தளர்ந்து 95

போதரிக்கண் மாதராள் பொன்மாலை சூட்டத்தான்
ஆதரித்தார் தம்மோ டவையகத்தே - சோதிச்
செழுந்தரள வெண்குடையாய் தேவர்களும் நீயும்
எழுந்தருள்க என்றாள் எடுத்து 96

## வன்மொழியும் மென்மொழியும்

வானவர்கோன் ஏவல் வழிச்சென்று வாணுதலைத்
தானணுகி மீண்டபடி சாற்றவே - தேன்முரலும்
வண்டார் நளன்போந்து வச்சிரா யுதற்றொழுதான்
கண்டார் உவப்பக் கலந்து 97

விண்ணவர்தம் ஏவலுடன் வீமன் திருமகள்பால்
நண்ணு புகழ்நளனும் நன்குரைத்த - பெண்ணணங்கின்
வன்மொழியும் தேவர் மனமகிழத் தான்மொழிந்த
மென்மொழியும் சென்றுரைத்தான் மீண்டு 98

அங்கி அமுதம்நீர் அம்பூ அணியாடை
எங்குநீ வேண்டினைமற் றவ்விடத்தே - சங்கையறப்
பெற்றாய் எனவருணன் ஆகண்டலன் தருமன்
மற்றோனும் ஈந்தார் வரம் 99

அங்கவர்கள் வேண்டும் வரங்கொடுக்கப் பெற்றவர்கள்
தங்களொடும் தார்வேந்தன் சார்ந்தனன் மேல் - மங்கை
வயமருவு கின்ற மனக்கா வலர்க்குச்
சயமரந்தான் கண்டதோர் சார்பு 100

## தமயந்தி துயரநிலை

தூதுவந்த காதலனைச் சொல்லிச் செலவிடுத்த
மாதுவந்த பின்போன வன்னெஞ்சால் - யாதும்
அயிர்த்தாள் உயிர்த்தாள் அணிவதனம் எல்லாம்
வியர்த்தாள் உரைமறந்தாள் வீழ்ந்து 101

உள்ளம்போய் நாண்போய் உரைபோய் வரிநெடுங்கண்
வெள்ளம்போய் வேகின்ற மென்தளிர்போல் - பிள்ளைமீன்
புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை பூவாளி
உள்ளரிக்கச் சோர்ந்தாள் உயிர் 102

பூவின்வாய் வாளி புகுந்த வழியேயென்.
ஆவியார் போனாலும் அவ்வழியே - பாவியேன்
ஆசைபோ காதென் றழிந்தாள் அணியாழின்
ஓசைபோல் சொல்லாள் உயிர்த்து 103

வையம் பகலிழப்ப வானம் ஒளியிழப்ப
பொய்கையும் நீள்கழியும் புள்ளிழப்ப - பையவே
செவ்வாய் அன்றில் துணையிழப்பச் சென்றடைந்தான்
வெவ்வாய் விரிகதிரோன் வெற்பு 104

மாயிரு ஞாலத் துயிர்காண வானரங்கில்
பாயிருள் என்னும் படாம்வாங்கிச் சேய்நின்று
அறைந்தா ரணம்பாட ஆடிப்போய் வெய்யோன்
மறைந்தான் குடபால் வரை 105

## *அந்திப் பொழுது*

மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப - முல்லையென்னும்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை அந்திப் பொழுது 106

புற்கென்றார் அந்தி புனைமலர்க்கண் நீரரும்ப
நிற்கின்ற தந்தோ நிலங்காப்பான் - முற்கொண்டு
அடைகின்ற வேந்தர்க்கும் ஆண்டஞ்சி னோர்க்கும்
இடைநின்ற காலம்போல் இன்று 107

## *பிறை நிலவு*

பைந்தொடியாள் ஆவி பருகுவான் நிற்கின்ற
அந்தி முறுவலித்த தாமென்ன - வந்ததால்

மையார்மேற் கண்ணாள் வனமுலைமேல் ஆரழலைப்
பெய்வான் அமைந்த பிறை 108

கூட்டுமைபோய் சிறந்த கூரிருளைக் கூன்கோட்டால்
கோட்டுமண் கொண்ட குளிர்திங்கள் - ஈட்டுமணிப்
பூணிலா மென்முலைமேல் போதச் சொரிந்ததே
நீணிலா வென்னும் நெருப்பு 109

அன்னங்காள் நீங்களுமவ் வாதித்தன் தானும்போய்
மன்னும் படியகலா வல்லிரவில் - மின்னும்
மழைத்தாரை வல்லிருட்கும் வாடைக்கும் நாங்கள்
பிழைத்தால்வந் தேனென்னும் பேர் 110

கொப்புளங் கொங்கைமீர் திங்கட் சுடர்பட்டுக்
கொப்புளங் கொண்ட குளிர்வானை - இப்பொழுதும்
மீன்பொதிந்து நின்ற விசும்பென்ப தென்கொலோ
தேன்பொதிந்த வாயால் தெரிந்து 111

கானுந் தடங்காவும் காமன் படைவீடு
வானுந்தேர் வீதி மறிகடலும் - மீனக்
கொடியாடை வையமெல்லாம் கோதண்ட சாலை
பொடியாடி கொன்றதெல்லாம் பொய் 112

கொள்ளைபோ கின்ற துயிரென்னும் கோளரவின்
முள்ளெயிறோ மூரி நிலாவென்னும் - உள்ளம்
கொடிதிரா என்னும் குழையும் தழல்போல்
நெடிதிரா வாய்புலர நின்று 113

வெங்கதிரோன் தன்னை விழுங்கிப் புழுங்கியோ
கொங்கை அனலிற் கொழுந்தியோ - திங்கள்
விரிகின்ற வெண்ணிலவால் வேகின்ற தேயோ
எரிகின்ற தென்னோ இரா? 114

ஊழி பலவோர் இரவாயிற் றோவென்னும்
கோழி குரலடைத்த தோவென்னும் - ஆழி

துயிலாதோ என்னும் சுடர்மதியம் கான்ற
வெயிலால் உடலுருகா வீழ்ந்து 115

ஆடி வரிவண் டருகே பறக்கவே
வாடி மெலிவாள் வனமுலைமேல் - ஓடிப்
பொறையாகச் சோர்வாள் பொறுக்குமோ மோகத்
துறைவாய் அடங்காத் துயர்? 116

ஈரமதியே இளநிலவே இங்ஙனமே
சோர்குழலில் மீதே சொரிவதெவன் - மாரன்
பொரவளித்தான் கண்ணி எனக்குப் புலரா
இரவளித்தான் அல்லனோ இன்று 117

தாங்கு நிலவின் தழல்போய்த் தலைக்கொள்ளத்
தேங்குழல்சேர் வண்டு சிறைவெதும்ப - ஓங்குயிர்ப்பின்
தாமங் கரியாத் தனியே தளர்கின்றாள்
யாமங் கரியாக இன்று 118

மையிட்ட கண்ணருவி வார வளைசோரக்
கையிற் கபோலத் தலம்வைத்து - மெய்வருந்தித்
தேனிருந்த பூங்கணையே தீயாகத் தேமொழியாள்
தானிருந்து செய்வாள் தவம் 119

அள்ளிக் கொளலாய் அடையத் திரண்டொன்றாய்க்
கொள்ளிக்கும் விள்ளாத கூரிருளாய் - உள்ளம்
புதையவே வைத்த பொதுமகளிர் தங்கள்
இதயமே போன்ற திரா 120

ஊக்கிய சொல்லர் ஒலிக்கும் துடிக்குரலர்
வீக்கிய கச்சையர் வேல்வாளர் - காக்க
இடையாமம் காவலர்கள் போந்தார் இருளில்
புடைவாய் இருள்புடைத்தாற் போன்று 121

சேமங் களிறுபுகத் தீம்பாலின் செவ்வழியாழ்
தாமுள் ளிழைபுகுந்த தார்வண்டு - காமன்தன்
பூவாளி ஐந்தும் புகத்துயில் புக்கதே
ஓவாது முந்நீர் உலகு 122

ஊன்தின் றுவகையால் உள்ள வுயிர்புறம்பே
தோன்றும் கழுதும் துயின்றதே - தான்றன்
உரைசோரச் சோர உடல்சோர வாயின்
இரைசோரக் கைசோர நின்று 123

அன்றில் ஒருகண் துயின் றொருகண் ஆர்வத்தால்
இன்றுணைமேல் வைத்துறங்கும் என்னும்சொல் - இன்று
தவிர்ந்தே போலரற்றிச் சாம்புகின்ற போதே
அவிழ்ந்ததே கண்ணீர் அவட்கு 124

ஏழலகும் சூழிருளாய் என்பொருட்டால் வேகின்ற
ஆழ்துயரம் ஏதென் றறிகிலேன் - பாழி
வரையோ எனுநெடுந்தோள் மன்னாவோ தின்னும்
இரையோ இரவுக்கு யான்? 125

கருவிக்கு நீங்காத காரிருள்வாய்க் கங்குல்
உருவிப் புகுந்ததால் ஊதை - பருகிக்கார்
வண்டுபோ கட்ட மலர்போல் மருள்மாலை
உண்டுபோ கட்ட உயிர்க்கு 126

எழுந்திருக்கும் ஏமாந்து பூமாந்த தவிசின்
விழுந்திருக்கும் தன்னுடம்பை மீளச் - செழுந்தரளத்
தூணோடு சேர்க்கும் துணையேதும் இல்லாதே
நாணோடு நின்றழியும் நைந்து 127

விரிகின்ற மெல்லமளி வெண்ணிலவின் மீதே
சொரிகின்ற காரிருள்போல் சோரும் - புரிகுழலைத்
தாங்கும் தளரும் ச ழலே நெடிதுயிர்க்கும்
ஏங்கும் துயரோ டு நந்து 128

உடைய மிடுக்கெல்லாம் என்மேல் ஒச்சி
விடிய மிடுக்கின்மை யாலோ - கொடியன்மேல்
மாகாதல் வைத்ததோ மன்னவர்தம் இன்னருளோ
ஏகாத தென்னோ இரா? 129

மயங்கும் தெளியும் மனநடுங்கும் வெய்துற்று
உயங்கும் வறிதே உலாவும் - வயங்கிழைபோய்ச்
சோரும் துயிலும் துயிலாக் கருநெடுங்கண்
நீரும் கடைசோர நின்று 130

விழுது படத்திணிந்த வீங்கிருள்வாய்ப் பட்டுக்
கழுதும் வழிதேடும் கங்குல் - பொழுதிடையே
நீருயிர்க்கும் கண்ணோடு நெஞ்சுருகி வீழ்வார்தம்
ஆருயிர்க்கு உண்டோ அரண் 131

## பொழுது புலர்ந்தது

பூசுரர்தம் கைம்மலரும் பூங்குமுத மும்முகிழ்ப்பக்
காசினியும் தாமரையும் கண்விழிப்ப - வாசம்
அலர்ந்ததேங் கோதையின் ஆழ்துயரத் தோடு
புலர்ந்ததே அற்றைப் பொழுது 132

வில்லி கணையிழப்ப வெண்மதியம் சீரிழப்பத்
தொல்லை இருள்கிழியத் தோன்றினான் - வல்லி
மணமாலை வேட்டிடுந்தோள் வாளரசர் முன்னே
குணவாயில் செங்கதிரோன் குன்று 133

முறைசெறிந்த நாளேழும் முற்றியபின் கொற்ற
வரைசெறிந்த தோள்மன்னர் வந்தார் - விரைசெறிந்த
மாலை துவள முடிதயங்க வால்வளையும்
காலை முரசும் கலந்து 134

மன்றலந்தார் மன்னன் நடுவணைய வந்திருந்தான்
கன்று குதட்டிய கார்நீலம் - முன்றில்

குறுவிழிக்கு நேர்நாடன் கோதைபெருங் கண்ணின்
சிறுவிழிக்கு நோற்றிருந்த சேய் 135

நித்திலத்தின் பொற்றோடு நீலமணித் தோடாக
மைத்தடங்கண் செல்ல வயவேந்தர் - சித்தம்
மருங்கே வரவண்டின் பந்தற்கீழ் வந்தாள்
அருங்கேழ் மணிப்பூண் அணங்கு 136

பேதை மடமயிலைச் சூழும் பிணைமான் போல்
கோதை மடமானைக் கொண்டணைந்த - மாதர்
மருங்கின் வெளிவழியே மன்னவர்கண் புக்கு
நெங்கினவே மேன்மேல் நிறைந்து 137

## *தாமரை பூத்த மண்டபம்*

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள் - மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய் போவதே போன்று 138

வடங்கொள் வனமுலையாள் வார்குழைமேல் ஓடும்
நெடுங்கண் கடைபார்த்து நின்றான் - இடங்கண்டு
பூவாளி வேந்தன்றன் பொன்னாவம் பின்னேயிட்டு
ஐவாளி நாணின்பால் இட்டு 139

மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென் றியலணங்கு - முன்னின்று
நார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து 140

## *தேர்வேந்தர் அறிமுகம்*

பொன்னி யமுதப் புதுக்கொழுந்து பூங்கமுகின்
சென்னி தடவும் திருநாடன் - பொன்னிற்
கணங்கவிழ்ந்த பூண்முலையாய் சூழமரிற் றுன்னார்
கணங்கவிழ்ந்த வேலனிவன் காண் 141

போர்வாய் வடிவேலாற் போழப் படாதோரும்
சூர்வாய் மதராிக்கண் தோகாய்கேள் - பார்வாய்ப்
பருத்ததோர் மால்வரையைப் பண்டொருகாற் செண்டால்
திரித்தகோ விங்கிருந்த சேய் 142

வென்றி நிலமடந்தை மென்முலைமேல் வெண்டுகில் போல்
குன்றருவி பாயும் குடநாடன் - நின்றபுகழ்
மாதே யிவன்கண்டாய் மானத் தனிக்கொடியின்
மீதே சிலையுயர்த்த வேந்து 143

ஆழிவடி யம்புலம்ப நின்றானும் அன்றொருகால்
ஏழிசைநூற் சங்கத் திருந்தானும் - நீள்விசும்பின்
நற்றேவர் தூது நடந்தானும் பாரதப்போர்
செற்றானும் கண்டாயிச்சேய் 144

தெரியில் இவன் கண்டாய் செங்கழுநீர் மொட்டை
அரவின் பசுந்தலையென் றஞ்சி - இரவெல்லாம்
பிள்ளைக் குருகிரங்கப் பேதைப்புள் தாலாட்டும்
வள்ளைக் குருநாடார் மன் 145

தேமருதார்க் காளை யிவன்கண்டாய் செம்மலர்மேல்
காமருசங் கீன்ற கதிர்முத்தைத் - தாமரைதன்
பத்திரத்தால் ஏற்கும் படுகாப் பழனஞ்சூழ்
மத்திரத்தார் கோமான் மகன் 146

அஞ்சாயல் மானே யிவன் கண்டாய் ஆலைவாய்
வெஞ்சாறு பாய விளைந்தெழுந்த - செஞ்சாலிப்
பச்சைத்தாள் மேதிக் கடைவாயிற் பாலொழுகும்
மச்சத்தார் கோமான் மகன் 147

வண்ணக் குவளை மலர்வெளவி வண்டெடுத்த
பண்ணிற் செவிவைத்துப் பைங்குவளை - உண்ணா
தருங்கடா நிற்கும் அவந்திநா டாளும்
இருங்கடா யானை இவன் 148

விடக்கதிர்வேற் காளை இவன்கண்டாய் மீனின்
தொடக்கொழியப் போய்நிமிர்ந்த தூண்டில் - மடற்கமுகின்
செந்தோடு பீறித்தேன் செந்நெற்பசுந்தோட்டில்
வந்தோடும் பாஞ்சாலர் மன் 149

அன்னம் துயிலெழுப்ப அந்தா மரைவயலில்
செந்நெல் அரிவார் சினையாமை - வன்முதுகில்
கூனிரும்பு தீட்டும் குலக்கோ சலநாடான்
தேனிருந்த சொல்லாயிச் சேய் 150

புண்டரிகம் தீயெரிவ போல்விரியப் பூம்புகைபோல்
வண்டிரியும் தெண்ணீர் மகதர்கோன் - எண்டிசையில்
போர்வேந்தர் கண்டறியாப் பொன்னாவம் பின்னுடைய
தேர்வேந்தன் கண்டாயிச் சேய் 151

கூன்சங்கின் பிள்ளை கொடிப்பவளக் கோடிடறித்
தேன்கழியில் வீழத் திரைக்கரத்தால் - வான்கடல்வந்
தந்தோ என வெடுக்கும் அங்கநா டாளுடையான்
செந்தேன் மொழியாயிச் சேய் 152

தென்வாளைக் காளைமீன் மேதிக் குலமெழுப்பக்
கள்வார்ந்த தாமரையின் காடுழக்கிப் - புள்ளோடு
வண்டிரியச் செல்லும் மணிநீர்க் கலிங்கர்கோன்
தண்டெரியல் தேர்வேந்தன் தான் 153

அங்கை வரிவளையாய் ஆழித் திரைகொணர்ந்த
செங்கண் மகரத்தைத் தீண்டிப்போய்க் - கங்கையினச்
சேல்குளிக்கும் கேகயர்கோன் தெவ்வாடற் கைவரைமேல்
வேல்குளிக்க நின்றானிவ் வேந்து 154

மாநீர் நெடுங்கயத்து வள்ளைக் கொடிமீது
தானேகும் அன்னம் தனிக்கயிற்றில் - போம்நீள்
கழைக்கோ தையரேய்க்கும் காந்தார நாடன்
மழைக்கோதை மானேயிம் மன் 155

அங்கை நெடுவேற்கண் ஆயிழையாய் வாலியின்வாய்ச்
சங்கம் புடைபெயரத் தான்கலங்கிச் - செங்கமலப்
பூச்சிந்தும் நாட்டேறல் பொன்விளைக்கும் தண்பணைசூழ்
மாச்சிந்து நாட்டானிம் மன் 156

காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார் - பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரை காணாநின்று
ஊசலா டுற்றாள் உளம் 157

பூணுக் கழகளிக்கும் பொற்றொடியைக் கண்டக்கால்
நாணுக்கு நெஞ்சுடைய நல்வேந்தர் - நீணிலத்து
மற்றேவர் வராதார் வானவரும் வந்திருந்தார்
பொற்றேர் நளனுருவாப் போந்து 158

மின்னுந்தார் வீமன்றன் மெய்மரபிற் செம்மைசேர்
கன்னியான் ஆகிற் கடிமாலை - அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட அருள்ளென்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே கொண்டு 159

### *நளனை அறிதல்*

கண்ணிமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால் - எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு 160

### *பொன்மாலை சூட்டினாள்*

விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணைகன் ஞாலம் களிகூர - மண்ணரசர்
வன்மாலை தம் மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன் 161

திண்டோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்
வெண்டா மரையாய் வெளுத்தவே - ஒண்டாரளக்

கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்த போது 162

மல்லல் மறுகின் மடநா குடனாகச்
செல்லும் மழவிடைபோல் செம்மாந்து - மெல்லியலாள்
பொன்மாலை பெற்ற தோளோடும் புறப்பட்டான்
நன்மாலை வேலான் நளன் 163

வேலை பெறாவமுதம் வீமன் திருமடந்தை
மாலை பெறாதகலும் வானாடர் - வேலை
பொருங்கலிநீர் ஞாலத்தைப் புன்னெறில் ஆக்கும்
இருங்கலியைக் கண்டார் எதிர் 164

ஈங்குவர வென்னென் றிமையவர்தம் கோன்வினவத்
தீங்கு தருகலியும் செப்பினான் - நீங்கள்
விருப்பான வீமன் திருமடந்தை யோடும்
இருப்பான் வருகின்றேன் யான் 165

மன்னவரில் வைவேல் நளனே மதிவதனக்
கன்னி மணமாலை கைக்கொண்டான் - உன்னுடைய
உள்ளக் கருத்தை ஒழித்தே குதியென்றான்
வெள்ளைத் தனியானை வேந்தது 166

விண்ணரசர் நிற்க வெறித்தேன் மணமாலை
மண்ணரசர்க் கீந்த மடமாதின் - எண்ணம்
கெடுக்கின்றேன் மற்றவள்தன் கேள்வற்கும் கீழ்மை
கொடுக்கின்றேன் என்றான் கொதித்து 167

வாய்மையும் செங்கோல் வளனும் மனத்தின்கண்
தூய்மையும் மற்றவன் தோள்வலியும் - பூமான்
நெடுங்கற்பும் மற்றவர்க்கு நின்றுரைத்துப் போனான்
அருங்கொற்ற வச்சிரத்தான் ஆங்கு 168

செருக்கதிர்வேல் கண்ணியுடன் தேர்வேந்தன் கூட
இருக்கத் தரியேன் இவரைப் - பிரிக்க
உடனாக என்றான் உடனே பிறந்த
விடநாகம் அன்னான் வெகுண்டு 169

## *மண வாழ்க்கை*

வெங்கதிரோன் தானும் விதர்ப்பன் திருமடந்தை
மங்கலநாள் காண வருவான்போல் - செங்குமுதம்
வாயடங்க மன்னற்கும் வஞ்சிக்கும் நன்னெஞ்சில்
தீயடங்க ஏறினான் தேர் 170

இன்னுயிர்க்கு நேரே இளமுறுவல் என்கின்ற
பொன்னழகைத் தாமே புதைப்பார்போல் - மென்மலரும்
சூட்டினார் சூட்டித் துடிசேர் இடையாளைப்
பூட்டினார் மின்னிமைக்கும் பூண் 171

கணிமொழிந்த நாளிற் கடிமணமும் செய்தார்
அணிமொழிக்கும் அண்ண லவற்கும் - பணிமொழியார்
குற்றேவல் செய்யக் கொழும்பொன் அறைபுக்கார்
மற்றெவரும் ஒவ்வார் மகிழ்ந்து 172

செந்திருவின் கொங்கையினும் தேர்வேந்த ணாகத்தும்
வந்துருவ வார்சிலையைக் கால்வளைத்து - வெந்தீயும்
நஞ்சும் தொடுத்தனைய நாம மலர்வாளி
அஞ்சும் தொடுத்தான் அவன் 173

ஒருவர் உடலில் ஒருவர் ஒதுங்கி
இருவரெனும் தோற்ற மின்றிப் - பொருவெங்
கனற்கேயும் வேலானுங் காரிகையுஞ் சேர்ந்தார்
புனற்கே புனல்கலந்தாற் போன்று 174

குழைமேலும் கோமா னுயிர்மேலும் கூந்தல்
மழைமேலும் வாளோடி மீள - விழைமேலே

அல்லோடும் வேலான் அகலத்தோ டும்பொருதாள்
வல்லோடும் கொங்கை மடுத்து 175

வீரனக லச்செறுவின் மீதோடிக் குங்குமத்தின்
ஈரவிள வண்ட லிட்டதே - நேர்பொருத
காராரும் மெல்லோதிக் கன்னியவள் காதலெனும்
ஓராறு பாய வுடைந்து 176

கொங்கை முகங்குழையக் கூந்தல் மழைகுலையச்
செங்கயற்க ணோடிச் செவிதடவ - அங்கை
வளைபூச லாட மடந்தையுடன் சேர்ந்தான்
விளைபூசற் கொல்யானை வேந்து 177

தையல் தளிர்கரங்கள் தன்தடக்கை யாற்பற்றி
வையம் முழுதும் மகிழ்தூங்கத் - துய்ய
மணந்தான் முடிந்ததற்பின் வாணுதல் தானும்
புணர்ந்தார் நெடுங்காலம் புக்கு 178

## 2. கலிதொடர் காண்டம்

முந்தை மறைநூல் முடியெனலாம் தண்குருகூர்ச்
செந்தமிழ் வேத சிரமெனலாம் - நந்தும்
புழைக்கைக்கும் நேயப் பொதுவர் மகளிர்க்கும்
அழைக்கைக்கு முன்செல் அடி 179

செக்கர் நெடுவானில் திங்கள் நிலாத்துளும்பி
உக்க தெனச்சடைமேல் உம்பர்நீர் - மிக்கொழுகும்
வெள்ளத்தான் வெள்ளி நெடுங்கிரியான் மெய்யன்பர்
உள்ளத்தான் எங்கட் குளன் 180

### *வழிநடைக் காட்சிகள்*

தவளத் தனிக்குடையின் வெண்ணிழலும் தையல்
குவளைக் கருநிழலும் கொள்ளப் - பவளக்

கொழுந்தேறிச் செந்நெற் குலைசாய்க்கும் நாடன்
செழுந்தேரில் ஏறினான் சென்று 181

மங்கையர்கள் வாச மலர்கொய்வான் வந்தணையப்
பொங்கி எழுந்த பொறிவண்டு - கொங்கோடு
எதிர்கொண் டணைவனபோல் ஏங்குவன முத்தின்
கதிர்கொண்ட பூண்முலையாய் காண் 182

பாவையர்கை தீண்டப் பணியாதார் யாவரே
பூவையர்கை தீண்டலுமப் பூங்கொம்பு - மேவியவர்
பொன்னடியிற் றாழ்ந்தனவே பூங்குழலாய் காணென்றான்
மின்னெடுவேற் கையான் விரைந்து 183

மங்கை யொருத்தி மலர்கொய்வாள் வாண்முகத்தைப்
பங்கயமென் றெண்ணிப் படிவண்டைச் - செங்கையால்
காத்தாளக் கைம்மலரைக் காந்தளெனப் பாய்தலுமே
வேர்த்தாளைக் காணென்றான் வேந்து 184

புல்லும் வரிவண்டைக் கண்டு புனமயில்போல்
செல்லும் மடந்தை சிலம்பவித்து - மெல்லப்போய்
அம்மலரைக் கொய்யா தருந்தளிரைக் கொய்வாளைச்
செம்மலரில் தேனே தெளி 185

கொய்த மலரைக் கொடுங்கையி னாலணைத்து
மொய்குழலிற் சூட்டுவான் முன்வந்து - தையலாள்
பாதார விந்தத்தே சூட்டினான் பாவையிடைக்
காதார மில்லா தறிந்து 186

ஏற்ற முலையார்க்கு இளைஞர் இடும்புலவித்
தோற்ற வமளியெனத் தோற்றுமால் - காற்றசைப்ப
உக்க மலரோ டுகுத்தவளை முத்தமே
எக்கர் மணன்மே லிசைந்து 187

அலர்ந்த மலர்சிந்தி அம்மலர்மேற் கொம்பு
புலர்ந்தசைந்து பூவணைமேற் புல்லிக்-கலந்தொசிந்த

புல்லென்ற கோலத்துப் பூவையரைப் போன்றதே
அல்லென்ற சோலை அலகு 188

கொங்கை முகத்தணையக் கூட்டிக் கொடுங்கையால்
அங்கணைக்க வாய்நெகிழ்ந்த ஆம்பற்பூ-கொங்கவிழ்தேன்
வார்க்கின்ற கூந்தன் முகத்தை மதியென்று
பார்க்கின்ற தென்னலாம் பார் 189

கொய்த குவளை கிழித்துக் குறுநுதன்மேல்
எய்தத் தனிவைத்த ஏந்திழையாள்-வையத்தார்
உண்ணாக் கடுவிடத்தை யுண்ட வொருமூன்று
கண்ணானைப் போன்றனளே காண் 190

கொழுநன் கொழுந்தாரை நீர்விசக் கூசிச்
செழுமுகத்தைத் தாமரைக்கே சேர்த்தாள்-கெழுமியவக்
கோமகற்குத் தானினைந்த குற்றங்கள் அத்தனையும்
பூமகட்குச் சொல்லுவாள் போல் 191

பொய்தற் கமலத்தின் போதிரண்டைக் காதிரண்டில்
பெய்து முகமூன்று பெற்றாள்போல்-எய்த
வருவாளைப் பாரென்றான் மாற்றாரை வென்று
செருவாளைப் பார்த்துவக்கும் சேய் 192

பொன்னுடைய வாசப் பொகுட்டு மலரலையத்
தன்னுடனே மூழ்கித் தனித்தெழுந்த-மின்னுடைய
பூணாள் திருமுகத்தைப் புண்டரிகம் என்றயிர்த்துக்
காணா தயர்வானைக் காண்க 193

சிறுக்கின்ற வாண்முகமும் செங்காந்தட் கையால்
முறுக்குநெடு மூரிக் குழலும்-குறிக்கின்
கரும்பாம்பு வெண்மதியைக் கைக்கொண்ட காட்சி
அரும்பாம் பணைமுலையாய் ஆம் 194

சோர்புனலில் மூழ்கி எழுவாள் சுடர்நுதல்மேல்
வார்குழலை நீக்கி வருந்தோற்றம்-பாராய்

விரைகொண் டெழுந்தபிறை மேகத் திடையே
புரைகின்ற தென்னலாம் பொற்பு 195

செழுநீலம் நோக்கெறிப்பச் செங்குவளை கொய்வாள்
முழுநீலம் என்றயிர்த்து முன்னர்க்-கழுநீரைக்
கொய்யாது போவாளைக் கோல்வளைக்குக் காட்டினான்
வையாரும் வேற்றடக்கை மன் 196

காவி பொருநெடுங்கண் காதலியும் காதலனும்
வாவியும் ஆறும் குடைந்தாடித்-தேவின்
கழியாத சிந்தையுடன் கங்கை நதிஆடி
ஒழியா துறைந்தார் உவந்து 197

*ஊடல் கொள்ளுதல்*

நறையொழுக வண்டுறையும் நன்னகர்வாய் நாங்கள்
உறையும் இளமரக்கா ஒக்கும்-இறைவளைக்கைச்
சிற்றிடையாய் பேரல்குல் தேமொழியாய் மென்முறுவல்
பொற்றொடியாய் மற்றிப் பொழில் 198

கன்னியர்தம் வேட்கையே போலும் களிமழலை
தன்மணிவாய் உள்ளே தடுமாற-மன்னவனே
இக்கடிகா நீங்கள் உறையும் இளமரக்கா
ஒக்குமதோ என்றாள் உயிர்த்து 199

தொண்டைக் கனிவாய் துடிப்பச் சுடர்நுதல்மேல்
வெண்தரளம் என்ன வியர்வரும்பக்-கெண்டைக்
கடைசிவப்ப நின்றாள் கழல்மன்னர் வெள்ளைக்
குடைசிவப்ப நின்றான் கொடி 200

தங்கள் புலவித் தலையில் தனித்திருந்த
மங்கை வதன மணியரங்கில்-அங்கண்
வடிவாள்மேற் கால்வளைத்து வார்புருவம் என்னும்
கொடியாடக் கண்டானோர் கூத்து 201

சில்லரிக் கிண்கிணிமென் தெய்வமலர்ச் சீரடியைத்
தொல்லை மணிமுடிமேற் சூட்டினான்-வல்லை
முழுநீலக் கோதை முகத்தே மலர்ந்த
செழுநீலம் மாறாச் சிவப்பு 202

அங்கைவேல் மன்னன் அகலம் எனுஞ் செறுவில்
கொங்கையேர் பூட்டிக் குறுவியர்நீர்-அங்கடைத்துக்
காதல் வரம்பொழுக்கிக் காமப் பயிர்விளைத்தாள்
கோவையரின் மேலான கொம்பு 203

## *மாவிந்த நகர் வாழ்க்கை*

வேரி மழைதுளிக்கும் மேகக் கருங்கூந்தற்
காரிகையும் தானும்போய்க் கண்ணுற்றான்-மூரித்
திரையேற மென்கிடங்கிற் சேலேற வாளை
கரையேறும் கங்கைக் கரை 204

சூதக் கனியூறல் ஏற்ற சுருள்வாழை
கோதில் நறவேற்கும் குப்பியென-மாதரார்
ஐயுற்று நோக்கும் அகன்பொழில்சென் றெய்தினான்
வையுற்ற வேற்றானை மன் 205

வான்தோய நீண்டுயர்ந்த மாடக் கொடிநுடங்கத்
தான்தோன்று மாற்றின் தடம்பதிதான்-வான்தோன்றி
வில்விளக்கே பூக்கும் விதர்ப்பநா டாளுடையான்
நல்விளக்கே எங்கள் நகர் 206

பொய்கையும் வாசப் பொழிலும் எழிலுருவச்
செய்குன்றும் ஆறும் திரிந்தாடித்-தையலுடன்
ஆறிரண்டாண் டெல்லை கழித்தான் அடையலரைக்
கூறிரண்டாக் கொல்யானைக் கோ 207

கோல நிறம்விளர்ப்பக் கொங்கை முகங்கருக
நீல நிறமயிர்க்கால் நின்றெறிப்ப-நூலென்னத்

தோன்றாத நுண்மருங்குல் தோன்றச் சுரிகுழலாள்
ஈன்றாள் குழவி இரண்டு. 208

## கலிமகன் புகுதல்

ஆண்டிரண்டா றெல்லை அளவும் திரிந்தேயும்
காண்டகைய வெங்கலியும் காண்கிலான்-நீண்ட புகழ்ச்
செந்நெறியாற் பார்காத்த செங்கோல் நிலவேந்தன்
தன்னெறியால் வேறோர் தவறு 209

சந்திசெயத் தாள்விளக்கத் தாளின்மறுத் தான்கண்டு
புந்தி மகிழப் புகுந்துகலி-சிந்தையெல்லாம்
தன்வயமே ஆக்குந் தமைய னுடனிருந்தான்
பொன்னசல மார்பற் புகைந்து 210

நாராய ணாயநமவென் றவனடியிற்
சேராரை வெந்துயரம் சேர்ந்தாற்போல்-பாராளும்
கொற்றவனைப் பார்மடந்தைக் கோமானை வாய்மைநெறி
கற்றவனைச் சேர்ந்தான் கலி 211

நன்னெறியில் சூதால் நளனைக் களவியற்றித்
தன்னரசு வாங்கித் தருகின்றேன்-மன்னவனே!
போதுவாய் என்னுடனே என்றான் புலைநரகுக்
கேதுவாய் நின்றான் எடுத்து 212

புன்னை நறுமலரின் பூந்தா திடையுறங்கும்
கன்னி இளமேதிக் காற்குழம்பு-பொன்னுரைத்த
கல்லேய்க்கும் நாடன் கவறாடப் போயினான்
கொல்லேற்றின் மேலேறிக் கொண்டு 213

வெங்கட் சினவிடையின் மேலேறிக் காலேறக்
கங்கைத் திரைநீர் கரையேறிச்-செங்கதிர்ப்பைம்
பொன்னொழியப் போதும் புறம்பணைசூழ் நன்னாடு
பின்னொழியப் போந்தான் பெயர்ந்து 214

அடற்கதிர்வேல் மன்னன் அவனேற்றின் முன்போய்
எடுத்தகொடி என்னகொடி என்ன-மிடற்சூது
வெல்லும் கொடியென்றான் வெங்கலியால் அங்கவன்மேல்
செல்லும் கொடியோன் தெரிந்து 215

ஏன்றோம் இதுவாயின் மெய்ம்மையே எம்மோடு
வான்றோய் மடல்தெங்கின் வான்தேறல்-தான்தேக்கி
மீதாடி வாளைவயல் வீந்துழக்கும் நன்னாடன்
சூதாட என்றான் துணிந்து 216

## சூதின் தீமைகள்

காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
ஈதல் மறுத்தல் இவைகண்டாய்-போதில்
சினையாமை வைகும் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி 217

அறத்தைவேர் கல்லும் அருநரகிற் சேர்க்கும்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்-மறத்தையே
பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ வென்றார் தெரிந்து 218

உருவழிக்கும் உண்மை உயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கும் மானஞ் சிதைக்கும்-மருவும்
ஒருவரோ டன்பழிக்கும் ஒன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து 219

ஆயம் பிடித்தாரும் அல்லற் பொதுமகளிர்
நேயம் பிடித்தாரும் நெஞ்சிடையே-மாயம்
பிடித்தாரின் வேறல்ல ரென்றுரைப்ப தன்றே
வடித்தாரின் நூலோர் வழக்கு 220

## நளன் சூது ஆடுதல்

தீது வருக நலம்வருக சிந்தையாற்
சூது பொரவிசைத்து சொல்லினோம்-யாதும்
விலக்கலிர்நீ ரென்றான் வராலேற மேதி
கலக்கலைநீர் நாடன் கனன்று 221

நிறையில் கவறாடல் நீநினைந்தா யாகில்
திரையிற் கதிர்முத்தஞ் சிந்தும்-துறையில்
கரும்பொடியா மள்ளர் கடாவடிக்கும் நாடா
பொரும்படியா தென்றானிப் போது 222

விட்டொளிர்வில் வீசி விளங்குமணிப் பூணாரம்
ஒட்டினேன் உன்பணையும் ஏதென்ன-மட்டவிழ்தார்
மல்லேற்ற தோளானும் வான்பணைய மாகத்தன்
கொல்லேற்றை வைத்தான் குறித்து 223

காரேயும் கூந்தலார் காரிகைமேற் காதலித்த
தாரேயும் தோளான் தனிமனம்போல்-நேரே
தவறாய்ப் புரண்ட தமைய னொடுங்கூடிக்
கவறாய்ப் புரண்டான் கலி 224

வைத்த மணியாரம் வென்றேன் மறுபலகைக்
கொத்த பணயம் உரையென்ன-வைத்தநிதி
நூறா யிரத்திரட்டி நூறுநூ றாயிரமும்
வேறாகத் தோற்றானவ் வேந்து 225

பல்லா யிரம்பரியும் பத்துநூ றாயிரத்துச்
சொல்லார் மணித்தேரும் தோற்றதற்பின்-வில்லாட்கள்
முன்றோற்று வானின் முகிறோற்கும் மால்யானை
பின்றோற்றுத் தோற்றான் பிடி 226

சாதுரங்கம் வென்றேன் தரும்பணைய மேதென்ன
மாதுரங்கம் பூணும் மணித்தேரான்-சூதரங்கிற்

பாவையரைச் செவ்வழியாழ்ப் பண்ணின்மொழிப்பின்னுகுழற்
பூவையரைத் தோற்றான் பொருது 227

### சிறியானைச் சேர்ந்நாள் திரு

கற்பின் மகளிர்பா னின்றும் தமைக்கவட்டின்
விற்கு மகளிர்பான் மீண்டாற்போல்-நிற்கும்
நெறியானை மெய்ம்மைவாய் நின்றானை நீங்கிச்
சிறியானைச் சேர்ந்தாள் திரு 228

மனைக்குரியார் அன்றே வருந்துயரம் தீர்ப்பார்
சினைச்சங்கின் வெண்டலையைத் தேனால் நனைக்கும்
குவளைப் பணைப்பைந்தாட் குண்டுநீர் நாடா
இவளைப் பணயந்தா வின்று 229

இனிச்சூ தொழிந்தோம் இனவண்டு கிண்டிக்
கனிச்சூத வார்பொழிலின் கண்ணே-பனிச்சூதப்
பூம்போ தவிழ்க்கும் புனனாடன் பொன்மகளே
நாம்போதும் என்றான் நளன் 230

மென்காற் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகம் கொள்ளத்தான் போனாற்போல்-தன்கால்
பொடியாடத் தேவியொடும் போயினா னன்றே
கொடியானுக் கப்பார் கொடுத்து 231

கடப்பா ரெவரே கடுவினையை வீமன்
மடப்பாவை தன்னுடனே மன்னன் - நடப்பான்
வனத்தே செலப்பணித்து மாயத்தாற் சூழ்ந்த
தனைத்தே விதியின் வலி 232

### நாட்டு மக்கள் அவலம்

ஆருயிரின் தாயே அறத்தின் பெருந்தவமே
பேரருளின் கண்ணே பெருமானே-பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ யாங்கென்றார் தங்கண்ணின்
நீர்வார்த்துக் கால்க ழுவா நின்று 233

வேலை கரையிழந்தால் வேத நெறிபிறழ்ந்தால்
ஞாலம் முழுதும் நடுவிழந்தால்-சீலம்
ஒழிவரோ செம்மை உரைதிறம்பாச் செய்கை
அழிவரோ செங்கோ லவர். 234

வடியேறு கூரிலைவேன் மன்னாவோ உன்றன்
அடியேற்கட் காதரவு தீரக்-கொடிநகரில்
இன்றிருந்து நாளை எழுந்தருள்க என்றுரைத்தார்
வென்றிருந்த தோளான்றாள் வீழ்ந்து 235

மன்றலிளங் கோதை முகநோக்கி மாநகர்வாய்
நின்றுருகு வார்கண்ணி னீர்நோக்கி-இன்றிங்
கிருத்துமோ வென்றா னிளங்குதலை வாயாள்
வருத்தமோ தன்மனத்தில் வைத்து 236

வண்டாடும் தார்நளனை மாநகரில் யாரேனும்
கொண்டாடினார் தம்மைக் கொல்லென்று-தண்டா
முரசறைவா யாங்கென்றான் முன்னே முனிந்தாங்
கரசறியா வேந்த னழன்று 237

அறையும் பறையரவங் கேட்டழிந்து நைந்து
பிறைநுதலாள் பேதமையை நோக்கி-முறுவலியா
இந்நகர்க்கீ தென்பொருட்டா வந்த தெனவுரைத்தான்
மன்னகற்றும் கூரிலைவேன் மன். 238

தன்வாயில் மென்மொழியே தாங்கினான் ஓங்குநகர்ப்
பொன்வாயில் பின்னாகப் போயினான்-முன்னாளில்
பூமகளைப் பாரினொடு புல்லினான் தன்மகனைக்
கோமகளைத் தேவியொடுங் கொண்டு 239

கொற்றவன்பால் செல்வாரைக் கொல்வான் முரசறைந்து
வெற்றியோடு புட்கரனும் வீற்றிருப்ப-முற்றும்
இழவு படுமாபோல் இல்லங்க டோறும்
குழவிபா லுண்டிலவே கொண்டு 240

## சுரம் கடத்தல்

சந்தக் கழற்றா மரையுஞ் சதங்கையணி
பைந்தளிரும் நோவப் பதைத்துருகி-எந்தாய்
வடந்தோய் களிற்றாய் வழியான தெல்லாம்
கடந்தோமோ வென்றார் கலுழ்ந்து 241

தூயதன் மக்கள் துயர்நோக்கிச் சூழ்கின்ற
மாய விதியின் வலிநோக்கி - யாதும்
தெரியாது சித்திரம்போல் நின்றிட்டான் செம்மை
புரிவான் துயரால் புலர்ந்து 242

காதல் இருவரையும் கொண்டு கடுஞ்சுரம் போக்
கேதம் உடைத்திவரைக் கொண்டுநீ-மாதராய்
வீமன் திருநகர்க்கே மீளென்றான் விண்ணவர்முன்
தாமம் புனைந்தாளைத் தான் 243

குற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தரையும்
பெற்றுக் கொளலாம் பெறலாமோ-கொற்றவனே
கோக்கா தலனைக் குலமகளுக் கென்றுரைத்தாள்
நோக்கான் மழைபொழியா நொந்து 244

கைதவந்தான் நீக்கிக் கருத்திற் கறையகற்றிச்
செய்தவந்தான் எத்தனையும் செய்தாலும்-மைதீர்
மகப்பெறா மானிடர்கள் வானவர்தம் மூர்க்குப்
புகப்பெறார் மாதராய் போந்து 245

## மக்கள் செல்வம்

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனும் உடையரோ-இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்? 246

சொன்ன கலையின் துறையனைத்தும் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தாம் இன்முகத்து-முன்னங்
குறுகு தலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி 247

போற்றரிய செல்வம் புனனாட் டொடும்போகத்
தோற்றமையும் யாவற்குந் தோற்றாதே-ஆற்றலாய்
எம்பதிக்கே போந்தருளு கென்றா ளெழிற்கமலச்
செம்பதிக்கே வீற்றிருந்த தேன் 248

சினக்கதிர்வேற் கண்மடவாய் செல்வர்பாற் சென்றீ
எனக்கென்னு மிம்மாற்றங் கண்டாய்-தனக்குரிய
தானந் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானந் துடைப்பதோர் வாள் 249

மன்னவராய் மன்னர் தமையடைந்து வாழ்வெய்தி
இன்னமுதம் தேக்கி யிருப்பாரேல்-சொன்ன
பெரும்பே டிகளலரேற் பித்தரே யன்றோ
அரும்பேடை மானே யவர் 250

செங்கோலாய் உன்றன் திருவுள்ளம் ஈதாயின்
எங்கோன் விதர்ப்பன் எழில்நகர்க்கே-நங்கோலக்
காதலரைப் போக்கி அருளென்றாள் காதலருக்
கேதிலரைப் போல எடுத்து 251

பேதை பிரியப் பிரியாத பேரன்பின்
காதலரைக் கொண்டுபோய்க் காதலிதன்-தாதைக்குக்
காட்டுநீ என்றான் கலங்காத உள்ளத்தை
வாட்டுநீர் கண்ணிலே வைத்து 252

## *மக்களைப் பிரிதல்*

தந்தை திருமுகத்தை நோக்கித் தமைப்பயந்தாள்
இந்து முகத்தை எதிர்நோக்கி-எந்தம்மை

வேறாகப் போக்குதிரோ என்றார் விழிவழியே
ஆறாகக் கண்ணீர் அழுது 253

அஞ்சனந்தோய் கண்ணின் அருவிநீர் ஆங்கவர்க்கு
மஞ்சனநீர் ஆக வழிந்தோட - நெஞ்சுருகி
வல்லிவிடா மெல்லிடையாள் மக்களைத்தன் மார்போடும்
புல்லிவிடா நின்றாள் புலர்ந்து 254

இருவர் உயிரும் இருகையான் வாங்கி
ஒருவன் கொண் டேகுவான் ஒத்து-அருமறையோன்
கோமைந்த னோடிளைய கோதையைக் கொண்டேகினான்
வீமன் நகர்க்கே விரைந்து 255

காத லவர்மேலே கண்ணோட விண்ணோடும்
ஊதை எனநின் றுயிர்ப்போட-யாதும்
உரையாடா துள்ளம் ஒடுங்கினான் வண்டு
விரையாடும் தாரான் மெலிந்து 256

சேலுற்ற வாவித் திருநாடு பின்னொழியக்
காலிற் போய்த் தேவியொடும் கண்ணுற்றான் ஞாலஞ்சேர்
கள்ளிவே கத்தரவின் கண்மணிகள் தாம்பொடியாத்
துள்ளிவே கின்ற சுரம் 257

### பறவை ஏய்த்தல்

கன்னிறத்த சிந்தைக் கலியுமவன் முன்பாகப்
பொன்னிறத்த புள்வடிவாய்ப் போந்திருந்தான் நன்னெறிக்கே
அஞ்சிப்பார் ஈந்த அரசனையும் தேவியையும்
வஞ்சிப்பான் வேண்டி வனத்து 258

தேன்பிடிக்கும் தண்துழாய்ச் செங்கண் கருமுகிலை
மான்பிடிக்கச் சொன்ன மயிலேபோல்-தான்பிடிக்கப்
பொற்புள்ளைப் பற்றித்தா என்றாள் புதுமழலைச்
சொற்கிள்ளை வாயாள் தொழுது 259

பொற்புள் ளதனைப் பிடிப்பான் நளன்புகுதக்
கைக்குள் வருமாபோற் கழன்றோடி - எய்க்கும்
இளைக்குமா போல் இருந்ததுகண் டன்றே
வளைக்குமா றெண்ணி மன் 260

கொற்றக் கயற்கட் கொடியே இருவோரும்
ஒற்றைத் துகிலா லுடைபுனைந்து - மற்றிந்தப்
பொற்றுகிலாற் புள்வளைக்கப் போதுவோ மென்றுரைத்தான்
பற்றகலா வுள்ளம் பரிந்து 261

எற்றித் திரைபொர நொந்தேறி யிளமணலிற்
பற்றிப் பவளம் படர்நிழற்கீழ் - முத்தீன்று
வெள்வளைத்தா யோடு நீர் வேலைத் திருநாடன்
புள்வளைத்தான் ஆடையாற் போந்து 262

கூந்தல் இளங்குயிலும் கோமானும் கொண்டணைந்த
பூந்துகில் கொண் டந்தரத்தே போய்நின்று - வேந்தனே
நன்னாடு தோற்பித்தோன் நானேகாண் என்றதே
பொன்னாடு மானிறத்த புள் 263

காவிபோற் கண்ணிக்கும் கண்ணியந்தோட் காளைக்கும்
ஆவிபோ லாடையுமொன் றானதே - பூவிரியக்
கள்வேட்டு வண்டுழலுங் கானத் திடைக்கனகப்
புள்வேட்டை யாதரித்த போது 264

அறம்பிழைத்தார் பொய்த்தார் அருள்சிதைத்தார் மானத்
திறம்பிழைத்தார் தெய்வம் இகழ்ந்தார் - புறக்கடையில்
சென்றார் புகுநரகஞ் சேர்வாய்கொல் என்றழியா
நின்றாள் விதியை நினைந்து 265

வையம் துயருழப்ப மாயம் பலசூழ்ந்து
தெய்வங் கெடுத்தாற் செயலுண்டோ - மெய்வகையே

சேர்ந்தருளி நின்றதனிச் செங்கோலா யிங்கொழியப்
போந்தருளு கென்றாள் புலந்து 266

அந்த நெடுஞ்சுரத்தின் மீதேக வாங்கழலும்
வெந்தழலை யாற்றுவாள் மேற்கடற்கே - எந்தை
குளிப்பான்போற் சென்றடைந்தான் கூரிருளாற் பாரை
யொளிப்பான்போற் பொற்றே ருடன் 267

பானு நெடுந்தேர் படுகடலிற் பாய்ந்ததற்பின்
கான வடம்பின் கவட்டிலைகள் - மானின்
குளம்பேய்க்கும் நன்னாடன் கோதையொடுஞ் சென்றான்
இளம்பேய்க்கும் தோன்றா விருள் 268

### *பாழ்மண்டபம் அடைதல்*

எங்காம் புகலிடமென் றெண்ணி யிருள் வழிபோய்
வெங்கா னகந்திரியும் வேளைதனில் - அங்கேயோர்
பாழ்மண் டபங்கண்டான் பால்வெண் குடைநிழற்கீழ்
வாழ்மண் டபங்கண்டான் வந்து 269

மூரி யிரவும்போய் முற்றிருளாய் மூண்டதால்
சாறு மிடமற்றுத் தானில்லை - சோர்கூந்தல்
மாதாரய் நாமிந்த மண்டபத்தே கண்டுயிலப்
போதரா யென்றான் புலர்ந்து 270

வையம் உடையான் மகரயாழ் கேட்டருளும்
தெய்வச் செவிகொதுகின் சில்பாடல் - இவ்விரவில்
கேட்டவா வென்றழுதாள் கெண்டையங்கண் நீர்சோரத்
தோட்டவார் கோதையாள் சோர்ந்து 271

பண்டை வினைப்பயனைப் பாரிடத்தி லார்கடப்பார்
கொண்டல் நிழலிற் குழைதடவும் - கெண்டை
வழியனீ ரென்றான் மனநடுங்கி வெய்துற்
றழியனீ யென்றான் அரசு 272

விரைமலர்ப்பூ மெல்லணையும் மெய்காவல் பூண்ட
பரிசனமும் பள்ளி யறையும் - அரசேநான்
காணேனிங் கென்னாக் கலங்கினாள் கண்பனிப்பப்
பூணோர் முலையாள் புலர்ந்து 273

தீய வனமும் துயின்று திசைஎட்டு மேதுயின்று
பேயுந் துயின்றதாற் பேர்யாமம் - நீயுமினிக்
கண்மேற் றுயில்கை கடனென்றான் - கைகொடுத்து
மண்மேற் றிருமேனி வைத்து 274

புன்கண்கூர் யாமத்துப் பூமிமேற் றான்படுத்துத்
தன்கண் துயில்வாளைத் தான்கண்டு - மென்கண்
பொடியாதால் உள்ளாவி போகாதால் நெஞ்சம்
வெடியாதால் என்றான் விழுந்து 275

முன்றில்தனில் மேற்படுக்க முன்தா னையுமின்றி
இன்றுதுயில இறைவனுக்கே - என்றனது
கைபுகுந்த தென்னுடைய கால்புகுந்த தென்றழுதாள்
மைபுகுந்த கண்ணீர் வர. 276

வீமன் திருமடந்தை விண்ணவரும் பெற்றிலாத்
தாமம் எனக்களித்த தையலாள் - யாமத்துப்
பாரே அணையாயப் படைக்கண் துயின்றால்மற்
றாரே துயரடையார் ஆங்கு 277

பெய்ம்மலர்ப்பூங் கோதை பிரியப் பிரியாத
செம்மை யுடைமனத்தான் செங்கோலான் - பொய்ம்மை
விலக்கினான் நெஞ்சத்தை வேறாக்கி நின்று
கலக்கினான் வஞ்சக் கலி 278

வஞ்சக் கலிவலியான் மாகத் தராவளைக்குஞ்
செஞ்சுடரின் வந்த கருஞ்சுடர்போல் - விஞ்ச
மதித்ததேர்த் தானை வயவேந்தன் நெஞ்சத்
துதித்ததே வேறோர் உணர்வு 279

காரிகைதன் வெந்துயரம் காணாமல் நீத்தந்தக்
கூரிருளிற் போவான் குறித்தெழுந்து - நேரே
இருவர்க்கும் ஒருயிர்போ லெய்தியதோர் ஆடை
அரிதற் கவனினைந்தா னாங்கு 280

எண்ணிய எண்ணம் முடிப்ப இகல்வேந்தன்
கண்ணி யதையறிந்து காய்கலியும் - பண்ணினுக்குக்
கேளான தேமொழியை நீங்கக் கிளரொளிசேர்
வாளாய் மருங்கிருந்தான் வந்து 281

ஒற்றைத் துகிலும் உயிரும் இரண்டாக
முற்றுந்தன் அன்பை முதலோடும் - பற்றி
அரிந்தான் அரிந்திட்ட டவள்நிலைமை நெஞ்சில்
தெரிந்தான் இருந்தான் திகைத்து 282

போயொருகால் மீளும் புகுந்தொருகால் மீண்டேகும்
ஆயர் கொணர்ந்த அடுபாலின் - தோயல்
கடைவார்தம் கைபோல ஆயிற்றே காலன்
வடிவாய வேலான் மனம் 283

சிந்துரத்தான் தெய்வ முனிவன் தெரிந்துரைத்த
மந்திரத்தால் தம்பித்த மாநீர்போல் - முந்த
ஒளித்ததேர்த் தானை உயர்வேந்தன் நெஞ்சம்
வலித்ததே தீக்கலியால் வந்து 284

## *தமயந்தியைப் பிரிதல்*

தீக்கா னகத்துறையும் தெய்வங்காள்! வீமன்தன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின் - நீக்காத
காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின்
றேதிலன்போல் போகின்றேன் யான் 285

ஏந்தும் இளமுலையாள் இன்னுயிரும் தன்னருளும்
பூந்துகிலும் வேறாகப் போயினான் - தீந்தேன்

தொடைவிரவு நாள்மாலை சூட்டினாள் தன்னை
இடையிருளில் கானகத்தே இட்டு 286

தாருவெனப் பார்மேல் தருசந்த திரன்சுவர்க்கி
மேருவரைத் தோளான் விரவார்போல் - கூரிருளில்
செங்கோ னகஞ்சிதையத் தேவியைவிட் டேகினான்
வெங்கா னகந்தனிலே வேந்து 287

## தமயந்தி துயர்

நீலம் அளவே நெகிழ நிரைமுத்தின
கோல மலரின் கொடியிடையாள் - வேல்வேந்தே
எங்குற்றாய் என்னா இனவளைக்கை நீட்டினாள்
அங்குத்தான் காணா தயர்ந்து 288

உடுத்த துகிலரிந்த தொண்டொடியாள் கண்டு
மடுத்த துயிலான் மறுகி - அடுத்தடுத்து
மன்னேயென அழைப்பாள் மற்றுமவ னைக்காணா
தென்னேயிஃ தென்னென் றெழுந்து 289

வெய்ய தரையென்னும் மெல்லமளி யைத்தடவிக்
கையரிக்கொண் டெவ்விடத்தும் காணாமல் - ஐயகோ
என்னப்போய் வீழ்ந்தாள் இனமேதி மென்கரும்பைத்
தின்னப்போம் நாடன் திரு 290

அழல்வெஞ் சிலைவேடன் அம்புருவ ஆற்றா
துழலுங் களிமயில்போல் ஓடிக் - குழல்வண்
டெழுந்தோட வீழ்ந்தாள் இருங்குழைமேல் கண்ணீர்த்
கொழுந்தோட வீமன் கொடி 291

வான்முகிலும் மின்னும் வறுநிலத்து வீழ்ந்ததுபோல்
தானும் குழலும் தனிவீழ்ந்தாள் - ஏனம்
குளம்பான் மணிகிளைக்கும் குண்டுநீர் நாடன்
இளம்பாவை கைதலைமேல் இட்டு 292

தையல் துயர்க்குத் தரியாது தம்சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய் - வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம் 293

வான நெடுவீதி செல்லும் மணித்தேரோன்
தான மடந்தைக்குத் தார்வேந்தன் - போனநெறி
காட்டுவான் போலிருள்போய்க் கைவாங்கக் கானூடே
நீட்டுவான் செங்கரத்தை நின்று 294

செய்தபிழை ஏதென்னும் தேர்வேந்தே என்றழைக்கும்
எய்துதுயர்க் கரைகா ணேனென்னும் - பையவே
என்னென்னா தென்னென்னும் இக்கானின் விட்டேகும்
மன்னென்னா வாடும் அயர்ந்து 295

அல்லியரந்தார் மார்பன் அடித்தா மரையவள்தன்
நல்லுயிரும் ஆசையும்போல் நாறுதலும் - மல்லுறுதோள்
வேந்தனே என்று விழுந்தாள் விழிவேலை
சார்ந்தநீர் வெள்ளத்தே தான் 296

வெறித்த இளமான்காள்! மென்மயில்காள்! இந்த
நெறிக்கண் நெடிதூழி வாழ்வீர் - பிரித்தெம்மைப்
போனாரைக் காட்டுதிரோ என்னாப் புலம்பினாள்
வானாடர் பெற்றிலா மான் 297

## அரவு விழுங்குதல்

வேட்ட கரியை விழுங்கிப் பெரும்பசியான்
மோட்டு வயிற்றரவு முன்தோன்ற - மீட்டதனை
ஓரா தருகணைந்தாள் உண்தேன் அறற்கூந்தல்
பேரார் விழியாள் புலர்ந்து 298

அங்கண் விசும்பின் அவிர்மதிமேல் சென்றடையும்
வெங்கண் அரவுபோல் மெல்லியலைக் - கொங்கைக்கு

மேலெல்லாம் தோன்ற விழுங்கியதே வெங்கானின்
பாலெல்லாம் தீயுமிழும் பாம்பு 299

வாளரவின் வாய்ப்பட்டு மாயாமுன் மன்னவநின்
தாளடைந்து வாழுந் தமியேனைத் - தோளால்
விலக்காயோ என்றழுதாள் வெவ்வரவின் வாய்க்கிங்
கிலக்காகி நின்றாள் எடுத்து 300

வென்றிச் சினவரவின் வெவ்வாய் இடைப்பட்டு
வன்துயராற் போயாவி மாள்கின்றேன் - இன்றுன்
திருமுகநான் காண்கிலேன் தேர்வேந்தே என்றாள்
பொருமுகவேற் கண்ணாள் புலர்ந்து 301

மற்றொடுத்த தோள்பிரிந்து மாயாத வல்வினையேன்
பெற்றெடுத்த மக்காள் பிரிந்தேகும் - கொற்றவனை
நீரேனும் காண்குதிரோ என்றழுதாள் நீள்குழற்குக்
காரேனும் ஒவ்வாள் கலுழ்ந்து 302

அடையும் கடுங்கானில் ஆடரவின் வாய்ப்பட்
டுடையுமுயிர் நாயகனே ஓகோ - விடையெனக்குத்
தந்தருள்வாய் என்னாத்தன் தாமரைக் கை கூப்பினாள்
செந்துவர்வாய் மென்மொழியாள் தேர்ந்து 303

உண்டோர் அழுகுரல்என் றொற்றி வருகின்ற
வெண்தோடன் செம்பங்கி வில்வேடன் - கண்டான்
கழுகுவாழ் கானகத்துக் காரரவின் வாயில்
முழுகுவாள் தெய்வ முகம் 304

வெய்ய அரவின் விடவாயின் உட்பட்டேன்
ஐயன்மீர் உங்கட் கபயம்யான் - உய்ய
அருளீரோ என்னா அரற்றினாள் அஞ்சி
இருளீரும் பூணாள் எடுத்து 305

சங்க நிதிபோல் தருசந் திரன்சுவர்க்கி
வெங்கலிவாய் நின்றுலகம் மீட்டாற்போல் மங்கையைவெம்
பாம்பின்வாய் நின்றும் பறித்தான் பகைகடிந்த
காம்பின் வில்வேடன் கண்டு 306

ஆருயிறும் நானும் அழியாமல் ஐயாவிப்
பேரரவின் வாயிற் பிழைப்பித்தாய் - தேரில்
இதற்குண்டோ கைம்மா றெனவுரைத்தாள் வென்றி
விதர்ப்பன்றான் பெற்ற விளக்கு 307

## வேடன் காத்தல்

இந்து நுதலி எழில்நோக்கி ஏதோதன்
சிந்தை கருதிச் சிலைவேடன் - பைந்தொடிநீ
போதுவாய் என்னுடனே என்றான் புலைநரகுக்
கேதுவாய் நின்றான் எடுத்து 308

வேடன் அழைப்ப விழிபதைத்து வெய்துயிரா
ஆடன் மயில்போல் அலமரா - ஓடினாள்
தூறெலா மாகச் சுரிகுழல்வேற் கண்ணினீர்
ஆறெலா மாக வழுது 309

தீக்கட் புலிதொடரச் செல்லும் சிறுமான்போல்
ஆக்கை தளர வலமந்து - போக்கற்றுச்
சீறா விழித்தாள் சிலைவேடன் அவ்வளவில்
நீறாய் விழுந்தாள் நிலத்து 310

வண்டமிழ்வா ணர்ப்பிழை வன்குடிபோல் தீத்தழன்மீ
மண்டு கொடுஞ்சுரத்தோர் மாடிருந்து - பண்டையுள
வாழ்வெல்லாம் தானினைந்து மற்றமுதாள் மன்னிழைத்த
தாழ்வெலாம் தன்தலைமேற் றந்து 311

## வழிப் போக்கன் துணையாதல்

அவ்வளவி லாதிப் பெருவழியி லாய்வணிகன்
இவ்வளவு தீவினையேன் என்பாள்தன் - மெய்வடிவைக்

கண்டானை யுற்றாள் கமலமயி லேயென்றான்
உண்டாய தெல்லாம் உணர்ந்து 312

எக்குலத்தாய் யார்மடந்தை யாதுன்னூர் யாதுன்பேர்
நெக்குருகி நீயழுதற் கென்னிமித்தம் - மைக்குழலாய்
கட்டுரைத்துக் காணென்றான் கார்வண்டு காந்தாரம்
விட்டுரைக்குந் தார்வணிகர் வேந்து 313

முன்னை வினையின் வலியால் முடிமன்னன்
என்னைப் பிரிய இருங்கானில் - அன்னவனைக்
காணா தழுகின்றேன் என்றாள் கதிரிமைக்கும்
பூணாரம் பூண்டாள் புலர்ந்து 314

### *சேதி நகர் சோதல்*

சேதி நகர்க்கே திருவைச் செலவிட்டுஅப்
போதிற் கொடைவணிகன் போயினான் - நீதி
கிடத்துவான் மன்னவர்தம் கீர்த்தியினைப் பார்மேல்
நடத்துவான் வட்டை நடந்து 315

அற்ற துகிலும் அறாதொழுகு கண்ணீரும்
உற்ற துயரும் உடையவளாய் - மற்றொருத்தி
நின்றாளைக் கண்டோம் நிலவேந்தன் பொற்றேவி
என்றார் மடவார் எடுத்து 316

போயகலா முன்னம் புனையிழையாய் பூங்குயிலை
ஆய மயிலை யறியவே - நீயேகிக்
கொண்டுவா வென்றாள்தன் கொவ்வைக் கனிதிறந்து
வண்டுவாழ் கூந்தன் மயில் 317

ஆங்கவளும் ஏக அரசன் பெருந்தேவி
பூங்கழலின் மீதே புரண்டழுதாள் - தாங்கும்
இனவளையாய் உற்ற துயர்எல்லாம் எனது
வினைவலிகாண் என்றாள் மெலிந்து 318

அந்தா மரையி லவளேயென் றையுற்றுச்
சிந்தா குலமெனக்குத் தீராதால் - பைந்தொடியே
உள்ளவா றெல்லாம் உரையென்றாள் ஒண்மலரின்
கள்ளவார் கூந்தலாள் கண்டு 319

என்னைத் தனிவனத்திட் டெங்கோன் பிரிந்தேக
அன்னவனைக் காணா தலமருவேன் - இந்நகர்க்கே
வந்தே னிதுவென் வரவென்றாள் வாய்புலராச்
செந்தேன் மொழிபதறாச் சோர்ந்து 320

உன்றலைவன் தன்னை யொருவகையால் நாடியே
தந்து விடுமளவும் தாழ்குழலாய் - என்றனுடன்
இங்கே இருக்க இனிதென்றா ளேந்திழையைக்
கொங்கேயுந் தாராள் குறித்து 321

ஈங்கிவளிவ் வாறிருப்ப இன்னலுழந் தேயேகிப்
பூங்குயிலும் போர்வேற் புரவலனும் - யாங்குற்றார்
சென்றுணர்தி என்று செலவிட்டான்
குன்றுறழ்தோள் வீமன் குறித்து 322

ஓடும் புரவித்தேர் வெய்யோன் ஒளிசென்று
நாடும் இடமெல்லாம் நாடிப்போய் - கூடினான்
போதிற் றிருநாடும் பொய்கைத் திருநாடாஞ்
சேதித் திருநாடு சென்று 323

தாமஞ்சே ரோதித் தமயந்தி நின்றாளை
ஆமென் றறியா அருமறையோன் - வீமன்
கொடிமேல் விழுந்தழுவான் கொம்புமவன் செம்பொன்
அடிமேல் விழுந்தாள் அழுது 324

மங்கை விழிநிர் மறையோன் கழல்கழுவ
அங்கவன்றன் கண்ணீ ரவளுடன்மேற் - பொங்கக்
கடல்போலுங் காதலார் கையற்றோர் தங்கள்
உடல்போலும் ஒத்தார் உயிர் 325

மாரி பொருகூந்தன் மாதராய் நீபயந்த
காரிகைதான் பட்டதுயர் கண்டாயோ - சோர்குழலும்
வேணியாய் வெண்டுகிலும் பாதியாய் வெந்துயருக்
காணியாய் நின்றா ளயர்ந்து 326

தன்மக ளாவ தறியாத் தடுமாறாப்
பொன்வடிவின் மேலழுது போய்வீழ்ந்தாள் - மென்மலரைக்
கோதிப்போய் மேதி குருகெழுப்பும் தண்பணைசூழ்
சேதிக்கோன் தேவி திகைத்து 327

கந்தனையும் கன்னியையும் கண்டாயி னுஞ்சிறிது
தன்துயரம் தீர்ந்து தனியாறத் - தந்தை
பதியிலே போக்கினான் சேதியர்கோன் பண்டை
விதியிலே போந்தாளை மீண்டு 328

## *விதர்ப்பம் சேர்தல்*

கோயிலும் அந்தப் புரமும் கொடிநுடங்கும்
வாயிலும் நின்று மயங்கியதே - தீயகொடும்
கானாள மக்களையும் கைவிட்டுக் காதலன்பின்
போனாள் புகுந்த பொழுது 329

அழுவார் விழுவார் அயிர்ப்பார் உயிர்ப்பார்
தொழுவார் தமரெங்கும் சூழ்வார் - வழுவாக்
காமநீ ரோதக் கடல் கிளர்ந்தால் ஒத்தவே
நாமவேல் வீமன் நகர் 330

தந்தையைமுன் காண்டலுமே தாமரைக்க ணீர்சொரியச்
சிந்தை கலங்கி திகைத்தலமந் - தெந்தாயான்
பட்டதே என்னப்போய் வீழ்ந்தாள் படைநெடுங்கண்
விட்டநீர் மேலே விழ 331

செவ்வண்ண வாயாளும் தேர்வேந் தனுமகளை
அவ்வண்ணங் கண்டக்காலா ற்றுவரோ - மெய்வண்ணம்

ஒய்ந்துநா நீர்போய் உலர்கின்ற தொத்ததமர்
நீந்தினார் கண்ணீரி னின்று. 332

பனியிருளிற் பாழ்மண் டபத்திலே யுன்னை
நினையாது நீத்தகன்ற போது - தனியேநின்
றென்னினைந்து என்செய்தாய் என்னாப் புலம்பினாள்
பொன்னினைத்தாய் நோக்கிப் புலர்ந்து 333

## 3. கலி நீங்கு காண்டம்

மூலப் பழமறைக்கு முன்னேயும் காணலாம்
காலிக்குப் பின்னேயுங் காணலாம் - மால்யானை
முந்தருளும் வேத முதலே யெனவழைப்ப
வந்தருளும் செந்தா மரை 334
போதுவார் நீறணிந்து பொய்யாத ஐந்தெழுத்தை
ஓதுவார் உள்ளம் எனவுரைப்பார் - நீதியார்
பெம்மான் அமரர் பெருமான் ஒருமான்கை
அம்மானின் றாடும் அரங்கு 335

மன்னா உனக்கபயம் என்னா வனத்தீயிற்
பன்னாக வேந்தன் பதைத்துருகிச் - சொன்ன
மொழிவழியே சென்றான் முரட்கலியின் வஞ்சப்
பழிவழியே செல்கின்றான் பார்த்து 336

ஆரும் திரியா அரையிருளில் அங்ஙனமே
சோர்குழலை நீத்த துயரோடும் - வீரன்
திரிவானத் தீக்கானிற் செந்தீயின் வாய்ப்பட்
டெரிவானைக் கண்டான் எதிர் 337

தீக்கடவுள் தந்த வரத்தைத் திருமனத்தில்
ஆக்கி யருளால் அரவரசைப் - போக்கி
அடைந்தான் அடைதலுமே ஆரழலோன் அஞ்சி
உடைந்தான் போய்ப்புக்கான் உவந்து 338

வேத முனியொருவன் சாபத்தால் வெங்கானில்
ஆதபத்தின் வாய்ப்பட் டழிகின்றேன் - காதலால்
வந்தெடுத்துக் காவென்றான் மாலை மணிவண்டு
சந்தெடுத்த தோளானைத் தான் 339

சீரியாய் நீயெடுப்பத் தீமை கெடுகின்றேன்
கூருந் தழலவித்துக் கொண்டுபோய் - பாரில்
விடுகென்றான் மற்றந்த வெந்தழலால் வெம்மைப்
படுகின்றான் வேல்வேந்தைப் பார்த்து 340

என்றுரைத்த அவ்வளவி லேழுலகுஞ் சூழ்கடலும்
குன்றுஞ் சுமந்த குலப்புயத்தான் - வென்றி
அரவரசைக் கொண்டகன்றான் ஆரணியம் தன்னின்
இரவரசை வென்றான் எடுத்து 341

மண்ணின்மீ தென்றனைநின் வன்றாளால் ஒன்றுமுதல்
எண்ணித் தசவென் றிடுகென்றான் - நண்ணிப்போர்
மாவலான் செய்த உதவிக்கு மாறாக
ஏவலாற் றீங்கிழைப்பே னென்று 342

ஆங்கவன்றான் அவ்வா றுரைப்ப அதுகேட்டுத்
தீங்கலியாற் செற்ற திருமனத்தான் - பூங்கழலை
மண்ணின்மேல் வைத்துத் தசவென்று வாய்மையால்
எண்ணினால் வைத்தான் எயிறு 343

ஆற்ற லரவரசே யீங்கென் னுருவத்தைச்
சீற்றமொன் றின்றிச் சினவெயிற்றால் - மாற்றுதற்கின்
றென்கா ரணமென்றான் ஏற்றமரிற் கூற்றழைக்கும்
மின்கா லயின்முகவேல் வேந்து 344

## ஆகம் குறுகுதல்

வீமன் மடந்தை விழிமுடியக் கண்டறியா
வாம நெடுந்தோள் வறியோருக் - கேமங்

கொடாதார் ஆகம்போற் குறுகிற்றே மெய்ம்மை
விடாதான் திருமேனி வெந்து 345

காயும் கடகளிற்றாய் கார்க்கோ டகனென்பேர்
நீயிங்கு வந்தமை யானினைந்து - காயத்தை
மாறாக்கிக் கொண்டு மறைந்துறைதல் காரணமா
வேறாக்கிற் றென்றான் விரைந்து 346

கூனிறால் பாயக் குவளை தவளைவாய்த்
தேனிறால் பாயும் திருநாடா - கானில்
தணியாத வெங்கனலைத் தாங்கினாய் இந்த
அணியாடை கொள்கென்றான் ஆங்கு 347

சாதிமணித்துகில்நீ சாத்தினால் தண்கழுநீர்ப்
போதின்கீழ் மேயும் புதுவரால் - தாதின்
துளிக்குநா நீட்டுந் துறைநாடர் கோவே
ஒளிக்குநாள் நீங்கும் உரு 348

## வாகுவன் ஆதல்

வாகு குறைந்தமையால் வாகுவனென் றுன்னாமம்
ஆக வயோத்தி நகரடைந்து - மாகனகத்
தேர்த்தொழிற்கு மிக்கானீ யாகென்றான் செம்மனத்தாற்
பார்த்தொழிற்கு மிக்கானைப் பார்த்து 349

இணையாரும் இல்லான் இழைத்த உதவி
புணையாகச் சூழ்கானிற் போனான் - பணையாகத்
திண்ணாக மோரெட்டுந் தாங்குந் திசையனைத்தும்
எண்ணாக வேந்த னெழுந்து 350

நினைப்பென்னும் காற்றசைப்ப நெஞ்சிடையே மூளும்
கனற்புகைய வேகின்றான் கண்டான் - பனிக்குருகு
தண்படாம் நீழல் தனிப்பேடை பார்த்திரவு
கண்படா வேலைக் கரை 351

கொம்பர் இளங்குருகே கூறா திருத்தியால்
அம்புயத்தின் போதை யறுகாலால் - தும்பி
திறக்கத்தே னூறுந் திருநாடன் பொன்னை
உறக்கத்தே நீத்தேனுக் கொன்று 352

புன்னை நறுந்தாது கோதிப் பொறிவண்டு
கன்னிப் பெடையுண்ணக் காத்திருக்கும் - இன்னருள்கண்
டஞ்சினா னாவி யழிந்தான் அறவுயிர்த்து
நெஞ்சினால் எல்லாம் நினைந்து 353

காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ - நாதம்
அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கலவ ஓடி
ஒளிக்கின்ற தென்னோ உரை? 354

பானலே சோலைப் பசுந்தென்றல் வந்துலவும்
கானலே வேலைக் கழிகுருகே - யானுடைய
மின்னிமைக்கும் பூணராம் வீங்கிருள்வாய் ஆங்குணர்ந்தால்
என்னினைக்குஞ் சொல்வீர் எனக்கு 355

போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய் - தீவாய்
அரவகற்றும் என்பபோல் ஆர்கடலே மாதை
இரவகற்றி வந்தாய்கொல் இன்று 356

முந்நீர் மடவார் முறுவல் திரள்குவிப்ப
நன்னீர் அயோத்தி நகரடைந்தான் - பொன்னீர்
முருகுடைக்குந் தாமரையின் மொய்ம்மலரைத் தும்பி
அருகுடைக்கும் நன்னாட் டரசு 357

## *அயோத்தி அடைதல்*

மாண்தேர்த் தொழிற்கும் மடைத்தொழிற்கும் மிக்கோனென்று
ஊன்தேய்க்கும் வேலான் உயர்நறவத் - தேன்தோய்க்கும்

தார்வேந்தற் கென்வரவு தானுரைமின் என்றுரைத்தான்
தேர்வேந்தன் வாகுவனாய்ச் சென்று 358

அம்மொழியைத் தூதர் அரசற்கு அறிவிக்கச்
செம்மொழியாத் தேர்ந்ததனைச் சிந்தித்தே - இம்மொழிக்குத்
தக்கானை இங்கே தருமி னெனவுரைக்க
மிக்கானும் சென்றான் விரைந்து 359

பொய்யடையாச் சிந்தைப் புரவலனை நோக்கித்தன்
செய்ய முகமலர்ந்து தேர்வேந்தன் - ஐயாநீ
எத்தொழிற்கு மிக்காய்யாது பெயரென்றான்
கைத்தொழிற்கு மிக்கானைக் கண்டு 360

அன்னம் மிதிப்ப அலர்வழியும் தேறல்போய்ச்
செந்நெல் விளைக்குந் திருநாடர் - மன்னா
மடைத்தொழிலும் தேர்த்தொழிலும் வல்லவன்யான் என்றான்
கொடைத்தொழிலின் மிக்கான் குறித்து 361

## *தமயந்தி வேதியனை அனுப்புதல்*

என்னை இருங்கானில் நீத்த இகல்வேந்தன்
தன்னைநீ நாடுகெனத் தண்கோதை - மின்னுப்
புரைகதிர்வேல் வேந்தன் புரோகிதனுக் கிந்த
உரைபகர்வ தானாள் உணர்ந்து 362

காரிருளில் பாழ்மண் டபத்தேதன் காதலியைச்
சோர்துயிலின் நீத்தல் துணிவன்றோ - தேர்வேந்தற்
கென்றறைந்தால் நேர்நின் றெதிர்மாற்றம் தந்தாரைச்
சென்றறிந்து வாவென்றாள் தேர்ந்து 363

மின்னாடும் மால்வரையும் வேலையும் வேலைசூழ்
நன்னாடும் கானகமும் நாடினான் - மன்னு
கடந்தாழ் களியானைக் காவலனைத் தேடி
அடைந்தான் அயோத்தி நகர் 364

கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதுவும் வேந்தற்குப் போதுமோ - தானென்று
சாற்றினான் அந்தவுரை தார்வேந்தன் தன்செவியில்
ஏற்றினான் வந்தான் எதிர் 365

ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததுவும்
பண்டை விதியின் பயனேகாண் - தண்டரளப்
பூத்தாம வெண்குடையான் பொன்மகளை வெவ்வனத்தே
நீத்தான்என் றையுறேல் நீ 366

எங்க ணுறைந்தனைகொல் எத்திசைபோய் நாடினைகொல்
கங்கைவள நாட்டார்தங் காவலனை - அங்குத்
தலைப்பட்ட வாறுண்டோ சாற்றென்றாள் கண்ணீர்
அலைப்பட்ட கொங்கையா ளாங்கு 367

வாக்கினால் மன்னவனை ஒப்பான் மதித்தொருகால்
ஆக்கையே நோக்கின் அவனல்லன் - பூக்கமழும்
கூந்தலாய் மற்றக் குலப்பாகன் என்றுரைத்தான்
ஏந்துநூல் மார்பன் எடுத்து 368

### *மற்றும் ஓர் சுயம்வரம்*

மீண்டோர் சுயம்வரத்தை வீமன் திருமடந்தை
பூண்டாளென் றந்தண நீ போயுரைத்தால் - நீண்ட
கொடைவேந்தற் கித்தூரம் தேர்க்கோலம் கொள்வான்
படைவேந்தன் என்றாள் பரிந்து 369

எங்கோன் மகளுக் கிரண்டாஞ் சுயம்வரமென்
றங்கோர் முரசம் அறைவித்தான் - செங்கோலாய்
அந்நாளும் நாளை யளவென்றான் அந்தணன்போய்த்
தென்னாளுந் தாரானைச் சேர்ந்து 370

### *அயோத்தி மன்னன் புறப்படல்*

வேத மொழிவாணன் மீண்டும் சுயம்வரத்தைக்
காதலித்தாள் வீமன்றன் காதலியென் - றோதினான்

என்செய்கோ மற்றிதனுக் கென்றான் இகல்சீறும்
மின்செய்த வேலான் விரைந்து 371

குறையாத கற்பினாள் கொண்டானுக் கல்லால்
இறவாத வேந்திழையாள் இன்று - பறிபீறி
நெல்லிற் பருவரால் ஓடும் - நெடுநாடா
சொல்லப் படுமோவிச் சொல்? 372

என்மேல் எறிகின்ற மாலை எழில்நளன்றன்
தன்மேல் விழுந்ததுகாண் முன்னாளில் - அன்னதற்குக்
காரணந்தான் ஈதன்றோ என்றான் கடாஞ்சொரியும்
வாரணந்தான் அன்னான் மறித்து 373

முன்னை வினையான் முடிந்ததோ மொய்குழலாள்
என்னைத்தான் காண விசைந்ததோ - தன்மரபுக்
கொவ்வாத வார்த்தை யுலகத் துரைப்பட்ட
தெவ்வாறு கொல்லோ விது? 374

காவலனுக் கேவற் கடன்பூண்டேன் மற்றவன்றன்
ஏவல் முடிப்பன் இனியென்று - மாவிற்
குலத்தேரைப் பூட்டினான் கோதையர்தங் கொங்கை
மலர்த்தேன் அளிக்குந்தார் மன் 375

## நளன் தேர் ஓட்டுதல்

ஒற்றைத் தனியாழித் தேரென்ன ஓடுவதோர்
கொற்ற நெடுந்தேர் கொடுவந்தேன் - மற்றிதற்கே
போந்தேறு கென்றுரைத்தான் பொம்மென் றளிமுரலத்
தீங்தேறல் வாக்குந்தார்ச் சேய் 376

முந்தை வினைகுறுக மூவா மயல்கொண்டான்
சிந்தை யினுங்கடுகச் சென்றதே - சந்தவிரைத்
தார்குன்றா மெல்லோதி தன்செயலைத் தன்மனத்தே
தேர்கின்றான் ஊர்கின்ற தேர் 377

மேலாடை வீழ்ந்த தெடுவென்றான் அவ்வளவில்
நாலாறு காதம் நடந்ததே - தோலாமை
மேல்கொண்டான் ஏறிவர வெம்மைக் கலிச்சூதில்
மால்கொண்டான் கோல்கொண்ட மா 378

இத்தாழ் பணையில் இருந்தான்றிக் காயெண்ணிற்
பத்தாயிரங்கோடி பாரென்ன - உய்த்தனில்
தேர்நிறுத்தி எண்ணினான் தேவர் சபைநடுவே
தார்நிறுத்துந் தோள்வேந்தன் தான் 379

ஏரடிப்பார் கோலெடுப்ப இன்தேன் தொடைபீறிக்
காரடுத்த சோலைக் கடனாடன் - தேரடுத்த
மாத்தொழிலுக்கு இத்தொழிலும் மாற்றுதியோ என்றுரைத்தான்
தேர்த்தொழிலின் மிக்கானைத் தேர்ந்து 380

வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி - கொண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பால் நின்ற கலி 381

ஆமை முதுகில் அலவன் துயில்கொள்ளும்
காமர் நெடுநாடு கைவிட்டு - வீமன்தன்
பொன்னகரி சென்றடைந்தான் போர்வெட் டெழுங்கூற்றம்
அன்னகரி யொன்றுடையான் ஆங்கு 382

வெற்றித் தனித்தேரை வீமன் பெருங்கோயின்
முற்றத் திருத்தி முறைசெய்யும் - கொற்றவற்குத்
தன்வரவு கூறப் பணித்துத் தனிப்புக்கான்
மன்விரவு தாரான் மகிழ்ந்து 383

## *வீமன் வரவேற்றல்*

கன்னி நறுந்தேறல் மாந்திக் கமலத்தின்
மன்னித் துயின்ற வரிவண்டு - பின்னையும்போய்

நெய்தற் கவாவும் நெடுநாட நீயென்பால்
எய்தற் கவியவா றென்? 384

இன்றுன்னைக் காண்பதோ ராதரவால் யானிங்ஙன்
மன்றல் மலர்த்தாராய் வந்தடைந்தேன் - என்றான்
ஒளியார் கண்ணாள்மேல் உள்ளம் துரப்பத்
தெளியாது முன்போந்த சேய் 385

ஆதி நெடுந்தேர்ப் பரிவிட் டவையாற்றிக்
கோதில் அடிசிற் குறைமுடிப்பான் - மேதிக்
கடைவாயிற் கார்நீலம் கண்விழிக்கும் நாடன்
மடைவாயிற் புக்கான் மதித்து 386

ஆதி மறைநூல் அனைத்தும் தெரிந்துணர்ந்த
நீதி நெறியாளர் நெஞ்சம்போல் - யாதும்
நிரப்பாமல் எல்லாம் நிரம்பிற்றே பொற்றேர்
வரப்பாகன் புக்க மனை 387

### *மக்களை அனுப்பி வைத்தல்*

இடைச்சுரத்தில் தன்னை இடையிருளில் நீத்த
கொடைத் தொழிலான் என்றயிர்த்த கோமான்
மடைத்தொழில்கள்
செய்கின்ற தெல்லாம் தெரிந்துணர்ந்து வாவென்றாள்
நைகின்ற நெஞ்சாள் நயந்து 388

கோதை நெடுவேற் குமரனையும் தங்கையையும்
ஆதி அரசன் அருகாகப் - போத
விளையாட விட்டவன்மேற் செயல்நா டென்றாள்
வளையாடுங் கையாள் மதித்து 389

### *உரையாடல்கள்*

மக்களைமுன் காணா மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா - மக்காள்நீர்

என்மக்கள் போல்கின்றீர் யார்மக்க ளென்றுரைத்தான்
வன்மக் களியானை மன் 390

மன்னு நிடதத்தார் வாள்வேந்தன் மக்கள்யாம்
அன்னைதனைக் கான்விட் டவனேக - இந்நகர்க்கே
வாழ்கின்றோம் எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான் என்றார் அழுது 391

ஆங்கவர் சொன்ன வுரைகேட் டழிவெய்தி
நீங்கா உயிரோடு நின்றிட்டான் - பூங்காவில்
வள்ளம்போற் கோங்கு மலருந் திருநாடன்
வெள்ளம்போற் கண்ணீர் உகுத்து 392

உங்கள் அரசொருவன் ஆளநீர் ஓடிப்போந்து
இங்கண் உறைதல் இழுக்கன்றோ - செங்கை
வளவரசே என்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி எடுத்து 393

நெஞ்சாலிம் மாற்றம் நினைந்துரைக்க நீயல்லால்
அஞ்சாரோ மன்னர் அடுமடையா! எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலாய் எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி 394

எந்தை கழலிணையில் எம்மருங்கும் காணலாம்
கந்து கடியும் கடாக்களிற்றின் - வந்து
பணிமுடியிற் பார்காக்கும் பார்வேந்தர் தங்கள்
மணிமுடியிற் றேய்ந்த வடு 395

மன்னர் பெருமை மடையர் அறிவரோ
உன்னை அறியாது உரைசெய்த - என்னை
முனிந்தருளல் என்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண் 396

### சேடி செய்தி உரைத்தல்

கொற்றக் குமரனையும் கோதையையும் தான்கண்டு
மற்றவன்றான் ஆங்குரைத்த வாசகத்தை - முற்றும்
மொழிந்தாரம் மாற்றம் மொழியாத முன்னே
அழிந்தாள் விழுந்தாள் அழுது 397

கொங்கை யளைந்து சூழல்திருத்திக் கோலஞ்செய்
அங்கையிரண்டும் அடுபுகையால் - இங்ஙன்
கருகியவோ என்றழுதாள் காதலனை முன்னாள்
பருகியவேற் கண்ணாள் பதைத்து 398

### தந்தைக்கு அறிவுறுத்தல்

மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவற்குக்
கொற்றத் தனித்தேரும் கொண்டணைந்து - மற்றும்
மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன்கா ணெங்கள்
கொடைத்தொழிலான் என்றாள் குறித்து 399

### வீமன் சென்று அழைத்தல்

போதலருங் கண்ணியான் போர்வேந்தர் சூழப் போய்க்
காதலிதன் காதலனைக் கண்ணுற்றான் - ஓதம்
வரிவளைகொண் டேறும் வளநாடன் தன்னைத்
தெரிவரிதா நின்றான் திகைத்து 400

செவ்வாய் மொழிக்கும் செயலுக்கும் சிந்தைக்கும்
ஒவ்வாது கொண்ட உருவென்னா - எவ்வாயும்
நோக்கினான் நோக்கித் தெளிந்தான் நுணங்கியதோர்
வாக்கினான் தன்னை மதித்து 401

பைந்தலைய நாக பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை ஐயுற்று - மந்தி
தெளியா திருக்கும் திருநாடா! உன்னை
ஒளியாது காட்டுன் உரு 402

அரவரசன் தான்கொடுத்த அம்பூந் துகிலின்
ஒருதுகிலை வாங்கி உடுத்தான் - ஒருதுகிலைப்
போர்த்தான் பொருகலியின் வஞ்சனையாற் பூண்டளிக்கும்
கோத்தாயம் முன்னிழந்த கோ 403

## உருவு மாறல்

மிக்கோன் உலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோர் அருவினைபோற் போயிற்றே - அக்காலம்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு 404

தாதையைமுன் காண்டலுமே தாமரைக்கண் நீரரும்பப்
போதலரும் குஞ்சியான் புக்கணைந்து - கோதிலாப்
பொன்னடியைக் கண்ணிற் புனலாற் கழுவினான்
மின்னிடையா ளோடும் விழுந்து 405

## தமயந்தி சந்தித்தல்

பாதித் துகிலோடு பாய்ந்திழியும் கண்ணீரும்
சீதக் களபதனம் சேர்மாசும் - போத
மலர்ந்ததார் வேந்தன் மலரடியில் வீழ்ந்தாள்
அலர்ந்ததே கண்ணீர் அவற்கு 406

வெவ்விடத்தோ டொக்கும் விழியிரண்டும் வீழ்துயில்கொள்
அவ்விடத்தே நீத்த அவரென்றே - இவ்விடத்தே
வாரார் முலையாளம் மன்னவனைக் காணாமல்
நீரால் மறைத்தனவே நின்று 407

உத்தமரின் மற்றிவனை ஒப்பார் ஒருவரிலை
இத்தலத்தில் என்றிமையோர் எம்மருங்கும் - கைத்தலத்தில்
தேமாரி பெய்யுந் திருமலர்தார் வேந்தன்மேற்
பூமாரி பெய்தார் புகழ்ந்து 408

## கலி நீங்குதல்

தேவியிவள் கற்புக்கும் செங்கோன் முறைமைக்கும்
பூவுலகில் ஒப்பார்யார் போதுவார் - காவலனே
மற்றென்பால் வேண்டும் வரங்கேட்டுக் கொள்ளென்றான்
முற்றன்பாற் பாரளிப்பான் முன் 409

உன்சரிதம் செல்ல உலகாளும் காலத்து
மின்சொரியும் வேலாய் மிகவிரும்பி - என் சரிதம்
கேட்டாரை நீயடையேல் என்றான் கிளர்மணிப்பூண்
வாட்டானை மன்னன் மதித்து 410

என்காலத் துன்சரிதம் கேட்டாரை யானடையேன்
மின்கால் அயில்வேலாய் மெய்யென்று - நன்காவி
மட்டிறைக்குஞ் சோலை வளநாடன் முன்னின்று
கட்டுரைத்துப் போனான் கலி 411

வேத நெறிவழுவா வேந்தனையும் பூந்தடங்கண்
கோதையையும் மக்களையும் கொண்டுபோய்த் - தாது
புதையத்தேன் பாய்ந்தொழுகும் பூஞ்சோலை வேலி
விதையக்கோன் செய்தான் விருந்து 412

உன்னையான் ஒன்றும் உணரா துரைத்தவெலாம்
பொன்னமருந் தாராய் பொறுவென்று - பின்னைத்தன்
மேனீமை குன்றாவெறுந்தேர் மிசைக்கொண்டான்
மானீர் அயோத்தியார் மன் 413

விற்றானை முன்செல்ல வேல்வேந்தன் பின்செல்லப்
பொற்றேர்மேற் றேவியொடும் போயினான் - முற்றாம்பல்
தேனீர் அளித்தருகு செந்நெற் கதிர்விளைக்கும்
மாநீர் நிடதத்தார் மன் 414

தானவரை வெல்லத் தரித்தநெடு வைவேலாய்
ஏனைநெறி தூரமினி எத்தனையோ - மானேகேள்

இந்த மலைகடந் தேழுமலைக் கப்புறமா
விந்தமெனும் நம்பதிதான் மிக்கு 415

இக்கங்குல் போக இகல்வேல் நளனெறிநீர்
செய்க்கங்கு பாயுந் திருநாடு - புக்கங்கு
இருக்குமா காண்பான்போல் ஏறினான் குன்றிற்
செருக்குமான் தேரேவெய்யோன் சென்று 416

## நாடு திரும்புதல்

மன்றலிளங் கோதையொடு மக்களுந் தானுமொரு
வென்றி மணிநெடுந்தேர் மேலேறிச் - சென்றடைந்தான்
மாவிந்த மென்னும் வளநகரஞ் சூழ்ந்தொரு
பூவிந்தை வாழும் பொழில் 417

மற்றவனுக் கென்வரவு சொல்லி மறுசூதுக்
குற்ற பணையம் உளதென்று - கொற்றவனைக்
கொண்டணை வீரென்று குலத்தூ தரைவிடுத்தான்
தண்டெரியல் தேர்வேந்தன் தான் 418

## மறு ஆதாடுதல்

மாய நெடுஞ்சூதில் வஞ்சித்த வன்னெஞ்சன்
தூய நறுமலர்ப்பூஞ் சோலைவாய் - ஆய
பெருந்தானை சூழப் பெடைநடையா ளோடும்
இருந்தானைக் கண்டான் எதிர். 419

செங்கோல் அரசன் முகம்நோக்கித் தேர்ச்சியிலா
வெங்கோல் அரசன் வினவினான் - அங்கோலக்
காவற் கொடைவேந்தே காதலர்க்கும் காதலிக்கும்
யாவர்க்கும் தீதிலவே என்று 420

தீது தருகலிமுன் செய்ததனை யோராதே
யாது பணயம் எனவியம்பச் சூதாட
மையாழி யிற்றுயிலும் மாலனையாள் வண்மைபுனை
கையாழி வைத்தான் கழித்து 421

அப்பலகை யொன்றின் அருகிருந்தோர் தாமதிக்கச்
செப்பரிய செல்வத் திருநகரும் - ஒப்பரிய
வன்றானை யோடு வளநாடும் வஞ்சனையால்
வென்றானை வென்றானவ் வேந்து 422

## *ஆட்சி திரும்பப் பெறுதல்*

அந்த வளநாடும் அவ்வரசும் ஆங்கொழிய
வந்த படியே வழிக்கொண்டான் - செந்தமிழோர்
நாவேய்ந்த சொல்லான் நளனென்று போற்றிசைக்கும்
தேர்வேந்தற் கெல்லாம் கொடுத்து 423

ஏனை முடிவேந்தர் எத்திசையும் போற்றிசைப்பச்
சேனை புடைசூழத் தேரேறி - ஆனபுகழ்ப்
பொன்னகரம் எய்தும் புரந்தரனைப் போற்பொலிந்து
நன்னகரம் புக்கான் நளன் 424


## *மாநகர் அடைந்த மகிழ்ச்சி*

கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ - பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்கு
ஏதோ உரைப்பன் எதிர்? 425

வென்றி நிடதத்தார் வேந்தன் சரிதையீ
தென்றுரைத்த வேத யியல்முனிவன் - நன்றிபுனை
மன்னா பருவரலை மாற்றுதியென் றாசிமொழி
பன்னா நடந்திட்டான் பண்டு 426

வாழி அருமறைகள் வாழிநல் அந்தணர்கள்
வாழிநளன் காதை வழுத்துவோர் - வாழிய
மன்னுவநாட் டாங்கண் வருசந் திரன்சுவர்க்கி
தென்னுறமெய்க்க கீர்த்தி சிறந்து. 427

☆ ☆ ☆



## ஆசிரியரின் கதை நூல்கள்

1. வழுக்கு நிலம் (நாவல்)
2. அரை மனிதன் (நாவல்)
3. வெறுந்தாள் (நாவல்)
4. நனவோட்டங்கள் (நாவல்)
5. குப்பைமேடு (சிறுகதைகள்)
6. படித்தவள் (சிறுகதைகள்)
7. பரிசு மழை (சிறுகதைகள்)
8. கிளிஞ்சல்கள் (சிறுகதைகள்)